
லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நிலாச்சோறு... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
நிலாச்சோறு...



# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# 'நிலாச் சோறு'

## 1

> உன் மனதில் நானென்று..
> ஒரு வார்த்தை நீ கூறு..
> என்றென்றும் எந்தனுக்கு..
> அதுதானே நிலாச்சோறு..!

நண்பகலின் வெயிலில் கல்லூரிச் செடிகளின் இலைகளும் பூக்களும் வாடிக் கொண்டிருக்க.. விரிவுரையாளரின் இடை விடாத விரிவுரையில் சுவாதி வாடிக் கொண்டிருந்தாள்.. அவளும்தான் பாவம் என்ன செய்வாள்..?

'உண்டி சுருங்குதல்..
பெண்டிர்க்கு அழகு..'

என்று அவளைப் பெற்ற சித்ரலேகா தினமும் எடுத்துரைத்து பிரயத்தனம் செய்கிறாள்... எங்கே..? அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்காக காற்றோடு கலந்து காணாமல் போகிறதே தவிர சித்ரலேகாவின் காதுகளில் ஏறிய பாடாக இல்லை...

"இருக்கிறது ஒற்றை மக.. அவளுக்கு கை சுருக்கி சமைச்சுப் போட என்னால ஆகாது.." என்று தீவிரமாக மறுத்து விடுவாள்.. போதாக்குறைக்கு

"என்னங்க.." என்று ரங்கநாதனுக்கு அபயக் குரலை அனுப்பி வைக்க... சுவாதியைப் பெற்ற தந்தையான ரங்கநாதன் மனைவியின் அபயக்குரலுக்கு அடுத்த கணமே ஆதரவுக் குரலைக் கொடுத்து விடுவார்..

"நல்லாச் சாப்பிடனும் சுவாதிக் கண்ணு..."

"ஏன்ப்பா.. அப்பதான் பலசாலியா ஆவேனா..?"

சுவாதி என்னவோ சிரிக்காமல்தான் கேட்பாள்.. புஷ்டியாக வளர்ந்து டென்ஸ்போர்ட்ஸின் ரெஸ்ட்லிங்கில் கலந்து கொள்ளப் போகிறாளா என்ற அவளின் கோபத்தை புரிந்து கொள்ளாத அந்த அப்பாவித் தந்தை..

"ஆமம்மா.. ஆமாம்.." என்று சந்தோசமாக தலையாட்டுவார்..

வேறு வழியின்றி லேகா படைக்கும் உணவு வகைகளை அவளது மிரட்டலுக்கு அஞ்சிச் சாப்பிட்டுப் பழகியதில் சுவாதிக்கு உணவின் மீதான ஈர்ப்பு இயல்பாக அதிகரித்து விட்டது.. கல்லூரிக்கு மிகப் பெரிய டிபன் கேரியரில் மதிய உணவைக் கொண்டு வரும் மாணவியாக அவள் மட்டுமே இருந்தாள்.. அப்படிக் கொண்டு வரும் மதிய உணவை செம வெட்டு வெட்டினால் அவளுக்கு நண்பகலின் வகுப்பறையில் தூக்கம் வந்து தொலைக்காதா..?



அவளின் நியாயங்களை விரிவுரையாளரிடம் அவளால் சொல்ல முடியுமா...? சொன்னாலும் அவள் கேட்டு விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பாளா..? வாங்குகின்ற சம்பளத்திற்கு வேலை செய்ய அவள் அடாது சுவாதி தூங்கினாலும் விடாது விரிவுரையை ஆற்றிக் கொண்டேயிருந்தாள்...

தூங்கி வழிந்த சுவாதி.. பக்கத்திலிருந்த நந்தினியின் தோள் மீது வாகாக சாய்ந்து கொள்ள.. நந்தினி...

"ஸ்ஸ்ஸ்.." என்றாள்..

அதற்கும் சுவாதி அசையாமல் தூக்கத்தைத் தொடர.. நந்தினி சங்கடத்துடன்

"ஸ்ஸ்ஸ்.. ஸ்ஸ்ஸ்..." என்றாள்...

அவள் எழுப்பிய அந்த சப்தம் தாலாட்டைப் போல இருந்ததோ.. என்னவோ சுவாதி சுகமாக தூங்க ஆரம்பித்து விட்டாள்...

பொறுக்க முடியாதவளாய் அவளது காதோரம் இதழ் குவித்த நந்தினி...

"ஸ்ஸ்ஸ்.. ஸ்ஸ்ஸ்.. ஸ்ஸ்ஸ்.." என்று எழுப்பி விட முயன்றாள்..

தொடர்ந்து அவள் எழுப்பிய 'ஸ்ஸ்ஸ்' களுக்கு பலன் இருந்தது.. கண்விழித்த சுவாதி.. இமைகளைக் கசக்கி விட்டபடி நந்தினியைப் பார்த்து..

"இஸ்ஸீ.. இஸ்ஸீன்னு சப்தம் கேட்டுச்சே.. உனக்கு கேட்கலையாடி..?" என்று கேட்டாள்..

இமைக்காமல் அவளைப் பார்த்தாள் நந்தினி..

"என்னடி..?" புரியாமல் விழித்தாள் சுவாதி..

"அந்த இஸ்ஸை எழுப்பினவளே நான்தான்... நீ என்கிட்டயே சந்தேகம் கேட்கறியா..?"

"நீயேண்டி அதை எழுப்பின..?"

"வேறவழி..? உன்ன தூக்கத்தில இருந்து எழுப்பனும்னா நான் 'ஸ்ஸ்ஸ்' ங்கிற சத்தத்தைத்தானே எழுப்ப வேண்டியிருக்கு..?"

"ம்ஹாவ்..." சுவாதி நீளமாக கொட்டாவி விட....

"மகளே... தூங்கித் தூங்கி என் தோளில் சாய்ஞ்சேன்னு வைய்யி.. நான் பிரண்ட்ன்னு கூடப் பார்க்க மாட்டேன்.." என்று எச்சரித்தாள் நந்தினி...

"பார்க்காம என்னடி செய்வ..?"

"உன்னைப் பொலி போட்டிருவேன்.."

"யாரு..? நீ..? என்னைப் பொலி போடற..? ஜோக்கடிக்காம வேற வேலையிருந்தாப் பாருடி.. நான் பேச வேண்டிய டயலாக்கை இவ பேசறா.. அதை நானும் கேட்கறேன்.. என்ன கொடுமை ரதி இது..?"

அடுத்த பெஞ்சில் இருந்த ரதி திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தாள்.. அந்தப் புன்னகையை விரிவுரையாளர் கவனிக்காமல் இருக்க வேண்டுமே என்று நந்தினி கவலைப் பட்டாள்.. அவளுடைய கவலையைப் பற்றிக் கவலைப் படாமல் புத்தகங்களின்மீது சாய்ந்த சுவாதி தூங்கிப் போனாள்..



'எப்படித்தான் இப்படி இருக்கிறாளோ..'

நந்தினிக்கு எப்போதும் சுவாதியின் மீது வரும் ஆச்சரியம் இப்போதும் வந்தது.. சுவாதி விட்டுச் சிறகடிப்பவள்.. எதைப் பற்றிய கவலையும் அவளுக்கு இருந்ததில்லை.. யாரையும் தனது சுட்டித்தனத்தால் வசியப் படுத்தி விடுவாள்.. இத்தனைக்கும் சுவாதியின் குடும்பம் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்ததுதான்.. அவளுடைய அப்பா ரங்கநாதன் அரசு அலுவலகத்தில் பணி புரிபவர்...

நந்தினி அப்படியல்ல.. அவளுடைய குடும்பம் பணக்கார பாரம்பர்யத்தைக் கொண்டது.. திருப்பூரில் அவர்களுக்கு ஒன்றுக்கு மூன்று மில்கள் இருந்தன.. குன்னூரில் எஸ்டேட்.. ஊட்டியில் ஹோட்டல் என்று அவர்களுக்கு பலவழிகளில் பணமழை பொழிந்து கொண்டிருந்தது...

அப்படிப்பட்ட கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்த நந்தினி பேச யோசிப்பாள்.. ஓர் அடியெடுத்து வைப்பதாக இருந்தாலும் ஒன்றுக்கு பத்து முறை யோசித்து விட்டுத்தான் அடியெடுத்து வைப்பாள்..

மென்மையின் மறு வடிவம் நந்தினி...

அவளுக்கு அதிர்ந்து பேச வராது.. எதிர்த்துப் பேசத் தெரியாது.. ஓர் அழகோவியம் போல மெலிதான புன்னகையுடன் இருப்பவளுக்கு.. வாயைவிட... கண்கள் தான் அதிகமான கதைகளைப் பேசும்...

"உனக்கு நந்தினின்னு பெயர் வைச்சிருக்கக் கூடாதுடி..'

"ஏன் சுவாதி..?"

"பேசா மடந்தைன்னு பெயர் வைத்திருக்கனும்.. இப்படியாடி பேசக் கூலி கேட்ப..?"

அதற்கும் நந்தினியிடமிருந்து புன்னகைதான் பதிலாக கிடைக்கும்.. அவளது இயல்பே அப்படித்தான்.. கொட்டுகிற அருவியாக இல்லாமல் அமைதியான நதியைப் போன்றவள் அவள்...

அப்படிப்பட்ட நந்தினியுடன் ஆர்ப்பரிக்கும் அருவியைப் போன்ற குண இயல்புடைய சுவாதி சிநேகித மானதுதான் விந்தையிலும் விந்தை...

நந்தினிக்கும்.. சுவாதிக்கும் எந்தப் பொருத்தமும் இல்லாமல் ஏழாம் பொருத்தம் மட்டுமே பொருந்தியிருக்க. இருவரும் எப்படிப் பிரிக்க முடியாத தோழிகளாக நகமும் சதையுமாக ஆனார்கள் என்று அவர்களை அறிந்தவர்கள் அனைவரும் அது நாள்வரை ஆச்சரியப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்...

"அவங்ககிட்ட எல்லாமே ஏழாம் பொருத்தம் தாண்டி..." என்பாள் அனுபமா..

"எதைவைச்சுடி அப்படிச் சொல்ற..?"

"இந்த சுவாதியையே எடுத்துக்கயேன்.. அவங்கப்பா கவர்ன்மென்ட் எம்ப்ளாயி.. லோன் போட்டு ஒரு வீட்டைக் கட்டியிருக்கார்.. அதே லோனைப் போட்டு ஒரு காரை வாங்கியிருக்கார்.. அதுக்கே இந்த சுவாதி என்னவோ வானத்தில இருந்து குதிச்சதைப் போல இந்த அலட்டு அலட்டிக்கிறா.. இவளுக்கு மட்டும் நந்தினிகிட்ட கொட்டிக் கிடக்கிறதைப் போல பணமிருந்ததுன்னு வைய்யி.. இவளைக் கையில பிடிக்க முடியும்ன்னா நினைக்கிற..?"



அனுபமாவின் அந்தக் கேள்விக்கு முடியவே முடியாது என்ற ஒரு மனதான தீர்ப்பைத்தான் அங்கிருந்த தோழிகள் அறிவித்தார்கள்..

"இதுவே நந்தினியை எடுத்துக்க.. நிறைகுடம்... அவ வீட்டில நிற்கிற பத்துக்காரும் அப்போத்தான் இந்தியாவில இறக்குமதி ஆன கார்களா இருக்கும்.. ஒரு வருசத்துக்கு மேல எந்தக் காரையும் அவ வீட்டில வைத்துக்க மாட்டாங்களாம்.. தினத்துக்கு ஒரு காரில வந்து இறங்குறா.. தினப்படி நகைகளா மெலிசான வைரங்களைத் தான் போட்டுக்கிறா.. அவ டிரெஸ்ஸோட விலையில நாம ஒரு வருசத்துக்கு தேவையான துணிவகைகளை வாங்கிறலாம்.. அவ்வளவு காஸ்ட்லி.. பட்.. அதைப்பத்தி அவ நினைச்சாவது பார்க்கிறாளா..? எவ்வளவு அமைதி..! எவ்வளவு ப்ரண்ட்லி..! நிறைகுடம் தளும்பாதுங்கிறதுக்கு இவதாண்டி உதாரணம்.."

அதற்கும் ஒட்டு மொத்தமான 'ஆமாம்' என்ற தீர்ப்பையே அத்தனை தோழிகளும் அளித்தார்கள்..

"இப்பச் சொல்லுங்கடி.. அலட்டியும்.. அமைதியும் எங்காச்சும் இப்படி ஈருடல் ஓருயிரா இருக்க முடியுமா..?"

"முடியாதுதான்.."

"இதைத்தாண்டி நான் ஏழாம் பொருத்தம்ன்னு சொன்னேன்.."

அனுபமாவின் கூற்றைத்தான் நந்தினி.. சுவாதியின் ஆழ்ந்த நட்டைப் பார்க்கிற அனைவரும் சொன்னார்கள்.. சப்தமே எழும்பாமல் வாயசைவில் வார்த்தைகளை உச்சரிக்கும் நந்தினியும்.. மெல்லப் பேசினாலே.. ஏழுகடல் ஏழுமலையைத் தாண்டிக் கேட்டு விடும் குரல் வலிமை வாய்ந்த சுவாதியும்.. பிய்த்தாலும் பிய்க்க முடியாத அளவில் கோந்தில்லாமலே ஒட்டிக் கொண்டதன் தாத்பர்யம் என்னவாக இருக்கக் கூடும் என்று தெரியாமல் அவரவரின் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார்கள்...

அவர்களுக்குத் தெரியாத ஒன்று இருக்கிறது.. அது.. ஆர்ப்பாட்டமான சுவாதிக்குள் நட்புக்காக உயிரையே கொடுக்கும் தன்மை இருக்கிறது என்பது.. அதை நந்தினி கண்டு கொண்டிருந்தாள்.. இருவரும் அறிமுகமான பள்ளிப் பருவத்தில்.. ஓர் மழைநாளில்.. சாலைக்கு எதிர் புறமாக நின்றிருந்த காரைப் பார்த்தபடி சாலையைக் கடக்க முற்பட்ட நந்தினி சீறி வந்த லாரியைக் கவனிக்காமல் விட்டு விட்டாள்...

தோழியை வழியனுப்பி விட்டு பள்ளிப் பேருந்தில் ஏறிச் செல்வதற்காக கையாட்டியபடி நின்றிருந்த சுவாதி அந்த லாரியைக் கவனித்து விட்டாள்.. கொட்டுகின்ற மழைத் துளிகள் திரைபோல கண் பார்வையை மறைக்க..



சுவாதியின் வேகமான தள்ளலில் சாலையின் மறுபுறத்தில் பாதுகாப்பாக போய் விழுந்த நந்தினியின் கண் முன்னால் சுவாதியை தொட்டு விட்ட லாரியின் முகப்பு தெரிந்தது..

"சுவாதி.." அலறியபடி அவள் மயங்கி விழுந்தாள்...

விழித்த போது அவள் மருத்துவமனையின் பிரத்யேக அறையில் இருந்தாள்.. பதறி எழுந்தவளைச் சுவாதியின் கரம் தடுத்தது...

"மக்கு..! என்மேல மோத எந்த லாரிக்குடி தைரிய மிருக்கு..? அதெல்லாம் உன்னைப் போல பயந்தாங் குளியைப் பார்த்தால்தான் ஓடிவந்து மோதும்.. என்னைக் கண்டா.. செல்லப் பிராணி போல செல்லம் கொஞ்சிக் கிட்டு நின்னுரும்.."

சுவாதி கண் சிமிட்டியபடி சொல்லிய அந்த நொடியில் நந்தினி அவளின் நட்பிடம் அடைக்கலமானாள்..

சுவாதி நந்தினியைப் போல கோடீஸ்வரி இல்லை தான்.. ஆனால் அவளைப் பெற்றவர்களுக்கு ஒரே மகள்.. ரங்கநாதன்.. லேகா தம்பதியரின் உயிர்மூச்சே சுவாதிதான்..

அப்படிப்பட்ட சுவாதி பெற்றவர்களைப் பற்றிக் கூட நினைத்துப் பார்க்காமல் நந்தினியைக் காப்பாற்ற லாரியின் முன் பாய்ந்தாளென்றால்.. அவளின் அந்த அன்பையும்.. பாசத்தையும்.. பிரியத்தையும்.. நந்தினி என்னவென்று சொல்லுவாள்..?

நந்தினி சுவாதியின் ஆத்மார்த்தமான தோழியானாள்.. யாருடனும் பேசிப்பழக தடை விதிக்கப் பட்டிருந்த அவள் வீட்டில்.. அந்த நிகழ்விற்குப் பின்னால் சுவாதியுடன் பேசிப் பழகுவதற்கான தடையற்ற அனுமதி வழங்கப்பட்டிருந்தது..

காலையில் சுவாதியின் வீட்டிற்குப் போய் அவளை அழைத்துக் கொள்வாள் நந்தினி.. மாலையில் கல்லூரி விட்டதும்.. சுவாதியின் வீட்டில் அவளை விட்டுவிட்டு.. லேகா கொடுக்கும் காபி டிபன் வகையறாக்களை ருசித்து விட்டு.. மாலை மயங்கும் வேளையில் தான் அவள் வீட்டுக்குச் செல்லக் காரில் ஏறுவாள்..

அது என்னவோ.. அவள் வீட்டில் கிடைக்கும் வகை வகையான அறுசுவை உணவுகளில் இல்லாத ருசி லேகாவின் கையால் பரிமாறப் படும் உணவு வகைகளில் கிடைக்கிறது என்பது அவளின் நினைவு...

அதற்கான காரணத்தை அவளின் பேதை மனம் அறியவில்லை...

அது.. சுவாதியின் வீட்டில் பரிமாறப்படும் உணவு வகைகளில் ருசியோடு தாயன்பும் சேர்ந்திருக்கிறது என்பது.. அதை உண்ணும் போது சேர்ந்து கொள்ளும் ரங்கநாதனின் பேச்சில்.. தந்தையின் அன்பு அங்கு சூழ்ந்திருக்கிறது என்பது..

நந்தினி தாய் தந்தையற்றவள்..

ஒரு சாலை விபத்தில் காரில் சென்ற அவளின் தாய் தந்தையர் இருவரும் இணைந்து இறந்து போனபோது



நந்தினிக்கு இரண்டு வயது.. அவளுடைய தமையன் நந்தகுமாருக்கு பனிரெண்டு வயது..

பத்து வயது இடைவெளியில் பிறந்த மகள் நந்தினி.. அவளை வீட்டுக்கு வந்த மகாலட்சுமி என்று அவளுடைய தந்தை சடகோபன் கொண்டாடினாராம்.. அதை அவளைப் பெற்ற தாயான யாமினி ஆமோதித்தாளாம்.. அப்படிக் கொண்டாடிய பெற்றோர்கள் இரண்டு வயதிலேயே ஏன் அவளை அநாதையாக்கி விட்டு வானுலகம் சென்றார்கள் என்ற கேள்வியினை எத்தனையோ இரவுகளில் மௌனக் கண்ணீருடன் கடவுளிடம் கேட்டிருக்கிறாள் நந்தினி..

பனிரெண்டு வயது நந்தகுமாரால் நந்தினிக்கு விளையாட்டுத் தோழனாக இருக்க முடியவில்லை.. அதே சமயத்தில் அவனால் நந்தினியின் வாழ்வில் பெற்றவர்களின் மறைவினால் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை இட்டு நிரப்பவும் இயலவில்லை..

அவன் கண்டிப்பான அண்ணனாக இருந்தான்.. தங்கையிடம் பாசமிருந்தாலும் அதை வெளிப்படுத்தும் விதமறியாதவன்.. அவனைச் சொல்லியும் குற்றமில்லை.. அவனையும் நந்தினியையும் வளர்த்த அவர்களின் தாத்தா சங்கரலிங்கம் சொல்லிக் கொடுத்திருந்த யுக்தி அது...

"அதிகம் பேசாதே.. பேச்சு உன்னை காட்டிக் கொடுத்து விடும்.. உன்னிடம் பேச மற்றவர்கள் பயப்பட வேண்டும்.. யோசிக்க வேண்டும்.. நீ சொல்வதை மட்டும் தான் அவர்கள் செய்ய வேண்டும்.. தலைமைப் பொறுப்பில் இருக்கிறவன் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய பாடம் இது."

பனிரெண்டு வயதிலிருந்தே நந்தகுமார் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கான பயிற்சிகளைப் பெற ஆரம்பித்தான்..

"திருப்பூரில் ஒன்னுக்கு மூணு மில்லிருக்கு.. ஊட்டி ஹோட்டல்.. குன்னூர் எஸ்டேட்டுன்னு அத்தனைக்கும்.. நீயும்.. நந்தினியும் தான் முதலாளிக.. உன் தங்கச்சி சின்னக் குழந்தை.. அவளையும் பார்த்து.. உன்சொத்துக்களையும் காபந்து பண்ணனும்னா நீ இப்படித்தான் இருந்தாகனும் நந்து..."

நந்தகுமார் தாத்தாவின் சொல்படியே இருந்தான்.. வளர்ந்தான்.. இருபது வயது வரை சங்கரலிங்கத்திடம் தொழிலைக் கவனிப்பதற்கான பயிற்சியை எடுத்துக் கொண்டான்.. இருபத்தி இரண்டாம் வயதில் அத்தனை சொத்துகளுக்குமான பொறுப்பை எடுத்துக் கொண்டான்...

பெற்றோர்களின் இழப்பைத் தாங்கிக் கொண்டு எழுந்து நிற்க அவனுக்கு சங்கரலிங்கம் உறுதுணையாக இருந்தார்... மகனின் சொத்துக்களை சிதறிவிடாமல் காத்து அதை பேரனிடம் ஒப்படைக்கும் பொறுப்பில் அவரும்.. தகப்பனின் சொத்துக்களை காபந்து பண்ண வேண்டிய பொறுப்பில் நந்தகுமாரும் இருந்ததில் தனிமைப் பட்டுப் போனவள் நந்தினிதான்...

குழந்தையாக இருந்தவளைத் தூக்கிக் கொஞ்ச அந்த வீட்டில் ஆளில்லை.. சங்கரலிங்கத்தின் மனைவி கோமளம் உயிருடன் இருந்திருந்தால் நிச்சயமாக பேரனை விட பேத்தியின் மீது அதிக கவனத்தை செழுத்தியிருப்பாள்..



அப்படியில்லாமல் அவள் நந்தகுமார் பிறப்பதற்கு முன்பாகவே இதயநோயில் இறந்து விட்டிருந்தாள்.. தனியாக நின்ற சங்கரலிங்கத்திடம் பேரன்.. பேத்தியைக் காக்க வேண்டிய பொறுப்பு வந்தால் அவர் பாவம் என்ன செய்வார்..?

அவரால் என்ன முடியுமோ.. அதைத்தானே செய்வார்..?

சங்கரலிங்கமும் அதைத்தான் செய்தார்.. நந்தினியைக் கவனித்துக் கொள்ள ஆயாவை நியமித்தார்.. சம்பளத்திற்கு வேலை பார்க்கும் ஆயா கடமைக்கு வேலையைச் செய்தாள்.. நந்தினிக்கான தாய்ப்பாசத்தைப் பற்றி அவள் யோசிக்கக் கூட இல்லை..

விவரம் அறியாத குழந்தைப் பருவத்திலேயே தாய்.. தந்தையை இழந்து விட்டதால் நல்லவேளையாக நந்தினிக்கு தாய்பாசமும்.. தந்தையின் பாசமும் எப்படியிருக்குமென்று தெரியாமல் போனது.. அதனால் அவள் இயல்பாக சங்கரலிங்கத்தின் கண்காணிப்பிற்கும்.. நந்தகுமாரின் கண்டிப்பிற்கும் பழகி விட்டாள்..

சங்கரலிங்கத்திற்கும்.. நந்தகுமாருக்கும் அவளிடம் பேச நேரம் இருக்காது.. இருவரும் கால்களில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டவர்களைப் போல நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டேயிருப்பார்கள்.. மூவரும் சேர்ந்து பேசும் நேரமாக உணவருந்தும் நேரம் மட்டுமே இருந்தது.. அப்போதும் அவர்கள் இருவரும் தொழிலைப்

பற்றியும் வியாபாரத்தைப் பற்றியும் மட்டுமே பேசிக் கொண்டிருக்க.. நந்தினி மெல்ல.. மெல்ல.. பேச்சை மறந்து.. பேசாமடந்தையாக ஆகிப் போனாள்...

"என்னம்மா.. சாப்பிட்டயா..?"

இரண்டு பேரும் வெவ்வேறு தொனியில் இந்தக் கேள்வியை மட்டும்தான் நந்தினியிடம் கேட்பார்கள்.. கூடுதலாக...

"ஸ்கூலுக்கு கிளம்பிட்டியா..?" என்பார்கள்...

அது.. மாறி.. "காலேஜீக்கு கிளம்பிட்டியா..?" என்பதில் வந்து நின்ற பின்பும் அவர்களின் கேள்விகள் மட்டும் மாறவேயில்லை..

இதற்கு இடையில் நந்தினிக்கு பதினைந்து வயதாக இருந்த போது அவளுடைய அண்ணனுக்குத் திருமணமாகி.. அண்ணியாக ரூபா வந்து சேர்ந்தாள்.. அவள் வந்த பின்பு நந்தினிக்கும்.. நந்தகுமாருக்கும் இடையில் நடந்து கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச பேச்சு வார்த்தையும் அற்றுப் போய் விட்டது.. உணவுண்ணும் நேரத்தில் அவனருகே ரூபாவும் இருந்ததில் நந்தினி தனியாக உணவருந்தப் பழகிக் கொண்டாள்..





## 2

உன் இமையோர நினைவுகளில்
எழுதிவைத்த கவிதைகளில்..
என் நினைவும் இருந்து விட்டால்..
எனக்கு அது நிலாச்சோறு..!

ரூபாவுக்கு நந்தினியுடன் பேசப் பிடிக்காது.. மென்மையின் வடிவமான நந்தினியின் அழகு.. அவர்களின் உறவு வட்டாரத்தில் பிரசித்தி பெற்றது.. அதில் ரூபாவுக்கு கொஞ்சம்கூட விருப்பமில்லை...

"ஹேய்.. உன் நாத்தனார் கொள்ளை அழகுடி.. இந்த வயதிலேயே இப்படியிருக்கிறாளே.. இன்னும் ஆறு வருசம் போனா.. இந்த திருப்பூருக்கே இவதாண்டி அழகு ராணி.."

திருமணத்திற்கு வந்திருந்த ரூபாவின் தோழி-யொருத்தி இப்படிப்பட்ட விமரிசனத்தை செய்து வைத்ததில்.. அவளின் நட்பே வேண்டாமென்று தள்ளி வைத்து விட்டாள் ரூபா.. அந்த அளவுக்கு அவள் மனதில் நந்தினியின் மீதான பொறாமை மலையளவு இருந்தது..

நந்தினியின் அழகைத்தவிர அவளை ரூபா வெறுப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.. அதை ரூபாவின் ஆழ்மனம் மட்டுமே அறியும்...

'ம்ஹீம்.. இவ என் ஹஸ்பெண்ட் கூடப் பிறக்காம இருந்திருந்தா இத்தனை சொத்துக்கும் நான் மட்டும் தான் சொந்தக்காரி..'

இந்த நினைவுடன் இருந்தவள் நந்தினியை சிநேகிதிக்கும் பார்வையைப் பார்க்காமல்.. பங்காளியைப் பார்ப்பதைப் போன்ற பாசப் பார்வையைத்தான் பார்த்து வைப்பாள்...

அவள் மனதில் எரியும் நெருப்பை அவள் கண்கள் பிரதிபலித்து விடுவதில் நந்தினி அவளை நேருக்கு நேராக பார்க்கவே மாட்டாள்.. ரூபா இருக்கும் இடத்தில் இருப்பதைத் தவிர்த்து விடுவாள்..

ரூபாவின் வரவுக்கு முன்னால் அவளது தேவைகளில் சிலவற்றை அண்ணனிடம் கூறுபவள்.. ரூபா வந்த பின்பு.. எது தேவையென்றாலும் அதை தாத்தாவிடம் கேட்டு வாங்கிக் கொள்வதை வழக்கமாக வைத்துக் கொண்டாள்..

அந்த வகையில் நந்தகுமாரின் திருமணத்தால் ஒரு நன்மை நடந்திருந்தது.. பேரன் தலையெடுத்து அனைத்துப் பொறுப்புக்களையும் தனியாளாக பார்த்துக் கொள்ள ஆரம்பித்திருந்ததில் ஆசுவாசமாக ஆகியிருந்த சங்கரலிங்கம் பேத்தியின் பக்கமாக கடைக்கண் பார்வையை திருப்பியிருந்தார்..

அதிலும் ரூபாவுக்கு நந்தினியிடம் கொஞ்சம் கூட பிடிப்பில்லை என்பதை அந்த வயதான மனிதரின் அனுபவ அறிவு ஒரே பார்வையில் உணர்ந்து கொண்டதில்



பேத்திக்கு அவர் கொடுத்து வந்த கவனிப்பும்.. அக்கறையும் அதிகரித்து விட்டது...

நந்தகுமார் மனைவியுடன் சேர்ந்து சாப்பிட்டால்.. இவர் பேத்தியுடன்தான் சாப்பிட உட்காருவார்... நந்தினியிடம் கனிவாக சில வார்த்தைகள் பேசுவார்... அந்த சில வார்த்தைகளும்.. 'சாப்பிட்டாயா.. காலேஜீக்கு கிளம்பிட்டியா...' என்ற வார்தைகளையும் தாண்டிய பரிவான வார்த்தைகளாக இருந்ததில் நந்தினியின் மனது கொஞ்சமாக நிறைவடைந்திருந்தது.. அவளுக்கும்.. தாத்தாவுக்குமான பாசம் நாளாக.. நாளாக.. வளர்ந்து கொண்டே வந்தது...

நந்தினியின் தனிமையான வாழ்வில்.. கலகலப்பை உண்டு பண்ண அந்த கடவுள் அனுப்பி வைத்த கருவியாக வந்து சேர்ந்தவள் சுவாதி..

ஒரு மழைநாளில் நந்தினி படித்த பள்ளியில் அவளும் வந்து சேர்ந்தாள்.. வகுப்பறையின் வாசலில் அவள் வந்து நின்று..

"இனி இது என்னோட கிளாஸ் மிஸ்.. நான் உள்ளே வரனும்.." என்று அறிவித்தது... நேற்றுத்தான் நடந்ததைப் போல இன்றளவும் நந்தினியின் மனதில் பசுமையாக இருந்தது...

அதற்கு முன்னால் அந்தப் பள்ளியில் புதிதாகச் சேர்ந்த மாணவிகள் எவரும் இப்படிப்பட்ட அறிவிப்புடன் வகுப்பறைக்குள் நுழைய முற்பட்டதில்லை..

அதனால் எழுந்த ஆச்சரியத்துடன் வகுப்பறையே அவளைத் திரும்பிப் பார்த்தபோது நந்தினியும் நிமிர்ந்து பார்த்தாள்..

வகுப்பறைக்கு வெளியே வரண்டாவில் நின்று கொண்டிருந்த சுவாதியின் பின்னால் தெரிந்த பள்ளி மைதானத்தில் கொட்டிக் கொண்டிருந்த மழையின் நீர் தாரைகள்.. அவளுக்குப் பின்னால் நீர் திரையிட்டுக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியதில் நந்தினி வியந்து போனாள்..

'யார்.. இவள்..?'

நந்தினியின் மனதில் உதித்த கேள்வியை வகுப்பாசிரியை

"யார் நீ..?" என்று கேட்டபோது வகுப்பே சிரித்தது..

"நிச்சயமா மோகினியில்லை மிஸ்.. நான் சுவாதி.."

வகுப்பறையின் சிரிப்புக்கு உடனடியான பதிலைச் சொன்ன சுவாதியை வகுப்பு முழுவதும் அதிசயத்துடன் பார்த்தது...

அவர்களில் யாரும் அத்தகைய தைரியத்துடன் ஆசிரியைகளிடம் பேசியதில்லை.. மனதுக்குள் திட்டு வார்கள்.. முதுகுக்குப் பின்னால் பேசுவார்கள்.. முகத்துக்கு நேராக போலிப் பணிவையும்.. பவ்யத்தையும் காட்டுவார்கள்..

ஆசிரியைக்கும் அது தோன்றியிருக்க வேண்டும்.. முகத்தில் சிறு கடுமையுடன்..



"நான் சுவாதின்னா என்ன அர்த்தம்..? நீயென்ன பெரிய பிரைம் மினிஸ்டரா..? உன் பெயரைச் சொன்னதும் இன்னார்ன்னு நான் தெரிஞ்சுக்கறதுக்கு.." என்று அதட்டினாள்..

"இன்னைக்கு நான் பிரைம் மினிஸ்டரில்லை மிஸ்.. நாளைக்கு ஒருவேளை நான் பிரைம் மினிஸ்டரா ஆனாலும் ஆகலாமில்ல..? எப்ப எது நடக்கும்ன்னு யாராலேயும் சொல்ல முடியாது மிஸ்.. இப்போதைக்கு என் பெயர் சுவாதி.. இந்த ஸ்கூலில் புதிதாச் சேர்ந்திருக்கேன்.. பிரின்ஸி மேடம் இந்தக் கிளாஸீக்கு போன்னு சொன்னாங்க.. அதான் வந்தேன்.. தப்பா மிஸ்..?"

முகத்தை அப்பாவி போல வைத்துக் கொண்டு சுவாதி பேசிய விதத்தில் வகுப்பறை வாய் பொத்தி ரகசிய சிரிப்பை உதிர்த்தது...

"சைலென்ஸ்.." ஒட்டு மொத்த வகுப்பையும் அதட்டி வைத்த ஆசிரியை..

"இதுக்கு முன்னால எந்த ஊரில படிச்சே..?" என்று அதட்டினாள்..

"அருப்புக் கோட்டை மிஸ்.." வரவழைத்துக் கொண்ட பவ்யத்துடன் பதில் சொன்னாள் சுவாதி..

"அந்த ஸ்கூலில் உனக்கு யாரிடம் எப்படிப் பேசனு முன்னு சொல்லிக் கொடுக்கலியா..?" கடுப்புடன் கேட்டாள் ஆசிரியை..

"இல்லையே மிஸ்.. அங்கே ஹிஸ்டரி.. ஜியாக்ரபி.. சயின்ஸ்.. மேக்ஸ்.. இங்கிலீஷ்.. தமிழ்ன்னு.. சப்ஜெக்ட்டைத் தான் சொல்லிக் கொடுத்தாங்க மிஸ்.. வேற எதையும் சொல்லித்தரலையே.."

விழி விரித்து கை விரித்த சுவாதியை அந்த வகுப்பு மாணவிகளுக்குப் பிடித்துப் போய் விட்டது...

"வாய் அதிகமிருக்கு.. குறைச்சுக்கோ.. இல்லேன்னா. நாங்க அதைக் குறைக்க வேண்டியிருக்கும்.."

தனியொருத்தியாய் சுவாதியின் வாயைக் குறைக்க முடியாது என்று தெள்ளத் தெளிவாக புரிந்து போனதில்.. மற்ற ஆசிரியைகளையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு பலமான எச்சரிக்கையை விடுத்த ஆசிரியை.. 'வந்து தொலை' என்ற ரீதியில் சுவாதியை வகுப்பறைக்குள் அனுமதித்தாள்..

ஒட்டு மொத்த வகுப்பும் அவள் எந்த பெஞ்சில் உட்காரப் போகிறாள் என்ற எதிர்பார்ப்புடன் தங்கள் பெஞ்சுகளில் அவளுக்கு இடமளிக்க நகர்ந்து உட்கார.. அவளோ.. யாரையும் திரும்பிப் பார்க்காமல் செழுத்தப் பட்ட அம்பைப் போல நேராக நந்தினியின் அருகே சென்று அவளருகில் அமர்ந்தாள்..

"என்ன..? மழையை இப்படி வெறிச்சுப் பார்த்துக் கிட்டு இருக்க..? உன் பக்கத்தில வந்து உக்காந்திருக்கேன்.. என் பக்கமா கொஞ்சம்.. கொஞ்சம் திரும்பிப் பார்த்துப் பேசினா.. குறைந்தா போவ..?"



நந்தினியின் கவனத்தை சுவாதி திருப்பிய அந்த நொடியிலிருந்து அவர்களின் சிநேகிதம் ஆரம்பமானது...

"அது எப்படி சுவாதி.. அத்தனை பெஞ்சுகள் இருக்க.. சரியாய் நூல் பிடிச்சதைப் போல நேரா.. என்கிட்ட வந்து பக்கத்தில் உட்கார்ந்த...,"

இந்தக் கேள்வியினை சுவாதியிடம் நந்தினி பலமுறை கேட்டிருக்கிறாள்.. அவள் பதிலளிக்காமல் தோளைக் குலுக்கியபடி..

"தெரியல.." என்று உதட்டைப் பிதுக்குவாள்..

"மத்தவங்க எல்லோரும் ஒருத்தருக்கொருத்தர் பேசிச் சிரிச்சுக்கிட்டு இருந்தாங்க.. நீ ஒருத்தி மட்டும் தான் என் முகத்தையே பார்த்துக்கிட்டு இருந்த.. அதனால இருக்கலாம்.."

அது எதனால் என்று சுவாதிக்கும் சொல்லத் தெரிய வில்லை.. அது.. இது.. என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத நட்பு அவர்களுக்குள் விதை விட்டு வளர்ந்து விருட்சமாகி படர்ந்து நின்றது...

யாரிடமும் ஒட்டாத நந்தினி சுவாதியிடம் ஒட்டிக் கொண்டாள்.. மதிய உணவை பகிர்ந்து கொள்வதில் ஆரம்பித்த நட்பு.. மெல்ல.. பள்ளியை விட்டுத் தாண்டி.. வீடுகளுக்குள் மையம் கொண்டது..

"தாத்தா.. இவதான் சுவாதி..."

ஒரு மாலை வேளையில் அலுவலக அறையில் கண்ணாடியை சரி செய்தபடி தொழில் சம்பந்தப்பட்ட

ஃபைலை படித்துக் கொண்டிருந்த சங்கரலிங்கத்தின் முன்னால் சுவாதியைக் கொண்டு போய் நிறுத்தினாள் நந்தினி...

நிமிர்ந்து பார்த்த சங்கரலிங்கத்தின் நெற்றியில் சுருக்கங்கள் படிந்தன.. வந்திருந்த சிறுமியின் எடை போடுவதைப் போல இருந்தது அவரின் துளைக்கும் பார்வை.. அவரின் சிரிப்புத் தவழாத முகத்தில் கவலை கொண்டாள் நந்தினி.. அதுவரை அவள் சிநேகிதியென்று யாரையும் வீட்டிற்கு அழைத்து வந்ததில்லை....

'தாத்தா கோவிச்சுக்கிட்டாரோ..'

அவளின் கவலை அப்பிய முகத்தில் எதைக் கண்டாளோ.. சுவாதி அவளது இயல்பான கலகலச் சிரிப்புடன் கையை விரித்து ஆட்டி..

"ஹாய்.. தாத்தா.." என்று சொல்லி வைத்தாள்..

நந்தினி அரண்டு போனாள்.. சங்கரலிங்கத்தின் முன்னால் நின்று பேச அவளே பயப்படும்போது.. சுவாதி கையை ஆட்டி 'ஹாய்' சொல்லி வைத்தால் அவள் அரண்டு போக மாட்டாளா..?

சங்கரலிங்கத்தின் நெற்றிச் சுருக்கங்கள் அதிகமாயின..

"உன் கூடப் படிக்கிற பெண்ணாம்மா..?" என்று நந்தினியைப் பார்த்துக் கேட்டார்..

"ஆமாம் தாத்தா.." நந்தினி முகம் மலரச் சொன்னாள்..



"இது அநியாயம் தாத்தா.." சுவாதி நந்தினியின் கை பிசைதலைக் கண்டு கொள்ளாமல் ஊடே புகுந்தாள்..

சங்கரலிங்கத்தின் புருவங்கள் உயர்ந்தன.. அவ்வளவுதான் என்று மானசீகமாக தலையில் கை வைத்துக் கொண்டாள் நந்தினி...

'இனி அண்ணனுக்கு நியுஸ் போகும்.. இரண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு யார்கூடப் பேசனும்.. யார்கூடப் பேசக் கூடாதுன்னு எனக்கு கிளாஸ் எடுக்கப் போறாங்க...'

சுவாதியை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கக் கூடாதோ என்று காலங்கடந்து அவள் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில்.. அப்படிப்பட்ட கவலை ஏதுமில்லாத கொடுத்து வைத்த பிறவியான சுவாதி..

"ஹாய் சொன்னது நான்.. எனக்குப் பதிலுக்கு ஒரு ஹாயைச் சொல்லாம உங்க பேத்திகிட்ட மட்டும் பேசிறிங்க.." என்று உரிமையுடன் சங்கரலிங்கத்திடம் கோபித்துக் கொண்டாள்...

'போச்சு...'

நந்தினி இதயம் படபடக்க போய் விடலாம் என்று சுவாதிக்கு சைகை செய்ய முயன்று கொண்டிருந்த போது.. அவளுக்கு மயக்கத்தை வரவழைத்தார் சங்கரலிங்கம்..

லேசான புன்னகையுடன் சுவாதியைப் பார்த்து..

"அதுக்கென்னம்மா.. ஹாய் சொல்லிட்டாப் போச்சு.. ஆமாம்.. உன் வீடு எங்கேயிருக்கு..? அப்பா என்ன

பண்ணுகிறார்.." என்ற பூர்வாங்க விசாரணையை ஆரம்பித்து விட்டார்..

அவ்வளவு எளிதாக அவர் யாருடனும் உரையாடி விட மாட்டார் என்பதினால் இமைகொட்டி விழித்தாள் நந்தினி..

'இங்கே என்னதான் நடக்குது..?'

அதிசயம் நடந்தது... சங்கரலிங்கம் சுவாதியை உட்காரச் சொன்னார்... அவள் அதுதான் சாக்கென்று சங்கரலிங்கத்தின் மேஜைமேல் கைகளை பதித்து.. சரிந்து அமர்ந்து அவரிடம் கதை பேச ஆரம்பித்து விட்டாள்.. அவளின் அருவி போன்ற தடையற்ற பேச்சை ரசிக்கும் முறுவல் அவரிடமிருந்து வெளிப்பட்டது..

"பூங்கொடி.."

வேலை செய்யும் பெண்ணை அழைத்து அவர்கள் அனைவருக்கும் ஜூஸ் கொண்டு வரச் சொன்னார்.. அவளுடைய சிநேகிதிக்கு தாத்தா கொடுத்த முக்கியத்துவத்தில் நந்தினியின் மனம் குளிர்ந்தது..

"சுட்டிப் பெண்.."

சுவாதி போனவுடன் அவர் சொன்னார்..

"ஆமாம் தாத்தா.. வந்த முதல்நாளிலேயே எங்க கிளாஸை ஒரு கலக்கு கலக்கினவ இல்ல இவ.." நந்தினி பெருமையாகச் சொன்னாள்...

சங்கரலிங்கத்தின் பார்வை பேத்தியின் முகத்தில் பாசத்துடன் படிந்தது.. நந்தினிக்கு சுவாதி மேலிருந்த



பிரியத்தை அவர் புரிந்து கொண்டார்.. அதனாலேயே நந்த குமாரின் ஆட்சேபத்தை அவர் அடக்கி விட்டார்...

"நல்ல பொண்ணுதான் நந்து.. நம்ம வீட்டுப் பெண்ணோட மனசையும் நாம பார்க்கனும்.. தனியா வளர்ற பொண்ணு.. கூடப் பேசிப் பழக உன்னையும்.. என்னையும் விட்டா அவளுக்கு யாரிருக்கா..? நமக்குத்தான் அவகூட நின்னு பேச நேரமிருக்கா..? சிநேகிதி கூடவாவது சிரிச்சுப் பேசிப் பழகட்டுமே..."

தாத்தாவின் பேச்சைத் தட்டியறியாத நந்தகுமாரும் அமைதியாகிவிட்டான்.. அதற்குப் பின்னால்.. விடுமுறை நாள்களிலும்.. ஓய்வு நேரங்களிலும் சுவாதி நந்தினியின் வீட்டில் பொழுதைக் கழிப்பதும்.. நந்தினி சுவாதியின் வீட்டில் பொழுதைக் கழிப்பதும் இயல்பான நிகழ்வுகளாகி விட்டன..

ஒற்றை மகளை பெற்ற ரங்நாதனுக்கும்.. சித்ரலேகாவுக்கும் நந்தினி இன்னொரு மகளாக மாறிப் போனாள்.. அம்மா.. அப்பா.. என்று அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தாள்...

"லேகா.. நந்தினி வந்திருக்கா பாரு.. அவளுக்குப் பிடிச்ச அடை செய்யனும்னு சொன்னியே இன்னைக்கு செஞ்சுரு.." என்று ரங்கநாதனும்..

"என்னங்க.. வெளியே போனா பால் பாக்கெட் இரண்டு மூணைக் கையில் பிடிச்சுட்டு வாங்க.. நந்தினி பால்கோவா வேணும்னு கேட்பா..."

என்று சித்ரலேகாவும் மாறி மாறி வேலை சொல்லிக் கொள்ளும் அளவிற்கு அவர்களின் பிரியத்துக்குரிய மகளாக ஆகிப் போனாள் நந்தினி...

"இதுதாண்டி ஒட்டகத்தின் கதை..." சுவாதி விளையாட்டாக அலுத்துக் கொண்டாள்..

"அது என்னடி ஒட்டகக் கதை.." கதை கேட்கும் ஆர்வத்துடன் கேட்டாள் நந்தினி..

"கூடாரத்துக்குள்ள ஒட்டகம் முதல்ல தலையை நீட்டுச்சாம்.. ஓகேன்னு விட்டுட்டாங்களாம்.. மெல்ல உடம்பையும் இழுத்துச்சாம்.. போகுதுபோன்னு அதையும் அவங்க கண்டுக்கலையாம்.. கடைசியா வாலையும் உள்ளே கொண்டு வந்திருச்சாம்.. இருந்தா இருந்துட்டுப் போகட்டும்ன்னு அவங்க நினைச்சாங்களாம்.. ஆனா ஒட்டகம் என்ன நினைச்சுச்சு தெரியுமா..?"

"என்னடி நினைச்சுச்சு..?"

"இருக்க இடம் கொடுத்தவங்கள வெளியே துரத்திட்டு அது மட்டும் ஹாயா கூடாரத்துக்குள்ளே தூங்க ஆரம்பிச்சுருச்சாம்.."

"ஓஹோ.." கதை கேட்டு முடித்த நந்தினி...

"ஆமாம்.. இந்தக் கதையை ஏண்டி இப்போ வந்து சொல்ற..?" என்று சந்தேகம் கேட்டு வைத்தாள்...

"நிஜமாவே உனக்குப் புரியலையா..?" தோழியின் முகத்தை கூர்ந்து பார்த்தாள் சுவாதி..



"ஒரு மண்ணும் புரியலை.." என்றாள் நந்தினி...

"மக்கு.." நந்தினியின் தலையில் குட்டியவள்..

"அந்தக் கதைதான் என் சொந்தக் கதையாய் ஆகிப் போச்சோன்னு இருக்குடி.." என்று சோகமாக முகத்தை வைத்துக் கொள்ளவும் நந்தினிக்கு ஒட்டகக்கதையின் தாத்பர்யம் புரிந்து விட்டது..

"அதாவது நான் ஒட்டகம்.. அம்மணி கூடாரத்தில குடியிருக்கிறவங்களோ.." அவள் துரத்த ஆரம்பிக்க...

"ஏய்.. நந்தினி.. என்னை விட்டுருடி.." என்று அவள் கைக்கு எட்டாத தொலைவில் விலகி ஓடினாள் சுவாதி..

அவர்கள் சேர்ந்தே படித்தார்கள்.. சேர்ந்தே சாப்பிட்டார்கள்.. சேர்ந்தே கல்லூரிக்குப் போய் வந்தார்கள்.. தூங்கும் போது மட்டும் அவரவர் வீடுகளுக்குப் பிரிந்து போய் உறங்கினார்கள்..

மேல்நிலைக் கல்வி வரை தொடர்ந்த நட்பு.. கல்லூரியைத் தொடும்போது பிரிவைத் தொட இருந்தது..

"அப்பாவுக்கு டிரான்ஸ்பர் வரும் போல இருக்குடி நந்தினி..."

சுவாதி முகம் இருளச் சொன்னபோது நந்தினி தாத்தாவைத் தேடிப் போனாள்..

"தாத்தா.."

தழுதழுத்த நந்தினியின் சோகத்தைக் காணச் சகிக்காமல் சங்கரலிங்கம் அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி ரங்கநாதனின் பணிமாறுதலை கேன்சல் செய்து விட்டார்..



# 3

நீ பார்த்த பார்வையிலே..
நிலாச் சோற்றை உணர்ந்தபின்பு..
பேச வந்த வார்த்தைகளைப்
பேசிடவே தோன்றவில்லை..

சங்கரலிங்கம் பணக்காரராக இருந்தாலும் பண்பட்ட மனிதர்.. ஒரு நபரின் கண்களைப் பார்த்தே அவரின் குணாதிசியத்தைக் கணித்து விடும் ஆற்றல் கொண்டவர்.. நந்தினியின் விழிகளில் தெரியும் தனிமையுணர்வை அவர் அறியாமல் இல்லை.. ஆனால் அதைப் போக்கும் வகை தான் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.. கோமளம் உயிருடன் இருந்திருந்தால் அவருக்குக் கை கொடுத்திருப்பாள்.. அவளும் இல்லை.. சடகோபனும்.. யாமினியும் இல்லை யென்றாகி விட்ட பின்பு.. பாவம்.. அந்த வயோதிக மனிதர்தான் என்ன செய்வார்..?



அவர் பொறுப்பில் வந்து விட்ட பேரன்.. பேத்தி.. இருவரில்.. நந்தினி இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தாள்.. நந்தகுமார் பனிரெண்டு வயதுச் சிறுவனாக இருந்தான்.. குழந்தையைக் கவனிக்க ஆயாவை நியமித்தார்.. சிறுவனைத் தன் கண்காணிப்பில் கொண்டு வந்து தொழில்களைக் காப்பாற்றும் திறமையையும்.. அறிவையும் அவனுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார்..

ஆசானாக அவரிருந்து நந்தகுமாரை உருவாக்கி பொறுப்பில் அமர வைத்து விட்டு அவர் திரும்பிப் பார்த்த போது.. நந்தினி பத்து வயது சிறுமியாக இருந்தாள்.. அவளிடம் பரிவான வார்த்தைகளைப் பேசலாம்.. அவள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியுமா..?

பேரனுடன் இணையாக பேச முடிந்தவரால்.. பேத்திக்கும் அந்தத் தோழமையைக் கொடுக்க முடியாமல் போய் விட்டது.. நந்தினியின் மனதில் தனிமை என்பது மிகப் பெரும் பாறையாக ஏறி அமர்ந்திருக்கிறது.. என்பதை அவர் கண்டு கொண்டார்.. அதைப் பொடிப் பொடியாக்கும் வழி தெரியாமல் அவர் மனதுக்குள் குமைந்து கொண்டிருந்த போது நானிருக்கிறேன் என்று வந்து நின்றவள் தான் சுவாதி...

'ஹாய் தாத்தா..' என்று பயமில்லாமல் முதல் சந்திப்பிலேயே கலகலத்த சுவாதியினால் மட்டுமே நந்தினியின் மனதில் உள்ள வெற்றிடத்தை இட்டு நிரப்ப முடியும் என்று கண்டு கொண்டவர் சங்கரலிங்கம்..

சுவாதியைப் பற்றிப் பேசினாலோ இல்லை.. அவளருகில் இருந்தாலோ.. நந்தினியின் முகத்தில் பொங்கிப் பரவும் உற்சாக அலைகளில் அவர் மனம் நெகிழும்.. அவரது பேத்தி இந்த அளவுக்கு அன்பையும்.. தோழமையையும் தேடியிருக்கிறாளா என்று மனதுக்குள் விம்முவார்...

இதுபோன்ற துயரங்கள் இல்லாத வாழ்வை இறைவன் கொடுத்தால் தேவலைதான்.. அதை அவனுக்கு யார் சொல்வது..?

நந்தினியின் பதினைந்தாவது வயதில் நந்தகுமாருக்கு திருமணமாகி அந்த வீட்டுக்குள் ரூபா காலடி எடுத்து வைத்த போது... அவள் வரவால் குடும்பத்தின் பழைய குதூகலம் திரும்ப வருமென்று அவர் ஆவலுடன் எதிர் பார்த்தார்... கோமளமும்.. யாமினியும் அந்த வீட்டிற்குள் கொண்டு வந்த அத்தனை சந்தோசங்களையும் ரூபா மீட்டுக் கொடுப்பாள் என்று நம்பினார்...

அந்த நம்பிக்கையையும்.. எதிர்பார்ப்பையும்.. தவிடு பொடியாக்கினாள் ரூபா.. அதுவரை அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருந்த மூவரை இருவராக்கி.. நந்தகுமாரை அவள் வசம் இழுத்துக் கொண்டாள்.. நந்தினியின் தனிமை தொலைந்து போகாமல் அதிகரித்துத் தொலைத்ததைக் காணச் சகிக்காத சங்கரலிங்கம்.. சுவாதியுடனான நந்தினியின் நட்பை அதிகமாக ஆதரிக்க ஆரம்பித்தார்...

"தாத்தா.. நம்ம நந்தினி பிரண்டு வீட்டில அதிக நேரம் ஸ்பெண்ட் பண்றதும்.. அந்தப் பிரண்டு நம்ம வீட்டில ஒருத்தியா வந்து போகிறதும் நல்லதுக்கு இல்லைன்னு ரூபா சொல்கிறா.."



ரூபா.. நந்தகுமாரின் மூலமாக நந்தினியிடமிருந்து சுவாதியைப் பிரிக்க நினைக்க.. முதன் முறையாக சங்கர லிங்கத்தின் முறைப்பை எதிர் கொண்டான் நந்தகுமார்..

"சுவாதி யாரோ ஒரு பெண்ணில்லை.. நம்ம வீட்டில ஒருத்தியா இருக்கிற பெண்.. இதை நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சுக்கனுமா..?"

"அதில்லை தாத்தா.. எனக்கு சுவாதியைத் தெரியும்.. ரூபாவுக்கு தெரியுமா..?"

"தெரியவை..."

"தாத்தா.."

"நந்து.. உனக்கும் நந்தினிக்கும் நான்தான் கார்டியன்னு உன் அப்பா எழுதி வைச்ச உயில் சொல்லுது.. உன் மீதான கார்டியனின் அதிகாரம் எனக்கு முடிஞ்சு போயிருச்சுதான்.. ஆனா.. நந்தினிக்கு நான்தான் கார்டியன்.. நீயில்லை.. இதை நினைவில் வைத்துக்க.. உன் மனைவிக்கும் சொல்லிவை..."

"என்ன தாத்தா இப்படிப் பேசறிங்க..?"

"வேற எப்படிப் பேசச் சொல்ற..?"

"ரூபா நம்ம குடும்பத்தோட நல்லதுக்காகத்தானே சொல்கிறா..?"

"எது நல்லது.. எது கெட்டதுன்னு அவளைவிட எனக்கு நல்லாத் தெரியும்ன்னு அவளுக்குச் சொல்லிரு நந்து.. நீயும் இதை நினைவில் வைத்துக்க.."

"எதுக்காக தாத்தா இவ்வளவு கோபம்..?"

"இது சரியில்லை நந்து.. வீட்டில் இருக்கிற சின்னப் பெண்ணுக்கு உன் மனைவி அம்மாவா இருக்க வேணாம்.. அண்ணியாய் இருக்கலாமில்ல..? அதுக்கும் முடியாதுன்னு ரூபா.. நந்தினியை அவாய்டு பண்றா.. இந்த லட்சணத்தில அவளுக்கிருக்கிற ஒரே பிரண்டையும் அவகிட்ட இருந்து பிரிக்கப் பார்க்கிறாளா..? எனக்கு உன் சந்தோசம் எந்த அளவுக்கு முக்கியமோ.. அதே அளவுக்கு நந்தினியின் சந்தோசமும் முக்கியம்.. உன்னை ஆளாக்கி பொறுப்புக் களை ஒப்படைச்சு கல்யாணமும் பண்ணி வைத்துட்டேன்.. இனி நந்தினியை நான் பார்த்தாகனும்.. ஸோ.. நீயும் ரூபாவும் நந்தினியின் விசயத்தில் தலையிடாம இருக்கிறதே நல்லது.."

"நானுமா..?"

நந்தகுமார் மனதில் அடி வாங்கினான்.. என்னதான் புது மனைவியின் மீது அவனுக்கு காதல் இருந்தாலும்.. அவள் ஓதும் தலையணை மந்திரங்களுக்கு அவன் செவி சாய்ந்தாலும்.. நந்தினியின் மீது அவனுக்கு பாசம் இல்லாமல் போய் விடுமா..? அவள் அவனுடைய தங்கையல்லவா..?

அதற்குப் பின்னால் நந்தினியைப் பற்றியும்.. அவளுக்கு சுவாதியுடன் இருக்கும் நட்பைப் பற்றியும்



ரூபா எதையாவது சொல்ல வந்தால் அவன் காது கொடுத்து அதைக் கேட்க மாட்டான்..

"உனக்கெதுக்கு இந்தப் பேச்சு..?"

அவனின் முகச் சுளிப்பில் அவசரமாக பேச்சை மாற்றி விடுவாள் ரூபா.. எவ்வளவுதான் பிரம்ம பிரயத்தனங்களைச் செய்தாலும்.. கணவனின் தங்கை மீதான பாசத்தை உடைக்க முடியாததில் நந்தினியின் மீதான அவளது வன்மம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது...

அதிலும்... சுவாதி நந்தினியைப் பார்க்க அந்த வீட்டுக்கு வரும் போதெல்லாம் வீசுகின்ற அலட்சியப் பார்வைகளில் ரூபா கொதித்துப் போய் விடுவாள்...

'என்ன ஒரு தைரியம்..! எனக்கு இவ இணையாவாளா..? என் வீட்டுக்குள்ளேயே வந்து என்னை முறைச்சுட்டுப் போறாளே.. இது யார் கொடுத்த தைரியம்..?'

இந்தக் கேள்வியை அந்த வீட்டில் இருக்கும் ஒருவரிடமும் கேட்க முடியாமல் நம்பியாரைப் போல அவள் கையை மட்டுமே பிசைய முடிந்தது.. மற்றபடி சுவாதிக்கு எதிராக ஒரு ஆணியைக் கூட அவளால் பெயர்க்க முடியவில்லை...

அதனால் அவளால் முடிந்த ஒரே செயலாக.. சுவாதி அவளின் ரத்த அழுத்தத்தை எகிற வைக்கும் போதெல்லாம் ஒரு மாத்திரையை விழுங்கி அதைச் சமனப் படுத்திக் கொண்டு கண்மூடிப் படுத்து விடுவாள்...

அப்படி ஆனானப்பட்ட ரூபாவையே ரத்த அழுத்தத்திற்கு ஆளாக்கித் தலையால் தண்ணீர் குடிக்க வைக்கும் சுவாதியைத்தான். மதிய உணவு முடிந்த பகல் பொழுதின் முதல் வகுப்பில் தூக்கத்திற்கும்.. விழிப்புக்கும் இடையே அலைக்கழித்துக் கொண்டிருந்தாள் அவளது கல்லூரியின் விரிவுரையாளர்...

ஒருவழியாக விரிவுரையாளர் அறையை விட்டு வெளியேற.. தூங்கிப் போய் விட்ட சுவாதியை தட்டி எழுப்பினாள் நந்தினி...

"உன்கூட பெரிய கொடுமைடி.. லெக்சர் பண்ற கொடுமையை விட நீ பண்ற கொடுமை வன்கொடுமை-யாயிருக்கு.. எதுக்காக இப்ப எழுப்பற..?"

தூக்கத்திலிருந்து எழுந்த சுவாதி சீறிப் பாய்ந்தாள்..

"அடி வாங்க போறடி.. கிளாஸைக் கவனிக்காம தூக்கம் போட்டுட்டு அடாவடியா பண்ற..?" நந்தினி கோபித்தாள்...

"அதைக் கவனிச்சு என்ன பண்ணப் போறேன்.." சுவாதி வாயருகே விரல் சொடுக்கி கொட்டாவி விட்டாள்..

"அடிப்பாவி..! லெக்சரர் லெக்சர் கொடுத்தா நோட்ஸ் எடுக்க வேணாமா..?" நந்தினி வாய் பொத்தினாள்..

"அது என்ன தேவைக்கு..? அதுக்குத்தான் நீயிருக்கயே..."



அலட்டிக் கொள்ளாமல் பதிலைச் சொல்லிவிட்டு மீண்டும் தூங்கப் போன சுவாதியின் முதுகில் நான்கு மொத்து மொத்தினாள் நந்தினி...

"வலிக்குதுடி..."

முதுகைத் தடவியபடி நிமிர்ந்து அமர்ந்தாள் சுவாதி.. நந்தினி கொடுத்த அடியில் அவளது தூக்கம்.. துப்பட்டாவைக் காணோம் என்று துரத்திக் கொண்டு ஓடியே விட்டது..

"வா.. கேண்டினுக்குப் போகலாம்.."

நந்தினி அழைக்கவும் உற்சாகமாக எழுந்து கொண்டாள் சுவாதி..

"இது பேச்சு.. வா.. வா.. போகலாம்.. இந்நேரத்துக்கு மெதுவடையும்.. இனிப்புப் போண்டாவும் சுடாப் பொரிச்சு வைச்சிருப்பாங்க..."

"நீ திங்கிறதிலயே இரு.. இப்பத்தான் மதியத்தில மொக்கினதில செமத்தியாத் தூக்கம் போட்டு முடிச்சிருக்க.. இப்ப மெதுவடையையும் போண்டாவையும் உள்ளே தள்ளிட்டுத் திரும்பவும் தூக்கம் போடலாம்கிற திட்டமா..? கொன்னே போட்டிருவேன்.. வீட்டுக்குப் போகாம கிளாஸ் ரூமிலேயே தூக்கம் போடலாம்கிற திட்டத்தோட இருக்கியா..?"

"வீட்டுக்குப் போகலாமா..? எப்ப..? எப்ப..?"

பறப்பாய் பறந்தவளை விசித்திரமாய் பார்த்து விட்டு தலையில் அடித்துக் கொண்டாள் நந்தினி...

"ஏண்டி இந்தப் பாடுபடுத்தற..? நீ வீட்டையே பார்த்ததில்லையா..?"

"உனக்கென்னடி தெரியும்.. மதியம் லன்ச்சை முடிக்கிற வரைக்கும் எனக்கு வீட்டு ஞாபகம் வரவே வராது... லன்ச்சை உள்ளே தள்ளிட்டேன்னு வைய்யி.. எப்படா வீட்டுக்குப் போகலாம்.. போயி ஒரு குட்டித் தூக்கம் போடலாம்ன்னு மனசுக் கழுதை கிடந்து அடிப்பாய் அடிச்சுக்கும்..."

"அடிக்கும்.. அடிக்கும்.. இப்படியே போச்சுன்னு வைய்யி... உன் இன்டர்னல் மார்க்கில ஹெச்.ஓ.டி. அடிச்சுருவாங்க.. இன்னும் ஒரு கிளாஸ் பாக்கியிருக்கு.. அதை முடிச்சுட்டுத்தான் வீட்டுக்குப் போகனும்.. இப்ப கேண்டினுக்குப் போயி சூடா ஒரு கப் டீயை மட்டும் குடி.. தூக்கம் பறந்து போயிரும்..."

"டீ மட்டும்தானா..?"

ஏக்கத்துடன் கேட்ட சுவாதியைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது நந்தினிக்கு.. அவள் செய்த அட்டூழியங்களை நந்தினி வெகுவாக ரசித்தாள்.. வறண்டு போயிருந்த அவளது வாழ்வுப் பாதையில் சுவாதி பூசிய வர்ணக் கோலங்களில் நந்தினியின் மனம் உயிர்த்துப் பூப்பூத்த நந்தவனம் போல ஆகிக் கொண்டிருந்தது..

தோழிகள் இருவரும் பேசிச் சிரித்தபடி வகுப்பறையை விட்டு வெளியே வந்தார்கள்.. எதிர்பட்ட ஆனந்தன் நந்தினியைப் பார்த்தபடி சுவாதியிடம்...



"ஹாய்.." சொன்னான்..

பதிலுக்கு ஹாய் சொல்லாத சுவாதி அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு..

"பேசனும்னு நினைச்சா நேரடியாய் பேசு.. அதை விட்டுவிட்டு இவகிட்டச் சொல்ல வேண்டிய ஹாயை இவளப் பாத்துக்கிட்டே என்கிட்ட ஏன் சொல்லி வைக்கிற..?" என்று சண்டைக்குப் போனாள்...

நந்தினியின் முகம் மாறியது.. அவள் முறைத்த முறைப்பில் அந்த ஆனந்தன்...

"ஹி.. ஹி.." என்று சுவாதியிடம் வழிந்தபடி வேக நடைபோட்டுக் கடந்தான்..

"ஐ டோன்ட் லைக் திஸ் சுவாதி.." நந்தினி வெடுவெடுத்தாள்...

"எனக்கு மட்டும் இதைப் பிடித்திருக்குன்னா நினைக்கிற..? எனக்கும்தான் இதைப் பிடிக்கலை.. அது இதுக்குத் தெரியுதா..? இது மனசுக்குள்ள மன்மதன்னு நினைப்பு.. எப்பப் பார்த்தாலும் வழியுது.." சுவாதி தோளைக் குலுக்கினாள்...

நந்தினிக்கு கோபம் வந்தது.. அவள் இதைப் பிடிக்க வில்லையென்று எதைச் சொன்னாள்..? சுவாதி அந்த 'இது'வை 'எது'வாக எடுத்துக் கொள்கிறாள்..?

அவள் இமைக்காமல் சுவாதியைப் பார்க்க.. அவள்..

"அம்பேல்.." என்று கைகளை உயர்த்தினாள்..

"விடுடி.. விடுடி.. இது ஒரு பேச்சா..?" சுவாதி நந்தினியைச் சமாதானப் படுத்த முயல.. அவள் கையை கோபத்துடன் தட்டி விட்டாள் நந்தினி..

"இப்பச் சொல்கிற 'இது' எது..?"

"'இது' இதுதான்.. அப்பச் சொன்ன 'இது'தான் வேற.."

"இதை இந்தப் பாடுபடுத்தின.. உன் கூடப் பேச்சே வைத்துக்க மாட்டேன்..."

"போச்சுடா.. 'இது'க்குப் போயி இவ்வளவு கோபமா..?"

"திரும்பவும் 'இது'வா..?"

"இந்த 'இது' வேற 'இது' நந்தினி.."

"என்னவோ போ.. எப்படித்தான் இப்படிப் பேசி வைக்கிறயோ.."

நந்தினி அலுத்துக் கொண்டாள்.. பேசியபடியே கேண்டினை அடைந்தவர்கள் டீ குடித்தார்கள்.. சுவாதியின் நாசியை உருளைக்கிழங்கு போண்டாவின் மணம் துளைத்தலில் அவள் கெஞ்சுதலாக நந்தினியைப் பார்த்தாள்..

"தொலை.." நந்தினி அனுமதி கொடுத்தாள்..

"ஒன்னே ஒன்னுதான்.." வாக்குக் கொடுத்த சுவாதி ஒன்றுக்கு பத்தாக போண்டாக்களை உள்ளே தள்ளி விட்டு..

"தூக்கம் கண்ணைச் சுழட்டுதுடி.. டீ குடிச்சும் தூக்கம் போகலை பாரு.." என்று டீயைக் குறைசொன்னாள்..



"உன்னை..." நந்தினி பல்லைக் கடித்தாள்..

"இதுதான் நீ ஒரு போண்டாவை உள்ளே தள்ளுகிற லட்சணமா..?"

"பாருடி நந்து.. நான் ஒன்னும் எனக்காக சாப்பிடலை.. உனக்கொண்ணு.. தாத்தாவுக்கு ஒன்னு.. அப்பாவுக்கு ஒன்னு.. அண்ணனுக்கு ஒன்னு.." என்று ஆரம்பித்த சுவாதி.. பத்து போண்டாக்களுக்கும் ஆள் பிடித்துச் சொன்னாள்...

"முடியலைடி.." நந்தினி கலகலத்துச் சிரித்தாள்...

அவர்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள்.. விரிவுரையாளரின் விரிவுரையைக் கேட்பதை விட ரூபாவின் அறிவுரைகளைக் கேட்டு விடலாம் என்று சுவாதி அபிப்ராயப் பட்டாள்.. ஒருநாள் கேட்டுப் பார் என்று நந்தினி ஆலோசனை சொன்னாள்.. அந்தத் தலைவிதி அவளுக்கு எதற்கு என்று சுவாதி கேள்வி கேட்டாள்..

"உன் இடத்தில் நான் மட்டும் இருந்தேன்னு வைய்யி.. ஒரே வாரத்திலேயே உன் அண்ணியை பிறந்த வீட்டுக்கு ஓட்டியிருப்பேன்..."

"அதுக்காகவா என் அண்ணன்கூட நான் பிறந்திருக்கேன் சுவாதி..?"

"ஆரம்பிச்சுட்டியா..?"

"ப்ம்ப்ச்.. உனக்கு என் மனசைப் புரிஞ்சுக்க முடியாதுடி.. அண்ணன் பாவம்டி.. சின்ன வயசில

இருந்து தொழில்.. தொழில்ன்னு ஓடிக்கிட்டு இருக்கார்.. இப்பத்தான் அவரோட வாழ்க்கையிலயும் ஒரு சந்தோசம் வந்திருக்கு.. அதை நான் கெடுக்கனுமா..?"

நந்தினியின் அந்தத் தன்மையில் மனம் கரைந்து போனாள் சுவாதி...

இத்தனைக்கும் ரூபா.. நந்தகுமாருக்கு கழுத்தை நீட்டி.. அவன் குடும்பத்தில் வாழ வந்த நாள் முதலாய் இன்று வரை நந்தினியிடம் ஒரு வார்த்தை கூட முகம் கொடுத்துப் பேசியதில்லை.. எங்கிருந்துதான் வந்து சேருமோ.. நந்தினியைக் கண்டதும் அவள் விழிகளில் அத்தனை அலட்சியம் வந்து குடி கொண்டு விடும்.. அவள் துச்சமாகப் பார்க்கும் பார்வையில் வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் வீட்டை இரண்டாக ஆக்கி விட்டுத்தான் மறு வேலையைப் பார்த்திருப்பாள்...

நந்தினி அப்படிச் செய்யவில்லை.. ரூபாவின் ஆணவத்தையும்.. அலட்சியத்தையும் பொருட்படுத்தாமல் நகர்ந்து விடுவாள்.. முடிந்த வரைக்கும் அவள் கண் பார்வையில் படாமல் அறைக்குள் இருப்பதையே வழக்கமாகக்கிக் கொண்டிருந்தாள்.. மற்ற நேரங்களில் அவளுக்குத் தப்பிக்கும் மார்க்கமாக பள்ளியும்.. கல்லூரியும் இருந்தன...

"பாவம்டி நீ.. எத்தனை நேரம்தான் உன் ரூமுக்குள்ளேயே அடைந்து கிடப்ப..?"

சுவாதி அனுதாபப் பட்டாலும்.. நந்தினியின் அறை ஒரு சிறிய வீட்டைப் போல வரவேற்பறை, உடைமாற்றும்



அறை, பால்கனி என்ற பல்வேறு அறைகளைக் கொண்டதாக இருந்ததால்..

"போகுது விடுடி.." என்று சொல்லி விட்டாள்..

அந்த அறைக்குள் மிகப் பெரிய டிவி சுவரில் பொருத்தப் பட்டிருந்தது.. சுவாதி அங்கு வரும் நாள்களில் பிடித்த உணவு வகைகளைச் செய்து தரச்சொல்லி மேகலாவிடம் சொல்லி விட்டு மாடியேறிவிடுவாள்... நந்தினியின் அறைக்கே பூங்கொடி உணவு வகைகளைக் கொண்டு வந்து விட.. அதைக் காலி செய்தபடி தோழிகள் இருவரும் திரைப்படங்களைப் பார்ப்பார்கள்.. பால்கனியில் உள்ள மர ஊஞ்சலில் அமர்ந்து கையாட்டிக் கதை பேசுவார்கள்.. வரவேற்பறையின் சோபாக்களில் சரிந்து அமர்ந்து லேப்டாப்பை நோண்டுவார்கள்...

ஒருவகையில் அந்த இடையூறில்லாத தனிமையை தோழிகள் இருவரும் ரசித்தார்கள்.. அறைக்குள்ளே தோழி அடைந்து கிடப்பதைப் பற்றி பெரிதாக எதையும் சுவாதி பேசி விடவில்லை...

ஆனாலும் ரூபாவை சந்திக்க நேரும் போதெல்லாம் அவள் கண்களில் கனல் வீசும்.. அந்தக் கனல் வீச்சில் ரூபா பல்லைக் கடிப்பாள்.. ஆனாலும் அவளால் எதையும் செய்ய முடியாததில் மனதுக்குள் பொருமிப் போவாள்...

அது எப்படித்தான் ரூபாவின் வைர நகைகளிலும்.. உடையிலும் அயர்ந்து போகாமல் இதனால் எனக்கென்ன வந்தது என்ற பாவனையில் அவளைக் கண்டு கொள்ளாமல்

சுவாதி கடந்து போகிறாளோ என்று ரூபாவுக்கு ஆயாசமாக இருந்தது...

வைரங்களைப் பார்த்தறியாதவளுக்கு.. அந்த ஒளிர் விடும் வைரங்களை தினப்படி நகைகளாக அணிந்து கொண்டிருக்கும் ரூபாவைப் பார்த்தால் மலைப்பு வர வேண்டாமோ..?

# 4

ஊர் விட்டு ஊர் வந்து
உன்னிடத்தில் என்ன கேட்டேன்..?
நிலவொளியில் சோறுண்ணும்
நிகழ்வுதன்னை நீ தரக்கேட்டேன்....!

ஒருநாளும் அந்தத் திருநாள்தன்னை ரூபாவுக்கு சுவாதி அளித்ததே இல்லை.. கல்லையும் மண்ணையும் பார்ப்பதைப் போல் ரூபா அணிந்திருக்கும் பொன்னையும்.. வைரத்தையும் பார்த்து விட்டுப் போய் விடுவாள்....

'திமிர்..!' ரூபாவுக்கு அந்த பாராமுகத்தில் பற்றியெரிவதைப் போல உடலெல்லாம் தகிப்பு பரவும்..

'உடம்பு முழுவதும் திமிர்.. இவள் சொல்லிக் கொடுக்கிறதினாலதான் இந்த நந்தினிக் கழுதை உனக்கெல்லாம் ஒரு கணக்கான்னு என்னை சட்டை பண்ணாம இந்த



வீட்டுக்குள்ளே இருக்கா.. இவ மட்டும் இல்லைன்னா.. தாய்.. தகப்பன் இல்லாத அந்தக் கழுதையை அண்ணன் பெண்டாட்டியான நான் ஒரு வழி பண்ணிர மாட்டேன்..?'

அவளுக்குத் தெரியாது.. நந்தினி மட்டும் ரூபா நினைப்பதைப் போல சுவாதியின் பேச்சுக்கு செவி மடுத்திருந்தால் ரூபாவை ஒரு வழிபண்ணியிருப்பாள் என்பது.. தோழியின் பேச்சை நந்தினி காது கொடுத்துக் கேட்காமல் இருப்பதினால்தான் ரூபா தப்பித்துக் கொண்டிருக்கிறாள் என்பது..

அண்ணனை அண்டி வாழ வேண்டியவள் என்று நந்தினியை ரூபா இளப்பமாக நினைத்தால்... அதை உடைத்துப் பொடிப்பொடியாக்க சங்கரலிங்கம் அந்த வீட்டில் இருந்தார்.. எந்த ஒரு தேவைக்கும் நந்தகுமாரை அணுக வேண்டிய தேவை நந்தினிக்கு ஏற்பட்டு விடாமல் அவர் பார்த்துப் பார்த்து பேத்தியை கவனித்துக் கொண்டார்..

'இவ என்ன பெரிய இவளா..?'

அதற்கும் ரூபாவுக்கு கோபம் வந்து விடும்.. அண்ணனை அணுக வேண்டிய தேவை நந்தினிக்கு ஏற்பட்டால்தானே.. அவளை அணுக விடாமல் தள்ளி நிறுத்தி ரூபா வெற்றி விழாவைக் கொண்டாட முடியும்..?

அதற்கு இடம் கொடுக்காமல் பேத்தியை அரவணைத்துக் கொண்ட சங்கரலிங்கத்தின் மீது அவளுக்கு ஆத்திரம்.. ஆத்திரமாக வரும்.. அந்த ஆத்திரத்தில் கணவனுக்கு ஒருநாள் இவள் சாம்பிராணி காட்டி செமத்தியாக தூபம் போட்டு விட்டாள்..

"அது என்னங்க.. உங்க தங்கை எதுக்கெடுத்தாலும் தாத்தா.. தாத்தான்னு ஓடறா.. ஏன்.. உங்களையெல்லாம் அவ கண்ணுக்குத் தெரியாதா..? என்னதான் தாத்தாவாக இருந்தாலும் கூடப்பிறந்த அண்ணனுக்கு ஈடாகுமா..? நீங்க இரண்டு பேரும் ஒரே ரத்தம்.. அந்த உறுத்து இல்லாம இவ யாரோ போல நடந்துக்கிறாளே.. நாளைக்கே இவளுக்கு ஒன்னுன்னா நீங்கதானே ஓடி நிற்கனும்..?"

கணவனின் தலை முடியைக் கோதியபடி செல்லமாக அவள் சொல்லிக் கொண்டிருக்க.. கேட்டுக் கொண்டிருந்த நந்தகுமாரின் உடலில் விறைப்பு வந்தது.. மனைவியின் கையைப் பிடித்துத் தள்ளியவன்...

"நாளைக்கே நந்தினிக்கு ஒன்னு வரும்ன்னா.. என்ன வரும்..? நீ எந்த அர்த்தத்தில சொல்ற..?" என்று கண்கள் இடுங்க.. கோபக் குரலில் கேட்டான்...

என்னடா இது.. பிள்ளையார் பிடிக்கப் போனால் குரங்கு வந்து சேர்கிறதே என்று அரண்டு போனாள் ரூபா..

"எந்த அர்த்தத்தில் சொல்லுவேனாம்..? கல்யாணம்.. அது.. இதுன்னு நந்தினிக்கு நடக்கப் போகும் நல்ல விசயங்களைத்தான் சொன்னேன்.." என்று அவசரமாக சமாளித்தாள்...

"ஓஹோ..."

ஒரு மாதிரிக்குரலில் சொன்ன நந்தகுமார் விலகிப் படுத்துவிட ரூபாவுக்கு அழுகையே வந்து விட்டது.. அதுவும் போதாது என்று மறுநாள் காலையில் தங்கையின்



அறைக்கு அவளைத் தேடிப் போய் விட்டான் நந்தகுமார்.. போனவன் பாசமலர் சிவாஜியைப் போல தங்கையின் தலையில் கைவைத்து பாசமாக வருடிக் கொடுக்க.. கணவனின் பின்னாலேயே பூனை போல பதுங்கி வந்து எட்டிப் பார்த்த ரூபா.. அந்தக் கண்கொள்ளாக் காட்சியினைக் காணச் சகிக்காமல் திரும்பிப் போய் விட்டாள்..

அதற்கு மேலும் நந்தினியைப் பற்றிக் கணவனிடம் பேச அவளுக்கு பைத்தியமா பிடித்திருக்கிறது..?

நல்லதைச் சொன்னாலும்.. பொல்லாததைச் சொன்னாலும்.. நந்தகுமார் தங்கையின் விசயத்தில் ஒரே நிலையாக நின்றான்.. அவள் பேச்சை எடுத்தாலே அது என்ன பேச்சு என்று கேட்காமல் உருகித் தவித்து விடும் அண்ணனாக அவன் இருந்ததில் உஷாராகி விட்டாள் ரூபா... நாத்தனாரைப் போட்டுக் கொடுத்தால் கணவன் பாசப்பயிரை வளர்க்க ஆரம்பித்து விடுவான் என்பதால் நந்தினியைப் பற்றிய பேச்சையே தவிர்த்து விடுவாள்.. அதற்கு ஏற்றாற் போல.. திருமணமான இரண்டாம் வருடத்தில் அவளுக்கு 'நந்திதா' பிறந்து விட... மகளைக் காட்டி கணவனின் தங்கை பாசத்தை.. மகள் பாசமாக அவள் மாற்றி விட்டாள்...

அவள் குழந்தைக்கு நாத்தனாரின் பெயரின் சாயலில் பெயர் வைக்க அவள் கொஞ்சம் கூட விரும்பவில்லை.. ரூபா என்ற அவளின் பெயருக்கு பொருத்தமாக 'ஷீபா' என்ற பெரைத்தான் அவள் தேர்வு செய்து வைத்திருந்தாள்..

அதை நந்தகுமார் ஓர் நொடியில் உடைத்தெறிந்து விட்டான்..

குழந்தைக்கு பெயர் சூட்டும் விழாவில் கூடியிருந்த சொந்தபந்தம்.. நண்பர்கள் முன்னிலையில்..

"நந்தகுமாரின் மகள் நந்திதா.." என்று பெயர் வைத்து விட்டான்..

இல்லையில்லை.. இது உன் தங்கையின் பெயர் போல இருக்கிறது.. அதனால் என் மகளுக்கு இந்தப் பெயர் வேண்டாம் என்று மறுத்துச் சொல்ல ரூபாவினால் முடியவில்லை.. அவளுடைய கணவனின் பெயரும் அதைப் போலவே இருந்து வைக்கிறதே..

'நந்தகுமார்.. நந்தினியாம்.. பெரிய்ய்..ய பாசப் பறவைகள்ன்னு மனசுக்குள்ள நினைப்பு..'

பொருமித் தவித்தாலும் தன் மகளின் பெயராக 'நந்திதா..'வை அவள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டி-யிருந்தது..

தாமரையிலைத் தண்ணிராக அண்ணன் குடும்பத்துடன் ஒட்டாமல் இருக்கப் பழகிக் கொண்ட நந்தினியுடன் பசையில்லாமலே ஒட்டிக் கொண்டாள் நந்திதா.. அத்தை.. அத்தை.. என்று இருபத்தி நான்கு மணி நேரமும் மழலையில் அழைத்தபடி அறைக் கதவைத் தட்டும் அண்ணன் குழந்தையின் அன்பில் தன்னை இழந்து விடுவாள் நந்தினி..

"நந்திதாம்மா.. நந்திதாச் செல்லம்.. நந்திதாக் குட்டி.."



அவள் உருகிக் கரையும் போது.. ஆஹா.. இவளைத் தட்டி வைக்க இப்படி ஒரு வழி இருக்கிறதே என்று அக மகிழ்ந்து போனாள் ரூபா..

குழந்தையைக் கொஞ்ச நந்தினி வரும்போது அவள் கண்ணில் குழந்தையைக் காட்டாமல் அதட்டி அனுப்ப வேண்டும் என்று அவள் திட்டம் போட்டால்.. அதற்கு இடம் கொடுக்காமல் குழந்தை நந்தினியின் அறையிலேயே குடியிருந்தது.. அங்கே போய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தால்.. அந்தச் செய்தி நந்தகுமாரின் காதுகளை எட்டி விடும்.. அவன் கொதித்துப் போய் ரூபாவை தள்ளியே வைத்து விடுவான் என்பதால் ரூபா அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது..

இப்படி எந்தப் பக்கம் போனாலும்.. அந்தப் பக்கம் வந்து சூழ்நிலைகள் வழி மறித்ததில் ரூபா கொதிகலனாக இருந்தாள்.. அவளுக்கிருந்த ஒரே ஆறுதல் அவளுடைய ஒன்றுவிட்ட அண்ணன் என்று சொல்லிக் கொள்ளும் 'ரஞ்சித்' தான்...

ரஞ்சித்திற்கு நந்தினியின் மீது மயக்கம் உண்டு.. அவனுடைய அப்பாவும்.. ரூபாவின் அப்பாவும் சித்தப்பா மகன்... பெரியப்பா மகன் என்ற உறவு முறையில் வருவதினால் அவன் ரூபாவிற்கு மூன்று விட்ட அண்ணனாக ஆகிப்போனான்.. அதைச்சொல்ல முடியாமல் ஒன்று விட்ட அண்ணன் என்று சொல்லிக் கொண்டு அடிக்கடி ரூபாவின் புகுந்த வீட்டில் வந்து மையம் கொள்வதை வழக்கமாக வைத்திருந்தான்...

பல்லடத்தில் இருப்பவனுக்கு திருப்பூரில் என்ன வேலை என்று கேட்க முடியாதபடி அவன் பனியன் போன்ற திருப்பூரில் தயாராகும் துணி வகைகளை ஏற்றுமதி பண்ணும் கம்பெனியை வைத்திருந்ததால் நந்தகுமார் ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனமாக இருந்து விடுவான்.. ஏதாவது சொன்னால்தான் ரூபா சண்டைக்கு வந்து விடுவாளே...

"உங்களுக்கு மட்டும் உங்க தங்கை மேல பாசம் இருக்கலாம்.. என் அண்ணனுக்கு என் மேல் பாசம் இருக்கக் கூடாதா..?"

இதை அவளுடைய கூடப் பிறந்த அண்ணனைப் பார்த்து அவள் சொல்லியிருந்தால் நந்தகுமார் கேட்டுக் கொண்டிருப்பான்.. ரூபாவின் கூடப் பிறந்த தமையன் மார்கள் இருவரும் திருமணமாகி.. குடும்பம் குழந்தைகள் என்று இருப்பவர்கள்.. விசேச தினங்களில் அவர்கள் திருப்பூருக்கு வந்து போனாலே அது பெரிய விசயம்..

அவர்களையெல்லாம் விட்டுவிட்டு... எவனோ ஒரு மூன்று விட்ட அண்ணனிடம் அந்தப் பாசத்தைக் கொட்டினால் அவன் ஏனென்று கேட்க மாட்டானா..? அந்த ஏன் என்ற கேள்விக்கு ரூபா.. ஒரு பானைத் தண்ணீரைக் குடித்தபடி இரண்டு மூன்று நாள்களுக்கு விடாமல் சண்டை போட்டதில் நந்தகுமாருக்கு போதும்.. போதுமென்று ஆகிவிட்டது..

அவன் எதைச் சொன்னாலும் கேட்டுக் கொள்ளும் மனைவி... இந்த ஒன்றில் மட்டும் எதற்காக விட்டுக்



கொடுக்காமல் மல்லுக்கு நிற்கிறாள் என்று அவனுக்கு புரியாத புதிராக இருந்தது..

விட்டுப் பிடிக்கலாம் என்று அவனும் பொறுத்துப் போய் விட்டான்.. அதோடு.. ரஞ்சித் வந்தாலும் ஓரிரண்டு நாள்களுக்கு மேல் அங்கு தங்க மாட்டான் என்பதால் நந்தகுமாருக்கு அதிகமாக ஆட்சேபிக்க வழியில்லாமல் போய் விட்டது..

ரூபாவுக்குத் தெரியும்.. ரஞ்சித்திற்கு அந்த ஓரிரண்டு நாள்களே போதும் என்பது.. அவன் சில மணித் துளிகளிலேயே எப்பேர்பட்டவரையும் சிக்கலில் இழுத்து விடும் வல்லமை படைத்தவன்.. அவன் கையில் முழுதாக இரண்டு நாள்கள் கிடைத்தால் சும்மாவா விட்டு விடுவான்..?

ரஞ்சித் நந்தினியுடன் பேசிப் பழக முயன்றான்.. வீட்டுக்கு வரும் உறவினன் என்பதினால் நந்தினியும் அவனிடம் ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவாள்.. சங்கர லிங்கத்திடம் பவ்யம் காட்டுவான்.. அவரின் கண்டிப்பான விழிகள் அவனைத் துளைக்கும் பார்வை பார்த்து... போடா.. உன்னைப் போல எத்தனை வேசதாரிகளை நான் பார்த்திருப்பேன் என்று சொல்லாமல் சொல்லி விடுவதில் அவர் முகம் பார்த்துப் பேசவும் மாட்டான்.. அவர் முன்னால் வரவும் மாட்டான்...

அவன் வந்து போகும் தினங்களில் சங்கரலிங்கம் வீட்டை விட்டு நகரவே மாட்டார்.. நிழல் போல அவர்

நந்தினியைத் தொடர்ந்து அடை காத்ததில் அவன் நொந்து நூலாகிப் போய் விடுவான்..

'இந்த ஆள் மட்டும் இல்லைன்னா.. இந்நேரத்துக்கு அவளை நான்தான் எல்லாம்ன்னு நினைச்சு உருக வைச்சிருப்பேன்..'

அவனுக்கு அது கைவந்த கலை.. கல்லூரியில் ஆரம்பித்து.. கம்பெனியில் வேலை செய்யும் பெண்கள் வரை அவன் கைவரிசையைக் காட்டாத இடமே இல்லை எனலாம்.. அவன் காதலிப்பதாய் சொல்லி ஏமாற்றிக் கை விட்ட பெண்கள் நியாயம் கேட்டு அவன் முன்னால் வரிசை கட்டி நின்றால்.. அந்த வரிசை பல்லடத்தைத் தாண்டி விடும்..

அப்படிப்பட்ட மன்மதராஜாவுக்கு நந்தினிமேல் மலர்க்கணைகளைத் தொடுக்க முடியவில்லை...

"போண்ணா.. நீ சுத்த வேஸ்ட்.." ரூபாவே சொல்லி விட்டாள்...

அவளை மதிக்காத நாத்தனாருக்கு ரஞ்சித்தைப் போன்ற கயவன் ஒருவன் கணவனாக ஆக வேண்டும்.. அதைக் கண்குளிர அவள் பார்க்க வேண்டும் என்ற அவளின் அபிலாஷை பூர்த்தியாகாமல் தள்ளிக் கொண்டே போனால் அவள் அப்படிச் சொல்ல மாட்டாளா..?

"நான் என்னம்மா பண்ண..? ஒரேயொரு நாளைக்கு மட்டும் அந்தக் கிழவனை வீட்டுப் பக்கம் வரவிடாமல் செய்து விடு... அப்புறம் பாரு... உன் நாத்தனாரை என்னைச் சுற்றிச் சுற்றி வரவைத்து விடுகிறேன்.." ரஞ்சித் சூளுரைத்தான்..



யார்.. யார்.. எது எதற்கு சூளுரைக்க வேண்டுமென்ற வரைமுறையில்லாத காலமாக இந்தக் காலம் ஆகிவிட்டது என்று மனதுக்குள் நொந்து கொண்டாலும்... ரூபாவும் அப்படியொரு நாள் கிடைக்காதா என்று தான் காத்திருந்தாள்..

அவள் என்னதான் குப்புற விழுந்து குட்டிக்கரணம் போட்டாலும் சங்கரலிங்கத்தை அந்த வீட்டை விட்டு நகர வைக்க முடியவில்லை.. எந்த வெளிவேலையாக இருந்தாலும்.. அடுத்த நொடியில்..

"நந்து.." என்று அழைத்து பேரனிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விடுவார்...

ரூபாவுக்கு தலைவேதனையாக இருக்கும்.. பெரியவரை வீட்டை விட்டு அகற்ற முயன்றால்.. அவர்.. அவளுடைய கணவனை வீட்டை விட்டுத் துரத்தி வைக்கிறாரே..

அப்படி வெளி வேலையாக போகும் கணவன் வீட்டுக்கு வராமல் வெளியே தங்கிவிடும் நாள்களில் அவள் பதறிப் போவாள்...

ரஞ்சித்தைப் போன்ற மூன்று விட்ட அண்ணன் களைப் பார்த்து வளர்ந்தவள் பதறாமல் என்ன செய்வாள்..? நாத்தனாருக்கு வேட்டு வைக்க நினைக்கப் போய்.. அந்த வேட்டு வந்து அணுகுண்டாக ரூபாவின் வாழ்வில் வெடித்து வைத்து விட்டால் அவள் என்ன செய்வாள்..?

ஏற்கனெவே நந்தகுமாருக்கு மென்மையான குணம் கொண்டவர்களை அதிகமாக பிடித்து வைக்கும்.. மென்மையான குணம் படைத்த எவளையாவது அவன் சந்தித்து.. மையல் கொண்டு விட்டால் ரூபாவின் கதி என்னவாகும்ட..?

'இந்த விசப்பரிட்சை.. வேண்டவே வேண்டாம்..' என்ற முடிவுக்கு அவள் வந்து விட்டாள்..

எப்படியும் பெரியவர் வீட்டை விட்டு நகரப் போவதில்லை.. அவருக்கு வரும் வேலைகளை பேரனின் தலையில்தான் கட்டப் போகிறார் என்பதை தெள்ளத் தெளிவாக அறிந்து கொண்ட பின்பு.. தன் தலையில் தானே கொள்ளிக்கட்டையை விட்டு அவள் வருடிக் கொள்வாளா..?

என்னதான் நந்தகுமாரின் மார்பில் முகம் புதைத்து.. சட்டை பொத்தானை திருகிய வண்ணம்..

"என்னங்க.. நீங்க இல்லாம நான் மட்டும் எப்படிங்க தனியா இருப்பேன்.." என்று கொஞ்சினாலும்.. அவன் கொஞ்சம் கூட கிறக்கம் காட்டாமல்..

"ஏன்..? இந்த வீட்டில் நந்தினியும்.. தாத்தாவும் இருக்காங்களே.. அப்புறம் நீ எப்படி தனியாளா ஆவ..?" என்று இரக்கமில்லாமல் கேட்டு வைப்பான்...

"நான் அதைச் சொல்லலைங்க..."

பல்லைக் கடித்த வண்ணம் புரியாத கணவனின் மரமண்டைக்கு புரிய வைக்க அவள் முயன்றாலும்... அவளது கணவனின் மரமண்டையில் அது ஏறவே ஏறாது..

"ப்ம்ச்.. முதல்ல சட்டையை விடு.. தள்ளி நில்லு.." என்று எரிந்து விழுவான்...

"அறிவோடதான் பேசறயா..? உனக்கும்.. எனக்கும் நேற்றுத்தான் கல்யாணம் ஆகியிருக்கிறதா மனசுக்குள்ள



நினைப்பா..? நந்திதாவுக்கு நாலு வயசாகிருச்சு.. அந்த நினைப்பு மனசுக்குள்ள இருக்கட்டும்.."

'அதுக்காக விரதம் காக்கனுமா..?' ரூபாவுக்கு பற்றிக் கொண்டு வரும்...

ஆனால் அதை கணவனிடம் அவளால் வெளிப் படுத்தி விட முடியாது.. அவன் வள்ளென்று விழுந்து கடித்து வைத்து விடும் மனநிலையில் இருக்கும் போது வாயை மூடிக் கொண்டு இருப்பதே உசிதமானது என்பதை அவள் அறிவாள்...

"தாத்தா பாவம்... வயசானவர்... பாட்டியும் போயி... அப்பா... அம்மாவும் இல்லாம... எனக்காகவும்.. நந்தினிக்காகவும் வாழ்கிறவரு.. அவர் வயதுக்கு அதிகமான உழைப்பை அவர் உழைத்து விட்டார்.. இனி அவரால் ஓடியாடி வேலை செய்ய முடியாது.. ஓய்வு அவசியம்.. ஆண்பிள்ளைன்னு ஒருத்தன் இந்தக் குடும்பத்தில் எதுக்கு இருக்கேன்..? தொழிலை பார்த்து உழைக்கத்தான் இருக்கேன்.. தாத்தா வெளியில் சுற்ற.. நான் வீட்டுக்குள்ளே உன் புடவை முந்தானையில் தூளிகட்டி ஆடிக்கிட்டு இருந்தால் நான்கு பேர் என்னைப் பார்த்து மெச்சிப் போவாங்க..."

கடுமையாக நந்தகுமார் பேசி விட்ட பின்பு சங்கரலிங்கத்துக்காக வெளிவேலைகளை உருவாக்குவதை ரூபா நிறுத்திவிட்டாள்..

"முடிஞ்சா என் நாத்தனாரை கரெக்ட் பண்ணு.. முடியலைன்னா விட்டு விட்டு வேற பெண்ணைத் தேடு..

உனக்காக என் வாழ்க்கையை பணயம் வைக்க என்னால முடியாதுண்ணா..” ரஞ்சித்திடம் அவள் தெள்ளத் தெளிவாகச் சொல்லி விட்டாள்...

‘வேறு பெண்ணைத் தேடுவதா..?’ ரஞ்சித்தின் முகம் பயங்கரமாக மாறி விட்டது...

இதற்காகவா அவன் வலைவிரித்தபடி காத்திருக்கிறான்..? அவனுக்கு நந்தினி வேண்டும் என்பதை விட.. அவள் மூலமாக வரும் கோடிக்கணக்கான சொத்துக்கள் வேண்டும்.. மற்றபடி நந்தினியின் மென்மையான குணமும்.. அயர வைக்கும் பேரழகும் விலை மதிப்பில்லாதவை என்பதை அவன் அறியக் கூட மாட்டான்..

குப்பையைக் கிளரும் சேவலுக்கு வைரத்தின் மதிப்பைப் பற்றி என்ன தெரியும்..? மண்புழுதானே அதற்கு உயர்வாகத் தெரியும்..?

இவ்வாறு தன்னைச் சுற்றிப் பின்னப்பட்டுக் கொண்டிருக்கும் சதிவேலையைப் பற்றி அறியாதவளாய்.. நந்தினி.. சுவாதியுடன் சிரித்துப் பேசியபடி கேண்டினை விட்டு வெளியே வந்தாள்...

“நெக்ஸ்ட் வீக் நாங்க குடும்பத்தோட விருதுநகர் போகனும் நந்தினி.. ஒரு வாரம் அங்கிருக்கனும்.. உன்னை விட்டுட்டு இத்தனை நாள் எப்படிடி அங்கே இருப்பேன்..”

அங்கலாய்த்த சுவாதிக்குத் தெரியாது.. அந்த பயணம் அந்த இரு தோழிகளின் வாழ்வில் பெரும் மாறுதலைக் கொண்டு வரப் போகிறது என்பது..



# 5

கானகத்தில் தொலைந்தவளை
மீட்டெடுத்த நிலாச்சோறே..!
உன்னுடனே வாழ்ந்து விட்டால்..
அதுதானே பெரும் பேறே...

அதிகாலையின் புலர் பொழுதை சிட்டுக் குருவிகளின் பேச்சுச் சத்தம் உணர்த்திக் கொண்டிருக்க.. அந்தப் பால்பண்ணையை வலம் வந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தான் பார்த்திபன்..

வரிசையாக கட்டப்பட்டிருந்த கறவை மாடுகளுக்கு முன்னால் தடுப்பு போல அமைக்கப்பட்டு அதனுள் தீவனங்கள் பரப்பப் பட்டிருந்தன.. அதை வாய்க்குள் தள்ளி.. பற்களால் மென்று.. அரைத்து அசை போட்டபடி.. வாலாட்டிக் கொண்டிருந்த மாடுகளில் சிலவற்றைத் தட்டிக் கொடுத்தான்...

சுத்தமான சிமிண்ட் தரை.. அடிக்கடி கழுவி விடப்படுவதை உணர்த்தியது.. இருபக்கமும் சாய்வான தகரக் கூரை போட்ட கட்டிடத்திற்குள் மாடுகள் பாதுகாப்பாக கட்டப் பட்டிருந்தன..

“இன்னைக்கு எத்தனை லிட்டர் பால் கறந்தீங்க..?”

பால்பண்ணையின் மேற்பார்வையாளரான கார் மேகத்திடம் கேள்வி கேட்டபடி... வாசலில் நின்ற 'ஸ்கார்பியோ'வை நோக்கிச் சென்றான் பார்த்திபன்..

பார்த்திபனின் கேள்விகளுக்குப் பொறுப்பாக பதிலைக் கூறிய கார்மேகம் சொன்ன விவரங்களில் திருப்தியுற்றவனாக தலையை ஆட்டிவிட்டு.. வண்டியில் ஏறி அமர்ந்து அதை உயிர்ப்பித்தான்.. புயல் வேகத்தில் பறந்த வண்டி சற்று நேரத்தில் அவனது பெரிய வீட்டின் போர்டிகோவில் போய் நின்றது...

வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்த செவ்வந்தி.. எஜமானைக் கண்டதும் மரியாதை காட்டு கிறேன் பேர்வழியென்று நாணிக்கோண.. அதை கண்டு கொள்ளாமல் காரை விட்டு இறங்கியவன் விரைவாக படியேறி வீட்டுக்குள் போய் விட்டான்..

"என்னடி.. கோலத்தை அரைகுறையாய் விட்டுப்புட்டு வாசலை வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கிறவ..?"

பால் செம்புடன் வந்த சமையல்கார வண்ணக்கிளி கேட்டாள்...

"ம்ப்ச்.. என்னத்தைப் பார்த்து என்ன செய்ய..? உச்சாணிக் கொம்புல இருக்கிற பழத்து மேல ஆசைப்பட்டா அது கிடைக்கலாம்.. உச்சியிலே வருகிற சூரியனப் பார்த்து ஆசைப்பட்டா அது கிடைக்குமாடி வண்ணக்கிளி..?"



செவ்வந்தி விட்ட பெருமூச்சில் அப்போதுதான் கறக்கப்பட்ட பசும்பால் கொதிக்க ஆரம்பிக்க.. அவசரமாக நகர்ந்து நின்றாள் வண்ணக்கிளி..

"தெரியுதில்ல.. அப்புறமும் என்ன வேலைக் கழுதைக்கு.. சூரியனை வெறிச்சு வெறிச்சு பார்க்கிறவ..? சோலிக் கழுதையை பார்த்துட்டுப் போவியா..."

வண்ணக்கிளி கடுப்பாக.. அதற்கும் ஒரு பெருமூச்சை விட்டாள் செவ்வந்தி..

"என்னத்தை சோலியைப் பாத்து.. என்னத்தை சம்பளம் வாங்கி.. ம்ஹீம்.. மனுசக் கழுதைக்கு நினைச்சது கிடைக்கலைன்னா.. என்னத்தப் பண்ணி என்னத்தடி கிடைக்கப் போகுது..?"

"ஊஹீம்.. விட்ட விடிகாலையிலே உன்கூட வெட்டி நாட்டாமை பண்ணிக்கிட்டு இருந்தா எனக்கு வேலை நடக்காது.. நீ கோலத்தைப் போட்டு முடி.. இல்ல.. அரைகுறையாய் விட்டுப்புட்டு அம்மாகிட்ட வசவு வாங்கு.. அதனால எனக்கென்ன கெட்டுப் போச்சு..? நான் என் வேலையைப் பார்க்கப் போறேன்.. உன் வாயைப் பாத்துக் கிட்டு இருந்தா என் பொழைப்பு ஓடுமா..?"

வண்ணக்கிளி செவ்வந்தியின் அடுத்த பெருமூச்சு அனலாய் வெளிப்படுவதற்குள் பால் செம்பை மறைவாய் பிடித்தபடி வீட்டைப் பார்த்து நடையைக் கட்டிவிட்டாள்.. செவ்வந்தி பாதியில் விட்ட கோலத்தை போட்டு முடிக்க கோலமாவை விரலில் எடுத்தாள்..

மாடிப்படியில் கால்வைத்த பார்த்திபனை பூஜையறை யிலிருந்து வந்த மணிச் சப்தம் திரும்பிப் பார்க்கச் செய்தது..

அந்த அதிகாலை வேளையிலும்.. குளித்து.. முடித்து.. பூஜையறையில் தஞ்சம் புகுந்திருந்தாள் நித்யா..

அங்கிருந்தபடியே மகனைப் பார்த்தவள்...

"பால் பண்ணைக்குப் போயிருந்தியாப்பா..?" என்று குரல் கொடுத்தாள்..

"ஆமாம்மா..."

"விடிந்தும் விடியாம போயாகனுமா..?"

"அதுக்கப்புறம் நேரமிருக்காதும்மா.."

"அதைச்சொல்லு..."

நித்யா கடவுள்களிடம் கவனத்தை திருப்பிவிட.. பார்த்திபன் மாடியேறினான்.. மாடி ஹாலின் சோபாவில் இரண்டு கால்களையும் மடித்துச் சம்மணமிட்டபடி.. அரைத் தூக்கத்துடன் படித்துக் கொண்டிருந்தாள் பவித்ரா..

தமையன் வந்ததைக் கூடக் கவனிக்காமல் தூக்கத்தில் சாமியாடியவளின் தலையில் ஒரு குட்டை வைத்தான் பார்த்திபன்.. வலியில் தூக்கம் கலைந்தவள் தலையைத் தடவியபடி தமையனை முறைத்தாள்..

"ஆ.. வலிக்குதுண்ணா.. ஏன் என்னைக் குட்டின..?"

"ஒன்னு படிக்கனும்.. இல்லைன்னா தூங்கனும்.. இப்படி இரண்டும் கெட்டானா புத்தகத்தை மடியில வைச்சுக்கிட்டு சாமியாடக் கூடாது.."



"இன்னைக்கு டெஸ்ட் இருக்குண்ணா.."

"அதுக்கு..?"

"படிக்கனுமே.."

"படி.. ஏன் தூங்கற..?"

"தூக்கமும் வருதே.."

குழந்தையாகக் கேட்டவளின் கன்னத்தில் செல்லமாக தட்டிவிட்டு அவனுடைய அறையை நோக்கி நடந்தான் பார்த்திபன்.. குளித்து உடைமாற்றி செல்போனை காதுக்கு கொடுத்தபடி அவன் டைனிங் ஹாலுக்குப் போன போது.. கல்லூரிக்குக் கிளம்பத் தயாராக இருந்த பவித்ரா.. புத்தகத்தை டைனிங் டேபிளில் விரித்து வைத்தபடி.. இட்லியைப் பிய்த்து சட்னியில் தோய்க்காமல் வெறும் தட்டில் தேய்த்துக் கொண்டிருந்தாள்..

"என்ன செய்கிற..?" புருவங்களை உயர்த்தியபடி தங்கையின் முன்னால் அமர்ந்தான் பார்த்திபன்...

"பார்த்தாத் தெரியலை..? சாப்பிடறேன்.." புத்தகத்தி லிருந்து பார்வையை உயர்த்தாமல் பதில் சொன்னாள் பவித்ரா..

"அது தெரியுது.. எப்படிச் சாப்பிற..? அதைச் சொல்லு முதல்ல.." அவன் கேலியாக கேட்டான்...

"எப்படின்னா..? என்னத்தைச் சொல்லச் சொல்ற.. இட்லி சாப்பிடறேன்..."

"வெறும் இட்லியையா..?"

"அதை எந்த ஊரில் சாப்பிடுவாங்க..?"

"ஸ்ரீவில்லிப் புத்தூரில்தான் சாப்பிடுவாங்க..."

"உன் தலை.. இட்லியை சட்னி.. சாம்பாரில் குளிப்பாட்டி சாப்பிட்டுக்கிட்டு இருக்கேனாக்கும்..."

"அப்படியா மேடம்.. அப்படியே தலையைத் திருப்பிக் கொஞ்சம் உங்க தட்டைப் பார்க்கறிங்களா..?"

பார்த்திபனின் கேலிக் குரலில பத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பித் தட்டைப் பார்த்தாள் பவித்ரா.. அங்கே வெறும் இட்லிகள் மட்டுமே இருந்தன.. சட்னிப் பாத்திரமும்.. சாம்பார் பாத்திரமும்.. என்னவோ.. அவைகளுக்கும் அவளுக்கும் சண்டைபோல முறைத்துக் கொண்டு ஒதுங்கி இருந்ததில் பார்த்திபன் சிரித்து விட்டான்..

"என்னம்மா.. நீங்க சட்னியையும்.. சாம்பாரையும் ஊத்தவே இல்லையா..?" சிணுங்கினாள் பவித்ரா...

"எங்கே.. அதுக்குள்ளதான் நீ தட்டைப் பிடுங்கி உன் முன்னாலே வைச்சுக்கிட்டு.. அதுமேல கவுந்துட்டியே.." நித்யாவும் மகனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு சிரித்தாள்..

"போங்கம்மா.." பவித்ராவின் முகம் சிவந்து விட்டது..

"போகுது போ.. என் தங்கை பவித்ரா.. படிப்பில கவனம் காட்டித்தான சட்னியையும்.. சாம்பாரையும் கோட்டை விட்டிருக்கா..? அதனால ஒரு குறைவுமில்ல.. இப்ப என்ன கெட்டு போச்சு..? சட்னியையும் சாம்பரையும்



இப்ப ஊற்றி.. அதில இட்லியை மிதக்கவிட்டு பிய்த்துத் தள்ளி விட்டாப் போச்சு.."

பார்த்திபனே தங்கைக்கு சட்னி சாம்பாரை ஊற்ற.. அதை ரசித்துப் பார்த்தாள் நித்யா.. அண்ணனும்.. தங்கையும் தாயிடம் அரட்டையடித்தபடி காலை உணவை முடித்துவிட்டு அவரவர் வேலைகளைப் பார்க்கக் கிளம்பினார்கள்..

"ரெடியா பவி..?"

"ஊம்.. நான் அப்பவே ரெடியாகிட்டேன்..."

பவித்ரா நித்யாவுக்கு டாட்டா சொல்லி விட்டு வாசலுக்கு வந்தாள்.. இப்போது 'ஸ்கார்ப்பியோ' காரிலிருந்து 'பார்ச்சுனர்' காருக்கு மாறியிருந்த பார்த்திபன் தங்கைக்காக கார் கதவை திறந்து விட்டான்..

"அப்பக் கிளம்பறோம்மா..."

நித்யாவிடம் சொல்லி விட்டுக் காரைக் கிளப்பியவன்.. பவித்ராவின் கல்லூரி வாசலில் அவளை இறக்கி விட்டு கையாட்டி விடைபெற்ற பின்பு அவனுடைய ஸ்வீட் ஸ்டாலை நோக்கிக் காரைச் செழுத்தினான்..

தயாரிக்கப் பட்டிருந்த இனிப்பு வகைகளில் பால் கோவாவை மட்டும் ஏற்றுமதி பண்ணுவதற்காக சுத்தமான முறையில் பேக் பண்ண அனுப்பி வைத்த பின்.. ஸ்வீட் ஸ்டாலை வலம் வந்தவன்.. கடையை கண்காணித்து விட்டு அவனுடைய அறைக்குள் நுழைந்து விட்டான்..

லேப்டாப்பில் வந்திருந்த மெயில்களை படித்துக் கொண்டிருந்தவனின் கவனத்தை கலைத்தது செல்போன்.. எடுத்துப் பேசியவன்...

"என்னடா..?" என்றான்..

"அடுத்த வாரம் எனக்குக் கல்யாணம்.. அந்த நினைப்பு உனக்கு இருக்கா... இல்லையா..?" மறு முனையில் அவன் நண்பன் முகுந்தன் கேட்டு வைத்தான்..

"அறிவு கெட்டவனே.. உன் கல்யாணத்தப் பத்தின நினைப்பு உனக்குதான்டா இருக்கனும்.. எனக்கு எதுக்காக இருக்கனும்..?" தலையில் அடித்துக் கொண்டான் பார்த்திபன்..

"அடச்சீ.. அசிங்கமா பேசாதே.. கல்யாணத்தில துணை மாப்பிள்ளையாய் யார் நிற்கனும்..?"

"நான்தான் நிற்கனும்..?"

"'அந்த' நினைப்பு உன் மனசில இருக்குதா.. இல்லையான்னுதான் நான் கேட்டேன்.." முகுந்தன் எரிந்து விழுந்தான்...

"ஓ.. நீ அந்த நினைப்பைச் சொல்றியா..?"

"புரிஞ்சாச் சரி..."

"அடேய் நண்பா.. கல்யாணத்தில மாப்பிள்ளையா நிற்கனும்னாத்தான் எனக்கு அது மகாகஷ்டம்.. துணை மாப்பிள்ளைன்னா எனக்கு என்ன கஷ்டம் வரப் போகுது.. கட்டாயமா வந்து நிற்பேன்.."



"எங்கே..? அதைப் பத்தித்தான் நீ எதையும் பேச மாட்டேங்கிறியே.."

"என்னத்தைடா பேசனும்..?"

"எப்பக் கல்யாணம்.... எங்கே கல்யாணம்.. ன்னு இதையாச்சும் நீ கேட்கலாமில்லையா..?"

"கேட்டுட்டாப் போச்சு.. சொல்லு.. எப்பக் கல்யாணம்..? எங்கே கல்யாணம்..?"

"ம்ஹீம்.. விசாரிப்பைக்கூடக் கேட்டு வாங்க வேண்டியிருக்கு.. என்ன கொடுமைடா இது.."

"விடுடா.. விடுடா.. நான் உன் நண்பேண்டா.."

சுழல் நாற்காலியில் சுழன்றபடி நண்பனிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த பார்த்திபனை கண்ணாடித் தடுப்புக்கு வெளியில் இருந்த பணியாள்கள் வியப்புடன் பார்த்து விட்டு தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்..

அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் அனைத்து பணிச்சுமைகளையும் மறந்து போனவனாக நண்பனிடம் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த பார்த்திபன்..

"ஆமாம்.. துணை மாப்பிள்ளையை ரெடி பண்ணிட்ட.. அப்படியே துணைப் பெண்ணையும் ரெடி பண்ணிட்டின்னா தோதா இருக்குமில்ல..?" என்று குறும்பாக வினவினான்..

"தோதா..? யாருக்குடா மச்சான்..?" அவனை விடக் குறும்பாக கேட்டான் முகுந்தன்..

"ஹ..! உனக்கு இப்படியொரு நினைப்பிருக்கா..? இரு.. இரு.. உன் வருங்காலப் பெண்டாட்டி காதில இதைப் போட்டு வைக்கிறேன்.." பலத்த குரலில் சிரித்தான் பார்த்திபன்..

"பார்த்தியா.. போட்டுக் கொடுக்கிறதிலேயே குறியா இருக்கியே.. உன்னைப் போல நண்பன் கிடைக்க நான் கொடுத்து வைச்சிருக்கனும்டா.."

"பின்னே..? கல்யாண மேடையிலே நீ தாலிகட்டப் போற பொண்ணு உனக்குத் தோதானவளா இருப்பாளான்னு யோசிப்பியா.. அதை விட்டுட்டு துணைப் பொண்ணு யாருக்கு தோதாவான்னு யோசிச்சுக்கிட்டு இருக்கியே.. உன்னைப் போட்டுக் கொடுக்காம வேற என்ன செய்வாங்களாம்..?"

"ஏதோ ஒரு ஞாபகத்திலே தெரியாத்தனமா வார்த்தையை விட்டுட்டேன்.. அது ஒரு குத்தமாடா..?"

"குத்தமில்லைங்கிற..?"

"ஆமாங்கிறேன்.."

நண்பர்கள் இருவரும் உரத்த குரலில் சிரித்து முடித்தார்கள்..

"என்னவோ போடா மச்சி.. என்னதான் இன்ஜினியருக்குப் படிச்சுட்டு பெங்களூருக்குப் போய் சாப்ட்வேர் கம்பெனியில குப்பை கொட்டினாலும் உனக்குக் கழுத்தை நீட்டப் போற பொண்ணு விருதுநகரிலதான் பிறந்திருக்குதுன்னு நினைக்கிறப்ப புல்லரிக்குதுடா.."



"இதுக்குப் போய் புல்லைப் போட்டு அரிப்பானேன்.. சல்லடை போட்டுப் பெண்ணைத் தேடின எங்க அப்பாவும்.. அம்மாவும் விருதுநகரிலதான் பொண்ணு அமைஞ்சிருக்குன்னு சொன்னாங்க..."

"இதை நான் நம்பனுமாக்கும்.. உனக்கென்னவோ பக்தி பெருகிருச்சாம்.. தினமும் தேவாரம் பாட திருச்சுழி சிவன் கோவிலுக்கு ஓடிப் போயிடறயாம்.. அங்கே அதே பக்திப் பரவசத்தோட உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற பெண்ணும் காத்திருக்குதாம்.. நீங்க இரண்டு பேரும் சேர்ந்து திருமேனி நாதரான சிவபெருமானின் சன்னதியை சுத்தோ சுத்துன்னு சுத்தறிங்களாம்..."

"அது.. அது.. வந்து.."

"என்னடா.. வந்து.. போயின்னு ராகம் பாடற..?"

"சும்மா இருப்பா..."

"சும்மா எப்படிடா இருக்கிறது..? நீதானே புல்லைப் போட்டு அரிக்காதேன்னு சொன்னவன்..? இதுக்கும் பதிலைச் சொல்லு..."

"அங்க இருக்கிற ஒன்பது தீர்த்தங்களில குளிச்சுட்டு... எட்டு வகையான லிங்கங்களையும் கும்பிட்டா நல்லதுன்னு எங்க இரண்டு வீட்டிலயும் சொன்னாங்கப்பா.. அதுக்காக கோவிலுக்குப் போனா நீ இப்படிக் கிண்டலடிக்கிறயே..."

"போகுது விடு.. தென்பாண்டி நாட்டில தேவாரம் பாடல் பெற்ற 14 தலங்களில விருதுநகர் 'திருச்சுழி

திருமேனிநாதர்' கோவில் 10வது தலமாக இருக்கு... அங்கே சாமி கும்பிடப் போனதினால இத்தோட விட்டு வைக்கிறேன்.."

"அப்ப.. நீ விட்டுட்ட.."

"ஆமா.. அதில உனக்கு என்னடா சந்தேகம்..? வேணும்னா திரும்பவும் ஆரம்பிச்சு வைக்கவா..?"

"வேணாம்.. மச்சான்.. வேணாம்..."

"அஃது.. அந்த பயம் இருக்கட்டும்..."

"கல்யாணத்துக்கு முதல் நாளே வந்திருவ இல்ல..?"

"இதையே எத்தனைதரம்டா கேட்ப..? கட்டாயம் வந்துருவேன்.. இதில உனக்கு என்ன சந்தேகம்..?"

"சந்தேகம் வராதா..? நானோ படிச்ச படிப்பை வைத்து வேலையில சேர்ந்து முன்னேறிக்கிட்டு இருக்கிறவன்.. நீ அப்படியா..? நித்யா குரூப் ஆப் கம்பெனிஸோட முதலாளி.. நிற்க நேரமில்லாம பால் பண்ணை.. ஸ்வீட்ஸ்டால்.. எக்ஸ்போர்ட் கம்பெனி.. ஸ்பின்னிங் மில்ன்னு ஓடிக்கிட்டு இருக்க.. என் கல்யாணத்தில துணை மாப்பிள்ளையா நிற்க உன்னோட இரண்டு நாளை எனக்குக் கொடுப்பியா..?"

"கட்டாயம் கொடுப்பேன் முகுந்த்.. அந்தச் சந்தேகம் உனக்கு வேண்டாம்.. கல்யாணம் ஸ்ரீவில்லிப்புத்தூரில தானே..?"

"பின்னே..? பார்த்திபனூரிலயா வைப்போம்..?"



"அதுதானேடா உன் சொந்த ஊர்.."

"இது என் சொந்த ஊர்தான் மச்சி.. ஆனா.. ஆண்டாள் கோவில் கொண்டிருக்கிற ஊர் ஸ்ரீவில்லிப்புத்தூராச்சே.. அந்தக் கோவிலின் கல்யாண மண்டபத்திலதான் கல்யாணம்.."

"வெளுத்துக் கட்டு.."

"நீகூட நின்னா தாலியையே கட்டிருவேன்.."

"டேய்ய்..."

சிரித்தபடி போனை வைத்த பார்த்திபன்.. லேப்டாப்பில் முகுந்தனின் திருமண நாளை பதிவு பண்ணிக் கொண்டபின்பு எழுந்தான்...

அன்றைய வேலைகளை முடித்துக் கொண்டு திரும்பி வந்தபோது.. கைக்கடிகாரத்தைப் பார்த்த விட்டு காரின் வேகத்தைக் கூட்டினான்..

'பவித்ராவை கூப்பிட்டுக்கனுமே...'



# 6

சுட்டெரிக்கும் சூரியனை..
கட்டி வைத்த வெந்நிலவே..!
நீயூட்டும் உணவு தன்னில்..
நிலாச்சோற்றை நானும் கண்டேன்..

"விருது நகருக்குப் போகனுமா..? எதுக்கு..?"

எரிச்சலுடன் கேட்டாள் நந்தினி.. ஒருவார காலத்திற்கு சுவாதிக்கு அங்கே என்ன வேலை என்ற கோபம் அவள் நெஞ்சில் எழுந்தது..

அதுவரை அத்தனை நாள்களுக்கு சுவாதியை விட்டு அவள் பிரிந்திருக்க நேர்ந்ததில்லை.. மே மாத கோடை விடுமுறையில்.. சுவாதியின் குடும்பத்தோடு ஊட்டி.. கொடைக்கானல் என்று அனுப்பி வைத்து விடுவார் சங்கரலிங்கம்.. ரூபா அதை ஆட்சேபித்த போது..

"நந்தினிக்குத் துணையாத்தான் சுவாதியின் குடும்பம் போகுது.. நீ துணைக்குப் போகிறதா இருந்தால் சொல்லும்மா.. அவங்களை நிறுத்திட்டு உன்னை அனுப்பி வைக்கிறேன்.." என்று அவர் கேட்டு வைத்தார்..

'நானென்ன அவளுக்குத் தோழிப் பெண்ணா..?'



வெகுண்டு போன ரூபா.. அதற்குப் பின்னால் அதைப்பற்றி வாயைத் திறக்கவே இல்லை...

'அஃது..' என்ற வெற்றிப் பார்வையோடு சங்கரலிங்கமும் அந்தப் பேச்சை அப்படியே விட்டு விட்டார்..

மற்றபடி.. சுவாதியின் பெற்றோர் உறவினர்களின் வீடுகளுக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சுவாதி அவர்களுடன் போக மாட்டாள்...

"இதுக்கெல்லாம் என்னைக் கூப்பிடாதீங்க..", என்று சொல்லி விட்டு நந்தினியின் வீட்டுக்கு வந்து விடுவாள்..

அப்படிப்பட்ட சுவாதி.. நந்தினியைப் பிரிந்து ஒரு வாரம் ஊருக்குப் போகப் போகிறாளா..?

"ஆமாம்டி.. நோ அதர் வே.. என் தாய்மாமா மகளுக்குக் கல்யாணம்.. நான் போகலைன்னா என் அம்மா என்னைத் தள்ளி வைச்சுருவாங்க.. அவங்க எதை வேணும்னாலும் பொறுத்துக்குவாங்க... காம்ப்ரமைஸ் பண்ணிக்குவாங்க.. அவங்க பிறந்த வீடுன்னு வந்துட்டா நோ காம்ப்ரமைஸ்தான்.. ஆனானப்பட்ட அப்பாவே.. ஆடிட்டிங் சமயத்தில அர்ஜன்ட் வொர்க்குன்னு சொல்லி லீவு எடுத்திருக்கார்ன்னா பார்த்துக்கயேன்..."

"ஓ... அம்மாவோட அண்ணன் மகளுக்குக் கல்யாணமா..?"

காற்று இறங்கிப் போன பலூனைப் போல நந்தினியின் கோபமும் இறங்கி விட்டது..

சித்ரலேகாவின் அண்ணன் மகளுக்குத் திருமணம்.. அத்தையாய் லட்சணமாய் அவள் குடும்பத்துடன் ஒரு வாரத்திற்கு முன்னாலேயே போய்த்தானே ஆக வேண்டும்..?

"கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாலேயே போகப் போகிறோம்ன்னு யாருடி சொன்னது..?"

"நீதானேடி குரங்கே சொன்ன..?"

"கல்யாணத்துக்காக ஊருக்குப் போகனும்.. ஒரு வாரம் அங்கே தங்கனும்ன்னுதான் நான் சொன்னேன்.. கல்யாணத்துக்கு ஒருவாரத்துக்கு முன்னாடியே போகனும்ன்னு சொல்லலை..."

"இப்ப என்னதாண்டி சொல்ல வர்ற..?"

"கல்யாணத்துக்கு மூணுநாள் முன்னாடி அங்கே போய் இறங்கனும்..."

"அப்புறம்..?"

"கல்யாணத்தில கலந்துக்கனும்.. கல்யாணம் முடிஞ்ச மறுநாள் பெண்ணையும்.. மாப்பிள்ளையையும் மறுவீட்டு விருந்துக்கு அழைப்பாங்க..."

"நினைச்சேண்டி.. நீ விருந்துக்காகத்தான் அங்கே டேரா போடுவேன்னு..."

"என்னைப் பத்தி எப்பேற்பட்ட உயர்ந்த அபிப்ராயம் வைத்திருக்கடி நந்தினி..."



"ஆமாண்டி.. டீ குடிக்க வந்துட்டு பத்து போண்டாவை மொக்கு.. உன்னைப் பத்தி இப்படித்தான் நான் அபிப்ராயம் வைப்பேன்.. அதுக்கு இப்ப என்னங்கிற..?"

நந்தினி கோபத்தில் இருந்தாள்.. சுவாதி இல்லாத அந்த ஒரு வார நாள்களை அவளால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.. அவளை விட்டு விட்டு சுவாதி மட்டும் குடும்பத்துடன் பயணம் போவதில் அவளுக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை..

மென்மையின் மறு வடிவமான நந்தினியையே ரௌடி ராக்கம்மாவாக மாற்றி விட்ட மகத்தான பெருமை கொண்ட சுவாதி.. தோழியின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாக அவள் தோள் மீது கை போட்டாள்...

"எடுடி கையை.." நந்தினி தட்டி விட்டு விலகி நடந்தாள்..

"என்னை என்னடி பண்ணச் சொல்ற..? மாமன் மகனுக்கு கல்யாணம்ன்னானலாவது.. அவன் வேற ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டறதைப் பார்க்கிற சக்தி எனக்கில்லைன்னு கதை விட்டு கல்யாணத்துக்குப் போகாம கழண்டிருக்கலாம்.. அதுக்கும் வழியில்லாம என் தாய்மாமன் மகளைப் பெத்துத் தொலைச்சிருக்காரு.. இதுக்கு என்ன சொல்லி கழண்டுக்கிறது..? அவ கல்யாணத்தைப் பார்க்கிற சக்தி எனக்கில்லைன்னு சொல்ல முடியாது.. அப்ப கல்யாண மாப்பிள்ளை மேல உனக்கு கண்ணான்னு கேட்டு வைச்சிருவாங்க.. அதில பாருடி நந்தினி.. மாமன் மகளைக் கட்டிக்கப் போகிறவன் எனக்கு

அண்ணன் முறையாகனும்.. அப்படியிருக்க நான் வாயைத் திறக்க முடியுமா..? நீயே சொல்லு..."

நந்தினி பதிலேதும் சொல்லவில்லை.. உம்மென்று இருந்தாள்.. கல்லூரி முடிந்ததும் சுவாதி வீட்டிற்குப் போகாமல் அவள் வீட்டிற்கு காரை விடச் சொன்னாள்..

"ஏண்டி..?" என்ற சுவாதிக்கு..

"நான் வீட்டில போய் இறங்கினதும் காரை அனுப்பறேன்.. தனியாப் போய்க்க.." என்று முகம் பார்க்காமல் பதில் சொன்னாள்..

சுவாதிக்கு சிரிப்புத்தான் வந்தது.. அவ்வாறு சிரித்து வைத்தால் ஏற்கனெவே கோபத்தில் இருக்கும் நந்தினி.. ஓடும் காரிலிருந்து சுவாதியை உருட்டி விட்டு விடுவாள் என்பதினால் சிரிப்பை அடக்கிக் கொண்டு சோகமாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

வீடுவரும் வரை சுவாதி என்ற ஒருத்தி காருக்குள் இல்லாததைப் போன்ற பாவனையில் ஜன்னல் கண்ணாடியில் முகம் புதைத்திருந்த நந்தினி.. தன் கோபத்தை காற்றில் பறக்க விட்டவளாக..

"என்னடி இது.. இவன் வந்து தொலைச்சிருக்கான்.." என்று தலையில் கை வைத்தாள்..

"எவன் வந்திருக்கான்..?"

குழப்பத்துடன் காரின் முன் பக்க கண்ணாடி வழியாக தெரிந்த போர்டிகோவை பார்த்த சுவாதிக்கு.. நந்தினி சொன்ன 'இவன்..' எவன் என்று புரிந்து விட்டது..



"அடக் கடவுளே..! இந்த மூஞ்சி எப்படி வந்துச்சு..?" அவளும் தோழியுடன் சேர்ந்து கொண்டாள்..

"யாருக்குத் தெரியும்..?"

நந்தினி கவலையுடன் சொன்னாள்.. அவள் மனமெல்லாம் காரிலிருந்து இறங்கி.. அவன் கண் பார்வையில் படாதபடி வீட்டுக்குள் எப்படிப் போவது என்பதிலேயே இருந்தது..

அதற்கு வழியில்லாமல் போர்டிகோவின் முகப்பிலேயே அவளை வரவேற்பதற்காக காத்திருப்பதைப் போல ரஞ்சித் காத்திருந்தான்..

"காலையிலே நான் காலேஜீக்கு கிளம்பி வந்தப்ப இவன் இல்லைடி...."

"அதுக்குப் பின்னாலே வந்திருப்பான்.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. இவன் ஏண்டி உங்க வீட்டுக்கே விருந்துக்கு வருகிறான்..? உங்க வீட்டு சமையல் நல்லா இருக்கும்தான்.. அதிலயும் மேகலா செய்கிற சிக்கன் வறுவலுக்கும்.. பிரியாணிக்கும்.. சொத்தையே எழுதி வைத்துரலாம்தான்.. அதுக்காக இப்படியாடி ஒரு மனுசன் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு.. மாதத்துக்கு ரெண்டு தடவை விருந்தாளியா வந்து நிற்பான்..?"

சுவாதி விவரித்த விதத்தில் நந்தினிக்கு கோபம் வந்து விட்டது.. அவள் தோழியை முறைத்தாள்..

"அவனைத் திட்டறப்ப கூட உனக்கு மேகலா செய்கிற சிக்கன் பிரியாணியோட நினைப்புத்தானா..? எப்படிடீ இப்படியொரு சாப்பாட்டு ராமியா இருக்க..?"

"இதோ பார் நந்தினி.. சாப்பாட்டை ரசிச்சா அது ஒரு குத்தமில்லை.. புரிஞ்சுக்க.. ஆயகலை அறுபத்தி நான்கில.. சாப்பாட்டுக் கலையும் ஒன்னு.. ஆக நான் கலா ரசிகைடி.."

சுவாதி இல்லாத காலரை தூக்கி விட்டுக் கொள்வதைப் போல் பாவனை செய்தாள்.. அவளை கடிந்து கொள்ள முடியாமல் கார் போர்டிகோவில் நிலை கொண்டு நின்று விட்டதில்.. நந்தினி காரின் கதவைத் திறந்து இறங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானாள்...

"பேசாம எப்பவும் போல என் வீட்டுக்கே நாம போயிருக்கலாம்.. கேட்டியா நீ.. துர்வாச முனிவர் பிடி சாபம்ன்னு இருந்ததைப் போல.. நீயும் சரக்குன்னா என்னை டைவர்ஸ் பண்ணக் கிளம்பிடறே.. அப்ப பட வேண்டியது தான.."

"டைவர்ஸா..?" நந்தினி அதிர்ந்தே விட்டாள்..

"என்னத்தடி பேசற..?" சுவாதியை முறைத்தாள்..

"எதுக்கு இத்தனை வேகம்ங்கிறேன்.. டைவர்ஸ்ன்னா ரத்துன்னுதானே மீனிங் வருது.. விவாக ரத்துன்னு நான் சொன்னேனா..? பிரண்ட்ஷிப் ரத்துன்னுதானே சொன்னேன்..?" சுவாதி அலட்டிக் கொள்ளாமல் நியாயம் கேட்டாள்..

"உன்னை.." பல்லைக் கடித்தபடி காரை விட்டு இறங்கினாள் நந்தினி..



"ஹலோ நந்தினி.."

அவளுக்காகவே காத்திருந்த ரஞ்சித் உல்லாசமாக சிரித்தான்.. மிகக் கவனமாக அவன் ஒப்பனை செய்து கொண்டிருந்ததை நந்தினியால் உணர முடிந்தது.. அதுவும் ஸ்டைலாக போஸ் கொடுத்து விளம்பரங்களில் வரும் ஆண்மாடல் போல அவன் நின்ற விதத்தை ரசித்துப் பார்த்த சுவாதி..

"வாவ்.." என்று வெளிப்படையாகவே பாராட்டி வைத்தாள்..

ரஞ்சித்தின் கண்களில் மின்னல் வந்தது... நந்தினியின் கவனத்தைக் கவர முயற்ச்சித்ததில் அவளின் தோழியின் கவனத்தை மட்டுமே கவர முடிந்ததில் அவனுக்கு வருத்தம்தான்.. என்றாலும்.. அந்தத் தோழி நந்தினியின் முன்னாலேயே அவனது அழகையும்.. கம்பீரத்தையும் ரசிக்கிறாள் என்றால் அது இன்னமும் அதிகமாக நந்தினியின் கவனத்தில் பதியுமல்லவா..? அத்துடன் சுவாதியும் அழகாக இருந்து வைக்கிறாளே..

அதனால்.. லேசாக தலையைச் சாய்த்து.. நந்தினிக்கு தன் கம்பீரத்தை உணர்த்த முயன்றபடி..

"வாட்..?" என்று படு ஸ்டைலாக சுவாதியிடம் கேட்டான்...

"நீங்க நிற்கிறதைப் பார்த்தா.. திருப்பூர் வீட்டுக்கு வந்திருக்கிற கெஸ்ட் மாதிரியே இல்லை சார்.. என்னவோ பேசன் ஷோவில கலந்துக்கிட்டு நிற்கிற மாடல் மாதிரியே இருக்கு.." என்று சொன்ன சுவாதி.. சும்மாவும் இருக்காமல்..

"இல்லைடி..?" என்று நந்தினியிடம் விளக்கம் வேறு கேட்டாள்..

ரஞ்சித்தின் முகம் அஷ்ட கோணலாக மாறிவிட்டது.. சுவாதி இப்படி வாரி விடுவாள் என்று எதிர் பார்த்திருக்காததால் அவன் முகம் வியர்த்து விட.. அவன் கைக்குட்டையைத் தேடினான்..

நந்தினி வந்த சிரிப்பை வாய்க்குள்ளேயே நிறுத்தினாள்.. உடைபட்ட மூக்கை கைக்குட்டையால் மறைக்கிறவனைப் போல முகத்தை கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்த ரஞ்சித்தைப் பார்த்து.

"ஹலோ.. எப்ப வந்தீங்க..?" என்று மரியாதைக்காக கேட்டு வைத்தாள்..

"என்னடி நந்தினி இது..?" சுவாதி தோழியிடம் சண்டைக்குப் போனாள்..

"சாரைப் பார்த்து இப்படியொரு கேள்வியைக் கேட்டு வைக்கிறயே.. அவர் மனசு தாங்குமா..? எனக்கே மனசு தாங்கலை.. அருக்கு எப்படிடீ மனசு தாங்கும்..?"

சுவாதி நியாயம் கேட்ட விதத்தில் அப்படி ரஞ்சித்தின் மனம் தாங்காத வகையில் என்ன கேள்வியைக் கேட்டு விட்டோம் என்று யோசித்தாள் நந்தினி.. அவளுக்கு ஒரு மண்ணும் புரியவில்லை.. ரஞ்சித்தின் முகத்தை ஓரக்கண்ணால் 'கொடுமையே' என்று பார்த்து வைத்த போது.. அவனுக்கும் அதே நிலைதான் என்று நந்தினிக்கு தெரிய வந்தது..



'இவ என்னத்தை சொல்லித் தொலைக்கிறா...'

நந்தினியை அதிக நேரம் சோதிக்காமல் சட்டென்று விவரத்திற்கு வந்து விட்டாள் சுவாதி..

"சாரைப் பார்த்து எப்ப வந்தீங்கன்னு கேட்கிறயே.. இவர் போனால்தானே வருகிறதுக்கு..? எந்த விருந்தாளி மாதத்துக்கு ரெண்டு தரம் விருந்தாட வருவார்..? நம்ம சார் வருகிறாருன்னா.. இவர் தன்னை விருந்தாளியாவே நினைச்சுக்கலைன்னுதானே அர்த்தம்..? இப்படியிருக்கிறப்ப.. நீ எப்ப வந்தீங்கன்னு கேட்டிருக்கக் கூடாது நந்தினி.. என்ன சார்.. நான் சொல்கிறது சரிதானே...?"

சரியென்று ரஞ்சித் எப்படிச் சொல்வான்..? மிகச் சிரமப்பட்டு அவன் போஸ் கொடுத்து நின்றதெல்லாம் வீணாகப் போய்விட.. அவன் தப்பிக்கும் மார்க்கமாக செல்போனை கையில் எடுத்தான்....

"என்ன சார்... அர்ஜன்ட் கால் ஒன்னை பேச வேண்டியிருக்குமே.." இடக்காக சுவாதி கேட்டாள்..

"ஹி.. ஹி.. ஆமாம்.. எப்படிச் சரியாக் கண்டு பிடிச்சீங்க..?" அவன் வழிந்தான்..

"இதுக்குப் போயி எங்க அம்மாவோட கிராமத்தில செய்கிறதைப் போல வெத்தலையில மை தடவி ஜோஸியமா பார்க்கனும்..? நீங்க போனைக் கையில் எடுப்பீங்கன்னு நினைச்சேன்.. நீங்களும் எடுத்துட்டிங்க.."

அதற்கு மேலும் அங்கிருந்தால் சுவாதி கிழி.. கிழியென்று கிழித்து விடுவாள் என்று தோன்றி விட... ரஞ்சித்..

"எக்ஸ்யூஸ் மீ.." என்றபடி அகன்று விட்டான்..

"தொல்லை ஒழிஞ்சது.. வாடி.. என்ன கொடுமைடி இது.. வீட்டுக்கு சொந்தக்காரி நீ.. உன்னை வீட்டுக்குள்ளே வர்றதுக்கு இவன் பயப்பட வைக்கிறான்.. இதையெல்லாம் கேட்கிறதுக்கு ஆளே இல்லையா..?"

அவள் பொருமியபடி நந்தினியின் கைபிடித்து இழுத்த போது...

"ஏன் இல்லை..? நான் எதுக்கு இருக்கிறேன்..?" என்று கேட்டபடி தோட்டத்திலிருந்து வெளிப்பட்டு அவர்களை நோக்கி நடந்து வந்தார் சங்கரலிங்கம்...

"தாத்தா..?" சுவாதி கண்களை விரித்தபோது...

"செல்போனில பேசிக்கிட்டு இருந்தேன்ம்மா.." என்று காதோரமாக பிடித்திருந்த போனைக் காட்டி விட்டு அதை அணைத்தார்...

சுவாதிக்கு என்னவோ அவர் செல்போனில் பேசிக் கொண்டிருந்ததைப் போல தெரியவில்லை.. அது எப்படி அவள் சொன்ன வார்த்தைக்கான பதிலை சொல்லியபடி அவர் அங்கு வருவார்..? சங்கரலிங்கத்தின் முகத்தை அவள் கூர்ந்து பார்த்தாள்.. அது உணர்வுகள் துடைக்கப் பட்ட கல்லைப் போல இருந்தது...

'ம்ஹீம்.. என்னைக்குத்தான் இந்த தாத்தாவின் முகத்தை வைத்து மனதில என்ன நினைக்கிறார்ன்னு கண்டு பிடிக்க முடிஞ்சிருக்கு..?'



சுவாதி அந்த ஆராய்ச்சியை அடியோடு விட்டு விட்டாள்.. தாத்தாவைக் கண்டதும் நந்தினியின் முகத்தில் தோன்றிய ஆறுதல் உணர்வைப் பார்த்த போது அவளுக்கு தோழியை நினைத்து ஒருபக்கம் பாவமாகவும் இன்னொரு பக்கம் கோபமாகவும் இருந்தது..

"நீ வாயில்லாப் பூச்சிடி.." பல்லைக் கடித்தாள்..

"இவனெல்லாம் ஒரு ஆள்ன்னு இவனைப் போய் வாங்கன்னு வரவேற்பு கொடுக்கறியே.. உன்னை என்ன செய்தால் தேவலாம்...? யாருடி நீ... சங்கரலிங்கம் தாத்தாவோட பேத்தி.. சடகோபன் அப்பாவோட மகள்.. அந்த நிமிர்வு உன் மனசிலயும்.. முகத்திலயும் இருக்க வேணாமா..?"

கோபத்துடன் பொரிந்து தள்ளிய சுவாதியின் பேச்சில் சங்கரலிங்கத்தின் முகத்தில் இளக்கம் வந்தது.. அவர் கனிவுடன் சுவாதியைப் பார்த்தார்.. நந்தினியிடம் அவள் காட்டும் தன்னலமற்ற அந்தப் பிரியத்தில் அவர் மனம் நெகிழ்ந்தது.. அவர் பார்வை சிறு மயிலிறகைப் போல சுவாதியை பாசத்துடன் வருடிக் கொடுத்தது..

"இன்னொரு அடையாளத்தை விட்டுட்டியேடி.." என்றாள் நந்தினி..

"என்னவாம்.. உன் அண்ணனுக்கு தங்கையாவும் இருக்கேன்னு சொல்லப் போற.. அதுதானே..?"

சுவாதி கேள்வியில் சங்கரலிங்கம் சிரித்தார்.. நந்தினியோ..

"எப்படிடீ..?" என்று விழித்தாள்..

"ஊம்..? இதுக்கும் வெற்றிலையில மை தடவி ஜோஸியம் பார்த்தேன்.. போதுமா.. யாருடி இவ.. அடுத்து நீ என்ன சொல்லி வைப்பன்னு எனக்குத் தெரியாதா..? இப்படியே சொல்லிக்கிட்டு இரு..."

"வேற எப்படிடீ சொல்லச் சொல்ற.. ஆயிரம்தான் இருந்தாலும் அவன் அண்ணிக்கு ரிலேடிவ்.. அண்ணியோட ரிலேடிவ் கிட்ட மரியாதை குறைவா பேசினா.. அது அண்ணனையே பேசறது மாதிரி.."

இவள் இந்த மாதிரி மென்மையான மனம் கொண்டவளாக இருக்கக் கூடாது என்று அந்தத் தருணத்தில் சுவாதிக்குத் தோன்றியது..



## 7

> உன் மனதில் எனக்கும்...
> என் மனதில் உனக்கும்..
> இடமிருந்தால் போதும்...
> நிலாச்சோறு அதுவாகும்...

"உன்னைத் திருத்தவே முடியாதுடி..."

ஆற்றாமையோடு சான்றிதழ் வழங்கினாள் சுவாதி.. அதற்கும் சிரித்தாள் நந்தினி..



"நீங்களே சொல்லுங்க தாத்தா... இவ இப்படி இருக்கலாமா..?" சங்கரலிங்கத்திடமே புகார் செய்தாள் சுவாதி..

அவர் பதில் சொல்லாமல் பேத்தியின் தலையை வருடிக் கொடுத்தார்.. சலுகையுடன் அவர் தோள்மீது தலைசாய்த்தாள் நந்தினி.. சங்கரலிங்கத்தின் கண்கள் பேத்தியின் அந்தச் செய்கையில் பனித்தன...

யாருமில்லாதவளாக அவரே அடைக்கலமென்று அவர் தோள் சாய்ந்து நிற்கும் பேத்தியைக் காக்கும் கடமையில் அவர் மனம் இன்னும் கொஞ்சம் கடினப்பட்டு இறுகியது...

"கிடைத்தது சாக்குன்னு தாத்தாகிட்ட பாசம் கொண்டாடியாகிறதாக்கும்..? ஆனா தாத்தா.. உங்களைப் போல கடைஞ்செடுத்த புத்திசாலி யாருமில்ல..."

"ஐஸ் வைக்கிறயா..?" சங்கரலிங்கம் நரைத்த மீசையின் ஊடே கடகடவென்ற சிரிப்பை வெளியிட்டார்..

"உங்களுக்கு ஐஸ் வைத்தாலும்.." அலுத்துக் கொண்டாள் சுவாதி..

"ஐஸ் பாறையை இல்ல.. ஐஸ் மலையையே தூக்கி உங்க தலையில் வைத்தாலும் நீங்க அசருகிற ஆள் இல்லையே.. அதனால வீண் முயற்சியில எல்லாம் நான் வெட்டியா இறங்க மாட்டேன்.. நான் சொல்ல வந்ததே வேற தாத்தா..."

"சொல்லு.. சொல்லு..."

"இவ்வளவு புத்திசாலியா இருக்கிற நீங்க.. ஒரே பார்வையிலே ஆளை எடை போட்டு விடுகிற நீங்க.. எப்படி தாத்தா.. இவனையெல்லாம் வீட்டுக்குள்ளே சேர்க்கறிங்க.. இவனைப் பார்த்தாலே தெரியுது.. பக்கா அயோக்கியன்னு.. இவன் இந்த வீட்டுக்கு மாதத்துக்கு ரெண்டு தடவை விருந்தாட வர்றான்.. வீட்டில வயதுப் பெண் இருக்கிறா.. இவனெல்லாம் இங்கே வரக்கூடாதுன்னு ஏன் நீங்க சொல்லக் கூடாது..?"

சுவாதியின் கோபத்தில் பாறையில் சலனம் ஏற்பட்டது.. சங்கரலிங்கம் பெருமூச்சு விட்டார்.. அவர் பார்வையில் லேசான துயரம் வந்தது.. எதையோ சொல்ல அவர் வாய் திறந்த போது...

"அண்ணா.." என்ற சத்தம் கேட்டது..

அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.. சுவாதியைக் குரோதத்துடன் பார்த்தபடி ரூபா அங்கே வந்தாள்.. சற்றுத் தொலைவில் செல்போனை நோண்டியபடி நந்தினியை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த ரஞ்சித்தை நோக்கினாள்.

'ம்ஹீம்.. இத்தனை நேரமும் இந்த நந்தினிப் பேரழகி வருகிறதுக்காக கால்கடுக்க வாசல்ல நின்னுக்கிட்டு இருந்தவனை இந்தக் கிழவர்தான் துரத்தி விட்டிருக்காரா..'

மனதுக்குள் எரிச்சல்பட்டபடி சங்கரலிங்கத்தை முறைத்தாள்..

"அங்கே என்னண்ணா பண்ணிக்கிட்டு இருக்கே.."



ரூபாவின் அழைப்பில் ரஞ்சித் ஓடோடி வந்து விட்டான்.. நந்தினியை அவன் அப்போது பார்த்து கடலை போட்டு வைத்தால்தான் உண்டு.. அவள் அறைக்குள் போய் கதவைத் தாழிட்டு விட்டால்.. கல்லூரிக்குப் போகும் போதுதான் கதவைத் திறந்து வெளியே வருவாள்.. மற்ற நாள்களிலாவது உணவு நேரங்களில் சங்கரலிங்கத்துடன் சேர்ந்து சாப்பிட டைனிங்ஹாலின் பக்கமாக வருவாள்.. ரஞ்சித் வந்து விட்டால் அதற்கும் வர மாட்டாள்.. அவள் அறைக்கே வேளாவேளைக்கு உணவு போய் விடும்..

அப்படி சொந்த வீட்டில் அவளை சிறையிருக்க வைப்பவன் அவள் கல்லூரிக்குப் போய் வரும் நேரங்களில் தான் அவளை மடக்க முடியும் என்பதைத் தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருந்ததால்.. அவள் போகும் வழியில் தான் போர்டிகோவை காவல் காத்துக் கொண்டு நிற்பான்.. அவள் காரில் ஏறுகிறவரை ஒரு மனித்துளியைக் கூட வீணடிக்காமல் விடாமல் பேச்சுக் கொடுப்பான்... இருள் சூழும்வரை.. கல்லூரி முடிந்து.. சுவாதி வீட்டில் பதுங்கியிருந்து விட்டு வீட்டுக்குத் திரும்புகிறவளை போர்டிகோவிலேயே எதிர்கொள்வான்.. ஸ்டைலான போஸ்களினாலும்.. சிருங்காரப் பார்வைகளினாலும் நந்தினிக்கு தூண்டில் போட்டு அவள் கவனத்தைக் கவர பிரயத்தனங்கள் மேற் கொள்வான்..

அவன் சும்மா இருந்தால் கூட திரும்பி ஒரு தரம் பார்த்து வைக்கலாம் என்பது சுவாதியின் அபிப்ராயமாக இருந்தது.. அந்தக் கழுதையையும் ஏன் செய்ய வேண்டும் என்பது நந்தினியின் கேள்வியாக இருந்தது..

"ஸ்டைலாடி காட்டறான்..? அதை ஸ்டைல்னு அவன் தான் சொல்லிக்கனும்.. அப்படியே குரங்காட்டி வித்தை காட்டறதைப் போலவே இருக்கு.. சகிக்கலை.. ஆனாலும்.. இவனுக்கு இத்தனை தன்னம்பிக்கை இருக்கக் கூடாதுடி.. இதில கண்ணைக் கண்ணைச் சாய்ச்சு காக்காய் பார்வையை வேற பார்த்து வைக்கிறான்.. அப்படியே கன்னம் கன்னமாய் அப்பி.. இப்படிப் பார்ப்பியா.. பார்ப்பியான்னு கேட்கலாம் போல வெறி.. வெறியாய் வருதுடி.. எப்படித்தான் நீ இதையெல்லாம் தாங்கிக்கிறயோ.."

சுவாதி புலம்பித்தீர்த்து விடுவாள்.. இப்படி எதையும் தாங்கும் இதயம் கொண்டவளாக நந்தினி இருக்கக் கூடாது என்றும்.. அப்படி அவள் இருப்பதினல்தான் இப்படிப்பட்ட வன்கொடுமைகளையெல்லாம் சுவாதி பார்த்தாக வேண்டியிருக்கிறது என்றும் அவள் குற்றப் பத்திரிக்கை தாக்கல செய்தாள்..

"விடுடி..."

ஒற்றைச் சொல்லில் அந்தக் குற்றப் பத்திரிக்கையை தள்ளுபடி செய்து விட்டாள் நந்தினி...

"உன்னைத் திருத்தவே முடியாதுடி.."

ரஞ்சித்தையும்.. ரூபாவையும் பார்க்கும் போதெல்லாம் இந்த வார்த்தைகளை மந்திர உச்சாடனம் போல உச்சரித்து வைத்தாள் சுவாதி.. நந்தினியின் காதில் அந்த மந்திரங்கள் ஏறவேயில்லை.. அவள் தோழியின் அங்கலாய்ப்பை கண்டு கொள்ளாமல் தன் போக்கில் வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள்..



'அதுக்கும் இதுக விடுதுகளா..?'

அதுதான் சுவாதியின் ஆத்திரமாக இருந்தது...

வீட்டுக்கு உடைமைக்காரி ஒதுங்கிப் போகிறாள்.. விருந்தாளியாக வந்து போகிறவனோ அவளுக்கு குடைச்சல் கொடுக்கிறான்.. அந்த வீட்டில் வாழ வந்தவளோ அந்த குடைச்சலை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்து விருந்து கொடுக்கிறாள் என்றால் இந்தக் கொடுமைகளை யெல்லாம் சுவாதியால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா..?

சும்மாவே சுவாதி குரோதத்துடன் பார்க்கும் ரூபாவை விட ஆயிரம் மடங்கு அதிகமான குரோதத்தைக் காட்டுவாள்.. அன்றைக்கு இருந்த ஆத்திரத்தில் அனல் பறவையாகவே ஆகிவிட்டாள்..

"பாரேண்டி.. இழுத்து விடறதெல்லாம் இந்த அம்மாதான்.. இந்த லட்சணத்தில உன்னையும் என்னையும் கட்டம் கட்டி முறைச்சு வைக்குது.. இருந்தாலும் உன் அண்ணிக்கு 'தில்' அதிகம்தாண்டி.. இங்கே தாத்தாவும் இருக்காருங்கிறதை கண்டுக்கவே இல்லை பார்த்தியா.."

நந்தினி பார்த்துக்கொண்டுதான் இருந்தாள்.. சங்கரலிங்கத்தின் எதிரிலேயே ரஞ்சித்தை ரூபா சப்தமாக அழைத்ததை கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.. அவள் பார்வையும் சங்கரலிங்கத்தின் பார்வையும் சந்தித்து மீண்டன.. ஓடோடி வந்த ரஞ்சித் அதையெல்லாம் கவனிக்காமல் நந்தினியையே கவனித்தபடி..

"என்ன ரூபா..?" என்று தங்கையிடம் கேட்டான்..

"நான் இங்கே இருக்கேண்ணா... என்னதான் கல்யாணம் பண்ணிக்கப் போகிற முறைப் பெண்ணாய் இருந்தாலும் இந்த அளவுக்கு தங்கையை நீ மறக்கக் கூடாது.." கேலி போல பேசிச் சிரித்தாள் ரூபா...

அவள் சிரிப்பில் ரஞ்சித் மட்டுமே கலந்து கொண்டான்.. மற்ற மூவரும் மருந்துக்குக்கூட இதழ் விரிக்கவில்லை.. ரூபா அதை அவமானமாக மனதில் உணர்ந்தாள்..

'திமிரைப் பாரேன்..'

இதைவிடக் கூடாது என்று அவளுக்குத் தோன்றி விட்டது.. சுவாதி போன்ற திமிர் பிடித்த கழுதையின் முன்பாக அவளை மட்டம் தட்டுவதைப் போல வீட்டுக்குப் பெரிய மனிதரும்.. அந்த வீட்டில் பிறந்த பெண்ணும் இருக்கலாமா..?

"ஏண்ணா.. உனக்குப் போன் பேச வேற இடமே கிடைக்கலியா..? கடல் போல உன் தங்கையின் வீடிருக்கு.. என்னவோ அன்னதானம் செய்கிற சத்திரத்தைப் போல கண்ட கழுதைகளும் வந்து போகிறாங்க.. என் அண்ணன் நீ.. வாசலில் போய் நின்னு போன் பேசிக்கிட்டு இருக்க.. ம்ஹீம்.. இது கொடுமைதாண்ணா.."

சுவாதியை ஓரக்கண்ணால் பார்த்தபடி ரூபா பேசப் பேச நந்தினியின் முகம் கோபச் சிகப்பைக் கொண்டது.. அவளை என்ன பேசினாலும் அண்ணனுக்காக அவள் பொறுத்துக் கொள்வாள்.. அது எப்படி சுவாதியை ரூபா பேசலாம்..? இதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியுமா..?



அவள் கோபத்தைக் கொட்ட வாய் திறந்தாள்.. சங்கரலிங்கமும் அதைத் தடுக்க முனையவில்லை..

சிலநேரங்களில் சில பேச்சுக்களைப் பேசித்தானே ஆக வேண்டியிருக்கிறது..?

"ஒரு சின்னத் திருத்தம் அண்ணி.. இது உங்க வீடு மட்டுமில்ல.. என்னோட வீடும் இதுதான்.. இன்னும் சொல்லப் போனா.. இந்த வீட்டைக் கட்டின தாத்தா இங்கே நின்னுக்கிட்டு இருக்கார்.. முதல் உரிமை இவருக்குத்தான் அடுத்துத்தான் எங்க அப்பா.. அம்மா.. அதுக்கடுத்துத்தான் நானும் எங்க அண்ணனும் வருவோம்.. என் அண்ணனுக்கு வொய்பா நீங்க வந்ததினால உங்களுக்கு இந்த வீட்டில் உரிமையிருக்கு.. உங்க ரிலேடிவ்ஸீக்கு இந்த வீட்டில் இடமிருக்குங்கிறதைப் போலத்தான் எனக்கும்... இந்த வீட்டின் சரிபங்கு உரிமை என்னுடையது.. என்னைச் சேர்ந்தவங்களுக்கு இந்த வீட்டில் இடமிருக்கும்.. இருக்கனும்.. மத்தபடி அன்னதான சத்திரத்தை நீங்க சொன்னா.. அதையே நானும் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கும்.. மைண்ட் இட்.. நடக்கிற அன்னதானம் உங்க வருமானத்திலயோ.. அண்ணனின் வருமானத்திலேயோ.. இல்லை.. நீங்க கொண்டு வந்த சீர்வரிசைப் பணங்களிலேயோ நடக்கவில்லை.. இதில என் பங்கு வருமானமும் இருக்கு.. என் தாத்தாவின் வருமானமும் இருக்கு.. அதில எங்களுக்கு வேண்டியவங்களை நாங்க விருந்தாட வைப்போம்.. வீட்டிலேயே குடியிருக்க வைப்போம்.. சீராட்டுவோம்.. பாராட்டுவோம்.. ஏன்..

தூளிகட்டிப் போட்டு தூங்க வைத்துத் தாலாட்டுக்கூட பாடுவோம்.. நீங்க யார் அதைக் கேட்கிறதுக்கு..?"

நந்தினியின் கொதிப்பில் ரூபாவும் கொதித்து விட்டாள்..

"நான் யாரா..? இதை உன் அண்ணனிடம் கேட்கிற தைரியமிருக்கா உனக்கு..?"

"அதுக்கு முதலில நீங்க பேசின பேச்சுக்களை-யெல்லாம் என் அண்ணன் முன்னாலே பேசுகிற தைரியம் உங்களுக்கு இருக்கா..?"

"நந்தினி.." ரூபா அலறினாள்..

அவளால் நாத்தனாரின் அந்த அதீத தன்னம்பிக்கையை தாங்கிக் கொள்ள முடியவில்லை.. என்னதான் காதல் கொண்ட கணவனாக நந்தகுமார் இருந்தாலும்.. ரூபா நந்தினியின் தோழியைப் பார்த்துப் பேசிய வார்த்தைகளை அறிய நேரிட்டால் கணப்பொழுது கூட யோசிக்காமல் ரூபாவை அவன் வாழ்விலிருந்து தள்ளி வைத்து விடுவான் என்பதை அவள் நன்றாகவே அறிவாள்..

அந்தப் பின்தங்குதலை நந்தினியும் உணர்ந்து வைத்திருந்ததில் அவள் ஆவேசம் கொண்டாள்..

"சும்மா கத்தாதீங்க அண்ணி.. உங்களுக்குத்தான் பேசத் தெரியுமா..? எனக்கும் பேசத் தெரியும்.. நான் உங்களிடம் பொறுமையாப் போகிறதுக்கு காரணம் என் அண்ணன் மட்டும்தான்.. நீங்க என் அண்ணனோட வொய்ஃப்.. அண்ணி.. அந்த ஒரு காரணத்துக்காக



மட்டும் தான் நான் உங்களுக்கு மரியாதை கொடுக்கிறேன்.. பொறுமையாப் போகிறேன்.. அதையே உங்க அட்வான்டேஜா நீங்க எடுத்துக்காதீங்க.. யாரைப் பார்த்து கழுதைன்னு சொல்கிறீங்க..?"

நந்தினியின் கோபத்தை அதுநாள்வரை பார்த்திராத ரஞ்சித்தே வாயடைத்துப் போய் விட்டான்..

'ஆஹா..! சும்மா இருந்த பெண் சிங்கத்தை தங்கை சுரண்டி விட்டுட்டாளே.. இவ இத்தனை பேச்சு பேசுவான்னு இதுநாள் வரை எனக்குத் தெரியாதே..'

"உன்னை.." பல்லைக் கடித்த ரூபா..

"நீ வாண்ணா.. நாம வீட்டுக்குள்ளே போய் பேசலாம்.. வாசலில் நின்னு பேச்சுவார்த்தை நடத்தனும்னு நமக்கு என்ன தலைவிதியா..?" என்று ரஞ்சித்திடம் சொன்னாள்...

அதற்காகவே காத்திருந்ததைப் போல ரஞ்சித் வேக நடையுடன் வீட்டுக்குள் செல்ல முயன்ற போது...

"ஒரு நிமிசம்.." என்று அந்த ஒன்று விட்ட அண்ணன் தங்கையை நிறுத்தி வைத்தாள் சுவாதி...

'பேசா மடந்தையே இந்தப் போடு போட்டுருச்சு.. இவ பேசும் மடந்தை.. என்ன போடு போடக் காத்திருக்கிறாளே..'

கிளம்புவதற்கு முன்னால் சகுனம் பார்த்திருக்க வேண்டுமோ என்று காலம் கடந்து யோசித்தான் ரஞ்சித்..

ரூபாவுக்கும் அதே எண்ணம்தான் என்றாலும் அவள் 'கெத்தை' விட்டுக் கொடுக்காமல் தேங்கி நின்று.. உன்னிடமெல்லாம் என்னவென்று நான் கேட்க வேண்டுமா என்ற கேள்வியைத் தாங்கிய பார்வையை சுவாதியை நோக்கி வீசி வைத்தாள்..

"ஒரு கவிதையிருக்கு.." சுவாதி ஆரம்பித்தாள்..

அது என்ன கவிதையென்று ரூபாவும் கேட்க வில்லை.. ரகுசித்தும் கேட்கவில்லை.. நிச்சயமாக அது எக்குத்தப்பான கவிதையாகத்தான் இருக்கும் என்பதை அவர்கள் மிக நன்றாகவே அறிவார்கள்.. சுவாதியும் அதை உறுதி படுத்தினாள்..

"ஒரு பூவே.. பூவைப் பத்திப் பேசுதே.." கவிதை சொன்னவள்..

"எப்புடி..?!" என்று பெருமிதமாக கேட்டும் வைத்தாள்..

ரூபாவின் முகத்தில் ஈயாடவில்லை.. அந்தக் கவிதை சொல்லிய செய்தியை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. அந்தப் புரிதலில் எழுந்த கோபக் கடலில் அவள் மூழ்கி மூச்சுத் திணறிப் போனாள்...

"ஏய்ய்.." ஒற்றை விரலை உயர்த்தி சுவாதியை எச்சரித்தாள்..

"உன் வாயாடித்தனத்தையெல்லாம் உன் பிரண்டு கிட்ட வைச்சுக்க.. என்கிட்டக் காட்டாதே.. மட்டு மரியாதை இல்லாம பேசினா தொலைச்சுப் புடுவேன்.. தொலைச்சு.."



"எதை அண்ணி..?"

அப்பாவியாக இமை கொட்டி அவள் கோபத்தை அதிகப் படுத்தினாள் சுவாதி..

"ஏய்.."

"எதுக்குண்ணி இத்தனை டென்சன் ஆகிறிங்க..? ஏண்டி நந்தினி அண்ணிக்கு பிளட்பிரசர் இருக்குமோ.."

"உன்கூடவெல்லாம் நின்னு பேசறதே தப்பு.. என் லெவல் என்ன..? உன் லெவல் என்ன.?"

"தெரியலையே.. வாங்க அந்த சுவர் பக்கத்தில நின்னு உயரம் பார்த்திரலாம்.. எப்படியிருந்தாலும் என் உயரத்தைவிட உங்க உயரம் கொஞ்சம் குறைவுதான் அண்ணி.. ஸாரி.. ஃபார் திஸ்.. உண்மையைச் சொல்லித் தானே ஆகனும்..? ஆனாலும் நீங்க அநியாயத்துக்கு குட்டையா இருக்கீங்க.. அண்ணனோட தோளுக்கு வர்றதே சந்தேகம்தான்.. அவர் தோளளவுக்காவது உயரம் வேண்டாமோ.. ஏண்டி நந்தினி.. அண்ணனுக்குப் பெண் பார்க்கிறப்ப இதையெல்லாம் நீங்க யோசிச்சுப் பார்க்க வேண்டாமோ.. இப்பப் பாரு.. அண்ணி இத்தனை உயரக் குறைவா இருந்து வைக்கிறாங்க.. இனியென்ன செய்கிறது..?"

யோசித்திருக்க வேண்டுமோ என்று சங்கரலிங்கத் திற்குத் தோன்றியது.. தாய்.. தகப்பனில்லாத நாத்தனாரின் அண்ணியாக வருகிறவள்.. அந்த நாத்தனாருக்கு தாயாக இருப்பாளா என்பதை அவர் யோசித்திருக்க வேண்டும்..

அவர் கண்முன்பாகவே இத்தனை நடக்கிறதே.. அவர் கண்மூடிவிட்டால் எத்தனை நடக்கும்..? நந்தினிக்கு திருமணம் செய்து வைத்து.. புகுந்த வீட்டிற்கு அவளை அனுப்பி வைத்தாலும்.. தாய் வீட்டில் சீராட அவள் வந்து போக வேண்டாமா..? தாய் வீட்டுச் சீர்வரிசை அவளுக்குப் போய் கொண்டிருக்க வேண்டாமா..?

அவையிரண்டும் சங்கரலிங்கத்தின் மறைவிற்குப் பின்னால் நடக்காது என்பதை அறிந்தவரின் மனம் சோர்ந்தது..

அந்த நொடியில்... தாய் வீட்டை நினைக்க விடாமல் தாங்கிப் பிடிக்கும் புகுந்த வீடு பேத்திக்கு அமைந்து விடாதா என்று அவர் மனம் பரிதவித்தது...

அவளை நிழல் தேட விடாமல் நிழல் கொடுக்கும் கணவன் நந்தினிக்கு அமைவானா..?

சுவாதியின் பேச்சுக்குப் பதில் பேச்சைப் பேச முடியாமல் முகம் சிவக்க வீட்டுக்குள் போன ரூபாவை பின்பற்றிய ரஞ்சித்தின் கயமைத்தனம் நிறைந்த வெறி கொண்ட பார்வை நந்தினியை வட்ட மிடுவதை உணர்ந்த வருக்கு.. இவனைப் போன்ற கயவர்களிடமிருந்து நந்தினியைக் காக்கும் பலவான் ஒருவன் தான் அவளுக்குக் கணவனாக வரவேண்டுமென்ற உறுதியின் விதை மனதில் விழுந்தது..

"விடுடி.. இவங்க பேசுகிறதுக்கெல்லாம் அப்செட் ஆகிக்கிட்டு.. முதலிலேயே என்கிட்ட விட்டிருந்தா நான் பதிலுக்கு பதில் கொடுத்திருக்க மாட்டேனா..? நீயேண்டி உன் எனர்ஜியை வேஸ்ட் பண்ணிக்கிற..?"

எதுவும் நடக்காததைப் போல புன்னகைத்த சுவாதியைப் பார்த்தபோது இவளின் தோழமை கிடைத்தது பெரிய வரம் என்று நெகிழ்ந்து போனாள் நந்தினி...



# 8

*நிலவொளியில் சோறுண்ணும்..*
*நினைவோடு உனைத் தேடிவந்தேன்..*
*உன் முகத்தைப் பார்த்தபின்பு*
*பசிமறந்து போனதடி..!*

சுவாதி சுயமரியாதை மிக்கவள்.. தன்மானம் பார்ப்பவள்... நிமிர்ந்த நடையும்... நேர்கொண்ட பார்வையுமாக இருப்பவள்...

அப்படிப்பட்டவளைப் பார்த்து நேரடியாக 'கழுதை' என்று ரூபா சொல்கிறாள்.. அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல் அவளுக்கு கவிதை சொல்லி அனுப்பி வைத்து விட்டு தோழியிடம் 'விடுடி' என்று சுவாதி சொல்வாளானால் அவள் எந்த அளவுக்கு நந்தினியின் மீது பாசம் வைத்திருக்க வேண்டும்..!

"சுவாதி.." நந்தினியின் குரல் தழுதழுத்தது..

"என்ன தாத்தா உங்க பேத்தி பச்சைப் புள்ளை. யாட்டம் எதுக்கெடுத்தாலும் கண்ணைக் கசக்கறா.."

வேடிக்கை போல பேசிச் சிரித்த சுவாதியின் மீது சங்கரலிங்கத்திற்கு வாஞ்சை பெருகியது..

இப்படிப்பட்ட தன்மையுடைய தோழியாக சுவாதி இருப்பதினால்தானே அவளையும்... அவள் குடும்பத்தையும் நம்பி.. தன் செல்லப் பேத்தியை அவர்கள் வசம் அவர் ஒப்படைத்திருக்கிறார்..?

"தப்பா எடுத்துக்காதேம்மா.. ரூபாவின் குணம் எப்படின்னுதான் உனக்குத் தெரியுமே.." வருத்தத்துடன் சொன்னார் சங்கரலிங்கம்...

"நீங்க இப்படிப் பேசறதைத்தான் நான் குத்தமா எடுத்துக்குவேன்.. அவங்க பாட்டுக்கு பேசட்டும்.. நான் பாட்டுக்கு இந்தக் காதில் வாங்கி.. அந்தக் காதில் விட்டுட்டுப் போறேன்.. இதுக்குப் போயி நீங்க விளக்கம் சொல்லனுமா.. போங்க தாத்தா..."

உள்ளே போய் கொண்டிருந்த ரஞ்சித்தின் காதிலும்.. ரூபாவின் காதிலும் சுவாதி பேசிய பேச்சு தெளிவாக விழுந்தது..

"இவடேன்ஜரான ஆள்.." என்றான் ரஞ்சித்..

"எனக்குத் தெரியும்.." யோசனையுடன் சொன்னாள் ரூபா...

"ஐ திங்க்.. இவ பக்கத்தில இருக்கிற வரை நந்தினியை நான் நெருங்க முடியாது.. வாட் ஆர் யு திங்கிங்..?"



"எனக்கும் அதே நினைவுதான்.. பட்.. என்னால இவளைக் கழட்டிவிட முடியலை அண்ணா... அவர்கிட்டப் பேசினா சண்டைக்கு வர்றாரு... நந்தினிகிட்ட நான் பேசறதே இல்லை.. பெரியவரு எதைப் பேசினாலும் என் முகத்தைப் பார்த்துப் பேசித் தொலைக்க மாட்டாரு.. இரண்டு வார்த்தைக்கு மேலே பேசவும் மாட்டாரு.."

"ஏன்..?"

"எல்லாம் திமிர்தான்... அந்த நந்தினிக் கழுதையை நான் சீராட்டலையாம்... அந்த கோபத்தில என்னிடம் பேசக்கூட கூலி கேட்பாரு.."

"கழுதைன்னு நீ சொன்னதும் தான் ஒன்று நினைவுக்கு வருது ரூபா..."

"என்ன..?"

"சுவாதி சொன்ன பூவைப் பத்தின கவிதையோட ஒரிஜினல் மீனிங்.. 'ஒரு கழுதையே.. கழுதையைப் பத்திப் பேசுதே..'தானே..?"

ரஞ்சித்தின் கேள்வியில் ரூபாவின் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் வெடித்தன..

'தெரியுதில்ல.. அதை மனசில வைச்சுத் தொலைக்காம விளக்கமாச் சொல்லி அதுதானேன்னு வேற கேட்கிறானே.. இவனுக்கிருக்கிற திமிரைப் பார்..' ரஞ்சித்தை துளைப்பதைப் போல அவள் பார்த்து வைத்ததில் சிரிக்க முயன்ற ரஞ்சித்தின் சிரிப்பு பாதியிலேயே காணாமல் போய் விட்டது..

"ஏன் சொல்ல மாட்ட..? உனக்கு சப்போர்ட் பண்ணப் போய்த்தான் எனக்கு சமதை இல்லாதவ கிட்டயெல்லாம் நான் பேச்சு வாங்க வேண்டியதாகி விட்டது.." ரூபா கடுகடுத்தாள்..

"என்னம்மா இது... நானா அவளை 'கண்ட கழுதை'ன்னு சொல்லச் சொன்னேன்.. அதனால்தானே அவள் திருப்பி உன்னைக் கழுதைன்னு சொல்லாமச் சொன்னா.." ரஞ்சித் அந்தக் 'கழுதை' விவகாரத்திலேயே நின்றான்..

'இவன் இதை விட்டுத் தொலைக்கவே மாட்டானா..?' ரூபாவுக்கு தலைவேதனையாய் இருந்தது..

"நீ அவளைக் கழுதைன்னு சொல்லச் சொல்லலை தான்.. ஆனா அவ உன்னைப் பார்த்து என்னவெல்லாம் சொன்னான்னு நான் உள்ளேயிருந்து கேட்டுக்கிட்டுத் தான் இருந்தேன்.. அதனாலதான் வாசலுக்கு ஓடிப் போன உன்னை கௌரமா வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வரலாம்ன்னு போர்டிகோவுக்கு வந்து நின்னேன்.. இல்லைன்னா.. அவங்க மூன்று பேர்கிட்டயும் நான் ஏன் பேசப் போறேன்.. ஆமா.. என்னிடம் இந்த வாயடிக்கிறயே.. அந்த சுவாதி உன்னை வாரு.. வாருன்னு வாரினப்ப இந்த வாய் எங்கே போயிருந்துச்சு..? யாருக்கும் கடனாய் கொடுத்திருந்தயா..?"

ரூபாவின் கேள்வியில் ரஞ்சித்திற்கு பேச்சு வராமல் தொண்டை உலர்ந்து விட்டது.. கடந்து போன பூங்கொடியை அழைத்து ஜூஸ் கொண்டு வரச் சொன்னான்.. அவளோ மாடியிலிருக்கும் நந்தினியின் ரூமிற்கு அந்த ஜூஸை கொண்டு போக வேண்டி இருப்பதாகவும்.. திரும்பி வந்த பின்னால் ரஞ்சித் கேட்ட ஜூஸை கொண்டு வந்து தருவதாகவும் உத்திரவாத மளித்தாள்.. இதற்கு ஜூஸ் சாப்பிடாமலே இருந்து விடலாம் என்று பூங்கொடி போன பின்னால் அவன் சொன்னான்.. இதை பூங்கொடியின் முன்னாலேயே சொல்லியிருக்கலாமே என்று ரூபா வெடித்தாள்..



மொத்ததில் நந்தினிக்கும்.. அவளைச் சார்ந்தவர் களுக்கும் அந்த வீட்டில் இருக்கும் முன்னுரிமையில் அவள் மனம் கொதித்தது..

"இந்த வீட்டில் நான் யார்..?"

கணவனிடம் வெடித்த போது.. வரும் போதே ரஞ்சித்தின் வரவை அறிந்ததில் கடுப்புடன் வந்திருந்த நந்தகுமார்..

"அதுதான் எனக்கும் தெரியலைடி.." என்று சொல்லி விட்டான்..

"என்னது..? கட்டின பெண்டாட்டியை உங்களுக்கு யாருன்னு தெரியலையா..?" ரூபா சண்டைக்கு தயாரானாள்..

"அதுதான் கட்டின பெண்டாட்டின்னு உனக்குத் தெரியுதில்ல.. அப்புறமும் ஏண்டி கேள்வி கேட்கிற..?"

"இந்த வீட்டில் எனக்குன்னு என்ன உரிமையிருக்கு..?"

"ஏன் இல்லை..? அதான் வாரத்துக்கு ஒரு தடவை உனக்கு நாலுவிட்ட அண்ணன்னு ஒருத்தனை வீட்டில

கொண்டு வந்து தங்க வைக்கிறயே.. அந்த உரிமை பத்தாதா..? நீ மட்டும் எனக்குப் பெண்டாட்டின்னு இந்த வீட்டில் இல்லாம இருந்திருந்தா அவனெல்லாம் உறவுன்னு சொல்லிக்கிட்டு இந்த வீட்டு வாசலை மிதித்திருக்க முடியுமா..?"

நந்தகுமார் சரியான கேள்வியை கேட்டு விட்டதில் ரூபாவின் ஆத்திரம் உச்சத்திற்குப் போனது..

"அண்ணன்.. அண்ணன்.. அண்ணன்.. என் அண்ணனைத்தான் எல்லார் கண்ணுக்கும் தெரியுது.. ஊரில இருக்கிற கழுதைகள் எல்லாம் இந்த வீட்டுக்குள்ளே வந்து போகிறது தெரியலை.. உடந்தைப் பட்டவன் வரக் கூடாது.. ஊர்க் கழுதைகள் வந்து போகலாமா..?"

உடை மாற்றிக் கொண்டிருந்த நந்தகுமார் முகச் சுளிப்புடன் திரும்பினான்.. அவன் முகத்தில் தெரிந்த கடுமையில் ரூபாவுக்குள் குளிர் பரவியது..

'அவசரப்பட்டு வாய் விட்டுட்டேனோ..'

இனிப் பின்வாங்க முடியாது என்ற நிலையில் மனதிலிருந்த பயத்தை மறைத்துக் கொண்டு அவளும் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டாள்..

"ஊர்க் கழுதைகளா..? யார் அது..?"

"வேற யார்..? எல்லாம் உங்க செல்லத்தங்கை வீட்டு வரைக்கும் அழைத்துக்கிட்டு வர்ற அந்த சுவாதிக் கழுதைதான்..."

"ஓஹோ..! அப்ப உடந்தைப் பட்டவன்..?"



"அது என் அண்ணன்தான்.."

சொல்லி வாய் மூடுமுன் பளாரென்ற அறையை கன்னத்தில் வாங்கிய ரூபா.. காதுக்குள் 'ஙொய்..' என்ற சப்தத்தை உணர்ந்தாள்..

"பல்லைக் கழட்டிருவேன்.." நந்தகுமார் சப்தம் போட்டான்...

"யாரு உடந்தைப் பட்டவன்..? அந்த ரஞ்சித்தா..? எந்த வகையில் இந்த வீட்டுக்கு அவன் உடந்தைப் பட்டவனா ஆகிறான்..? இப்பவே எனக்கு அது தெரிந்தாகனும்.." நந்தகுமார் உறுமினான்...

"அதில்லைங்க.. வந்து.. அது என் அண்ணன்கிற அர்த்தத்தில சொல்லிட்டேன்.." ரூபா மென்று விழுங்கினாள்..

"உன் அண்ணன்னா இந்த வீட்டுக்கு விருந்தாளியா வந்து போகலாம்.. உரிமைக்காரனா.. உடந்தைப் பட்டவனா ஆக முடியாது... அதை விட்டுட்டு இதைப் போல இன்னொரு முறை பேசிவைச்ச.. நான் மனுசனாவே இருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்.. அப்புறம்.. இன்னொன்றையும் கேட்டுக்க.. நந்தினி என் தங்கை.. இந்த வீட்டில் பிறந்த பெண்.. எனக்கிருக்கிற எல்லா உரிமையும் அவளுக்கும் இந்த வீட்டில் இருக்கு.. அவ பிரண்டை அவ அழைத்துக்கிட்டு வந்தா.. அது அவ இஷ்டம்.. உன்னைப் போல ஊரில இருக்கிறவனை உறவுக்காரன்னு வீட்டில தங்க வைத்து உயிரை எடுக்கிற ஆள் அவளில்லை.. அவளோட பிரண்டை

மரியாதையில்லாமல் பேசாதே.. மீறிப் பேசினேன்னு வை.. நான் நானா இருக்க மாட்டேன்.. சுவாதியைப் பார்த்தா உனக்கு கழுதைபோல தோணுதா..? அவ மனுஷிடி.. உண்மையான அன்பையும்.. பாசத்தையும் பிரியத்தையும் யார் மேல வைக்கினும்கிற தராதரம் தெரிஞ்ச மனுஷி..நீ அண்ணன்னு ஒருத்தனைக் கொண்டு வந்து வீட்டுக்குள்ள உட்கார வைச்சிருக்கியே.. அவன்தான் மனுசப் பிறவி யில்ல.. பன்றி ஜென்மம்.. "

நந்தகுமார் குளியலறைக் கதவை ஓங்கி அறைந்து சாத்திக் கொண்ட விதத்தில் ரூபாவின் உடல் தூக்கிப் போட்டது.. அவளது கை அனிச்சையாக கன்னத்தை வருடிக் கொண்டது..

அன்றும் மறுநாளும் அவளுடன் பேசாமல் அவன் ஒதுக்கி வைத்ததில் ரூபா அரண்டு போனாள்.. கூடுமான வரைக்கும் நந்தகுமார் இருக்கும் போது ரஞ்சித்துடன் பேசாமல் மறைவாய் இருந்து கொண்டாள்.. மூன்றாம் நாள் நந்திதாவின் பிறந்தநாள் வந்தது.. மகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கணவன் மனைவியின் ஊடல் கதிரவனைக் கண்ட பனி போல மறைந்தது..

மனைவியுடன் உண்டான பிணக்கு மறைந்து போனதில் மூன்று நாளைத் தாண்டியும் ரஞ்சித் அவனது ஊரைப் பார்த்துக் கிளம்பாமல் அங்கேயே தங்கி விட்டதை நந்தகுமார் பெரிது படுத்தவில்லை.. சங்கரலிங்கம் நாசுக்காய் அதை நினைவு படுத்திய போது..



"நந்திதாவோட பெர்த் டே பங்சன் இருந்ததில்ல தாத்தா.. அதனால இருந்திருப்பார்.." என்று சொல்லி விட்டான்..

சங்கரலிங்கத்தின் மனதில் நெருஞ்சி முள் நிரடிக் கொண்டிருந்தது.. அவரின் சஞ்சலத்தை ரூபா அறியாமல் மறைத்து விட்டதாக அவர் நினைத்துக் கொண்டிருக்க அவளோ எனக்குத் தெரியாமல் இந்த வீட்டில் எதுவும் நடக்காது என்று அதை உடைத்து விட்டாள்..

சங்கரலிங்கம் நந்தகுமாருடன் பேசிக் கொண்டிருந்த போது.. ஏதோ வேலையிருப்பதைப் போல அங்கே வந்தவள்..

"என்னங்க... இதைப் போய் தாத்தாகிட்டச் சொல்கிறீங்களே.. அவர் அடுத்த வாரம் முழுசும் ஊரில் இருக்க மாட்டாருங்கிறதை மறந்துட்டிங்களா..?" என்று கேட்டு வைத்தாள்..

சங்கரலிங்கத்திற்கு தூக்கிவாரிப் போட்டது.. அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் படுத்த படுக்கையாக இருந்தார்.. அவர் சங்கரலிங்கத்தைப் பார்க்க விரும்புவதாக தகவல் வந்தது.. தவிர்க்க முடியாத சூழலில் வேறு வழியில்லாமல் வரும் வாரத்தில் அந்த நண்பரைப் பார்க்க வருவதாக சங்கரலிங்கம் தகவல் கொடுத்து விட்டார்.. அந்த விவரம் அவருக்கும் நந்தகுமாருக்கும் மட்டுமே தெரியும்...

'இது எப்படி இவ காதுக்குப் போனது..'

நந்தகுமார் சங்கடத்துடன் சங்கரலிங்கத்தைப் பார்த்தான்..

'தாத்தா என்ன நினைத்துக்குவார்..? நான்தான் இந்த விசயத்தை இவ காதில ஓதிட்டேன்னு நினைச்சுக்க மாட்டாரா..?'

அதை இல்லையென்று நிரூபிக்க.. எரிச்சலுடன் மனைவியைப் பார்த்து..

"உனக்கெப்படிடி தெரியும்..? ஜோசியம் பார்த்தியா..?" என்று கேட்டான்..

"இதுக்குப் போயி எதுக்குங்க ஜோசியம் பார்க்கனும்..? கர்நாடகாவில இருந்து நம்ம வீட்டு லேண்ட்லைனுக்கு போன் வந்துச்சு.. நான்தான் அட்டெண்ட் பண்ணினேன்.. தாத்தா போன் 'ஸ்விட்ச் ஆப்'ன்னு இருந்ததில லேண்ட் லைனுக்கு போன் பண்ணினாங்களாம்.. அடுத்த வாரம் தாத்தா வருகிறார்ன்னு சொன்னதும்.. தாத்தாவோட பிரண்ட் ஒருவாய் அதிகமாகவே சாப்பிட்டுட்டாராம்.. சொன்னாங்க.." ரூபா விவரித்தாள்..

நீ மறைத்தால் எனக்கு விவரம் தெரியாமல் போய் விடுமா என்று அவளது விழிகள் சொல்லிய செய்தியில் பல்லை கடித்தபடி பலமாக யோசித்தார் சங்கரலிங்கம்..

ஒரு வாரத்திற்கு ரூபாவை நம்பி நந்தினியை தனியாக விட்டு விட்டுப் போவதா என்று அவர் மனம் அடித்துக் கொண்டது.. அவளோ அதற்கும் ஒருபடி மேலே போனவளாக அடுத்த வெடிகுண்டைக் கொளுத்திப் போட்டாள்..

"அதனாலதான் அண்ணனை இருக்கச் சொல்லிட்டேன்.. நீங்க கம்பெனி.. வேலைன்னு அதிலேயே



கவனமாக இருப்பீங்க.. தாத்தாவைப் போல வீட்டில இருக்கிற பெண்களைப் பத்திரமா பார்த்துக்க மாட்டிங்க.. அண்ணனா இருந்தா அப்படியில்லை.. தாத்தாவைப் போல பொறுப்பா எங்களைப் பார்த்துக்கும்.. நீங்க கவலைப் படாம போயிட்டு வாங்க தாத்தா.. நானும்.. அண்ணனும் வீட்டைப் பத்திரமாப் பார்த்துக்குவோம்.."

சங்கரலிங்கத்தின் முகச் சுளிப்பில் நந்தகுமார் மனைவியை அதட்டினான்..

"அதெல்லாம் வேண்டாம்... உன் அண்ணனைக் கிளம்பச் சொல்லு... வீட்டைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்..."

"இதென்னங்க வம்பாய் போச்சு.. இருன்னு சொன்ன அண்ணனை கிளம்புன்னு எப்படிச் சொல்கிறது..? என்னால அது முடியாது.. வேணும்னா நீங்க சொல்லிக்கங்க.."

நந்தகுமார் எப்படிச் சொல்வான்..? அது பண்பாடாய் இருக்காதே.. இருந்தும் அவன் தயக்கத்துடன் ரஞ்சித்தைக் கூப்பிடத்தான் போனான்.. சங்கரலிங்கம்தான் தடுத்து விட்டார்..

"விடு நந்து... ரூபா சொல்கிறதும் சரிதானே.. நீ கம்பெனி.. கம்பெனின்னு இருப்ப.. வீட்டில துணையா அவ அண்ணன் இருந்துட்டுப் போகட்டுமே... ரூபா புத்திசாலி.. நாலையும் யோசிக்காமலா இதைச் செய்திருப்பா.."

"ஆனா தாத்தா.."

நந்தினியின் நினைவில் அவன் தயங்கினான்.. சங்கரலிங்கம் அவன் முதுகில் தட்டிக் கொடுத்துப் புன்னகைத்தார்..

"நான் பார்த்துக்கிறேன்.. போ.."

தாத்தாவின் வார்த்தையில் எதையும் பேசாமல் நந்தகுமார் போய் விட்டான்..

'இந்தப் பெரியவர் எதைப் பார்த்துக்கப் போகிறார்..?'

அதை அறிந்து கொள்ளும் ஆவலில் ரூபாவின் மனம் குறுகுறுத்தது..

'ஒரு வேளை கர்நாடகாவிற்குப் போகும் போது பேத்தியை கையில் பிடிச்சுக்கிட்டு போயிடலாம்கிற திட்டம் மனசில இருக்குமோ..?'

இருக்காது என்று தேற்றிக் கொண்டாள் அவள்.. அந்த நண்பர் இருந்தது கர்நாடகாவில்.. அதுவும் ஒரு குக்கிராமத்தில் அவர் இருப்பதாக நந்தகுமார் சொல்லியிருந்தான்..

'அங்கேயெல்லாம் இந்த மகாராணியை பெரியவர் அழைத்துக்கிட்டுப் போக மாட்டாரே..'

சங்கரலிங்கத்தின் பேத்தியின் மீதான கவனிப்பில் மனதுக்குள் எரிச்சல் பட்டாள் ரூபா...

சங்கரலிங்கத்திற்கும் அதே கவலைதான்.. அந்தப் பரந்த அரண்மனை போன்ற பெரிய வீட்டில் அவருடைய பேத்திக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விட்டதே..



நந்தகுமாரிடம் சொல்லி விடலாம்.. அவன் பார்த்துக் கொள்வான்தான்.. ஆனால்.. அதனால் அவனுக்கும்.. அவன் மனைவிக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது..?

# 9

*நிலவைத் தூது விட்டு - உன்*
*நினைவை அழைத்து வந்தேன்..*
*நிலாச்சோறை நீதந்தால்..*
*நிம்மதியாய் உறங்கிடுவேன்...*

நந்தினி கல்லூரிக்கப் போவதற்கு தயாராகி அறையை விட்டு வெளியே வந்தாள்.. அவசர கதியில் இறங்கினவளை எதிரே வந்த பூங்கொடி வழி மறித்தாள்..

"சின்னம்மா.. உங்களை பெரியய்யா வரச் சொல்றாரும்மா.."

'தாத்தா வரச் சொன்னாரா..?'

கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்ட நந்தினி..

"எங்கேயிருக்கார்..?" என்று பூங்கொடியிடம் கேட்டாள்..

"தோட்டத்தில் இருக்காரும்மா.." என்றாள் அவள்..

"சரி.. நான் பார்த்துக்கறேன்.. போ.." அவளை அனுப்பி விட்டு தாத்தாவைத் தேடிச் சென்றாள் நந்தினி..

அவளுடன் முக்கியமான எதையும் பேச வேண்டியிருந்தால் அவர் அவளை தோட்டத்திற்குத்தான் வரச் சொல்லுவார்.. அதைப் பற்றி ஒரு சமயம் நந்தினி வினவிய போது மெலிதாக சிரித்தார்...

"சுவர்களுக்கும் காது உண்டு நந்தும்மா.." என்று சொன்னார்..

"சுவர்களுக்கு காதா..?" நந்தினிக்குச் சிரிப்புத்தான் வந்தது..

"இது சிரிக்க வேண்டிய விசயமில்லை நந்தினி.. நாம் நினைப்போம்.. நான்கு சுவர்களுக்குள்தானே பேசிக் கிட்டு இருக்கோம்ன்னு... ஒட்டுக் கேட்கிற காதுகள் சுவரோடு சுவரா ஒட்டிக்கிட்டு இருக்கும்.. நமக்கு அது தெரியாது.. தோட்டம்ன்னா அப்படியில்லை.. நம்மைச் சுற்றியிருக் கிறவங்கவளை நம்மால பார்க்க முடியும்.. அவங்க கிட்டத்தில் வந்தா பேச்சை நிறுத்திர முடியும்.. அதனால ஆபிஸ் ரூமைவிட.. தோட்டமே பெட்டர்.."

இவ்வளவு தூரத்திற்கு யோசித்து செயல்படுகிறவர் அவர்... நந்தகுமாரின் திருமணத்திற்குப் பின்புதான் இத்தனை யோசனைகளையும் அவர் யோசிக்க ஆரம்பித்தார் என்பதை நந்தினி நினைத்துப் பார்த்தாள்..

யார் நினைத்தது..? வீட்டிற்கு வரும் பெண் இந்த அளவுக்கு சாகச குணம் படைத்தவளாக.. சூட்சும புத்தி



நிறைந்தவளாக.. நந்தினி மேல் விரோதம் கொண்டவளாக இருப்பாள் என்று..

அவர்களின் வாழ்க்கை முறையே.. ரூபாவின் வரவுக்கு முன்.. வரவுக்குப் பின் என்று மாறிப்போய் விட்ட பின்பு எதை நினைத்து என்ன பயன்..?

முள்ளில் விழுந்து விட்ட துணியை எடுக்கும் லாவகத்துடன் வீட்டு நிலைமையை கையாள ஆரம்பித்தார் சங்கரலிங்கம்.. பேரனின் வாழ்வும் சிக்கலாகக் கூடாது.. அதே சமயம் பேத்தியும் நிம்மதியாக வாழ வேண்டும்..

இரண்டையும் சரிவர செய்வதற்காக அவர் பலத்த சிந்தனைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது... அவருடைய வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்துக் கொண்டு வெளிவேலைகளை நிறுத்தி விட்டு வீட்டில் அவர் நிலைகொண்டார்.. நந்தினியை கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டார்..

அப்படிப்பட்டவருக்குத்தான் ஒரு வார காலத்திற்கு வீட்டை விட்டு அகல வேண்டிய நெருக்கடி வந்து விட்டது..

'ஒரு வீடான வீட்டில பிறந்த பெண் பாதுகாப்பா இருக்க முடியலைன்னா எப்படி..?' சிந்தனையோடு உலவிக் கொண்டிருந்தவர்..

"தாத்தா.." என்ற நந்தினியின் குரலில் கலைந்தார்..

"என்னம்மா.. காலேஜீக்கு கிளம்பிட்டியா..?" பரிவுடன் பேத்தியை விசாரித்தார்..

"ஆமாம் தாத்தா.." நந்தினி அங்கிருந்த சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்தாள்..

எப்போதும் அவளும் சங்கரலிங்கமும்தான் சேர்ந்து சாப்பிடுவார்கள்.. அதையும் கெடுக்கவென்று ரஞ்சித் வந்து விடும் நாள்களில்.. நந்தினி அறையை விட்டு வெளியே வராமல் அறைக்கே சாப்பாடைக் கொண்டுவரச் சொல்லி சாப்பிட்டு விடுவாள்...

சங்கரலிங்கத்திற்கு அதில் வருத்தம்தான்.. ஆனால்.. பிரச்னையை அவர் கிளறினால் அது நந்தகுமாரின் மண வாழ்க்கையை பாதித்து விடும்.. அதனால் அவர் அனைத்தும் அறிந்தும்.. எதையும் அறியாதவரைப் போல அடக்கி வாசிக்க வேண்டியிருந்தது...

"சாப்பிட்டியாம்மா..?" பாசத்துடன் அவர் வினவினார்..

"ஆச்சு தாத்தா.." நந்தினி வெள்ளைச்சிரிப்பை உதிர்த்தாள்..

'என் பேத்திதான் எத்தனை பெருந்தன்மையான குணத்தோட இருக்கா..' சங்கரலிங்கம் பெருமிதம் கொண்டார்..

நந்தினியின் அருகே அமர்ந்தவர்.. இயல்பாக கேட்பதைப் போல..

"நீ ஒரு வாரத்துக்கு சுவாதி வீட்டில் தங்கிக்கிட்டு காலேஜ் போய் வர்றயாம்மா..?" என்று கேட்டார்..

"எதுக்கு தாத்தா..?" நந்தினிக்குப் புரியவில்லை..

"ஒன்னுமில்லைம்மா.. எனக்கு ஒரு வாரத்துக்கு வெளியூரில வேலை இருக்குது.. நீ தனியாய் வீட்டில ரூமுக்குள்ளேயே அடைஞ்சு கிடப்பானேன்.. அதான்.. சுவாதி வீட்டில இருக்கியான்னு கேட்டேன்.."



மிகக் கவனமாக ரஞ்சித்தின் பெயரை உச்சரிப்பதை அவர் தவிர்த்து விட்டார்.. நந்தினியோ சூள் கொட்டினாள்..

"ம்ப்ச்.. அவ வேற ஒரு புரோக்ராம் போட்டு வைச்சிருக்கா தாத்தா.."

"அப்படியா..? என்ன புரோக்ராமாம்.. பிக்னிக்கா..?"

அப்படியிருந்தாலும் நந்தினியை அவர்கள் கூட அனுப்பி வைத்து விடலாமே என்றுதான் சங்கரலிங்கம் நினைத்தார்...

"இல்லை தாத்தா.. அவளோட மாமன் மகளுக்கு கல்யாணமாம்.."

"எங்கேம்மா..?"

"கல்யாணம் நடக்கப் போகிறது ஸ்ரீவில்லிப்புத்தூராம் தாத்தா.. பெண்ணோட ஊர் விருது நகராம்.. இவ கல்யாணத்துக்கு முன்னாலே மூணுநாள் விருதுநகரில் இருப்பாளாம்.. கல்யாணத்தன்னைக்கு ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருப்பாளாம்.. அதுக்கடுத்த மூணுநாள் இங்கேயும் அங்கேயும் இருப்பாளாம்.. குடும்பத்தோட போகிற டூரைப் பத்தி பெருமை பீற்றிக்கறா.."

நந்தினியின் குரலில் தெரிந்த சன்னமான பொறாமையில் சங்கரலிங்கத்தின் மனம் வலித்தது.. கோடி கோடியாய் பணம் கொட்டிக் கிடந்து என்ன பண்ண..? அவருடை பேத்தியின் பிரியத்துக்கான இந்தத் தேடுதலை அவரால் நிறைவு செய்ய முடிகிறதா..?

'இப்ப என்ன செய்வது..?'

அவர் நிகல்காலச் சிக்கலைப் பற்றி யோசித்தார்.. சுவாதி ஒருத்திதான் நந்தினியைச் சுற்றி அரணாக நிற்கக் கூடியவள்.. அவளும் சங்கரலிங்கம் வெளியூருக்குப் போகும் அதே நாளில் வெளியூர் பயணத்தை மேற்கொள்ள வேண்டுமா..?

"சரிம்மா.. நீ காலேஜீக்குப் போ.."

"என்ன விசயம் தாத்தா..?"

"ஒன்னுமில்லைம்மா.. சும்மாதான் சுவாதி கூடப் போயிருக்கிறாயான்னு கேட்டேன்.."

"என்னைப் பத்திக் கவலைப்படவேணாம் தாத்தா.. நான் எங்கே இருக்கிறேன்..? நம்ம வீட்டிலதான இருக்கிறேன்.."

நமது வீடு என்பது பாதுகாப்பை அளிக்க வல்லது என்று நம்பும் அவளது பேதமையை குலைக்க மனம் வராமல் ஆமாம் என்ற பாவனையில் தலை அசைத்துச் சிரித்தார் சங்கரலிங்கம்..

நந்தினி கல்லூரிக்குப் போய் விட்டாள்.. நந்தினியைக் காவல் காக்கும் வேறு மார்க்கத்தைப் பற்றிய யோசனையுடன் சங்கரலிங்கம் அலுவலக அறைக்குள் போனார்.. லேப் டாப்பை உயிர்ப்பித்து அதிலிருந்த விவரங்களைப் படித்துக் கொண்டிருந்தார்.. அறையை ஒட்டிய செடியின் மறைவில் பேச்சுக்குரல் கேட்டது...

'யார்..?' புருவங்கள் நெரிய எழுந்து போய் பார்த்தார்..



அங்கே செல்போனை காதுக்கு கொடுத்து யாருடனோ பேசியபடி ரஞ்சித் நின்றிருந்தான்..

"இதெல்லாம் ஒரு கடனா கார்த்தி..? இதெல்லாம் எனக்கு ஜீஜிபிடா.. இன்னும் ஒருவாரத்தில ஐயாவோட ரேன்ஜே மாறப் போகுது.. என்னது.. பணமழை கொட்டப் போகுதாங்கறியா..? ஆமாண்டா ஆமாம்.. பண மழைதான் கொட்டப் போகுது.. லாட்டரி அடிக்கலைடா.. கொள்ளையும் அடிக்கலை.. ஒரு பெண்ணைக் களவாடப் போறேன்.. அப்புறம் என்ன.. டும்டும்தான்.. கெட்டி மேளம்தான்.."

"....."

"எக்ஸாட்லி.. நான் அவ்வளவு சுலபமா மாட்டிக்க மாட்டேன்தான்.. ஆனா இதில மாட்டிக்குவேன்.. இன்னும் சொல்லப் போனா.. இதில மாட்டிக்கனும்ங்கிறதுக்காகத் தானே களவையே நடத்தப் போறேன்..?"

"......"

"உனக்கு இது புரியாதுதான்.. இது ஒரு கணக்கு கார்த்தி.. இந்தக் கணக்கை ரொம்ப நாளா போட்டுக்கிட்டு இருக்கேன்.. நேரம் காலம்தான் கூடிவர மாட்டேன்னு அடம் பிடிச்சுக்கிட்டு இருந்தது.. இப்ப அப்படியில்லை.. நந்தி போல குறுக்கே நின்ன பெரிசு ஒன்னு கர்நாடகா பக்கம் காத்து வாங்கப் போகுது..."

"......"

"விளங்கச் சொல்ல முடியாதுடா.. எல்லாத்தையும் முடிச்சுட்டு வந்து கதைகதையாய் விளக்கம் சொல்றேன்..

இப்போதைக்கு இதை மட்டும் தெரிந்துக்க.. நோகாம நோன்பு கும்பிடறதுங்கிறது இதுதான் மச்சி.. அள்ளாம.. குறையாம.. அத்தனை சொத்து சுகமும் என்னைத் தேடிவரப் போகுது.. பார்த்துக்கிட்டே இரு.. நான் உச்சானிக் கொம்பிலே ஏறப் போறேண்டா..."

அதற்கு மேல் கேட்க முடியாமல் திரும்பிவந்து விட்டார் சங்கரலிங்கம்.. வேலையில் மனம் ஓடவில்லை.. ஆழ்ந்து சிந்தித்தவர் ஒரு முடிவுடன் வெளியே வந்து காரை எடுக்கச் சொன்னார்.. வீட்டை விட்டுக் கிளம்பிய கார் நேராக.. கம்பெனியில் போய் நின்றது.. சங்கரலிங்கம் காரை விட்டு இறங்கினார்.. கம்பெனிக்குள் நடந்தார்..

"நந்து.."

ஜெனரல் மேனேஜருடன் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் இருந்த நந்தகுமார் சங்கலிங்கத்தைக் கண்டதும் பதட்டத்துடன் எழுந்து வந்தான்...

"தாத்தா..?"

"எனிதிங்க் இம்பார்டண்ட்..?"

"யெஸ் தாத்தா.. கொஞ்ச நேரம் வெயிட் பண்ண முடியுமா..?"

பேரனின் வரவுக்காக காத்திருந்தார் சங்கரலிங்கம்.. நந்தகுமார் வந்தவுடன் பேச்சை ஆரம்பித்தார்..

"நந்தினியை சுவாதியின் பேமிலியோட வெளியூருக்கு அனுப்பலாம்ன்னு நினைச்சிருக்கேன்ப்பா.. உன்னிடம் ஒருவார்த்தை சொல்லிரலாம்ன்னு வந்தேன்.."



"வெளியூருக்கா..? எங்கே..? எதுக்கு..?"

"விருதுநகராம்ப்பா.. சுவாதியோட மாமா மகளின் கல்யாணமாம்.."

"அது அவங்க குடும்ப விசேசம் தாத்தா.. அதில கலந்துக்க நந்தினி போகனும்கிற அவசியமில்லையே.."

"எனக்கு அவசியம் நந்து.."

சங்கரலிங்கத்தின் குரல் வித்தியாசத்தில் அவன் துணுக்குற்றான்..

"என்னாச்சு தாத்தா..?"

'எதுவும் ஆகிவிடக் கூடாதுன்னுதான் அவளை ஊர் விட்டு ஊர் கடத்தறேண்டா பேராண்டி..' துயரத்துடன் மனதுக்குள் நினைத்துக் கொண்டார் அவர்..

இது கொடுமை.. விவரம் இதுதான் என்று சொன்னால் பேரனின் திருமண வாழ்வு உடைந்து விடும்.. சொல்லாமல் இருந்தால் பேத்தியின் வாழ்வு சிதில மடைந்து விடும்..

இரண்டையும் காப்பாற்ற வேண்டுமானால் அவர்தான் எதையாவது செய்தாக வேண்டும்..

"உனக்கே தெரியும்.. நந்தினி ரொம்பத் தனிமையா ஃபீல் பண்றான்னு.."

"அதைத்தான் ரூபாவும் சொல்றா தாத்தா.. ரூமுக்குள்ளேயே அடைந்து கிடந்தா தனிமையுணர்வு வரத்தானே செய்யும்..?"

"வெளியில் வந்துட்டா மட்டும் ரூபா அவளிடம் கலகலப்பா பேசிப் பழகிருவாளா..?" சுருக்கென்று கேட்டு விட்டார் சங்கரலிங்கம்..

"தாத்தா.."

"வேண்டாம் நந்து.. நான் எதையாவது சொல்லிருவேன்.. எதுக்கு வீண்வம்பு.. விட்டுவிடு.. நந்தினி கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.. இவ வயசில இருக்கிற பெண்கள் சிரிப்பும்.. கலகலப்புமா இருக்கிறப்ப.. இவ மட்டும் சாப்பிடக்கூட ரூமை விட்டு வெளியே வராம இருக்கனும்னா அது அவள் வாங்கி வந்த வரம்.."

"என்னை என்னதான் செய்யச் சொல்கிறிங்க தாத்தா..?"

"எதையும் செய்ய வேணாம்.. நல்ல வேளை.. நந்தினியைப் பிரியத்துடன் பார்த்துக்கிற மாதிரியான பிரண்ட் ஒருத்தி அவளுக்குக் கிடைச்சிருக்கா.. அவளைப் பெத்தவங்களும் நந்தினியை பெற்ற பெண்ணைப் போலப் பார்த்துக்கிறாங்க.. வீடு.. காலேஜ்ன்னு ஒரு வட்டத்துக்குள்ளேயே சுற்றிக்கிட்டு இருக்கிற பொண்ணு.. ஒரு வாரத்துக்கு கல்யாண வீட்டில கலகலப்பா இருந்துட்டு வரட்டுமே..."

"வருசாவருசம் அவங்க குடும்பத்தோட நந்தினியை ஊட்டி கொடைக்கானல்ன்னு சம்மர் ஹாலிடேஸில அனுப்பி வைப்பீங்க.. நான் எதையும் சொல்றதில்ல.. சொன்னாலும் நீங்க கேட்டுக்க மாட்டிங்க.. அப்படிங்கிறது வேற விசயம்..



அங்கே நமக்குன்னு ரிசார்ட்ஸ் இருக்குது.. நாம சம்பளம் கொடுக்கிற வேலையாள்கள் இருக்காங்க.. பேசாம விட்டுட்டேன்.. இது அப்படியில்லை.. அவங்க ரிலேடிவ் வீட்டுக்கு கல்யாணத்துக்கு அவங்க போகப் போகிறாங்க.. ஒரு வாரத்துக்கு தங்கப் போகிறாங்க.. அதுல கலந்துக்க நம்ம வீட்டுப் பெண்ணையும் அவங்க குடும்பத்தோட அனுப்பி வைக்கனும்னு நீங்க சொல்கிறது நியாயமா தாத்தா..? எனக்கென்னவோ இது சரியாப் படலை தாத்தா.."

'எதுதான் இப்பச் சரியாயிருக்கு..?'

ரஞ்சித்தின் நினைவில் சங்கரலிங்கத்தின் நரைத்த மீசை துடித்தது.. அவனையெல்லாம் வைக்க வேண்டிய இடத்தில் வைத்தால் இதைப் போன்ற பேச்சுக்களைப் பேசும் துணிவு அவனுக்கு வருமா..?

ரூபா அந்த வீட்டுக்கு மருமகளாக வந்த பின்னால் யாரை எங்கே வைப்பது என்று அவளாக முடிவு செய்து விட்டாளே.. அதற்குப் பின்னால் அவரின் மீசை துடித்து ஆகப் போவதென்ன..?

"எனக்கு இதுதான் சரியாப் படுது நந்து.." தீவிரமான குரலில் அவர் சொன்னார்..

"ப்ம்ச்.. என்ன தாத்தா நீங்க.."

நந்தகுமார் எவ்வளவோ ஆட்சேபித்து பார்த்து விட்டான்.. சங்கரலிங்கம் ஒரே பிடிவாதமாக நந்தினியை சுவாதியின் குடும்பத்துடன் விருதுநகருக்கு அனுப்பியே தீருவேன் என்று சொல்லிவிட்டார்..

"என்னவோ செய்ங்க.."

அரைமனதாக மறைமுக ஒப்புதலை நந்தகுமார் அளித்ததும் எழுந்து கொண்டவர் பேரனை அழமாகப் பார்த்து...

"நந்து.. இந்த விவரத்தை ரூபாவிடம் சொல்ல வேண்டாம்.." என்றார்..

நந்தகுமாரின் முகம் மாறிப் போனது.. எதனால் சங்கரலிங்கம் அந்த எச்சரிக்கையை விடுத்தார் என்று ஓரளவிற்கு அவனுக்குப் புரிந்து போனதில்...

"இதற்காகவா தாத்தா அவளை வெளியூருக்கு அனுப்பி வைக்கறிங்க.., அண்ணன்னு ஒருத்தன் எதுக்கு இருக்கேன்..?" என்று வெகுண்டான்..

"ஸ்ஸ்ஸ்.. நந்து.. அடக்கி வாசி.. இப்ப என்னவாகிப் போச்சு..? நந்தினியை அவ பிரண்ட் குடும்பத்தோட வெளியூருக்கு அனுப்பி வைக்கப் போகிறோம்.. இதில நந்தினிக்கு சந்தோசம்ன்னா.. நாமளும் சந்தோசப்படனும்.. அதை மட்டும் நினை.. வேற நினைப்பு வேண்டாம்..."

"ஆனாலும் தாத்தா..."

"உனக்க பெண் குழந்தை இருக்கு நந்து.. அதுக்கு பெற்ற தாயின் கவனிப்பு ரொம்பவும் அவசியம்.. நீயும் ரூபாவும்.. கிழக்கு மேற்காய் பிரிஞ்சு நின்னா.. அந்தக் குழந்தையின் நிலைமை என்னவாகும்ன்னு நினைச்சுப் பாரு.. பொறுத்துப் போ நந்து.."



"எது வரைக்கும் தாத்தா..?"

"நந்தினியின் கல்யாணம் முடிகிற வரைக்கும்.. அதுக்குப் பின்னாலே உனக்கும் ரூபாவுக்கும் இடையிலே எந்தப் பிரச்னையும் வராது.."

"நந்தினி பிரச்னையா தாத்தா..? அவ சொக்கத் தங்கம்..."

"அது உனக்கும் எனக்கும் தெரியுது.. ரூபாவுக்குத் தெரியலையே.."



## 10

கிழக்கு மேற்கா பிரிஞ்சு போனா..
வழக்குத்தானே எண்ணிப்பாரு..
ஒருவர் மனசை ஒருவர் புரிஞ்சா..
இறுதி வரைக்கும் நிலாச்சோறு..

நந்தகுமாருக்கு வருத்தமாக இருந்தது.. அவன் நந்தினியின் மீது பாசம் வைத்திருந்தான்.. அவனைப் பெற்றவர்களுக்கு அவனும்.. நந்தினியும் மட்டும்தான் என்பதை நினைவில் வைத்திருப்பவன்.. அவர்களின் மறைவுக்குப் பின்னால்.. ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டிய அண்ணனும்.. தங்கையும் அவர்கள் என்ற உண்மையினை உணர்ந்தவன்.. பெற்றவர்களின்

ஸ்தானத்தில் இருந்து தங்கையைக் காப்பாற்ற வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது என்ற பொறுப்புணர்ச்சி மிக்கவன்..

அவனுக்கும் நந்தினிக்கும் இடையில் பத்து வயது வித்தியாசம் இருந்தது.. அவனால் அவளிடம் தோழனாக பழகவும் முடியவில்லை... கண்டிப்பைக் காட்டும் அண்ணனாக ஒதுங்கி நிற்கவும் முடியவில்லை..

வயது வித்தியாசம் அதிகமிருந்ததில் நந்தினியின் திருமணத்திற்காக தாமதிக்க முடியாமல் உரிய வயதில் திருமணம் பண்ணிக் கொள்ள வேண்டிய அவசியம் நந்தகுமாருக்கு ஏற்பட்டு விட்டது.. இல்லாவிட்டால் அவன் நந்தினியை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட்டுத்தான் தன் வாழ்க்கையைப் பற்றி யோசித்திருப்பான்...

அவனும் ரூபாவிடம் சொல்லிப் பார்த்து விட்டான்.. அவள் கேட்ட பாடாக இல்லை.. அவன் கொஞ்சினாலும்.. கெஞ்சினாலும்.. இந்த ஒன்றில் மட்டும் அவள் பிடித்த பிடியில் நிலையாக நின்றாள்.. மற்றவற்றில் நந்தகுமார் சொன்னதும் கேட்டுக் கொள்கிறவள் நந்தினியென்று வரும் போது அசைந்து கொடுக்க மறுத்துவிட்டாள்...

எதனால் ரூபாவினால் நந்தினியிடம் அன்பு பாராட்ட முடியவில்லையென்று அவனுக்கு அதுநாள்வரை புரியவே இல்லை.. நந்தினி போன்ற மென்மையான குணம் படைத்த ஒருத்தியிடம் யாராவது பகைமை பாராட்டுவார்களா..?



ரூபா அதைச் செய்தாள்.. அவளுக்கு நந்தினியைக் கண்டாலே ஆகவில்லை.. அந்த நிலைமையில் நந்தகுமாரால் சங்கரலிங்கத்தின் யோசனைக்கு மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை..

"சரி நந்து.. நான் கிளம்பறேன்.. பார்க்க வேண்டிய வேலை நிறைய இருக்கு..."

"ஆகட்டும் தாத்தா..."

சங்கரலிங்கம் வெளிவேலைகளை முடித்து விட்டு வீட்டுக்குப் போனார்.. நண்பகல் உணவை டைனிங் ஹாலில் வெட்டிக் கொண்டிருந்த ரஞ்சித்தும்.. அவனுக்கு பிரிமாறிக் கொண்டிருந்த ரூபாவும் தாழ்ந்த குரலில் எதையோ பேசிவிட்டு உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்..

'எப்படியிருந்த வீடு..'

சங்கரலிங்கத்தின் பார்வை ஹாலில் மாட்டப் பட்டிருந்த யாமினியின் புகைப்படத்தின் மீது படிந்தது.. அவள் நந்தினியைப் போன்றவள்.. அதிர்ந்து பேச மாட்டாள்.. அப்படிப்பட்டவளின் மருமகள் தான் இன்று வீட்டை இரண்டு பண்ணிக் கொண்டிருக்கிறாள்..

"சாப்பிட வர்றீங்களா பெரியப்பா..?"

பூங்கொடியின் பணிவான அழைப்பில் திரும்பிப் பார்த்த ரூபாவின் சிரிப்பு மறைந்தது.. அவள் பார்வையில் ரஞ்சித்தும் சிரிப்பதை நிறுத்தினான்..

"வாங்க தாத்தா.. சாப்பிடலாம்.." ஒப்புக்கு அழைத்தாள் ரூபா..

'வேலைக்காரப் பெண்ணுக்கு இருக்கும் பொறுப்புணர்வு கூட வீட்டுக்கு வந்த மருமகளிடம் இல்லையே...' வேதனையுடன் மறுப்பாக தலையசைத்தார் சங்கரலிங்கம்..

"நான் சாப்பிட நேரமாகும்மா.. நீ உன் அண்ணனைக் கவனி.." குத்தலாகக் கூறிவிட்டு படியேறியவரை வாய்க்குள் திட்டித் தீர்த்தாள் ரூபா...

"உள்குத்துக் கொடுத்தாகுது... பெரியவருக்கு இருக்கிற குசும்பைப் பாரேன்.."

ரூபாவின் வாய் மட்டும் அசைந்து வார்த்தைகள் காதுக்கு கேட்காததில் ரஞ்சித் உன்னிப்பாக அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்..

"என்னம்மா சொல்ற...?"

"எதுவுமில்லண்ணா.. நீ சாப்பிடுகிற வழியைப் பாரு.."

"எதையோ சொன்னதைப் போல இருந்ததே.."

"தெரிஞ்சு என்ன செய்யப் போற..?"

ரூபா வெடுக்கென்று பேசியதில் தழைந்து போன ரஞ்சித்.. சாப்பிடுவதைத் தொடர்ந்தான்.. அவன் மனம்..

'இருக்கட்டும்.. இவ நாத்தனா கழுத்தில தாலியைக் கட்டினதும் நான் யாருன்னு காண்பிச்சுக்கலாம்.. அது வரைக்கும் அடக்கித்தான் வாசிக்கனும்..' என்று சொல்லிக் கொண்டது..

மதிய உணவுக்கு சங்கரலிங்கம் வந்தபோது டைனிங் ஹால் வெறிச்சோடிக் கிடந்தது.. பூங்கொடி பரிமாற



சாப்பிட்டு முடித்தவர் அறைக்குச் சென்று கண்ணயர்ந்தார்.. சிறிது நேரம் ஓய்வுக்குப் பின் கண் விழித்தவர்.. எழுந்து தயாராகி வாசலுக்கு வந்தார்.. நந்தினியை கல்லூரியில் இருந்து அழைத்துக் கொண்டு வருவதற்காக கிளம்பிய காரில் ஏறிக் கொண்டார்...

வகுப்பு முடிந்து அரட்டையடித்தபடி வந்து சேர்ந்த நந்தினியும் சுவாதியும் சங்கரலிங்கத்தை காருக்குள் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்..

"ஹாய் தாத்தா.. இந்த வயசில காலேஜ் பக்கம் வந்திருக்கீங்க.. என்ன விசயம்..?" என்று கேட்ட சுவாதி நந்தினியிடம் அடி வாங்கினாள்..

"கொன்றே போட்டிருவேன்.. யார்கிட்ட கேலி பேசறதுன்னு விவஸ்தை வேணாம்..? அடங்குடி.."

காருக்குள் ஏறிக் கொண்டவள் கவலையுடன் அவர் முகம் பார்த்து..

"என்ன தாத்தா..?" என்று வினவினாள்..

"ஒன்னுமேயில்லைம்மா.. சும்மா.. சுவாதி வீட்டுப் பக்கமா போய் வரலாம்ன்னு தோனுச்சு.. போகிறவழியில் உங்களையும் கூப்பிட்டுக்கிட்டுப் போகலாம்ன்னு இங்கே வந்தேன்.. வேற ஒன்னுமேயில்லை.."

"ஹை.. எங்க வீட்டுக்கு வர்றீங்களா தாத்தா.. நிஜமாகவா..?" சுவாதி குதூகலித்தாள்..

அதுநாள்வரை சுவாதியின் வீட்டுக்கு சங்கரலிங்கம் வந்ததில்லை.. நந்தினியும்.. சுவாதியும் தான் இருவரின்

வீடுகளுக்கும் மாறிமாறி போய் வருவார்கள் தவிர.. இரண்டு குடும்பங்களும் பேசிப் பழகினதில்லை..

ஊட்டி... கொடைக்கானலுக்கு சுவாதியின் குடும்பத்தோடு நந்தினி அனுப்பி வைக்கப்பட்டாலும் அதைப்பற்றிய விவரங்களை நந்தினியின் வீட்டிற்கு வந்து சங்கரலிங்கத்திடம் சுவாதிதான் கேட்டுக் கொள்வாள்..

அப்படிப்பட்ட சங்கரலிங்கம் முதன் முதலாக சுவாதியின் வீட்டுக்கு வரப் போவதாக சொல்லியதில் சுவாதி மகிழ்ந்து விட்டாள்... செல்போனை எடுத்து ரங்கநாதனுக்கும்.. சித்ரலேகாவுக்கும் தகவல் சொல்லியும் விட்டாள்..

சங்கரலிங்கம் காரை விட்டு இறங்கும் போதே வாசலுக்கு வந்து வரவேற்றார் ரங்கநாதன்.. சித்ரலோகவோ காபியும் பலகாரமுமாக காத்திருந்தாள்...

அந்த வீட்டில் தெரிந்த உயிர்ப்பிலும்.. கலகலப்பிலும்.. எதற்காக நந்தினி அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போகிறாள் என்பதை சங்கரலிங்கத்தால் புரிந்து கொள்ள முடிந்தது..

அவள் வீட்டில் கிடைக்காத குடும்பச் சூழலை சுவாதியின் வீட்டில் அவள் தேடியிருக்கிறாள்..

"வீடு அழகாவும்.. அமைதியாகவும் இருக்கு.."

சங்கரலிங்கத்தின் வார்த்தையில் ரங்கநாதனும்.. சித்ரலேகாவும் வியந்து போனார்கள்.. நந்தினியின் மாளிகை போன்ற வீட்டின் போர்டிகோவின் அளவில்



இருக்கும் அவர்களின் வீட்டில் அழகும்.. அமைதியும் குடியிருக்கிறதா..?

வீடு என்பது எது..? குத்துவிளக்கின் சுடர் தரும் அமைதியையும் நெகிழ்வையும் நம் மனதுக்குள் தருவது.. அதன் ஒவ்வொரு செங்கல்லும் கதை பேசும்.. அது பேசும் கதையை உணர்பவரால் மட்டுமே அந்த வீட்டிற்கான உயிர்ப்பைக் கொடுக்க முடியும்...

நந்தினி வீட்டை நேசிப்பவள்.. ரூபாவோ அதை ஒரு சொத்தாக மட்டுமே பார்ப்பவள்.. ரூபாவின் வரவுக்குப் பின்னால் வீடு.. வீடாக இல்லாத நிலையில் நந்தினி சுவாதியின் வீட்டில் அடைக்கலமாக மாட்டாளா..?

"உங்க வீட்டுக்கு முன்னாலே இந்த வீடு நிற்கக் கூட முடியாது சார்.."

"இல்லை ரங்கநாதன்.. வீடுங்கிறது அதனோட பரப்பளவில் இல்லை.. அதில் வாழ்கிற மனுசங்களின் பரந்த மனசில்தான் இருக்கு.. அந்த வகையில் உங்க வீட்டுக்கு இணையில்லை..."

எவ்வளவு பெரிய மனிதர்..! அவர்களின் வீட்டுக்கு வந்து.. அவர்களுடன் சரிசமமாக உட்கார்ந்து உரையாடி.. அவர்கள் கொடுத்ததைச் சாப்பிட்டு.. அவர்களின் வீட்டையும் புகழ்ந்து பேசுகிறார்...

ரங்கநாதனும் சித்ரலோகவும் மகிழ்ந்து போனார்கள்..

"அடுத்தவாரம் குடும்பத்தோட உங்க பேமிலி பங்சனுக்கு போறிங்களாமே.." சங்கரலிங்கம் பேச்சை ஆரம்பித்தார்..

"ஆமாங்க.. லேகாவோட அண்ணன் மகளுக்கு கல்யாணம்.. இவ அவருக்கு ஒரே தங்கை... எல்லா வேலைகளிலயும் இவதான் முன்னே நின்னாகனும்.." ரங்கநாதன் சித்ர லேகாவைப் பார்த்துக் கொண்டார்...

"நானும் அடுத்த வாரத்தில கர்நாடகா வரை போய் வர வேண்டியிருக்கு.."

"அப்படிங்களா..?"

ரங்கநாதன் திரும்பவும் ஒருமுறை மனைவியைப் பார்த்துக் கொண்டார்..

இதையெல்லாம் எதற்காக வேலை மெனக்கெட்டு அவரிடம் வந்து சங்கரலிங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்ற விவரம் அவர்களுக்கு பிடிபடவில்லை..

"அதில பாருங்க.. ரூபாவோட பிறந்த வீட்டிலயும் ஏதோ விசேசமாம்.."

"அப்படிங்களா..?" மூன்றாம் முறையாக மனைவியை பார்த்து வைத்தார் ரங்கநாதன்..

"நந்துவும் ரூபாவும் ரூபாவோட ஊருக்குப் போயாகனும்.. நந்தினி அவங்ககூட போக முடியாது.. என்னதான் நந்துவோட மாமனார் வீடாக இருந்தாலும்.. வயதுப் பெண்ணை சம்பந்தகாரங்க வீட்டுக்கு அனுப்பி வைக்கிறது முறையில்ல..."

சங்கரலிங்கத்தின் பேச்சில் ஏதோ புரிவதைப் போலத் தோன்றியதில்..



"ஆமாமாம்.." என்று தலையாட்டி வைத்தார் ரங்கநாதன்..

"வீட்டில கூர்க்கா இருக்கான்.. டிரைவர் இருக்கான்.. தோட்டக்காரன் இருக்கான்.. மத்த வேலையாளுகளும் இருக்காங்க.. ஆனா வீட்டு மனுசங்கன்னு யாருமில்லாம நந்தினியை மட்டும் தனியா விட்டுட்டுப் போறதுங்கிறது சரிப்பட்டு வருமா..?"

"வராதுதான்.." பூம்பூம் மாடாக ரங்கநாதன் ஆனார்..

"அதனால எனக்கென்னு தோணுது.."

"என்னங்க..?"

ரங்கநாதன் புருவங்கள் முடிச்சிட சங்கரலிங்கத்தின் முகத்தையே உற்றுப் பார்த்தார்.. பவ்யமாக மடிந்து அமர்ந்து அவர் பார்த்த விதத்தைக் கண்ட சித்ரலேகாவிற்கு சிரிப்பு வந்து தொலைத்தது.. வராத பெரிய மனிதர் வீடு தேடி வந்திருக்கும் போது.. வந்து தொலைத்து விட்ட சிரிப்பை சிரித்து வைக்கக்கூடாது என்று அதைத் துரத்தி விட்டு நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தையை பார்வையிட ஆரம்பித்தாள்...

"பேசாம.. அடுத்த வாரம் நீங்க ஊருக்குப் போகிறப்ப நந்தினியையும் உங்ககூட கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டு வந்துருங்களேன்.."

சங்கரலிங்கத்தின் பேச்சில் நந்தினி சந்தோசமாகி

"தாத்தா.." என்று அவர் தோள் சாய்ந்து கொண்டாள்..

"குட் ஐடியா.. வெல் செட் தாத்தா.. கை கொடுங்க.." சுவாதி அவரின் கையைப் பற்றிக் குலுக்கினாள்..

"அதுக்கென்னங்க.. நந்தினியை எங்ககூட அழைச்சுக்கிட்டுப் போறோம்.. எங்களுக்கு நந்தினி வேற.. சுவாதி வேறன்னு இல்லை.. பத்திரமா பார்த்துக்குவோம்.. எங்களை நம்பி அனுப்பலாம்..."

அவ்வளவு பெரிய மனிதர் வீடு தேடி வந்து அவரின் பேத்தியின் பொறுப்பை ஒரு வாரத்திற்கு ஒப்படைத்ததில் ரங்கநாதனுக்கு தலைகால் புரியவில்லை.. மனதார வாக்குறுதி தந்தார்..

"நல்ல வேளையாய் நீங்க இதைச் சொன்னீங்க.. எங்க வீட்டுக் குட்டிக் குரங்கு எப்படி என் பிரண்டை விட்டுட்டு வருவேன்னு ஒருவாரமா சத்யாக்கிரகம் பண்ணிக்கிட்டு இருந்தா.. என் அண்ணன் மக கல்யாணத்துக்கு வர இவ்வளவு பிகு பண்ணிக்குவியான்னு எனக்கு இவளுக்கும் ஒரே சண்டை... நந்தினியையும் நீங்க அனுப்பி வைக்கிறதில இவ வாயைத் திறக்காம கூட வருவா.. நானும் பிழைத்தேன்.." சித்ரலேகா செல்லமாக மகளின் தலையில் குட்டினாள்..

வெகு இயல்பாக அவர்கள் நந்தினியை தங்களின் குடும்பத்தில் ஒருத்தியாக உள் வாங்கிக் கொண்ட விதத்தில் நெகிழ்ந்து போனார் சங்கரலிங்கம்...

"ரொம்ப நன்றி.. நான் நந்தினிக்காக அவ காரையும்.. டிரைவரையும் அனுப்பி வைக்கிறேன்.."



சங்கரலிங்கம் சொன்னபோது ரங்கநாதன் அதை ஆட்சேபித்தார்...

"நீங்க பெரியவங்க.. தப்பாய் எடுத்துக்கக் கூடாது.. நந்தினி எங்க வீட்டுப் பெண்ணா.. எங்களோட கலந்து இருக்கட்டும்.. நாங்க டிரெயினில் போனா டிரெயினில் வரட்டும்.. ஆட்டோவில போனா ஆட்டோவில வரட்டும்.. அதுதான் நமக்கு நல்லது.. நாங்க நாங்களா இருக்கனும்னு நினைக்கிறோம்.. ஊட்டி.. கொடைக்கானல் வேற.. சொந்த பந்தம் வேற.. அங்கே உங்க காரை நாங்க உபயோகப் படுத்திக்கலாம்.. ஊருப் பக்கம் போனா.. அதைச் செய்ய முடியாது.. புரிந்துக்குவீங்கன்னு நினைக்கிறேன்.."

சங்கரலிங்கத்திற்கு புரிந்தது.. நந்தினியின் வசதிக்காக என்று நினைத்து ரங்கநாதனிடம் இந்தக் கேள்வியை கேட்டு விட்டோமே என்று சங்கடப்பட்டுப் போனார்.. அதை உணர்ந்து அவர் பேச யத்தனிக்கையில் ரங்கநாதன் முந்திக் கொண்டார்...

"நீங்க நந்தினியின் வசதிக்குன்னு பார்த்திருப்பீங்க.. கவலைப்படாதீங்க... தேவைப்பட்ற இடத்தில நான் டாக்ஸியைத்தான் பிடிப்பேன்.. அவளுக்கு எந்த சௌகர்யக் குறைவும் வராது.."

"தப்பா எடுத்துக்காதீங்க ரங்கநாதன்.."

"இதில தப்பா எடுத்துக்க எதுவுமே இல்லை சார்.. இது நேச்சுரல்.. சுவாதியை உங்க குடும்பத்தோட ஊருக்கு அனுப்பி வைத்தா நானும் கவலைப் படுவேன்தான்.. கவலைகள் வித்தியாசமான நோக்கத்தோட இருக்கலாம்..

கவலையின் அடிப்படை நம்ம வீட்டுப் பிள்ளைகளோட வசதியும்.. பாதுகாப்பும் தானே..."

இதனால்தான் நந்தினி இந்த வீட்டுடன் இசைந்து பழகுகிறாள் என்று சங்கரலிங்கத்திற்கு தோன்றியது.. நந்தினியைப் பார்த்தார்.. அவள் சுவாதியுடன் ரகசியக் குரலில் பேசிக் கொண்டிருந்தாள்.. அவள் முகத்தில் பரவியிருந்த வெளிச்சத்தைப் பார்க்கும் போது அவருக்கு நிம்மதியாக இருந்தது..

பேத்தியுடன் வீட்டுக்குப் போனபோது அவர் மனதிலிருந்த சஞ்சலம் அகன்றிருந்தது.. போர்டிகோவில் நந்தினியின் வரவை எதிர்பார்த்து திருட்டுப் பூனைபோல நின்றிருந்த ரஞ்சித்... நந்தினியுடன் வந்த சங்கரலிங்கத்தைக் கண்டதும் அவசரமாக போனை காதுக்கு கொடுத்தபடி தோட்டத்துப் பக்கமாக ஓடி விட்டான்..

'நாய்...!'

அந்தத் திருட்டுப் பூனைக்கு நாய் என்ற பெயரை வைத்து பல்லைக் கடித்துக் கொண்டார் சங்கரலிங்கம்..

வழக்கம்போல இரவு உணவு நந்தினியைத் தேடி மாடியறைக்குச் சென்றுவிட சங்கரலிங்கம் மட்டும் டைனிங் ஹாலுக்குச் சென்றார்.. அங்கே ரஞ்சித்துக்கு பரிமாறிக் கொண்டிருந்த ரூபா அவரைக் கண்டதும் வியப்புடன் புருவங்களை உயர்த்தினாள்..

வழக்கமாக அவளிருந்தால் டைனிங் ஹாலின் பக்கம் அவர் வரமாட்டார்.. வழக்கமில்லாத வழக்கமாக வந்தவரைப் பார்த்து வரவழைத்துக் கொண்ட புன்சிரிப்புடன்..



"சாப்பிடுங்க தாத்தா.." என்றாள்...

"பூங்கொடி.." சங்கரலிங்கம் அழைத்தார்..

"ஐயா.." அவள் ஓடிவந்தாள்..

"டிபனைப் போடும்மா.."

"இதோங்கய்யா.."

பூங்கொடி பரபரப்புடன் சங்கரலிங்கத்தின் முன்னால் தட்டை வைத்து அவசரகதியில் பரிமாற ஆரம்பித்தாள்.. எதிரே அமர்ந்திருந்வனை துச்சமான துளைக்கும் பார்வையொன்றை பார்த்து வைத்தார் சங்கரலிங்கம்.. அந்தப் பார்வையில் ரஞ்சித்தின் தொண்டையில் சிக்கிக் கொண்ட உணவு கீழே இறங்க மறுத்தது.. சங்கரலிங்கத்தின் முன்னால் அமர்ந்து சாப்பிட முடியாமல் அவன் தவித்தான்..

"இன்னொரு சப்பாத்திய வைக்கவாண்ணா..?" ரூபா தேனொழுகும் குரலில் கேட்டாள்..

சங்கரலிங்கம் நிமிர்ந்து பார்த்த பார்வையில் ரஞ்சித் அதை வேண்டாமென்று மறுத்துவிட்டான்.. இந்தப் பெரியவரை யார் இங்கே வந்து சாப்பிடச் சொன்னது என்று ரூபா மனதுக்குள் வெகுண்டாள்.. அரைகுறைச் சாப்பாட்டுடன் ரஞ்சித் ஓடிவிட... 'அஃது' என்ற பார்வையுடன் சங்கரலிங்கம் நிதானமாக உணவை ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்..

ரூபாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. ஒரேயொரு பார்வையிலே ரஞ்சித்தை விரட்டி விட்ட அவரின் அந்த

சக்தியில் அவளது கோபம் அதிகரித்தது.. அப்பேற்பட்ட சக்திமான் அவளை மதிக்காமல் நந்தினியைச் சீராட்டுவதில் அவளுடைய ரத்த அழுத்தம் எகிறியது..

'இதெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு செல்லபடியாகும்ங்கிறதை நானும் பார்த்து விடுகிறேன்..'

மனதுக்குள் அவள் சூளுரைத்தாள்.. நந்தினியை விட்டு அகலாமல் அடைகாக்கும் சங்கரலிங்கம் ஒரு வாரத்துக்கு வெளியூர் செல்லப் போகிறார்.. அவர் திரும்பி வரும்போது நந்தினி ரஞ்சித்தை திருமணம் செய்து கொள்ளும் முடிவுடன் தான் இருப்பாள்.. அந்த முடிவை ரஞ்சித் எடுக்க வைத்திருப்பான்..

'அப்போ இந்தப் பெரியவர் என்ன செய்வார்ன்னு பார்க்கிறேன்...'

பாவம் ரூபா.. அவளால் அந்தக் காட்சியைப் பார்க்க முடியாமல் போய் விட்டது.. அதற்குப் பதிலாக சங்கரலிங்கம் கிளம்புவதற்கு ஒருநாள் முன்னதாகவே நந்தினி சுவாதியுடன் விருதுநகருக்கு கிளம்பிச் செல்வதைத் தான் அவளால் பார்க்க முடிந்தது..



# 11

நிலாச்சோறை உண்பதற்கு
நிம்மதியே மனதில் வேண்டும்..
எட்டாத வான் நிலவினைப்போல்-அது
எட்டிப் போனால் நான்என்ன செய்வேன்..?

"ஏ.. மகேஸ்வரி காபி குடிச்சிட்டியா..?"

"அது அப்பவே ஆச்சுமாமா.."

"சுகந்தி.."

"உங்களுக்கு முன்னாலேயே எனக்குத்தான் காபி வந்தது சித்தப்பா.."

"பாஸ்கரா.. காபி குடிப்பா.."

"மதினி அப்பவே கொண்டு வந்து கொடுத்துட்டுப் போயிருச்சுண்ணே..."

குழுமியிருந்த உறவினர்களை அம்பலவானன் உபசரித்துக் கொண்டிருக்கும் ஓசையில் கண்விழித்தாள் நந்தினி.. அவளுக்கும் சுவாதிக்குமான அந்த அறைக்கு வெளியேயிருந்த மாடிஹாலில் வரிசையாக ஜமுக்காளங்களை விரித்து படுத்திருந்த உறவினர்களுக்கு காபி பரிவர்த்தனை நடந்து கொண்டிருந்தது.. இதமான

குளிர்காற்று உடல் தழுவ.. இங்கே ஏஸி இல்லையே என்ற யோசனையுடன் ஜன்னலைப் பார்த்தாள்.. பெரிய ஜன்னல்களின் வழி உள்ளே வந்த இயற்கையான தென்றல் காற்றில் அவள் முகம் விகசித்தது.. வெளிச்சமில்லாத இருளை ஜன்னல் உணர்த்தியதில் அவள் குழப்ப மடைந்தாள்..

'இன்னும் விடியலைன்னா வெளியே எப்படி காபிக் குடிச்சுக்கிட்டு இருக்கிறாங்க..?'

குழப்பத்தைத் தீர்த்துக் கொள்ள செல்போனை எடுத்து அழுத்தினாள்.. அது அதிகாலை ஐந்துமணி ஒரு நிமிடம் என்றது..

'இவ்வளவு சீக்கிரத்தில இவங்க எழுந்துக்குவாங்களா..?'

"கல்யாண வீடுன்னா அப்படித்தான்.."

புரண்டு படுத்து கண்இமைகளைத் திறக்காமலே அவள் கையிலிருந்த செல்போனை வாங்கி அருகிலிருந்த ஷெல்பில் வைத்தபடி சொன்னாள் சுவாதி..

"முழிச்சுக்கிட்டியா..?"

"ஊஹீம்.. தூங்கிக்கிட்டு இருக்கேன்.. நீயும் தூங்கு.."

"வெளியே எல்லோரும் விழிச்சுக்கிட்டாங்க போல இருக்கேடி.."

"அவங்களுக்கு வேலையிருக்கும்.. நீயும் நானும் என்ன வெட்டியா முறிக்கப் போறோம்..? தூங்கு.. தூங்கு.."

"மத்தவங்க வேலை செய்கிறப்ப நாம மட்டும் தூங்கினா அது நல்லாயிருக்குமா சுவாதி..?"



"யாருக்குடி தெரியும்..? வேணும்னா ஒன்னு செய்யலாம்.. நீ தூங்கும் போது நான் போட்டோ எடுக்கிறேன்.. நான் தூங்கறப்ப நீ போட்டோ எடு.. நல்லாயிருக்கா.. இல்லையான்னு பார்த்துரலாம்..."

"எல்லோருக்கும் காபி கொடுத்துக்கிட்டு இருக்காங்க சுவாதி.."

"நமக்கும் கிடைக்கும்.. அலட்டிக்காம தூங்கு.. தூங்க விடு.."

"ஏய்.. அவங்க முழிச்சிட்டாங்கடி.."

"அது அவங்க தலைவிதி.. நம்ம தலைவிதியில்லை.."

"எல்லோரும் முழிச்சுக்கிட்டு ஏதாவது ஒரு வேலையைச் செய்துக்கிட்டு இருக்கிறாங்க.. சுவாதி.."

"அதெல்லாம் மத்தவங்களுக்கு.. நமக்கில்ல.."

சுவாதி சீரான சுவாசத்துடன் உறக்கத்துக்கு திரும்பி விட்டாள்.. நந்தினிக்கு அது ஓடியே போய் விட்டதால் எழுந்து ஜன்னலருகே சென்று பார்த்தாள்.. விடியாத அந்த விடியலின் கருமையில் அவள் மனம் லயித்தது...

பறவைகளின் ஒலி கேட்கவில்லை.. இன்னும் அவை எழுந்து கொள்ளவில்லைபோல என்று அவள் நினைத்துக் கொண்டாள்.. பறவைகளுக்கு முன்பாகவே கண் விழித்து விட்ட அந்தக் கல்யாணவீட்டின் கலகலப்பில் அவள் மனம் நனைந்தது..

இதுபோன்ற பரபரப்பை அவள் வாழ்வில் அவள் பார்த்ததில்லை.. நந்தகுமாரின் திருமணத்தின் போது

திருமண மண்டபத்தில் அந்த கலகலப்பை உணர்ந்தாலும்.. அவை ஓரிரண்டு தினங்கள் மட்டுமே நீடித்தன.. தன்னைச் சுற்றியிருந்த உறவினர் கூட்டத்துடன் நந்தினி இணைவதை ரூபா விரும்பவில்லை என்பதை அவள் முகக் குறிப்பி- லிருந்து உணர்ந்து கொண்ட நந்தினி தன்னை விலக்கி நிறுத்திக் கொண்டு பழைய தனிமைக்கு தன்னை பழக்கப் படுத்திக் கொண்டாள்..

*"கல்யாணச் சாப்பாடு போடவா..*
*தம்பி..! கூட வா..*
*இந்த ஊருக்கெல்லாம்..*
*பாக்கு வைச்சு..*
*மேளம் கொட்ட வா..?"*

மாடி ஹாலின் டிவியில் சிடி ஓடிக் கொண்டிருந்தது..

"கதவை மூடுடி.. பாட்டுச்சத்தம் காதைத் துளைக்குது.." சுவாதி கண்மூடியபடி சிணுங்கினாள்..

நந்தினிக்கு அதைச் செய்ய மனமில்லை.. அவளுக்கு இது புதிது.. இதுபோன்ற சூழல் புதிது.. உற்றார் உறவினர் ஒன்று சேர்ந்து ஆளுக்கொரு வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் அந்த ஒருங்கிணைப்பு புதிது..

நந்தினிக்கு அவர்களுடன் கலந்து இருக்க வேண்டு மென்ற ஆசை உண்டானது.. முதல் நாள் மாலையில் விருது நகருக்கு ரங்கநாதனின் குடும்பத்துடன் அவளும் வந்து இறங்கிய போது..



"வாம்மா நந்தினி.." என்று வாயாற வரவேற்ற அம்பலவாணனின் மனைவி தாமரையை அவளுக்குப் பிடித்துப் போய்விட்டது..

"என்னைத் தெரியுமா..?" நந்தினி ஆச்சரியப் பட்டபோது..

"உன்னைத் தெரியாம இருக்குமா..?" என்று கை கொடுத்தாள் தாரிணி..

அவள்தான் மணப்பெண்.. அவளது திருமணத்- திற்காகத்தான் ரங்கநாதனின் குடும்பம் வந்திருக்கிறது என்று சுவாதி சொன்னாள்.. மணமாகப் போகும் பெண் உட்பட.. அந்தக் குடும்பத்தில் இருந்த அனைவருக்கும் நந்தினியின் வரவை தெரியப் படுத்தி விட்டு கிளம்பி வந்திருக்கும் சுவாதியின் பெற்றோரின் அந்தத் தன்மையில் மனம் நெகிழ்ந்தாள் நந்தினி..

வீடு முழுவதும் உறவினர் கூட்டம் நிறைந்திருந்தது.. எல்லோரும் எல்லா அறைகளிலும் புழங்கிக் கொண்டிருக்க.. நந்தினிக்கும்.. சுவாதிக்கும் மட்டும் மாடியில் தனியறையைக் கொடுத்திருந்தார்கள்..

"எதுக்கு ஆண்ட்டி.. நான் மத்தவங்களைப் போலவே இருந்துக்குவேன்.." நந்தினி ஆட்சேபித்தாள்..

"நீ இருந்துக்குவ.. இந்த வாலு இருக்க மாட்டா.. கிளம்பி வர்றப்பவே தனிரூம் கொடுத்தாத்தான் கல்யாணத்துக்கு இருப்பேன்.. இல்லைன்னா நான் மட்டும் திருப்பூருக்கு திரும்பி ஓடிருவேன்னு கண்டிசன்

போட்டுட்டுத்தான் கிளம்பி வந்திருக்கா..” தாமரை சிரித்தபடியே சுவாதியின் மீது பழியைத் தூக்கிப் போட்டு விட்டாள்..

நந்தினிக்கென்று பிரத்யேக கவனிப்பை அவளறியாமலே அந்தவீடு கொடுத்தது.. அதை உடைத்துக் கொண்டு அவர்களுடன் கலந்து பழகிய நந்தினியை அனைவருக்கும் பிடித்து விட்டது..

“எப்பேற்பட்ட கோடிஸ்வர குடும்பத்தில பொறந்த பொண்ணு... இப்படிச் சரிசமமா நம்மகூட ஒட்டி உறவாடுதே...” தாமரை ஆச்சரியப்பட்டுப் போனாள்..

அவளுக்கென்ன தெரியும்.. மனிதர்களின் மத்தியில் கலகலப்பாக சிரித்துப்பேசி வாழும் அந்த வாழ்வுக்காக நந்தினி மனதளவில் எந்த அளவுக்கு ஏங்கிப் போயிருக்கிறாள் என்பது..

நந்தினி மிக எளிதாக அவர்களுடன் ஒன்றிவிட்டாள்.. தாமரை சமையலறையில் வடை சுடும் போது உதவி செய்கிறேன் பேர்வழியென்று கையைச் சுட்டுக் கொண்டாள்.. அம்பலவாணன் சேர்களை வரவழைத்து அந்தத் தெருவையே அடைத்துப் போடப் பட்டிருந்த வாசல் பந்தலில் சேர்களை போட்டுக் கொண்டிருந்த போது.. இவளும் நான்கைத் தூக்கி காலில் போட்டுக் கொண்டு நொண்டியடித்தாள்.. அம்பலவாணனின் மகனான தருண் கடைக்குப் போன போது கூடப் போய் சாமான்களை வாங்கி வந்து வழியிலேயே பையை நழுவ விட்டாள்.. நல்ல வேளையாக கிரிக்கெட்டில் கேட்ச் பிடிக்கும் லாவகத்துடன் தருண் பாய்ந்து வந்து பைக்கு அடியில் கைகளை நீட்டி பை தரையைத் தொடும் முன்பாகவே அதைக் கேட்ச் பிடித்துக் காப்பாற்றி விட்டான்..



“ஒன் செகண்ட் லேட்டாகியிருந்தாலும் போதும்.. சாமானெல்லாம் மண்ணோடு மண்ணாக் கலந்திருக்கும்..”

வீட்டுக்கு வந்து அவன் பிடித்த சூப்பர் கேட்சைப் பற்றி அவன் சொல்லிக் கொண்ட போது.. வீடு முழுவதும் ரசித்து மகிழ்ந்தது.. ஒருவர் கூட வாங்கி வந்த பொருள்கள் கீழே விழுந்திருந்தால் என்னவாகியிருக்கும் என்று கேள்வி கேட்கவில்லை..

அவர்களின் வேற்றுமை பாராட்டாத அந்த குணத்தில் நந்தினி சந்தோசப்பட்டுப் போனாள்.. தாரிணியை இழுத்து வைத்து அவள் கைகளுக்கு மருதாணியில் கோலம் வரைந்து விட்டாள்..

நந்தினியின் வடை சுட்ட ஆற்றலிலும்.. வாசலில் நாற்காலிகளை உடைத்துப் போட்ட தீரத்திலும்.. கடைக்குப் போய் பொருள்களை வாங்கி வந்து கை நழுவ விட்ட திறமையிலும் பயந்து போன தாரிணி அவள் கைகளை நந்தினியை நம்பி நீட்ட மாட்டேனென்று அடம் பிடித்தாள்..

“விசப் பரிட்சை வேணாம் நந்தினி.. இன்னும் ரெண்டே நாளில எனக்குக் கல்யாணம்.. நீ கன்னா பின்னான்னு கையில கோலம் போட்டு வைச்சேன்னு வைய்யி.. அது மறைய நாளாகும்.. கல்யாண வீடியோவ காலம் காலத்துக்கும் பார்க்க வேண்டாமா..?”

"அதெல்லாம் பார்க்க ஜோராயிருக்கும்.. நீ கையை நீட்டு.."

"உனக்கு ஜோரா இருக்கும்டி.. இவளுக்கு ஜோரா யிருக்குமா..?"

"நீ சும்மா இரு சுவாதி.. அதெல்லாம் நான் அழகா மெஹந்தி போடுவேன்.." நந்தினி தாரிணியின் கைகளைப் பற்றுவதிலேயே குறியாக இருந்தாள்..

"நம்பிக் கையை நீட்டலாமா..?" நடுக்கத்துடன் கை நீட்டினாள் தாரிணி..

"ஏய்.. இவளைப் பாரேன்.. மாப்பிள்ளைகிட்டக் கேட்க வேண்டிய கேள்வியை உன்கிட்டக் கேட்கிறா.. தாரு.. நீ இதை உன் கையைப் பிடிக்கப் போகிற முகுந்தன் கிட்டக் கேட்கனும்டி.. ஆளை மாற்றிக் கேள்வி கேட்கக் கூடாது.." சுவாதி கேலி செய்தாள்..

முகுந்தனின் பெயரைக் கேட்டதும் முகம் சிவந்து போனாள் தாரிணி.. தோழிகள் இருவரும் அதற்கும் அவளைக் கேலி செய்து ஒருவழி பண்ணினார்கள்...

நடுநடுங்கியபடி கைகளை நீட்டிய தாரிணி.. கைகளுக்கு என்ன கதியாகப் போகிறதோ என்ற நடுக்கத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள்..

பொறுமையாக அவள் கைகளில் மருதாணியால் கோலம் வரைந்து முடித்த நந்தினி..

"இப்பக் கண்ணைத் திறந்து பார்.." என்று சொன்னாள்..



குலை நடுங்க கண் திறந்து கைகளைப் பார்த்த தாரிணயின் விழிகள் விரிந்தன..

"ஐ.." குதூகலித்தாள்..

"அழகாயிருக்குள்ல..?" பெருமையுடன் கேட்டாள் நந்தினி...

"இப்படிக் கேட்டா இல்லைன்னா அவ சொல்லுவா..?" என்றாள் சுவாதி..

"செம அழகாயிருக்கு..."

தாரிணி சந்தோசத்துடன் கைகளைக் காட்ட தாமரையைத் தேடி ஓடினாள்.. வெற்றிப் பெருமிதத்துடன் சுவாதியைப் பார்த்து கட்டைவிரலை உயர்த்திக் காட்டினாள் நந்தினி..

அந்த நினைவுகள் தந்த இதத்துடன் ஜன்னலை விட்டு விலகியவள் அறைக்கதவைத் திறந்து மாடி ஹாலுக்கு வந்தாள்..

"காபி சாப்பிடும்மா.." அவள் கையில் ஒரு தம்ளரை திணித்தார் அம்பலவாணன்..

சந்தோசமாக அதை வாங்கிக் கொண்டவள்.. தரையில் விரித்திருந்த ஜமுக்காளத்தில் அமர்ந்து கால்களை சம்மணமிட்டு.. மற்றவர்களிடம் பேசியபடி காபியை குடிக்க ஆரம்பித்தாள்..

# 12

*கமையான மனதுடனே..*
*கமைதாங்கியை தேடிநின்றேன்..*
*நிலாச்சோறாய் நீ வந்தாய்..*
*என் கமையிறக்கி எனைச் சுமந்தாய்..*

ஸ்பின்னிங்மில்லில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்த பார்த்திபனின் கார்.. பார்த்திபனூரின் அருகே வேகத்தை குறைத்தது..

சாலையில் மோட்டார் பைக்கை கவிழ்த்து.. அதன் மேல் கவிழ்ந்து அதிலிருந்த நட்டுக்களை திருகிக் கொண்டிருந்தான் முகுந்தன்..

"இங்கே என்னடா பண்ற..?"

காரை நிறுத்திய பார்த்திபன் ஜன்னல் கண்ணாடியை இறக்கி விட்டபடி கேட்டான்.. நண்பனைப் பார்த்ததும் வண்டியின் மீது கவிழ்ந்து கிடந்த முகுந்தன் எழுந்து நின்று கைகளைத் தட்டி விட்டுக் கொண்டான்..

"சோதிக்குதுடா.." நண்பனிடம் புகார் சொன்னான்..

"எது..?"

"வேற எது..? வண்டிதான்.."

"என்ன செய்யுது..?"

"ஓட மாட்டேங்குது.. வேறென்ன..?"



முகுந்தன் பரபரப்புடன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. வானத்தை வெறித்தான்.. வாய்க்குள் முணுமுணுத்தபடி வண்டியை உதைத்தான்..

"பாவம்.." வண்டியின் மீது பரிதாபப் பட்டான் பார்த்திபன்..

"ஏண்டா சொல்ல மாட்ட..? எதிரே நிற்கிற நண்பனைப் பாத்தா உனக்குப் பாவமாத் தோணலை.. சரியான நேரத்தில மக்கர் பண்ணி பழிவாங்கற வண்டியைப் பார்த்தா உனக்குப் பாவம்ன்னு தோணுதா..?"

"எங்கே கிளம்பின..?"

"ஊம்..? பார்த்திபனூரைத் தாண்டற என் நண்பன் பார்த்திபனை நிறுத்திவைத்துப் பேசத்தான் கிளம்பினேன்.."

"இதைக் காதில பூவைச்சிருக்கிற யார்கிட்டயாவது போய் சொல்லு.. திருச்சுழியில கோவில் கொண்டிருக்கிற திருமேனி நாதரைத்தான பார்க்கப் போய்க்கிட்டு இருக்க..?"

'கரெக்டா கண்டு பிடிச்சிட்டானே...'

முகத்தில் ஆச்சரியக் குறியைத் தவழ விட்டான் முகுந்தன்..

"இதை நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமாக்கும்.. ஊருக்குப் பக்கத்திலேயே வண்டி மக்கர் பண்ணியிருக்கு.. அவசர வேலையிருக்கிறவன் என்ன செய்திருக்கனும்.. உடனடியா வண்டியைத் தள்ளிக்கிட்டே ஊருக்குள்ள போயி மெக்கானிக் ஷாப்பில வண்டியை விட்டுட்டு.. வேற ஏதாவது ஒரு வண்டியில கிளம்பியிருக்கனும்.. இது இரண்டையும் செய்யாம ரோட்டில வண்டியைக் கட்டிப் பிடிச்சுக் காதல் செய்துக்கிட்டு இருந்தா அதில் ஏதோ ஒரு ரகசியம் ஒளிஞ்சிருக்குன்னு தானே அர்த்தமாகுது..? சரிசரி.. காரில ஏறு.."

"வண்டி..?"

"அதை அந்த மரத்தோரமா நிறுத்தி பூட்டி வைச்சுட்டு வா.. திரும்பி வந்து தள்ளிக்கிட்டுப் போவ.."

"ம்ஹீம்.. கல்யாணமாகி புதுப் பெண்டாட்டியைத் தள்ளிக்கிட்டுப் போக நாளை எண்ணிக்கிட்டு இருக்கிறவன்.. மக்கர் பண்ற வண்டியைத் தள்ளிக்கிட்டுப் போக வேண்டியதாய் இருக்கு.."

"புதுப் பெண்டாட்டியைத் தள்ளிக்கிட்டுப் போறதா..? கேட்கவே சகிக்கலை.."

பார்த்திபன் தலையில் அடித்துக் கொண்டான்.. முகுந்தன் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல் வண்டியைத் தள்ளிக் கொண்டு போய் மரத்தடியில் நிறுத்தி வைத்துப் பூட்டி விட்டு வந்தான்.. அவன் காரில் ஏறிக் கொண்டதும் கார் விரைந்தது..

"நாம்.. ஒருவரையொருவர்..
சந்திப்போமென்று..
காதல் தேவதை சொன்னாள்.."

முகுந்தன் திருகிய எப்.எம்மில் பாடல் ஒலித்தது.. அவன் விழிகளில் ரகசிய சந்தோசம் உற்பத்தியானது.. அவனிடம் தெரிந்த அந்த மாற்றத்தை ரசித்தபடி காரை ஓட்டினான் பார்த்திபன்...

"என் இடது கண்ணும்..
துடித்தது..
உன்னைக் கண்டேன்..
இந்நாள்.. பொன்னாள்..!"

பாடலோடு சேர்ந்து பாடியவனைத் திரும்பிப் பார்த்த பார்த்திபன்..



"உன் ஆளுக்கு இன்னைக்கு இடது கண் துடிச்சிருக்குமே.." என்று கேலியாகக் கேட்டான்..

"தெரியலை.. கேட்கனும்.." முகுந்தனின் கண்களில் மயக்கம் வந்தது..

"கோவிலுக்குப் போகிறது திருமேனி நாதரின் தரிசனத்தைப் பார்க்கிறதுக்காகவா.. இல்லை.. தாரிணியின் தரிசனத்தைப் பார்க்கிறதுக்காகவா..?"

"ரெண்டும்தான்.."

"பின்னதினால.. முன்னது பிக்ஸ் ஆச்சுன்னு சொல்லு.."

"ஊஹீம்.. முன்னதின் வரத்தினாலதான் பின்னது பிக்ஸ் ஆச்சு.."

"பிழைச்சுக்குவேடா.."

"உன் நண்பனில்லையா.. பிழைக்காமல் போவேனா..?"

"என்னவோ போடா முகுந்தா.. உனக்குக் கல்யாணம் பிக்ஸ் ஆனதில இருந்து நீ ஒரு மார்க்கமாத்தாண்டா இருக்க.."

"உன் வாழ்க்கையிலயும் ஒரு பொண்ணு வரும்டா.. அப்பப் பார்க்கத்தானே போறேன்.. நீ எத்தனை மார்க்கமாய் ஆகிறேன்னு..."

"குட் ஜோக்.."

பெரிய நகைச்சுவையைக் கேட்டதைப் போல உரக்கச் சிரித்தான் பார்த்திபன்.. அவன் வாழ்விலும் ஒருத்தி வருவாளா..?

'அந்த ஒருத்தி எப்ப வருவா..?'

லேசாக சிரித்துக் கொண்டான் பார்த்திபன்...

"ஒருநாள்.. அந்த ஒருநாள்..
உன்னை முதலில் பார்த்த
அந்தத் திருநாள்..
அது மறந்து போகுமா...?"

காருக்குள் பாடல் மாறியிருக்க.. கனவு மிதக்கும் கண்களுடன் பேசினான் முகுந்தன்..

"மறக்காதுடா.. ஆயுசுக்கும் மறக்காது.."

கார் ஓட்டுவதில் கவனமாக இருந்த பார்த்திபன்.. நண்பன் எதையோ பிதற்றுகிறானோ என்று அவன் பேச்சைக் கவனித்தான்..

'எப்படியிருந்த பயபுள்ள.. இப்படி ஆகிட்டானே..' அவன் மனம் இரக்கப் பட்டது..

"எத்தனையோ பொண்ணு பார்த்தோம்.. அமையல.." முகுந்தன் சொல்ல

"யாருக்கு..?" என்று கேட்டுவைத்தான் பார்த்திபன்

"ஊம்..? என் அப்பாவுக்கு.. போதுமா..?" முகுந்தன் வெடுவெடுத்தான்..

"ஏண்டா..? உன் அம்மாவுக்கு என்ன குறை..?" கரிசனமாக விசாரித்தான் பார்த்திபன்..

"நீ வந்து எனக்கு நண்பனா வாய்ச்சிருக்க பாரு.. அதுதாண்டா குறை.. அடிதாண்டா வாங்கப் போற.. ரெண்டு நாளில கல்யாணத்தை வைச்சுக்கிட்டு இருக்கிறவன்.. யாருக்குப் பெண் பார்த்ததைப் பத்திப் பேசுவான்..?"

"ஓ.. நீ உன்னைச் சொன்னயா..?"

"ஆமாம்டா.. ஆமாம்.."

"எதுக்கு இத்தனை ஆமாம் போடற.. கதையைச் சொல்லு..."



"உனக்கு இது கதை போல இருக்காடா மச்சான்..?"

"பின்னே..? இது கதையில்லையா..?"

"டேய்ய்.."

முகுந்தனின் கோபத்தில் பார்த்திபன் வாய் விட்டுச் சிரித்தான்.. தூரத்தில் திருச்சுழி தெரிந்தது..

"கோவில் வரப் போகுது.. நீ பொண்ணு பாக்கப் போன கதையைச் சொல்லி முடிக்கலையே.."

"அதாண்டா.. இவளைப் பெண் பார்க்கப் போனப்ப.. இஷ்டமில்லாம.. அம்மாவோட சந்தோசத்துக்காகத்தான் நான் போனேன்.. மத்த இடம் போலத்தான் இதுவும் இருக்கும்ங்கிற எண்ணம்.. ஏனோ தானோங்கிற மனநிலை மனசில வந்துருச்சு.. பார்த்தா.. குத்து விளக்கைப் போல இவ வந்து நிற்கிறா..."

"எங்கேடா..?"

"அவ வீட்டிலதான்.."

"இல்லையே.. கோவில் வாசல்ல நிற்கிறதைப் போலயில்ல இருக்கு.."

காரின் வேகம் குறைத்தான் பார்த்திபன்..

முகுந்தன் ஆவலாகப் பார்த்தான்.. அங்கே தாரிணி நந்தினியுடனும்.. சுவாதியுடனும் பேசியபடி நின்றிருந்தாள்..

"மச்சான் அவளேதாண்டா.." முகுந்தன் விழிகளில் ஒரு கோடி சூரியன்களும் ஒட்டு மொத்தமாக வந்து அமர்ந்தார்கள்..

"நானென்ன வேற யாரோன்னா சொன்னேன்..?" காரை நிறுத்தினான் பார்த்திபன்..

பேச்சு பேச்சாக இருக்க.. முகுந்தன் வரும் வழியை கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொள்ளாத

குறையாக பார்த்துக் கொண்டிருந்த தாரிணிக்கு முகம் சிவந்தது.. காரை விட்டு முகுந்தன் இறங்குவதற்குள் மாமன் மகளின் முகத்தைப் பார்த்த சுவாதி..

"என்னடி.. அண்ணன் வந்திட்டாரா..?" என்று கண்சிமிட்டினாள்..

"யார்..?" சுற்று முற்றும் பார்த்தாள் நந்தினி..

காரை அவள் கவனிக்காததினால் சுவாதியைப் பார்த்து..

"அவர் இன்னும் வரலை போல இருக்கு.." என்றாள்..

"ஊஹீம்.. ஆள் வந்தாச்சு.." உறுதியுடன் சொன்னாள் சுவாதி..

"எதை வைச்சுச் சொல்ற..?"

"இவ முகத்தில வழிகிற வெட்கத்தை வைத்துச் சொல்றேன்.. இவ்வளவு நேரமும் இந்த வெட்கத்தை எங்க மறைச்சு வைச்சிருந்தா..?"

"ஓ...!"

இதழ்களைக் குவித்த வண்ணம் தாரிணியின் மாப்பிள்ளை யாராக இருக்கக் கூடும் என்று அறியும் ஆவலுடன் விழிகளால் தேடினாள் நந்தினி..

"அக்கட சூடு.." கார் பக்கம் கையைக் காட்டினாள் சுவாதி..

நந்தினி காரைப் பார்த்தாள்.. அதன் முன்பக்க இரு கதவுகளையும் திறந்து முகுந்தனும்.. பார்த்திபனும் ஆளுக்கொரு பக்கமாய் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.. நந்தினியின் பார்வை பார்த்திபனின் மீது விழுந்தது..

'இவனாய் இருப்பானோ...'



அவள் ஊன்றிப் பார்த்த அதே நொடியில் அவனும் அவளைப் பார்த்து வைத்தான்.. அவனது ஊடுருவும் பார்வையில் நந்தினியின் தொண்டை உலர்ந்து போக.. அவள் அவசரமாய் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

அவளின் அந்தச் செய்கையில் அவனுக்கு அவளைத் திரும்பவும் ஓர்முறை பார்க்க வேண்டும் போல தோன்றி விட்டது....

மீண்டும் அவன் அவளைப் பார்க்க.. நந்தினி நகர்ந்து சுவாதியின் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்டாள்..

"என்னடி இது.. கல்யாண மாப்பிள்ளை.. கட்டிக்கப் போகிற பெண்ணை விட்டுவிட்டு என்னையே முறைச்சுப் பார்க்கிறார்..?" தோழியிடம் புகார் சொன்னாள்..



## 13

ஓராயிரம் கதை சொல்லும்..
உன் பார்வையை பார்த்தபின்னால்..
நிலவொளியில் சோறுண்ணும்..
நினைவுதான் வந்திடுமோ..?

அவனைக் கண்டதும் தோழியின் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்ட நந்தினியின் செயலில் பார்த்திபனின் கண்கள் மின்னின.. அவள் சன்னக்குரலில் தோழியிடம் எதையோ சொல்வதையும்.. அதில் அந்தத்

தோழி விழுந்து.. விழுந்து சிரித்ததையும் கண்டவனுக்கு அவள் என்ன சொல்லியிருப்பாள் என்று அறியும் ஆவல் மனதில் கிளர்ந்தது.. நந்தினியின் நாணம் ததும்பிய முகத்தில் அவன் பார்வை நிலை கொண்டது..

'என்ன சொல்லியிருப்பா..?'

மனம் குறுகுறுக்க.. அதைப் பார்வையில் பிரதிபலித்து குறுகுறுக்கும் பார்வையொன்றை அவள் பக்கமாக அனுப்பிவைத்தான் பார்த்திபன்.. அவளின் அந்த மென்மையான அழகிய முகத்தை அதற்கு முன்னால் பார்த்திருப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது.. லேசாக முகம் காட்டிய நந்தினி அவனின் அந்தப் பார்வையைக் கண்டதும்.. முற்றிலுமாக சுவாதியின் பின்னால் ஒளிந்து கொண்டாள்..

"அடி இவளே..!.. ஹா..! ஹா..! மாப்பிள்ளை இவரில்ல.. ஹா.. ஹா.. அதோ.. அந்தப் பக்கமாக இறங்கி வர்றாரே.. ஹா.. ஹா.. அவர்தான் மாப்பிள்ளை.. ஹா.. ஹா.. கேட்டியாடி தாரிணி.. ஹா.. ஹா.. இவ என்ன கேட்டான்னு தெரியுமா..? ஹா.. ஹா.."

விழுந்து விழுந்து சிரித்த சுவாதி.. தாரிணியிடம் அந்த விவரத்தைத் தெரியப் படுத்த முனைந்தாள்.. அவள் கையை 'நறுக்' கென்று கிள்ளிவிட்டாள் நந்தினி..

"அடங்குடி.. இப்ப எதுக்காக அவ காதில இதை ஓதி வைக்கிற..?"

"அதுக்காக இப்படியாடி கையைப் பதம் பார்ப்ப..? ஸ்ஆ.. வலிக்குதுடி குரங்கே..! நான் ஓதி வைச்சாலும் அதைக் காதில போட்டுக்கிற நிலைமையிலா அவ இருக்கா..? அக்கட சூடு.."



நந்தினியும் சுவாதி சொன்ன 'அக்கட சூடு' வைச் செய்தாள்.. அங்கே சூடிக் கொடுத்த சுடர்கொடியைப் போலக் கண்களில் காதலை நிரப்பி ஜீவாத்மா.. பரமாத்மாவின் வரவில் சிலிப்பதைப் போல முகுந்தனின் வரவில் சிலிர்த்துப் போயிருந்த தாரிணி இருந்தாள்..

"பார்த்தேயில்ல.. என்னமா முழிக்கிறா..! இவ காதில நான் ஓதினா... இவ கேட்டுட்டுத்தான் மறுவேலையைப் பார்ப்பாளா..? நம்மகூட பேசிக்கிட்டு இருந்த தாரிணி வேற.. இப்ப இருக்கிற தாரிணி வேற.. நீ என்னதான்.. 'இஸ்..இஸ்..' ஸின்னு அவ காதில இஸ்ஸிப் பார்த்தாலும் அவ உன் பக்கமா திரும்பமாட்டா.. இதில இவ காதில நான் ஓதினா மட்டும் திரும்பிப் பார்த்து உன்கூட சண்டைக்கு வந்துருவாளா..?"

தாரிணி அப்படித்தான் இருந்தாள்.. கூட இருந்தவர்களின் நினைவின்றி.. அவளும்.. முகுந்தனும் மட்டும் அங்கேயிருப்பதைப் போல முகுந்தனை பருகு.. பருகென்று பார்த்துக் கொண்டிருந்தாள்..

அவனும் விட்டுக் கொடுத்தவனாக இல்லை.. அவன் தாரிணியை விட ஒருபடி மேலே போனவனாக.. கண்கள் செறுக.. காதல் டூயட் பாடிவிடும் உத்தேசத்தில் இருந்தான்..

"சுவிட்சர்லாந்தா..? இல்ல சிங்கப்பூரா..?" சுவாதி நந்தனியிடம் சந்தேகம் கேட்டாள்...

"என்னது..?" அவள் புரியாமல் விழித்தாள்...

"இல்ல.. மாப்பிள்ளை கண்ணப் பார்த்தா.. அவர் கனவில தாரிணியோட காதல் டூயட் பாடிக்கிட்டு இருக்கிறதைப் போலத் தோணுது.. கனவுப் பாட்டுன்னா அது வெளிநாடாத்தானே இருக்கனும்..?" கேள்வி கேட்ட சுவாதியை

"உன்னை.." என்று முறைத்தாள் நந்தினி..

பார்த்திபனுக்கு ஏனோ நந்தினியுடன் பேசிப் பழக வேண்டும் என்று தோன்றியது.. அதுவரை அவன் பார்த்திருந்த பெண்களில் எவரும் இப்படி நாணத்துடன் முகம் மறைத்து... அரை விழியால் அவனை நோக்கியதில்லை.. அவனைக் கண்டதும் கன்னம் சிவந்த அவள் பெண்மையில் அவன் கவரப் பட்டான்.. அவளிடமிருந்த வெளிப்பட்ட மென்மையின் சாரலில் அவன் மனம் நனைந்தது.. அவளின் முகம் அவனது அந்தரங்க மனதில் பதிந்திருந்த முகத்தைப் போல அவனுக்கு தோன்றி வைத்தது..

"முகுந்த்.." நண்பனை அழைத்தான்..

அந்த நண்பனோ 'ம்ம்ம்' என்று கூடக் கேட்கவில்லை.. அவன்தான் சுவாதி சொன்னதைப் போலத் தாரிணியுடன் கனவில் டூயட் பாடிக் கொண்டிருந்தானே..

"டேய்.. முகுந்தா.."

அசையாமல் நின்றிருந்த முகுந்தனின் முதுகில் ஓங்கி ஒரு அறை வைத்தான் பார்த்திபன்..

"செமத்தியான ட்ரீட்மெண்டுடி.." சிலாகித்தாள் சுவாதி..

"ஒரே அடிதான்.. சுவிட்சர்லாந்தில இருந்து திருமேனி நாதர் கோவில் வாசலுக்கு மாப்பிள்ளையை இழுத்துக்கிட்டு வந்துட்டாரு பாரு.. நாமளும் இருக்கோமே.. கொசுவைக் கூட அடிப்போம்.. ஆனா இவளை அடிக்க மாட்டோம்.. பேசாம அவர்கிட்டயே அந்த ட்ரீட்மெண்டை இவகிட்டயும் அப்ளை பண்ணுங்கன்னு கேட்டுப் பார்ப்போமா..?" நந்தினியிடம் கேட்டாள்



"சும்மா இருடி.." நந்தினி முறைத்தாள்..

"அப்படிங்கறே..? சரி.. விடு.. உன் ஆசையைக் கெடுப்பானேன்..? இவ அசையாம இங்கேயே நிற்கட்டும்.. எப்ப அசைகிறாளோ அப்ப கோவிலுக்குள்ள போனாப் போச்சு.. எப்படியும் கோவில் அடைக்கிறதுக்குள்ள சுவிட்சர்லாந்தில இருந்து ரிட்டர்ன் ஆகிடுவான்னுதான் தோணுது.. நீ என்னடி நினைக்கிற..?" சுவாதி அபிப்ராயம் கேட்க..

"ஒன்னும் நினைக்கலை.. உன் வாயைக் கொஞ்சம் கண்ட்ரோல் பண்றியா..?" என்றாள் நந்தினி..

முதுகில் வாங்கிய அடியில் தன்னுணர்விற்கு மீண்ட முகுந்தன் நண்பனைப் பார்த்து..

"ஹி.. ஹி.." என்று சகிக்க முடியாத சிரிப்பொன்றை சிரித்து வைத்தான்..

"ம்ஹீம்.. இந்த மாப்பிள்ளை இந்தச் சிரிப்பை சிரிக்கிறதுக்குப் பதிலா ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூட விட்டிருக்கலாம்.. என்னடா.. இப்படி ஒரு சிரிப்பைப் பார்த்த பின்னாலே கல்யாணப் பொண்ணு அவ சம்மதத்தை மறுபரிசீலனை பண்ணிர மாட்டாளாங்கிற பயம் இவர் மனசில இருக்குதான்னு பாரேன்..."

சுவாதி தோள்களைக் குலுக்கினாள்.. இப்போது நந்தினி அவள் முதுகில் ஓர் அறையை வைத்தாள்.. அடி தாங்காத சுவாதி..

"ஏண்டி குரங்கே..! இஞ்சி தின்ன குரங்கைப் போல முழிக்கிற இவளை விட்டுட்டு என்மேல கையை வைச்ச..?" என்று அவள் மேல் பாய்ந்தாள்..

முகுந்தனின் சிரிப்பை விட்டு விட்டு அவர்களின் வாக்கு வாதத்தின் மீது பார்த்திபனின் கவனம் திரும்பி விட்டதில் மீண்டும் முகம் சிவந்து போன நந்தினி..

"ஸ்ஸ்ஸ்.." என்று தோழியை அடக்க முயன்றாள்..

அவளோ அடங்குவேனா என்று அடம் பிடித்தபடி தோழியின் முகச்சிகப்பை விசித்திரமாகப் பார்த்தாள்..

"இரு.. இரு.. இப்ப நீ எதுக்காக இந்த அளவுக்கு வெட்கப்படற..? அந்தக் காரணத்தை முதலில் சொல்லு.."

"ஸ்ஸ்ஸ்.. சுவாதி.. பேசாம இருடி.."

"ஏன் பேசாம இருக்கனும்..? இல்ல.. எதுக்குப் பேசாம இருக்கனும்ங்கிறேன்.. இவ மாப்பிள்ளையைப் பார்த்து வெட்கப்பட்டா அதில ஒரு அர்த்தமிருக்கு.. நீ மாப்பிள்ளை யோட பிரண்டைப் பார்த்து வெட்கப்பட்டா அதில என்னடி அர்த்தமிருக்கு..? எனக்கொன்னும் இது சரியாப் படலை.."

"உனக்கு எதுதான் சரியாப் பட்டிருக்கு.. எல்லாமே தப்புத் தப்பாத்தான் பட்டுத் தொலைக்கும்..?"

எரிச்சலுடன் பேசின நந்தினி பார்த்திபனின் முகம் பார்த்து விடாமல் இருக்க பகீரதப் பிரயத்தனப் பட்டாள்.. அதில் அவன் கண்களின் மின்னல் அதிகமானது..

முகுந்தனோ சகிக்க முடியாத சிரிப்பை உதிர்த்து முடித்து விட்டு

"என்னடா..?" என்று நண்பனிடம் கேட்டான்..

"இப்பவாவது நான் நண்பன்.. உன்கூட வந்தவன்ங்கிற நினைப்பு உன் மனசில வந்திருக்கே.. அந்த மட்டிலும் சந்தோசம்.."

"என்னடா பார்த்தி.. இப்படிப் பேசற..?"



"வேற எப்படி கண்ணா பேசச் சொல்ற..? கோவில் வாசல்ல கொண்டு வந்து நிப்பாட்டிட்டு நீ பாட்டுக்கு கனவு காணப் போயிட்டின்னா நான் என்ன பண்றது..? அங்கே பாரு.. மொத்தமா மூணு பொண்ணுக நிற்குதுங்க..."

"அடப்பாவி..! அதில் ஒன்னு நான் கட்டிக்கப் போற பொண்ணுடா.."

"அப்ப அதைக் குறைச்சிட்டு இரண்டு பொண்ணுகன்னு சொல்லிட்டாப் போகுது.. அதுக்கு ஏண்டா இப்படி அலறிவைக்கிற..?"

"எதுக்கும் நீ இரண்டடி தள்ளியே நில்லு.."

"இதிலயெல்லாம் நீ விவரமான ஆள்தாண்டா.. பெண் பார்க்கப் போனப்ப பிரண்ட்ஸ் யாரையும் கூட்டுச் சேர்த்துக்கிட்டுப் போகாத புத்திசாலியாச்சே நீ.. ஐ அப்ரிஸியேட் யு.."

"பார்த்தி..."

"என்னடா.."

"என் மனைவி.. உனக்குத் தங்கச்சி முறையாகனும்டா.."

இப்படி பேசியவனை என்ன செய்யலாம் என்ற யோசனையோடு முறைத்துப் பார்த்தான் பார்த்திபன்.. நண்பனின் கண்களில் தெரிந்த கெஞ்சலில் மனமிரங்கின வனாக பிழைத்துப் போகட்டும் என்று விட்டு விட்டான்..

"நான் மட்டும் அத்தை மக முறையாகனும்னா சொன்னேன்..? அறிவு கெட்டவனே.. அது எனக்குத் தங்கைதாண்டா.."

"அப்பாடி இப்பத்தான் எனக்கு நிம்மதியாச்சு.."

"ஆனா முகுந்தா.. அது கூட நிற்கிற பொண்ணுக எனக்கு எந்த முறையுமில்ல.. சொல்லிட்டேன்.."

"எனக்கும் அப்படித்தாண்டா.."

முகுந்தன் கூட்டணி போட.. பார்த்திபன் அவனை முறைத்தான்...

"இதுக்கு மட்டும் ஓடி வந்திருவியே.. ஏண்டா.. உன்னைக் கட்டிக்கப் போகிற பெண்ணை நான் தங்கையா நினைக்கனும்.. நீ மட்டும் அவளைத் தவிர மத்த பொண்ணுகளை உன் தங்கையா நினைக்க மாட்ட.. அற்புதம்டா மச்சான்.. கெட்டிக்காரண்டா நீ.."

"ஹி.. ஹி..."

"இன்னொருதரம் இப்படிச் சிரிச்சு வைச்ச.. உன் புத்தியைப் பத்தி என் தங்கைகிட்ட.. அதாவது நீ கட்டிக்கப் போகிற பொண்ணுகிட்ட பிட்டுப் பிட்டு வைச்சிருவேன்.. எப்படி வசதி..?"

"அடக்கி வாசிக்கிறேண்டா.. அதுதான் எனக்கு வசதி.."

"அஃது.. அந்த பயம் மனசில இருக்கனும்.. வா.. வா.. என் தங்கை தாரிணிகிட்ட என்னை அறிமுகப் படுத்தி வைய்யி.."

"அப்ப அந்த இரண்டு பொண்ணுக..?"

"அவங்க யாருன்னு நான் கேட்டுக்கறேன்.. அந்தச் சிரமமெல்லாம் உனக்கு வேண்டாம்டா மச்சி.. நீ எதுக்கு வந்திருக்கிற.. கல்யாணத்துக்கு முன்னாலே கட்டிக்கப் போகிற பொண்ணுகிட்ட கடலை போடத்தான வந்திருக்கிற..? அதை மட்டும் நடத்து.. மத்த கதை உனக்கெதுக்கு..."

'ம்ஹீம்..' மனதுக்குள் பெருமூச்சை விட்டபடி தாரிணியிடம் கம்பீரமாக ஒரு சிரிப்பை சிரித்து வைத்தான் முகுந்தன்..



அவளோ வெட்கப் படுகிறேன் பேர்வழியென்று கட்டைவிரலால் தரையில் பள்ளம் பறித்துக் கொண்டிருந்தாள்..

"விட்டுரு தாரிணி.. ஊத்துக் கிளம்பிரப் போகுது.." சுவாதி கவலையுடன் தாரிணியின் தோளில் தட்டினாள்..

"சும்மா இருடி.." இன்னமும் அதிகமான வெட்கத்துடன் பள்ளம் பறிக்க ஆரம்பித்தாள் தாரிணி..

"தாரிணி.. இவன் பார்த்திபன்.. என் பிரண்ட்.." என்று அறிமுகம் செய்து வைத்த முகுந்தன்.. மறக்காமல்..

"உனக்கு அண்ணனில்லைங்கிற குறையிருக்கு தில்ல.. இனிமே இவன்தான் உன் அண்ணன்னு நினைச்சுக்க.." என்று சொல்லி வைத்தான்.

"மாப்பிள்ளை... செம விவரம்டி... அலர்ட் ஆறுமுகம்ன்னா அது இவர்தான்.." நந்தினியின் காதுகளில் முணுமுணுத்தாள் சுவாதி..

# 14

*நிலாச்சோறு விருந்தின் போது..*
*நீ பேச நான் கேட்டேன்..*
*உணவுண்ண மறந்து போனேன்..*
*உன் முகத்தை மட்டும் பார்த்தேன்..*

சுவாதியின் பாராட்டுதலில் நந்தினிக்கும் சிரிப்பு வந்தது.. அவள் இதழோரம் ஒளிந்திருந்த அந்த குறுஞ்சிரிப்பை அவள் முகம் உணர்த்த.. பார்த்திபனுக்கு

அவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது.. பௌர்ணமியின் வெளிச்சத்தை முகத்தில் தேக்கிய அந்தப் பெண் யார் என்று அறிய அவன் ஆசைப்பட்டான்.. எங்கேயோ பார்த்தமுகம் போல அவள் முகம் இருப்பதின் காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தான்..

முகுந்தனின் மனதிலும் ஆவல் இருந்ததால்.. பார்த்திபனுக்கு கரம் குவித்து வணக்கம் சொன்ன தாரிணியிடம்..

"இவங்க உன் பிரண்ட்ஸா..?" என்று கேட்டு வைத்தான்..

'இதை நான் பார்த்துக்கிறேன்னு சொன்னேனில்ல..' கண்களால் நண்பனை மிரட்டின பார்த்திபன் புன்னகையுடன்..

"நீயே பிரண்ட் கூட வந்திருக்கப்ப.. தங்கையை மட்டும் தனியாய் அவங்க வீட்டில அனுப்பி வைச்சிரு-வாங்களா..? அவங்க பிரண்ட்ஸாத்தான் இருக்கனுமா..? சொந்த பந்தமாக்கூட இருக்கலா மில்லையா..? என்னம்மா.. நான் சொல்கிறது சரிதானே.." என்று தாரிணியிடம் உரிமை கலந்த பிரியத்துடன் பேசினான்..

'தங்கை' என்ற வார்த்தையில் முகம் மலர்ந்து போன தாரிணி..

"ஆமாம் அண்ணா.. இவங்க எனக்குச் சொந்தம் தான்.." என்று சொன்னாள்..

பிரித்துப் பேசாத அவளின் அந்தப் பண்பாட்டில் நந்தினியின் மனம் நெகிழ்ந்தது.. அதை அவளது கைவிரல்களின் பிணைப்பு மூலம் புரிந்து கொண்ட சுவாதி..



"ரொம்பத்தான் உருகாதே.. நான் இவளுக்கு அத்தை மகன்னா.. நீயும் அப்படித்தான்.. வேற மாதிரி இவ பேசினா நான் சும்மா விட்டிருவேனா..?" என்று கேட்டாள்..

"உனக்குப் பயந்தொன்னும் அவ இப்படிச் சொல்லலை.. அவ மனசில இருந்து வந்த வார்த்தைதான் இது.." நந்தினி தாரிணிக்கு பரிந்து பேசினாள்..

"அப்படியா..?"

தாரிணியின் வார்த்தைகளை இறுக்கிப் பற்றிக் கொண்ட பார்த்திபன் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதவனாக..

"வணக்கங்க.." என்று சுவாதியையும் நந்தினியையும் பார்த்துக் கரம் குவித்தான்..

"இதப் பாருடா.. 'ஹி மேன்' இந்தப் போடு போடறது.." சுவாதி கிசுகிசுத்தாள்..

"ஹி மேனா..?" நந்தினி புருவங்களை உயர்த்தினாள்..

"பின்னே..? ஆளைப் பாரேன்.. செம ஹேண்ட்சம் மில்ல.. அட்டகாசமாய் அசத்தறாண்டி.. பார்த்தவுடனே பச்சக்குன்னு மனசுக்குள்ள ஒட்டிக்கிறதப் போல இருக்கான்.. இவன ஹி மேனுன்னு சொல்லாம வெறும் மேனுன்னா சொல்ல முடியும்..?"

சுவாதியின் பெருமூச்சில் நந்தினிக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை.. அவள் மனதில் சிணுங்கல் வந்தது.. அது ஏனென்றும் அவளுக்குப் புரியவில்லை.. அதற்குள் சுவாதி பார்த்திபனுக்கு பதில் வணக்கம் வைத்து விட்டாள்.. பார்த்திபனின் பார்வை நந்தினியின் பக்கம் திரும்ப.. நந்தினிக்குள் மூச்சுத் திணறல் ஏற்பட்டது...

"வணக்கம்.." பார்த்திபனின் பார்வை அவளை ஊடுறிவியது...

'இவளை எங்கேயோ நான் பார்த்திருக்கிறேன்.. அது எங்கே..?'

"வணக்கம்..."

இந்த ஒற்றைச் சொல்லைச் சொல்வதற்குள் வியர்த்துப் போனாள் நந்தினி...

"என் பெயர் பார்த்திபன்.. நித்யா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி. நீங்க..?"

பார்த்திபனின் சுய அறிமுகத்திற்குப் பதிலாக அவளது அறிமுகத்தைச் சொல்லியாக வேண்டிய கட்டாயத்துக்கு ஆளான நந்தினி.. சுவாதியைக் காட்டி..

"இவ சுவாதி.. தாரிணியின் அத்தை மகள்.." என்று சொன்னாள்..

பார்த்திபனின் கண்களில் சிரிப்பு வந்தது.. நந்தினியின் தடுமாற்றத்தை அவன் ரசித்தான்.. அவளைப் பற்றிக் கேட்டால் தோழியை கைகாட்டி அவள் தப்பித்துக் கொள்ள முனையும் தந்திரத்தை ரசித்தபடி..

"ஊஹீம்..?" என்று புருவங்களை உயர்த்தினான்..

"இவங்க சுவாதி.. தாரிணியின் அத்தை மகள்.. ஓகே.. அப்ப நீங்க..?" விடாமல் அவன் விவரம் கேட்டதில்..

"சபாஷ்.." என்று நந்தினியின் காதோரமாக சொன்னாள் சுவாதி..

"அசத்தல் மன்னன்டி.. என்னமா போட்டு வாங்கறான் பாரு.."

அவளின் சிலாகிப்பில் பல்லைக் கடித்த நந்தினி வேறு வழியில்லாதவளாக..



"நான் நந்தினி.." என்றாள்..

"அப்புறம்..?" பார்த்திபன் ஊக்கப் படுத்தினான்..

"திருப்பூரில் எங்க பேமிலி இருக்குது.."

"ஓ.. நீங்க திருப்பூரா..? அங்கே என் பிரண்டின் அப்பா இருக்கிறார்.. அடிக்கடி நான் அங்கே வருவேனே.. உங்களுக்கு சபாபதின்னா தெரிஞ்சிருக்கனுமே.."

நந்தினிக்கு பார்த்திபன் சொன்ன அந்த சபாபதியைத் தெரிந்திருந்தது.. அவர் திருப்பூரில் எக்ஸ்போர்ட் கம்பெனியை வைத்திருந்தார்.. அவரும் நந்தினியின் அப்பா சடகோபனும் நெருங்கிய நண்பர்கள்.. சபாபதியின் மூத்த மகனுக்கு சமீபத்தில்தான் திருமணம் ஆகியிருந்தது.. அந்தத் திருமணத்துக்கு குடும்பத்தோடு சங்கரலிங்கம் போய் வந்திருந்தார்..

"தெரியும்.."

நந்தினியின் பதிலில் பார்த்திபன் வியந்து போனான்..

"இப்பப் புரியுதுங்க.. உங்களை எங்கேயோ பார்த்ததைப் போல தோணியது.. அது எங்கேன்னுதான் இவ்வளவு நேரமும் மண்டையைப் போட்டு குடைந்துக் கிட்டு இருந்தேன்.. இப்பத்தான் எல்லாம் தெளிவாகுது.. உங்களை ரமேஷின் கல்யாணத்தில நான் பார்த்திருக் கிறேன்.."

ரமேஷ்.. சபாபதியின் மகன்.. அவனது திருமணத்தற்கு குடும்பத்துடன் போயிருந்தது உண்மை என்பதால் தயக்கத்துடன் தலையசைத்தாள் நந்தினி..

"தெரியலை.. பட்... எனக்கு உங்களைப் பார்த்த ஞாபகமில்லை..."

"எப்படியிருக்கும்..? நீங்கதான் இந்தப் பக்கம்.. அந்தப் பக்கம் பார்க்காம உங்க தாத்தா கூடப் பேசியபடி

வந்து போனீங்களே.. ஆக்சுவலா.. அதனால தான் நான் உங்களைக் கவனித்தேன்.. உங்க வயதுப் பெண்கள் கூட அரட்டையடித்து கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்காமல் தாத்தாகூட நீங்க அமைதியாப் பேசிக்கிட்டு இருந்தீங்களா.. அது என்னை இம்ப்ரெஸ் பண்ணிருச்சு.."

பார்த்திபனின் அந்த உற்சாகத்தில் நந்தினி சங்கடப் பட்டாள்.. அவளுக்கு அவனை பார்த்த நினைவில்லை.. அவனோ அவளை அறிந்து வைத்திருந்தைப் போல தெள்ளத் தெளிவாக பேசி வைக்கிறான்..

அதை உணராமல் அவளை உணர்ந்து விட்ட உற்சாகத்தில் பார்த்திபன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்..

"ஆக்சுவலா.. அந்தக் கல்யாண மண்டபத்திலே உங்க வயதுப் பெண்கள் நிறையப் பேர் இருந்தாங்க.. அவங்க குருப் ஃபார்ம் பண்ணிக்கிட்டு செம கலாட்டா பண்ணிக்கிட்டு இருந்தாங்க.. நான் கூட ரமேஷிடம் அதைப் பற்றிக் கேட்டேன்.. அவன் மனைவியோட படிச்சவங்கன்னு சொன்னான்.. அதுக்காக இப்படியா கூச்சல் போட்டு.. சத்தமா சிரிச்சு.. எல்லாத்தையும் அவங்களைத் திரும்பி பார்க்க வைப்பாங்கன்னு எனக்கு இருந்துச்சு.."

அவன் சொல்லிக் கொண்டே போக.. அதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று புரியாமல் மௌனம் சாதித்தாள் நந்தினி..

"அவங்களை மத்தவங்க திரும்பிப் பார்க்கனும்ங்கிறதுக்காகத்தானே அவங்க அப்படிச் செய்கிறாங்க..?" சுவாதி ஊடே புகுந்தாள்..

"அதைச் சொல்லுங்க.." சிரித்தான் பார்த்திபன்..



"பை தி வே.. எனக்கும் திருப்பூர்தான்.. நானும் நந்தினியும் கிளாஸ்மேட்ஸ்.. பெஸ்ட் பிரண்ட்ஸ்.. நகமும் சதையும்.. உயிரும் உடலும்.. இன்னும் என்னவெல்லாம் சொல்லாமோ.. அத்தனையையும் சொல்லிக்கங்க.. நாங்க அதைப் போலத்தான்.."

"தட்ஸ் குட்.. என்ன படிக்கிறிங்க..?"

"என்ஜினியரிங்.. ஃபைனல் இயர்.."

"வெரிகுட்.. பார்த்தா அப்படித் தெரியலை.."

"வேற எப்படித் தெரியுது..?"

"ஸ்கூல் கோயிங் போல தெரியுது..."

"என்னைச் சொல்கிறிங்களா.. இல்லை இவளைச் சொல்கிறீங்களா..?"

"இரண்டு பேரையும்தான் சொல்றேன்..."

"இதுதானே வேண்டாம்கிறது.. விட்டா எங்க ரெண்டு போர் முதுகிலயும் பொதிமூட்டை போல ஸ்கூல் பேக்கை மாட்டி விட்டு எல் கே ஜி கிளாஸில போய் தள்ளி விட்டுட்டுத்தான் வேற வேலை பார்ப்பீங்க போல.."

"ஹா.. ஹா..."

ரசித்துச் சிரித்தவனின் சிரிப்பை ரசித்த சுவாதி.. வெளிப்படையாகவே அவளின் பாராட்டைச் சொல்லி விட்டாள்..

"நீங்க சிரிக்கிறப்ப ரொம்ப ஹேண்ட்சம்மா இருக்கீங்க சார்..."

நந்தினிக்கு சுவாதியின் அந்தப் பாராட்டுதலில் உடன்பாடில்லை.. அவள் மனம் சிணுங்கியது.. அது ஏனென்று தெரியாத குழப்பத்துடன் அவள் திருமேனி நாதரின் கோவில் கோபுரத்தைப் பார்த்தாள்..

"ஈஸிட்..?" பார்த்திபன் சுவாதியை விட்டு விட்டு நந்தினியைப் பார்த்தான்..

அதை உணர்ந்த நந்தினியின் வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறந்தன..

"சிரிக்கிறப்ப ரொம்ப ஹேண்ட்சம்ன்னா.. சிரிக்காதப்ப என்ன சொல்வீங்க..?" நந்தினியைப் பார்த்தபடி கேட்டான்.

அவனின் அந்தப் பார்வையைத் தாளமாட்டாதவளாய் தலை குனிந்தவளிடம் தென்பட்ட மென்மையில் அவன் மனம் பறிபோவதை அவன் உணர்ந்தான்..

"சிரிக்காதப்ப செம ஹேண்ட்சம்.." சுவாதி ஜொள்ளினாள்..

"அப்படிங்களா..?" பார்த்திபன் நந்தினியிடம் புருவங்களை உயர்த்தினான்..

அலை போல் மனதில் பொங்கியெழுந்த உணர்வின் அலைகளை கட்டுப் படுத்தும் வகையறியாதவாள் நந்தினி உதட்டைக் கடித்தாள்.. அவள் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர அரும்பாடு பட்டாள்..

"நீங்க சங்கரலிங்கம் சாரின் பேத்திதானே.."

பார்த்திபனின் பேச்சில் நந்தினியின் கண்களில் வியப்பு வந்தது...

"என் தாத்தாவை உங்களுக்குத் தெரியுமா..?"

"தெரியாம இருக்குமா..? நான் எக்ஸ்போர்ட் பண்றவன்.. ஸ்பின்னிங் மில் வைத்திருக்கிறவன்.. தொழில் விசயமா உங்க தாத்தாவை மீட் பண்ணியிருக்கிறேன்.. நித்யா குருப் ஆஃப் கம்பெனி யோட எம்.டி. ஸ்ரீவில்லிபுத்தூர் பார்த்திபன்னு சொல்லுங்க.. அவருக்குத் தெரியும்..."



பார்த்திபன் சரளமாக பேச ஆரம்பித்தான்.. முகுந்தனின் உதவியில்லாமல் தாரிணியின் உறவுப் பெண்களோடு பார்த்திபன் பழக்கமாகி விட்டதில் முகுந்தனுக்குள் சன்னமான பொறாமை எழுந்தது.. அதை தாரிணியின் நாணப் பார்வை ஓட்டிவிட்டது..

அவர்கள் கோவிலுக்குள் நுழைந்தார்கள்.. திருமேனி நாதரையும்.. அம்பாளையும் தரிசனம் செய்த பின்னால்.. கோவிலை வலம் வர ஆரம்பித்தார்கள்.. தாரிணி முகுந்தனுடன் பேசியபடி பின்தங்கி விட.. சுவாதியும் நந்தினியும்.. பார்த்திபனுடன் முன்னால் நடக்க வேண்டியதாகி விட்டது..

## 15

*பசித்திருந்த வயிறிருந்தும்..*
*உணவுண்ண மனமில்லை..*
*நிலவொளியில் சோறிருந்தும்..*
*நீயுண்ண வரவில்லை...*

"அமேசான் காடுகளின் அரிய வகை மூலிகைகள்.."

அமானுஷ்யக் குரலில் சொன்னாள் சுவாதி.. அடர்ந்த வனத்தின் ஊடே நடந்து கொண்டிருந்த நந்தினி.. சுற்றுமுற்றும் மிரளும் பார்வை பார்த்தபடி..

"சும்மாயிருடி.." என்று நடுங்கும் குரலில் கூறினாள்..

"ஏண்டி பயந்தாங்குளி..! நீதானேடி ஊரைச் சுத்திப் பார்க்கனும்னு அடம் பிடிச்ச..? அதனாலதான மண்டபத்துல ஏதோ வேலையிருக்குன்னு வந்த மாமாகூட தொத்திக்கிட்டு வந்து மண்டபத்தை நீங்க பாருங்க.. செண்பகத் தோப்பை நாங்க பார்த்துட்டு வர்றோம்ன்னு சொல்லி அனுப்பி வைச்சிட்டோம்..? அவர் அந்தப் பக்கம் போறாரு.. நாம இந்தப் பக்கம் வர்றோம்.. காட்டுக்குள்ள வர்ற வரைக்கும் தைரியமா இருந்துட்டு உள்ளே வந்தவுடனே ஊஹீஹீம்.. பயமாயிருக்குன்னு சொன்னா நான் என்னடி பண்றது..?"

"நீ என்னடி சொன்ன..?"

"நான் என்னென்னத்தையோ சொல்லி வைக்கிறேன்.. இதில நீ எதைச் சொல்றன்னு கேட்டா நான் என்னத்தைக் கண்டேன்..?"

"செண்பகத் தோப்புக்குப் போகலாம்.. வான்னுதான சொன்ன.."

"ஆமாம்... அதுக்கென்னடி இப்ப...? இதுதான் செண்பகத் தோப்பு.."

"உன் தலை.. நீ சொல்லவும் செண்பகப் பூமரங்களா இருக்கிற தோப்புன்னு நான் நினைச்சிட்டேன்.. இங்கே வந்து பார்த்தா அமேசான் காடுகளப் போலவே இருக்கு.. நீ ஒரு முடிவோடதான் என்னக் கடத்திக்கிட்டு வந்திருக்கேடி.."

நந்தினி பயத்துடன் சுவாதியுடன் ஒட்டிக் கொண்டாள்.. அவளோ வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்..

"ஹா.. ஹா.. செண்பகத் தோப்புன்னா.. செண்பகப் பூமரங்களா இருக்கிற தோப்பா..? ஹா.. ஹா.. முடியலைடி.."



ஏற்கனெவே அரண்டு போயிருந்த நந்தினி.. சுவாதியின் சிரிப்பு அந்த வனத்தின் நாலாதிசைகளிலும் எதிரொலித்ததில் இன்னும் கொஞ்சம் அரண்டு போனாள்..

"பிசாசே..! வாயை மூடித் தொலைடி.. எதிரொலி கேட்குது..."

"ஹா.. ஹா.. இதுதாண்டி செண்பகத் தோப்பு.. இது என்ன தெரியுமா..?"

"என்ன..?"

"வன விலங்குகளின் சரணாலயம்..."

"என்னது..?!"

அதிர்ந்து போன நந்தினி.. அருகிலிருந்த மரத்தை அண்ணாந்து பார்த்தாள்..

"அங்கே என்னடி பார்க்கிற..?" விசித்திரமாய் அவளைப் பார்த்தபடி சுவாதி கேட்டாள்..

"வனவிலங்குகள் சரணாலயம்ன்னா.. இந்த சிங்கம்.. புலி.. கரடியெல்லாம் வருமில்ல..?" நடுங்கினாள் நந்தினி..

"வந்தாலும் வரலாம்.." அவள் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றினாள் சுவாதி..

"அடிப்பாவி.. உன்னை நம்பி என்னை அனுப்பி வைச்சாரே என் தாத்தா..."

"அவருக்கென்னடி.. அவர் தங்கமான மனுசராச்சே.."

"அவர் தங்கம்தான்.. நீ தான் பித்தளை..."

"ஏண்டி.. உரசிப் பார்த்தயா..?"

"நீ செஞ்சு வைச்சிருக்கிற வேலைக்கு உரசி வேற பார்க்கனுமா..? எனக்காக பார்க்க வேணாம்.. என் தாத்தாவின் முகத்துக்காகவாவது நீ பார்த்திருக்கலாமில்ல.."

"யாருடி இவ.. ஏண்டி மரத்தை அண்ணாந்து பார்த்தன்னு கேட்டா என் முகத்தைப் பார்க்கலைன்னாலும் என் தாத்தா முகத்துக்காக பார்த்திருக்கலாமில்லன்னு நியாயம் கேட்கிறா.. ஏண்டி மரத்தைப் பார்த்த..?"

"சிங்கம்.. புலி.. கரடி வந்தா ஏறி உட்கார்ந்துக் கலாம்ன்னுதான்.."

"குட் ஐடியா.. முதல்ல இதுக்கு ஒரு பதிலைச் சொல்லு.. உனக்கு மரமேறத் தெரியுமா..?"

"தெரியாது..."

"முடியாதில்ல.. நீ மரமேறனும்னா ஒரு டேபிளைப் போட்டு.. அதில ஒரு ஸ்டூலைப் போட்டு.. அதை நான்கு பேர் பிடிச்சுக்கிட்டு.. உன்னை நான்கு போர் தூக்கி ஸ்டூலின் மேல விட்டாத்தான் முடியும்.. இதில மரத்தை அண்ணாந்து பார்த்து என்ன செய்யப் போற..? இதெல்லாம் வெட்டி வேலைன்னு உன் மனசுக்கே தோணலையா..?"

"சுவாதி.."

"சொல்லு.."

"பயமாயிருக்குடி.."

அச்சத்துடன் விரிந்த நந்தினியைப் பார்க்கும் போது சுவாதிக்குச் சிரிப்புத்தான் வந்தது.. தோழியின் கைவிரல்களை இறுக்கிப் பிடித்து அவள் தைரியம் சொன்னாள்...

"இங்கே பார் நந்தினி.. நாம மட்டுமா வந்திருக்கோம்.. நம்மளப் போல எத்தனை பேர் இங்கே வந்திருக்காங்கன்னு பார்த்தியா...? இவங்களையெல்லாம் விட்டுவிட்டு.. சிங்கமும்.. புலியும்.. உன்னையும்.. என்னையுமா துரத்தப் போகுதுக..?"



சுற்றிலும் இருந்த கூட்டத்தைப் பார்த்த நந்தினியின் நடுக்கம் குறைந்தது..

"அப்படிங்கறியா..?" சமாதானமானவளாக வினவினாள்..

"ஆமாம்ங்கிறேன்.." சுவாதி தோழியின் தலையில் செல்லமாக மோதினாள்..

மரங்கள் அடர்ந்த செண்பகத்தோப்பு ஸ்ரீவில்லிப்புத்-தூரை ஒட்டியிருந்தது... அதைப் பற்றி நந்தினி வினவியபோது...

"யெஸ்.. இது ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அடுத்து வரும் மலைத்தொடர்தான்.. இந்தக் காட்டோட தென்மேற்குப் பக்கத்திலே பெரியார் புலிச்சரணாலயம்.. இருக்கு.. வடமேற்கில மேகமலைக் காடுகள் இருக்கு.."

"எத்தனை கூலாச் சொல்றடி.. இருந்திருந்து இப்படியாப்பட்ட இடத்துக்கா என்னை நீ கூப்பிட்டுக்கிட்டு வரணும்..?"

நிறுத்திய புலம்பலை ஆரம்பித்து விட்ட நந்தினியின் கைபற்றி சமாதானப் படுத்தியபடி.. அந்த வனத்தைச் சுற்றிக் காட்டினாள் சுவாதி.. நடக்க.. நடக்க நீண்ட காட்டுப் பாதையில் கால் வலிக்க நின்று விட்ட நந்தினி..

"ஹப்பா.. முடியலைடி.. இந்தக்காடு முடியவே முடியாதா..?" என்று கேட்டாள்..

"இப்பத்தானே ஆரம்பிச்சிருக்கோம்.. இதுக்குள்ளே 'ஹப்பா'ன்னு மலைத்தா எப்படிடீ..? இதோட சுற்றளவு எத்தனை கிலோமீட்டர்ன்னு தெரியுமா..?"

"யாருக்குத் தெரியும்..?"

"480கி.மீ. அதில ஒரு கிலோமீட்டர் கூட நாம வந்திருக்க மாட்டோம்.."

"முடியலை சுவாதி..."

நந்தினி சரிந்து அமர்ந்து விட.. சுவாதி அருகில் அமர்ந்து ஜூஸ் பாட்டிலைத் திறந்து அவள் கையில் கொடுத்தாள்..

"குடி.. களைப்பு போய் விடும்..."

வியர்த்து விட்ட தோழியின் முகத்தை பரிவுடன் துடைத்து விட்டவளுக்கு நந்தினியால் அந்த அலைச்சலைத் தாங்க முடியுமா என்ற கவலை எழுந்தது.. 'தாத்தா காரை அனுப்பறேன்னுதான் சொன்னார்.. பட்.. அப்பா அதை வேண்டாம்ன்னு சொல்லிட்டாரே.. அவர் சொன்ன காரணமும் சரியாத்தானே இருக்கு..'

என்ன செய்வது என்ற யோசனையுடன் நந்தினிக்கு காற்று வரும்படி தன் துப்பட்டாவினால் அவள் விசிறிக் கொண்டிருந்தபோது..

"ஹலோ.. இங்கேயென்ன பண்றீங்க..?" என்ற குரல் கேட்டது..

நந்தினிக்கு விசிறி விட்டுக் கொண்டிருந்த சுவாதியும்.. கண்மூடி மரத்தின் மீது சாய்ந்து அமர்ந்திருந்த நந்தினியும் ஒருசேர அந்தக் குரலை அடையாளம் கண்டு கொண்டவர்களாக நிமிர்ந்தார்கள்..

அங்கே பார்த்திபன் நின்றிருந்தான்..

அவனைக் கண்டதும் நந்தினியின் கண்களில் வந்த மின்னலை அவன் இனம் கண்டு கொண்டான்.. அதில் அவன் கண்களும் மின்னியதை அவள் இனம் கண்டு கொண்டாள்.. அவர்கள் இருவரின் பார்வை பரிமாற்றத்தையும் கவனிக்காமல் சுவாதி குதூகலித்தாள்..

"நீங்களா சார்..! வாட் எ பிளசெண்ட் சர்ப்ரைஸ்.."



"எனக்கும் அப்படித்தான்.. செண்பகத் தோப்பைப் பார்க்க வந்தீங்களா..?"

"அதைச் சொல்லாதீங்க சார்.. இவ என்னை அடிக்க வருவா..?"

சுவாதியின் சிரிப்பில்... நந்தினி முகம் சிவக்க உதட்டைக் கடித்துக் கொள்ள... பார்த்திபனின் பார்வை அவளது இதழ்களின் மீது படிந்தது.. அதை உணர்ந்தவளின் முகம் அதிகமாக சிவந்தது..

பார்த்திபனின் மனதில் தென்றலடித்தது.. நந்தினியின் ஒவ்வொரு செய்கையிலும் வெளிப்பட்ட பெண்மையில் அவன் கிறங்கிப் போனான் அவளைப் பார்த்துக் கொண்டேயிரு என்று அவன் மனம் சொன்னதில் எப்படி இந்த மாய வலைக்குள் அவன் சிக்கிக் கொண்டான் என்று அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

"இவங்களைப் பார்த்தா அடிக்கிறவங்களைப் போலத் தெரியலையே..."

அவன் நந்தினிக்காக பரிந்து பேசியதில் அவளது பார்வை உயர்ந்து மின்வெட்டும் கால அளவிற்கு அவன் பார்வையைச் சந்தித்து மீண்டதில் அவனை மின்சாரம் தீண்டியது..

"ஆளைப் பார்த்து எடை போடாதீங்க சார்.. இவ மத்தவங்களுக்குத்தான் மல்லி.. எனக்குச் சரியான வில்லி.."

"ஹா.. ஹா..."

"நம்பலைல.. இவ முகராசி அப்படி.. இந்த மகராசி என்னை மொத்து.. மொத்துன்னு மொத்துவான்னு சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க.."

வரவழைத்துக் கொண்ட போலி சோகத்துடன் சுவாதி கர்சீப்பால் கண்இமைகளை தூசி தட்ட.. பொறுக்க முடியாத நந்தினி அவள் முதுகில் ஒரு போடு போட்டாள்..

"பார்த்தீங்கல்ல.." சுவாதி பார்த்திபனிடம் பஞ்சாயத்து வைத்தாள்...

"அடிக்க மாட்டான்னு சொன்னிங்க... உங்க முன்னாலேயே என்ன போடு போடறான்னு பாருங்க... இதில தனியா நான் அகப்பட்டேன்னா சட்னிதான்.."

"ஹா.. ஹா.. எதுக்காக உங்களை அடிக்கிறாங்க..?"

"அந்தக் கதையை ஏன் சார் கேட்கறிங்க..?" சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு சுவாதி ஆரம்பிக்க....

"வேண்டாம் சுவாதி.. வேண்டாம்.." என்று தடுத்தாள் நந்தினி...

"இவங்க வேண்டாம்ன்னு சொல்றாங்களே.."

நந்தினி தடுக்கும் கதையைக் கேட்க பார்த்திபனுக்கு மனமில்லை..

"அதையெல்லாம் பார்த்தா முடியுமா சார்.. உண்மையை விளம்பனும்னு நினைச்சா விளம்பிரனும்.. அதுதான் என்னோட பாலிசி.."

"குட் பாலிசி.."

"செண்பகத் தோப்பைப் பார்க்கப் போகலாம் வர்றியான்னு நான் கேட்டேன்.. இவளும் ஆஹான்னு கூடக் கிளம்பிட்டா.. இங்கே வந்து காட்டைப் பார்த்துட்டு.. குய்யோ முறையோன்னு அலறுகிறா.. ஏன்னு கேட்டா.. இவ செண்பகப் பூமரங்கள் இருக்கிற பூந்தோப்புன்னு நினைச்சிட்டாளாம்... இங்கே வந்து பார்த்தா காடு இருக்கு.. அம்மணி அலறாம என்ன செய்வா..?"



"ஓ..."

பார்த்திபன் ஆச்சரியத்துடன் நந்தினியைப் பார்த்தான்.. அவளின் ரசனையான எதிர்பார்ப்பில் அவளின் தன்மை வெளிப்படுவதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. காட்டையும் பூந்தோப்பாக நினைக்கும் அவள் குணத்தில் அவன் மனம் வசீகரிக்கப் பட்டது..

# 16

*நிலாச் சோற்றை நீ தந்தபோது...*
*நிம்மதிதான் மனதில் இல்லை..*
*நிம்மதியுடன் நான் வந்தபோது...*
*நிலாச்சோறும் நீயுமில்லை..!*

"உங்களுக்கு நடந்து பழக்கமில்லைன்னு நினைக்கிறேன்... அதனால்தான் இந்த இயற்கையை உங்களால் ரசிக்க முடியவில்லை.. வீண்பயமும் மனதில் வருது.." இதமாகப் பேசினான் பார்த்திபன்..

"இவளோட தாத்தா.. காரை எடுத்துக்கிட்டுப் போங்கன்னுதான் சொன்னார்.. பட்.. அப்பாதான் சொந்தக் காரங்க வீட்டுக் கல்யாணத்துக்கு அடுத்தவங்க காரில் போகக் கூடாதுன்னு சொல்லிட்டார்.." நந்தினியின் முடியை சீர் செய்தபடி சொன்னாள் சுவாதி...

"அவரோட வியூவில அதுதான் கரெக்ட் டிசிசன்.. இப்ப ஒன்னும் பிராப்ளமில்லை.. உங்களுக்கு என்ன

வேணும்..? ஊரைத்தானே சுற்றிப் பார்க்கனும்..? என் காரில் அழைச்சுட்டுப் போறேன்..."

பார்த்திபன் திடீரென்று இப்படி உதவிக்கரத்தை நீட்டி வைப்பானென்று நந்தினி எதிர்பார்த்திருக்கவில்லை.. அவனுடைய அந்த உதவியை ஏற்பதா வேண்டாமா.. என்ற குழப்பம் அவள் மனதில் ஏற்பட்டது.. சுவாதிக்கு எந்த விதமான குழப்பமும் இருக்கவில்லை.. கொஞ்சம் கூடத் தயக்கமின்றி அவனுடைய அந்த உதவியை அவள் ஏற்றுக் கொண்டு..

"தேங்க் யு சார்.." என்று சொன்னாள்...

"ஸ்ஸ்.. சுவாதி.. அவருக்கு எதுக்கு வீண் சிரமம்..?" நந்தினி ஆட்சேபிக்க முயன்ற போது..

"உஸ்ஸ்.." என்று ஆள்காட்டி விரலை வாயின் மீது வைத்து எச்சரித்தாள்..

"உன்னால நடக்கவும் முடியாது.. என்னாலே உனக்கு கார் வசதியை ஏற்பாடு பண்ணித்தரவும் முடியாது.. கல்யாண வீட்டில இருக்கிற டென்சனில எனக்கு கார் வேணும்னு கேட்டா என்தாய்மாமா என்னை மெச்சிக்கு வாரா..? சார்தான் உன் தாத்தாவுக்கு தெரிந்தவர்ன்னு சொல்றாரில்ல.. அப்புறமும் ஏண்டி அடம் பிடிக்கற..?"

அதற்கு மேல் மறுத்துப் பேசினால் பார்த்திபன் என்ன நினைத்துக் கொள்வானோ என்ற நினைவில் மௌனமாக இருந்து விட்டாள் நந்தினி..

"மர அணிலைப் பார்த்துட்டிங்களா..?" பார்த்திபன் கேட்ட போது..

"மர அணிலா..?" என்று திருதிருத்தாள் நந்தினி...



"எங்கே சார்..? இவதான் காட்டைப் பார்த்ததும் பயந்துக்கிட்டு நடக்க முடியாதுன்னு அழிச்சாட்டியம் பண்ணிட்டாளே.. அப்புறம் எங்கே போய் மர அணிலைக் காட்டறது..?" சுவாதி அலுத்துக் கொண்டாள்..

நந்தினிக்குத் தெரிந்ததெல்லாம் மரக்குதிரை.. மர ஊஞ்சல்.. மரத்தின் செய்யப்பட்ட நடைவண்டி.. கட்டில்.. முதலானவைதான்..

சின்னஞ்சிறுவயதில் மரக்குதிரையில் விளையாடியிருக்கிறாள்... மரத்தில் செய்யப்பட்ட தள்ளுவண்டியில் நடை பழகியிருக்கிறாள்.. வளர்ந்தபின்னால் மர ஊஞ்சலில் ஆடியிருக்கிறாள்.. மற்றபடி தேக்கு மரத்தில் செய்யப்பட்ட நிறைய பொருள்கள் அவள் வீட்டில் இருந்தன.. அத்தனையும் அந்தக் காலத்தில் கலை நுணுக்கத்தோடு செய்யப்பட்ட பொக்கிசங்கள்..

ஆனால் மரத்தில் செய்யப்பட்ட அணிலைப் பற்றி அவள் கேள்விப்பட்டதே இல்லை..

"அது என்ன.. அணில் பொம்மையா..?"

ஆவலுடன் கேட்டவளைப் பார்த்து சுவாதி சிரிக்க ஆரம்பிக்க.. பார்த்திபனின் முன்னால் தனது அறியாமையை வெளிப்படுத்தி விட்டோமோ என்று நந்தினி லஜ்ஜை கொண்டாள்..

அதை உணர்ந்தவனைப் போல பார்த்திபன் சிரிக்க வில்லை.. தன்மையாக மர அணிலைப் பற்றிய விளக்கத்தை அவளுக்குச் சொன்னான்..

"செண்பகத் தோப்பில மர அணில்தான் பேமஸ்ங்க.. அது பழுப்பு நிறத்தில் இருக்கும்... 735மீ நீளத்தில்

இருக்கும்.. இதோட ஸ்பெசலாலிட்டி என்னன்னா.. ஆபத்து சமயத்தில இது மரம் விட்டு மரம் தாவும் வேகத்தில பறக்க ஆரம்பிக்கும்.. அதனால இதுகளுக்கு பறக்கும் அணில்கள்ன்னு இன்னொரு பெயரும் இருக்கு..."

"அப்படியா..?"

பயத்தை மறந்து ஆர்வத்துடன் எழுந்து கொண்டாள் நந்தினி.. அவளின் அந்த ஆர்வத்தில் சுவாதிக்கு அப்பாடா என்று இருந்தது.. நந்தினியை அழைத்துக் கொண்டு வந்து பயமுறுத்தி விட்டோமோ என்ற குற்ற உணர்ச்சியில் இருந்தவளுக்கு.. அதிலிருந்து மீள முடிந்ததில் மெலிதான சந்தோசம் ஏற்பட்டது..

பார்த்திபனின் காரில் பின்பக்கம் சீட்டில் அவர்கள் ஏறினார்கள்.. கார் மெதுவாக அந்த காட்டுக்குள் ஊர்ந்து சென்றது.. வழியில் தென்பட்ட குரங்குகளையும்.. மான்களையும்.. காருக்குள் பாதுகாப்பாக இருந்தபடி பார்வையிட்டாள் நந்தினி..

"அங்கே பார்த்திங்களா.. அதுதான் மர அணில்களின் கூடு.."

பார்த்திபன் சுட்டிக் காட்டிய திசையில் மரக்கிளைகள் சந்திக்கும் பிரிவுகளில் தெரிந்த கூட்டைப் பார்த்த நந்தினியின் ஆர்வத்தில் மனம் லயத்தான் பார்த்திபன்..

"அதோ.. மர அணில்.." நந்தினி குதூகலித்தாள்...

நீண்ட அணில்களின் உடல் நீளத்தில் அவள் விழிகள் வியப்பில் விரிந்தன.. காரின் ஓசையில் அவைகள் பறந்த வேகத்தில் அதிசயப் பட்டுப் போனாள் அவள்..

கார் அருவிக் கரையை அடைந்து நின்றது... இறங்கியவளின் விழிகள் பிரகாசித்தன... பாறையிலிருந்து கொட்டிய அருவியை கன்னத்தில் இருகைகளையும்



வைத்து அழுத்திப் பார்த்தவளின் சந்தோசத்தில் அவன் மனம் சிலிர்த்தது...

"ஹை.. அருவி சுவாதி..."

"அருவிதான்.."

"காட்டுக்குள்ளே அருவியிருக்குன்னு நீ சொல்லவே இல்லியே.."

"எங்கே நீ சொல்ல விட்ட..? பூந்தோப்புன்னு ஏமாத்தி உன்னை சிங்கம், புலி. கரடிகிட்ட மாட்டிவிடத் திட்டம் போட்டேன்னு குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்றதிலேயே குறியாய் இருந்தியே.." குறைபட்டாள் சுவாதி..

"இது மீன்வெட்டிப் பாறை அருவி.." என்றான் பார்த்திபன்...

"மீன் வெட்டிப் பாறை அருவியா..? அப்படின்னா..?" நந்தினி விளக்கம் கேட்க ஆரம்பிக்க..

"யாருக்குடி தெரியும்..? இந்தப் பாறைக்குப் பெயர் மீன் வெட்டிப் பாறையாம்... இதில இருந்து அருவி கொட்டுதாம்.. அப்படித்தானே சார்... அருவியைப் பார்த்தோமா.. ரசிச்சோமான்னு இல்லாம.. ஆயிரத்தைஞ்சு கேள்வியக் கேட்டு வைக்கிறா.. வாடி.." என்று சுவாதி நந்தினியை இழுத்துக் கொண்டு அருவியின் அருகில் போய் விட்டாள்..

பார்த்திபனின் செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பேசியபடி சற்று நகர்ந்து நின்றவன்.. பேசி முடித்து விட்டு அந்தப் பெண்கள் என்ன செய்கிறார்கள் என்று திரும்பிப் பார்த்தான்...

பார்த்தவன் அப்படியே அசைவற்று நின்று விட்டான்..

நந்தினி சேலையை இழுத்துச் செருகிக் கொண்டு அருவிக்குள் புகுந்திருந்தாள்... கொட்டுகிற அருவியில் இரு கைகளையும் நீட்டி முகத்தைக் காட்டி அவள் நனைந்து கொண்டிருந்ததைப் பார்த்தவனுக்கு.. இவள் தேவலோக அப்ரஸோ என்ற மலைப்பு மனதில் எழுந்தது..

தெறித்து விழுந்த நீர் திவலைகள் முகத்தில் படிய.. அதை வழித்து விட்டுச் சிரித்தவளின் பல் வரிசையில் அவன் மனம் மயங்கினான்.. நனைந்திருந்த சேலை அவள் உடல் முழுவதும் ஒட்டிக்கிடக்க.. வெளிப்பட்ட அவளது யௌவனத்தின் அறை கூவலில் அவனது வாலிபம் தடுமாறியது.. உடைகள் மறைக்காத சருமத்தின் அரைத்த மஞ்சளின் நிறத்தில் அவன் கண்கள் பதிந்து அகல மறுத்தன..

அங்குலம்.. அங்குலமாக அவளை அவன் ரசித்துக் கொண்டிருப்பதை உணராதவளாக சுவாதியின் மீது நீரை வாரியிறைத்து நீர் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தாள் நந்தினி..

'இவள் தாமரை மலர்..'

அவன் மனம் அவளை மோகித்தது..

'தாமரை மலர்தான் தண்ணீரை விரும்பி அதில் மலரும்.. இவளும் அப்படித்தான் போல...'

அவன் வேட்கையுடன் அவளை நோக்கினான்.. அரைத்த மஞ்சளின் நிறத்தில் இருந்தவளின் மீது சூரியனின் கதிரொளி பட்டதில் அவளது சருமம் மின்னியதில் அவன் மனம் அலைக்கழிந்தது..

'இவள் தங்கத் தாமரை...'

அந்த மயக்கும் மோகினியின் அழகில் தன்னை இழக்க ஆரம்பித்ததை அவன் உணர ஆரம்பித்தான்...



"தங்கத் தாமரை மலரே..!
வா.. அழகே..!
தத்தித் தாவுது மனமே..!
வா... அருகே.."

அவன் மெல்லிய குரலில் பாடினான்.. காருக்கு அருகில் விலகி நின்றவன் பாடும் குரல்.. அருவிக்குள் குளித்துக் கொண்டிருந்தவர்களின் செவியை எட்டவில்லை.. அருவியின் ஆர்ப்பரிப்பு.. பாடலின் சப்தத்தை உள் வாங்கிக் கொண்டது..

"வெள்ளம்.. மன்மத வெள்ளம்..
சிறு விரிசல் கண்டது உள்ளம்..
அது எல்லாம் பெண்ணே..
உன்னாலே..."

அவன் காரின் மீது சாய்ந்து நின்றபடி பாடிக் கொண்டிருக்க.. நனைந்த உடலும்.. ஒட்டிய சேலையுமாக.. அருவியிலிருந்து மயக்கும் மோகினியாக வெளிப்பட்டாள் நந்தினி...

பார்த்திபனுக்குள் மோகம் கிளர்ந்தது.. அவளைக் கட்டித்தழுவ வேண்டும் போன்றதாபம் வனுக்குள் மூண்டதில் அவன் வெலவெலத்துப் போனான்...

'என்ன இது.. நானா இப்படி நினைக்கிறேன்..?'

சட்டென்று முகம் திருப்பிக் கொண்டு காரில் ஏறி அமர்ந்து விட்டவனைக் கவனிக்காமல் நனைந்த சேலையின் ஈரத்தை பிழிந்து கொண்டிருந்தாள் நந்தினி.. அதில் வெளிப்பட்ட அவளின் கணுக்கால் வெளுப்பில் அவன் மனம் மையம் கொண்டது..

'ச்சே..! என்னை நம்பி வந்தவளை இப்படித் திருட்டுத் தனமா நான் ரசிக்கலாமா..?' தன்னையே கடிந்து கொண்டான் பார்த்திபன்..

கலகலத்துச் சிரித்தபடி அந்தப் பெண்கள் காரில் ஏறியதும் காரைக் கிளப்பினான்.. முன் பக்க கண்ணாடியின் வழியாக நந்தினியின் புத்துணர்வு மிக்க முகத்தை அவனால் பார்க்க முடிந்தது..

அவள் சந்தோசமாக இருந்தாள்.. அவளிடம் தெரிந்த சோர்வு பறந்து போயிருந்தது.. நனைந்த சேலை இன்னும் உலராததில் ஏற்பட்ட மெலிதான குளிரை அவள் ரசித்து அனுபவிப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..

"பாட்டைப் போடுங்க சார்.." சுவாதி சீட்டில்தாளம் போட்டபடி சொன்னாள் பார்த்திபன் பாட்டைப் போட்டான்..

*"நெஞ்சக்குள் பெய்திடும் மாமழை...!*
*நீருக்குள் மூழ்கிடும் தாமரை..!*
*சட்டென மாறுது வானிலை..*
*பெண்ணே உன்மேல் பிழை..."*

பாடல் ஒலிக்க ஆரம்பிக்க.. அவன் மனதில் நீரில் மூழ்கிய அவளின் முகம் தெரிந்தது...

## 17

வேய்ங்குழலின் இசையினிலே...
வேணுகானம் கேட்க வந்தேன்..
நிலா முற்றம் நீயளித்து...
நிலாச்சோறு உணவளித்தாய்..

வெகுநேரம் கழித்து வீடு திரும்பிய மகனுக்காக காத்திருந்த நித்யா.. அவனைக் கண்டதும்..



"என்ன பார்த்தி.. இன்னைக்கு இவ்வளவு லேட்டாய் வர்ற..?" என்று கேட்டாள்..

அன்னையின் கேள்வியைக் கவனிக்காமல் ஏதோ ஒரு மந்திரத்தால் தாக்குண்டவனைப் போல மாடிப்படிகளில் ஏறி விட்ட மகனைக் கண்டதும் அவள் நெற்றியில் சுருக்கங்கள் படிந்தன..

'இவனுக்கு என்ன ஆச்சு..?'

ஏதேனும் காற்று.. கருப்பு அடித்திருக்குமோ என்று அப்பேற்பட்ட மகனைப் பற்றி அவளால் நினைக்க முடியவில்லை.. பார்த்திபன் காற்று.. கருப்புக்கும் கை கொடுத்து வியாபாரம் பேசி முடித்து விட்டு வந்து விடும் வல்லமை கொண்டவன்..

'பின்னே எதுக்காக இப்படி மந்திரிச்சு விட்ட கோழி மாதிரி ஒருமார்க்கமா இருந்து வைக்கிறான்..?'

டைனிங் டேபிளின் மீது சாய்ந்து கன்னத்தில் கை வைத்து அமர்ந்து விட்டாள் அவள்.. தண்ணீர் தாகத்தில் அறையை விட்டு வெளியே வந்த பவித்ரா.. அன்னை அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டதும் பயந்து போனவளாக..

"என்னம்மா..? உங்களுக்கு என்ன ஆச்சு..?" என்று பதறியபடி தாயின் அருகே வந்து அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்..

"சில்லுன்னு இருக்கே.." வாய் விட்டு அவள் சொல்ல.. மகளின் ஸ்பரிசத்தில் நிமிர்ந்து அமர்ந்த நித்யா..

"என்னடி..? தூங்காம இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க..?" என்று கேட்டாள்..

"முதல்ல நீங்கஇங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்கன்னு சொல்லுங்க..."

"உன் அண்ணனுக்கு டிபன் எடுத்து வைக்க உட்கார்ந்திருக்கேன்.."

"அதுக்கா இப்படி உட்கார்ந்திருக்க..?"

"எப்படி உட்கார்ந்திருக்கேன்..?"

"என்னவோ காற்று.. கருப்பு.. அடிச்சதைப் போலயில்ல உட்கார்ந்திருக்கீங்க.."

பார்த்திபனைப் பற்றி நித்யா சந்தேகப்பட்டதை நித்யாவுக்கே பவித்ரா திருப்பி அனுப்பியதில் நித்யா நொந்து நூலானாள்...

"ஏண்டி.. என்னைப் பார்த்தா அப்படியாயிருக்கு..?" கவலையுடன் வினவினாள்..

"அதுக்கு மேலேயும் இருக்கு.. என்னதான்ம்மா ஆச்சு..?"

"தெரியலையே.. இதை உன் அண்ணன்கிட்டதத்தான் போய் நீ கேட்கனும்.."

இந்த அம்மாவுக்கு என்னதான் ஆச்சு என்று திகைத்தாள் பவித்ரா..

தென்னைமரத்தில் தேள் கொட்டினால்.. பனை மரத்திடம் விசாரணை செய்யனுமா..? இந்த நியாயத்தை அவள் வேறெங்கும் கேட்டதில்லையே..

"ஏம்மா நீங்க இப்படி உட்கார்ந்திருந்தா அண்ணன் கிட்ட விளக்கம் கேட்கனுமா..? என்னம்மா இங்கே ஓடுது..?"

"எதுவும் ஓடலை.. உன் அண்ணன்தான் வந்தான்.. கதவைத் திறந்து விட்டு டிபன் வைக்கவான்னு கேட்டவள பாக்காம.. பித்துப் பிடிச்சதப்போல எங்கேயோ பார்த்துக்கிட்டு மாடியேறி ஓடிப்போனான்.."



"என்னது..?!!..." ஆச்சரியமானவாள் பவித்ரா..

"நோ சான்ஸ்.. அண்ணனாவது.. பித்துப் பிடிச்சதைப் போல ஓடறதாவது.. நீங்க கனவு.. கினவு கண்டிருப்பீங்க.. ஆக்சுவலா அம்மா.. நீங்கதான் ஒரு மார்க்கமா இருக்கீங்க.. எதுக்கும் நாளைக்கு ஒரு செக் அப் பண்ணிடலாம்.. ஷேப்டி தானேம்மா..."

நித்யாவை மீண்டும் தலையில் கை வைக்க வைத்துக் கொண்டிருந்த பவித்ரா.. மாடிப்படியில் காலடியோசை கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்... ஏதோவொரு சிந்தனையுடன் பார்த்திபன் வந்து கொண்டிருந்தான்..

"சொன்னேனில்ல.." நித்யா கண் காட்டினாள்...

"நம்ம அண்ணனாம்மா இது..?" பவித்ரா மூக்கின் மேல் விரலை வைத்தாள்...

"அவனேதான்.. சீக்கிரம் கூப்பிட்டிருடி.. இல்லைன்னா வாசல் பக்கம் போயிரப் போறான்..."

"இந்த ராத்திரி நேரத்திலயா..? ஆனாலும் அம்மா நீங்க அண்ணன் மேல அபாண்டமாய் பழி போடறிங்கன்னு தான் நான் சொல்லுவேன்.."

பவித்ரா தீவிரமாக மறுத்துக் கொண்டிருந்த போதே பார்த்திபன் டைனிங் ஹாலைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் வாசல் பக்கம் போய் கொண்டிருந்தான்..

'ஏதாச்சும் வேலையிருக்குமோ..'

பவித்ராவிற்கு ஒன்றும் புரியவில்லை.. குளித்து கைலிக்கும் கேசுவல் சர்ட்டுக்கும் மாறியிருப்பனுக்கு அந்த அகால வேளையில் என்ன வேலையிருக்கக் கூடும் என்ற நினைவில் அவள் அவசரமாக பார்த்திபனின் பின்னால் ஓடிப் போய் அவனை நிறுத்தி தடுத்தாட் கொண்டாள்..

"எங்கேண்ணா போற..?"

பவித்ராவின் கேள்வியில் தந்நிலைக்குத் திரும்பிய பார்த்திபன் அப்போதுதான் தன் தவறை உணர்ந்தவனாக..

"காரில் ஒரு முக்கிய ஃபைலை விட்டுட்டேன்னு நினைக்கிறேன் பவி.. அதைப் பார்க்கத்தான் போய்க்கிட்டு இருக்கேன்.." என்று வெகு அழகாக நிலைமையை சமாளித்தான்..

அவன் பொய் சொல்கிறான் என்பதை தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்ட தாயும் மகளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

அதற்குள் ஃபைல் கதையை மறந்தவனாக பார்த்திபன் டைனிங் ஹாலுக்குத் திரும்பினான்...

"என்னாச்சுண்ணா.. ஃபைலை எடுக்கப் போகலியா..?" கேலியாக கேட்டாள் பவித்ரா..

"அதுக்கு என்ன கால் முளைச்சா ஓடிப் போகப் போகுது..? காலையிலே எடுத்துக்கலாம்.." சாவாதானமாகச் சொன்னான் பார்த்திபன்..

"நினைச்சேன்.." என்றாள் பவித்ரா..

"எதை நினைச்ச..?"

"நீ இப்படித்தான் பதில் சொல்லுவன்னு நினைச்சேன்.. ஆமா.. யார் அந்தப் பெண்..?"

பவித்ரா கண்சிமிட்டியதில் பார்த்திபனுக்கு தூக்கிவாரிப் போட்டது.. தங்கையின் சரியான கணக்கிட்டில் அவனுக்கு ஆச்சரியம் வந்தாலும்...

"எந்தப் பெண்..?" என்று அறியாதவனைப் போலக் கேட்டான்..



"எந்தப் பெண்ணா..? உன்னை புத்தி தடுமாற வைச்சிருக்காளே... அந்தப் பெண் யார்ன்னு கேட்டேன்.."

"நீ தான் தடுமாறிப் போயிருக்க.."

"யாரு..? நானு.. புத்தி தடுமாறிப் போயிருக்கேன்..? குட் ஜோக்.. அப்ப அது யாருன்னு நீ சொல்லவே மாட்ட.."

"இருந்தாத்தானே சொல்றதுக்கு..?"

"ஹை..ஹை.. இந்தக் கதையே இங்கே வேணாம்.. எனக்கு காதுகுத்தி பல வருசமாச்சு.. வேணும்னா என் காதைப் பாரு.."

பவித்ரா காதை ஆட்ட.. அதிலிருந்த ஜிமிக்கிகள் ஆடின.. நித்யா மகளின் தலையில் குட்டினாள்..

"உளராம படுக்கப் போ.. இல்லாத பெண்ணைக் கேட்டா அவன் எப்படி பதிலைச் சொல்லுவான்..?"

"இல்லாத பெண்ணா..?"

தமையனைப் பார்த்தபடி அவள் கேட்க.. அவன் கண்களில் கணப்பொழுதுக்கு சலனம் வந்து போனது.. பவித்ரா அதை கண்டு கொண்டவளாக...

"அண்ணா..?!!.." என்றாள்..

"ஏய்.." அவன் சிரித்து விட்டான்..

இப்போது அவர்களின் பேச்சில் நித்யாவுக்கும் ஆர்வம் ஏற்பட்டு விட்டது.. கையிலிருந்த கரண்டியை பாத்திரத்தில் வைத்து விட்டு.. கதை கேட்கும் ஆர்வத்துடன் மகனுக்கு எதிரே அமர்ந்தாள்..

"யாருடா அது..?"

"சும்மா இருங்கம்மா.. இவ சொல்றான்னு நீங்களும் கேட்கறிங்களே..."

"அப்படியா..? இல்லைன்னு உங்க முகத்தை நேருக்கு நேராப் பார்த்துச் சொல்லச் சொல்லுங்கம்மா.."

"நீ முதல்ல படுக்கப் போ.. நாளைக்கு உனக்கு காலேஜ் இருக்கா இல்லையா..?"

"அவளை ஏண்டா அதட்டறே.. அவ கேட்டதுக்கு பதிலைச் சொல்லு..."

"அதான் சொல்லிட்டேனே..."

"என் முகத்தைப் பார்த்துச் சொல்லு.."

பார்த்திபன் நித்யாவின் முகத்தைப் பார்த்தான்.. பொய் சொல்ல மனம் வராமல் சிரித்து விட்டான்..

"என்னடா விசயம்..?" நித்யாவின் முகம் ஒளிர்ந்தது..

"ஒன்னுமில்லைம்மா.. என் பிரண்ட் முகுந்தன் இருக்கானில்ல.."

"பார்த்திபனூர் முந்தன்தானே.. அவனுக்குத்தான் இரண்டு நாளில் கல்யாணம் வருதே..."

"அவனை நேத்துப் பார்த்தேன்.."

"அதுக்கும் நீ இப்படி முழிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"அவன் வண்டி பஞ்சர் ஆகியிருந்தது.. கோவிலுக்குப் போகனும்னான்.."

"எந்தக் கோவிலுக்கு..?"

"திருச்சுழி.. திருமேனிநாதர் கோவிலுக்கு.."

கோவிலுக்கு போய் சாமி கும்பிட்டு விட்டு வந்ததிற்கா இந்த விழி விழிக்கிறான் என்று நித்யா விழித்தாள்.. பவித்ரா இதற்கெல்லாம் அயர்கிற ஆளில்லையே.. அதனால்..



"கதைக்கு வாண்ணா.." என்றாள்..

"அது ஒன்னுமில்லை பவித்ரா..."

"நீ சொல்லு... அதில ஒன்னுமில்லையா.. ஓராயிரம் இருக்கான்னு அம்மாவும் நானும் முடிவு பண்ணிக்கிறோம்.."

"அது வந்து.. பவிக்குட்டி.."

"அட..! பாசமழை பொழியுது.. அப்ப எதுவோ வரப் போகுதுன்னு அர்த்தமாகுது.. சொல்லு.. சொல்லு.. விசயத்தை ஓப்பன் பண்ணு..."

"முகுந்தன் கல்யாணம் பண்ணிக்கப் போகிற பெண்ணும் கோவிலுக்கு வந்திருந்தது.."

"அதில அந்த அண்ணன்தானே ஒரு மார்க்கமா ஆகனும்..? நீ எதுக்கு ஒரு மார்க்கமா ஆகியிருக்கிற..?" பவித்ரா சந்தேகமாய் விழிக்க...

"அடச்சீ.. வாயைக் கழுவு.." என்று அதட்டினான் பார்த்திபன்...

"அதை நீதான் செய்யனும்.. சாப்பிடறது நீதான் நானில்ல.." என்று சொல்லி விட்டாள் பவித்ரா..

"அந்தப் பெண் என் தங்கையைப் போல..."

"இல்லையே.. அவ என் ஜாடையில இல்லியே.. வேற மாதிரி இருப்பாளே.."

பவித்ராவின் பேச்சில் பார்த்திபன் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு இமைக்காமல் அவளைப் பார்த்தான்..

"விடுண்ணா.. இதெல்லாம் ஒரு பேச்சா.." அவள் ஜகா வாங்கினாள்..

"ஆனாலும் நீ தங்கைக்கொரு கீதம் பாடறதுக்கா இந்த முழி முழிக்கற.. எங்கேயோ இடிக்குதேண்ணா..."

"அந்தப் பெண்கூட அவளின் ரிலேடிவ்ஸ் இருந்தாங்க.."

இப்போது பார்த்திபன் பவித்ராவின் முகம் பார்க்காமல் சாப்பாட்டில் கவனமாக..

"அவங்க யாருன்னு சொல்லு.." என்று தூண்டினாள் பவித்ரா..

"ஒரு பெண் அவளின் அத்தைமகளாம்.. இன்னொருத்தி.. அந்த அத்தை மகளின் சிநேகிதியாம்.." என்றவன் நித்யாவைப் பார்த்து..

"அம்மா.. அந்தச் சிநேகிதியின் தாத்தா யார் தெரியுமா..? சங்கரலிங்கம்..!" என்று சொன்னான்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட நித்யாவுக்கும் பவித்ராவுக்கும் அந்தப் பெண் எந்தப் பெண் என்று தெரிந்து விட்டது..



# 18

நிலாச்சோறு வேளையிலே..
நீயும் வந்தாய் சோலையிலே..
இரவு முழுதும் சொன்ன கதையை..
மறந்து போனாய் காலையிலே..

"எந்த சங்கரலிங்கம்டா தம்பி... திருப்பூர் சங்கரலிங்கத்தையா சொல்கிற..?" ஆர்வத்துடன் வினவினாள் நித்யா...



திருப்பூரில் அவர்களுக்கு உறவினர்கள் இருக்கிறார்கள்.. அந்த உறவினர்கள் பெண் கொடுத்து பெண் எடுத்த சம்பந்த வழி வகைகளில் சங்கரலிங்கமும் அவர்களுக்கு உறவினராக இருந்தார்..

"அவரேதான்ம்மா.." என்றான் பார்த்திபன்..

"அப்படியா சொல்கிற..? அவரோட பேத்தியை நீ பார்த்தியா..?" பரபரத்தாள் நித்யா...

"ஏம்மா... அண்ணன்தான் ஒரு மார்க்கமா இருக்குதுண்ணா.. நீங்க அதுக்கு மேலே பல மார்க்கமா ஆகறிங்க.. இப்ப என்ன..? அந்த தாத்தாவை உங்களுக்குத் தெரியுமா..?"

"தெரியுமாவாது.. அவர் நமக்கு தூரத்து வழியிலே சொந்தம்டி...."

"என்ன சொந்தம்..?"

பவித்ரா என்னவோ இயல்பாகத்தான் வினவி வைத்தாள்.. பார்த்திபனுக்கு 'கெதுக்' என்று இருந்தது..

'ஒருவேளை அந்த சங்கரலிங்கம் அம்மாவுக்கு மாமா முறையாய் இருந்து தொலைச்சிட்டா..?'

நினைத்தாலே அவன் நெஞ்சம் நடுங்கியது.. அப்படியொரு உறவுமுறை வருமானால் நந்தினி அவனுக்கு தங்கை முறையில் வந்து விடுவாளே...

அஷ்டகோணலாய் மாறி விட்ட தமையனின் முகத்தில் பிரதிபலித்த நவரசங்களையும் ரசித்தபடி... அவன் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றிக் கொண்டேயிருந்தாள் பவித்ரா..

"ஒருவேளை அவரோட பேத்தி எனக்கு அக்கா.. தங்கை முறையில் வருவாளோ..."

ஓரக்கண்ணால் தமையனின் முகத்தை அவதானித்த படி அவள் கேள்வி கேட்க..

"சேச்சே.." என்று மறுத்து அவன் வயிற்றில் பாலை வார்த்தாள் நித்யா...

"அவர் எனக்கு பெரியப்பா முறையாகனும்.. ஏண்டா பார்த்திபா.. சடகோபன் அண்ணாவின் மகளையா நீ பார்த்த..?"

பார்த்திபனின் சுவாசம் சீரானது.. பவித்ராவுக்கு சிரிப்பு வந்தது..

"நீங்க மட்டும் முறையை மாத்திச் சொல்லி-யிருந்தீங்க.. அண்ணனுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திருக்கும்.."

"சும்மாயிருடி..."

"நிஜமாத்தான் சொல்றேன்ம்மா.. இப்பத்தான் அண்ணன் முகத்தைப் பார்த்தா தெளிவா இருக்குது.. அப்ப இது முகத்தைப் பார்க்கனுமே..."

நித்யா மகனின் முகத்தைப் பார்த்தாள்.. மகனின் முகத்தில் தெளிவு இருந்ததோ.. இல்லையோ.. அவளின் முகத்தில் தெளிவு இருந்தது..

"பார்த்திபா.. அந்தப் பெண்ணை நம்ம வீட்டுக்கு விருந்து சாப்பிட அழைத்துக்கிட்டு வா.." என்றாள்..

"அவ பெயர் நந்தினிம்மா.." பார்த்திபன் சொன்னான்

"பாருடா.." பவித்ரா கேலிசெய்தாள்..

"பெயரைச் சொல்லும் போதே உன் முகத்தில் பல்ப் எரியுது.. என்ன..? கண்டதும் காதலா..?"

பவித்ராவின் கண் சிமிட்டலை பார்த்திபனும் ஆட்சேபிக்கவில்லை.. நித்யாவும் அதட்டவில்லை..



"நான் கூப்பிட்டா நல்லாயிருக்காதும்மா.." பார்த்திபன் எடுத்துச் சொன்னான்..

"அதுவும் சரிதான்.. நானே வந்து கூப்பிடறேன்.." உடனே ஒப்புக் கொண்டாள் நித்யா..

"எப்பப் போகலாம்..."

"இப்பவே கூட போகலாம்.."

நித்யா கிளம்ப யத்தனிக்க..

"அம்மா..!" என்று ஆச்சரியப் பட்டுப் போனாள் பவித்ரா...

"எதுக்கும்மா இந்த வேகம்..? மணி என்னன்னு பார்த்தீங்களா..?"

சுவர் கடிகாரம் இரவு மணி பதினொன்று என்றது..

"இப்பக் கிளம்பி.. அதுக்குப் பின்னால காரில ஏறி.. அவங்க ஊருக்குப் போயி இறங்கி காலிங்பெல்லை அழுத்தறப்ப நடுராத்திரி பனிரெண்டு மணியாகியிருக்கும்.. அந்த நேரத்திலதான் நீங்க அண்ணனுக்குப் பெண் பார்க்கப் போகனுமா..?"

நித்யாவின் முகத்தில் அசடு வழிந்தது.. அதைப் பிடித்து வைத்தால் குடம் குடமாய் நிறைந்து விடும் என்று தோன்ற.. அந்த அளவிற்கு அன்னையை ஆர்வப்பட வைத்த அந்தப் பெண்ணின் முக்கியத்துவத்தைப் பற்றி அறியும் ஆர்வம் அவளுள் எழுந்தது..

"இந்த அளவுக்கு அந்தப் பெண்ணுக்கு இம்பார்டன்ஸ் கொடுக்கனுமாம்மா..?"

"என்னடி பவி இப்படிச் சொல்லிட்ட..? சங்கரலிங்கம் யாருன்னு நினைச்ச..? திருப்பூரில் அவர் பெயரைச்

சொன்னா தெரியாத ஆளே இருக்க மாட்டாங்க.. அவ்வளவு பெரிய ஆள்.. திருப்பூரில மூணு ஸ்பின்னிங்மில்லு.. குன்னூரில் எஸ்டேட்.. ஊட்டியில் ஹோட்டல்ன்னு செல்வம் கொழிக்கிற குடும்பம்டி.."

"ஓஹோ..."

அசுவராஸ்யமாக சொன்னாள் பவித்ரா.. ஒரு பெண்ணின் அருமையும் பெருமையும்.. அவள் பிறந்த வீட்டின் செல்வச் செழுமையை வைத்தே நிர்ணயிக்கப் படுவதில் அவளுக்கு உடன்பாடில்லை...

அதை நித்யாவிடம் அவளால் சொல்லிவிட முடியாது.. நித்யா அப்படிப்பட்ட பெண்மணியல்ல.. பணத்தை வைத்து யாரையும் எடைபோட மாட்டாள்.. அனைவரிடமும் அன்போடு பழகுபவள்.. அப்படியிருக்கும் போது பவித்ராவின் கேள்வி அவளைக் காயப்படுத்தி விடக்கூடும்..

"பெரிய மனிதர்ன்னா அவர் பெரிய மனிதர்.. மனிதரோட தராதரம் அறிந்தவர்.. சடகோபன் அண்ணாவும் அப்படித்தான்.. யாமினியை ஒருதரம்தான் பார்த்திருக்கேன்.. அதிர்ந்து பேச மாட்டா.."

"இவளும் அப்படித்தான்.." என்றான் பார்த்திபன்..

"அப்படியா..?" வியப்புடன் கேட்டாள் நித்யா..

"ஆமாம்மா.. பேசினா வார்த்தைக்கு வலிக்குமோன்னு நினைக்கிறவ.. அவ்வளவு ஸாப்ட்.. நாம பத்து வார்த்தை பேசினா அவ ஒரு வார்த்தை பதில் சொல்றதே அபூர்வம்.."

பார்த்திபன் பேசப்பேச.. எதனால் அவன் மனம் நந்தினியின் வசம் சிக்கியிருக்கிறது என்பதை பவித்ராவால் புரிந்து கொள்ள முடிந்தது..



'அந்த நந்தினியைப் பார்க்கனுமே..'

அவள் மனதில் சுவராஸ்யம் தோன்றியது..

"அம்மா காலையிலே போய் அவங்களைப் பார்த்துட்டு நம்ம வீட்டுக்கு விருந்து சாப்பிட இன்வைட் பண்ணிட்டு வாங்களேன்.." என்றாள்..

"நீ சொல்லனுமா என்ன.. நான் முடிவே பண்ணிட்டேன்.."

நித்யாவின் முகக் குறிப்பைப் பார்த்தால் அன்று இரவு அவள் தூங்குவது என்பது சந்தேகமான ஒன்று என்று பவித்ராவிற்குத் தோன்றியது..

'அந்த நந்தினி எப்படியிருப்பா..?'

யோசனையுடன் தூங்கப் போய் விட்டாள் பவித்ரா.. காலையில் காபி குடிக்க அவள் வந்த போதே.. வெளியே கிளம்பத் தயாரானவளாய் சந்தனக் கலரில் கெட்டி ஜரிகையிட்ட பட்டுப் புடவையும்.. வைர நகைகளுமாக காட்சியளித்தாள் நித்யா..

"அம்மா.. எனக்குக் காபி..."

"வண்ணக்கிளியிடம் கேட்டு வாங்கிக்க..."

என்னடா இது என்று நொந்து போனவளாக வண்ணக் கிளியைத் தேடி சமையலறைக்குப் போனாள் பவித்ரா.. காலை பலகாரத்தை சமைக்கும் வேலையில் மும்முரமாக இருந்த வண்ணக்கிளி.. பவித்ராவைக் கண்டதும்..

"என்னம்மா..?" என்றாள்..

"உன்னிடம் வேற என்னத்தைக் கேட்கப் போறேன் வண்ணக்கிளி..? காலங்கார்த்தாலே குடிக்க வேண்டிய காபியத்தான் கேட்கப் போறேன்.."

"ஹி.. ஹி.. இந்தாங்கம்மா..."

வண்ணக்கிளி கலந்து கொடுத்த காபியை விட அவளின் சிரிப்பு நன்றாக இருக்கிறதென்ற நினைவுடன் காபியை உறிஞ்சிய வண்ணம் சமையலறையை விட்டு வெளியே வந்தாள் பவித்ரா...

பார்த்திபன் நேர்த்தியான உடையுடன் மாடிப் படிகளில் இறங்கி வந்தான்.. அவனது கம்பீரமான அழகை ரசித்தபடி..

"எனக்குக் காலேஜ் போக நேரமிருக்கேண்ணா.." என்றாள் பவித்ரா..

"ஸாரி பவி.. டிரைவர்தான் உன்னை காலேஜில் டிராப் பண்ணுவார்.. எனக்கு வேற வேலையிருக்கு.." என்ற பார்த்திபன் நித்யாவைப் பார்த்து..

"போகலாமாம்மா..?" என்று வினவினான்..

'ஓ.. இரண்டு பேரும் விருது நகருக்கு கிளம்பறாங்களா..'

இரவில் நடந்த பேச்சுவார்த்தையை அப்போதுதான் நினைவு கூர்ந்தவளாக தலையில் தட்டிக் கொண்டாள் பவித்ரா..

"இரண்டு இட்லியைப் பிய்த்து வாயில் போட்டுக் கிட்டு போகலாமா..?"

நித்யாவின் ஆலோசனை அங்கீகரிக்கப் பட்டது.. பவித்ராவை கண்டு கொள்ளாமல் அவர்கள் இருவரும் புறப்பட்டு விட்டார்கள்..

'அண்ணியா வர்றதுக்குள்ளேயே இவ்வளவு அலப்பறையா..?'



தோளைக் குலுக்கியபடி கல்லூரிக்குக் கிளம்பத் தயாரானாள் பவித்ரா..

பார்த்திபனும் நித்யாவும் விருதுநகரில் இருந்த அம்பலவாணனின் வீட்டை அடைந்த போது.. வீடே கல்யாண வீட்டின் கலகலப்போடு இருந்தது.. வாசலில் இருந்த பந்தலின் முன்பாக காரை நிறுத்திவிட்டு இறங்கியவர்களின் தோரணையில் பந்தலில் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தவர்கள் திரும்பிப் பார்த்து தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.. அதில் ஒருவர் எழுந்து நின்று

"யாரைப் பார்க்கனும்..?" என்று கேட்டார்..

"மிஸ்டர் அம்பலவாணனைப் பார்க்கனும்.." என்றான் பார்த்திபன்..

"வாங்க.." மரியாதையுடன் அழைத்துச் சென்றவர்..

"அண்ணா.. இவங்க உங்களைப் பார்க்க வந்திருக்காங்க.." என்று அம்பலவாணனிடம் அவர்களைக் கொண்டு சென்று நிறுத்தினார்..

"வாங்க.. வாங்க.." கரம் குவித்த அம்பலவாணனின் முகத்தில் 'இவர்கள் யாராக இருக்கக் கூடும்..?' என்ற கேள்வி எழுதி ஒட்டி இருந்தது..

"என் பெயர் பார்த்திபன்.. நான் உங்க மாப்பிள்ளை முகுந்தனோட நண்பன்.. இவங்க என் அம்மா.."

பார்த்திபனின் சுய அறிமுகத்தில் பரபரப்பானார் அம்பலவாணன்..

"தாமரை.. இங்கே வா.. மாப்பிள்ளையோட பிரண்ட் வந்திருக்கார்.."

அவர் போட்ட சத்தத்தில் அங்கே ஓடி வந்தாள் தாமரை..

# 19

*நீ சிந்துகிற சிரிப்பொலியில்..*
*நந்தவனம் பூக்குதடி..*
*உன் நிலாச்சோறு வதனம்தன்னில்*
*என்மனமே இளைப்பாறுதடி..*

சுவாதி போனை எடுக்க.. நந்தினி அதை பறிக்கவுமாக.. அங்கே போன் இழுப்போராட்டம் நடந்து கொண்டிருந்தது..

"நீ செய்கிறது கொஞ்சம் கூட சரியில்லைடி நந்தினி.."

"அதை நீ சொல்லாதே.."

"கூழுக்கும் ஆசை.. லிப்ஸ்டிக்கிற்கும் ஆசைன்னா முடியுமாடி.."

"இங்கே பார் சுவாதி.. எனக்கு ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசைதான்.. உன்னால் முடிந்தால் சுற்றிக்காட்டு.. இல்லேன்னா விட்டுவிடு.. அதை விட்டுட்டு.. மத்தவங்களை டிஸ்டர்ப் பண்ணாதே.."

"அவர் மத்தவரா..?"

சுவாதியின் குரலில் தெரிந்த சொந்தத்தில் நந்தினியின் மனம் சோர்ந்தது.. செண்பகத் தோப்பிலிருந்து வந்தது முதல் அவள் பார்த்திபனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்.. பார்த்திபன் இப்படி.. பார்த்திபன்



அப்படியென்று அவளது சிந்தனை முழுவதும் பார்த்திபனைச் சுற்றியே வட்டமடித்துக் கொண்டிருந்தன..

நந்தினியால் அதைக் கேட்க முடியவில்லை.. அது ஏனென்றும் அவளுக்குத் தெரியவில்லை.. அவளுக்கும் பார்த்திபனைப் பார்க்க வேண்டும் போல்தான் இருந்தது.. அவன் பேசுவதை கேட்க வேண்டும்.. அவன் சிரிக்கும் அழகை ரசிக்க வேண்டும் போன்ற இத்யாதி.. இத்யாதி ஆசைகள் அவள் நெஞ்சம் முழுவதும் நிறைந்து கிடந்தன..

ஆனால் அவள் 'பார்க்கும் அதே பார்த்திபனை சுவாதியும் பார்க்க விரும்பியதில் அவள் மனம் நைந்து போனாள்.. அந்த மனவலிக்கு முன்னால் பார்த்திபனை பார்க்காமல் இருப்பது ஒன்றும் பெரிதான ஒன்றில்லை என்று அவளுக்குத் தோன்றிவிட.. முழுமூச்சாக பார்த்திபனின் உதவியைத் தவிர்த்தாள்...'

"ஏண்டி துயரம் பண்ற..?" சுவாதி அலுத்துக் கொண்டாள்..

அவர்களிருந்த அறைக்குள் ஓடி வந்த ஒரு சிறுமி நந்தினியைப் பார்த்து..

"அக்கா.. அக்கா.. உங்களைப் பார்க்க உங்க சொந்தக்காரங்க வந்திருக்காங்க.." என்று மூச்சிரைக்கச் சொன்னாள்..

"என் சொந்தக்காரங்களா..?"

நந்தினிக்கு சிறுமி ஆள் மாற்றித் தகவல் சொல்கிறாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டது..

"ஏண்டி உன்னைக் கூப்பிடறாளோ.." சுவாதியிடம் கேட்டாள்..

"தெரியலையே.. வா.. போய் பார்ப்போம்.."

"நான் எதுக்குடி.. நீ போயிட்டு வா.."

"இங்கேயிருந்து என்ன செய்யப் போற..? அதான் அழிச்சாட்டியம் பண்ணி.. ஹி மேனை வரவிடாம செய்துட்ட.. இனிப் பொடி நடையாய் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போக வேண்டியதுதான்.. இன்னைக்குச் சாயந்திரமே பெண்ணழைக்க வந்துருவாங்க.. நாளைக்குக் கல்யாணம்.. மண்டபத்திலே பொழுது ஓடிடும்.. அதுக்கடுத்த இரண்டு நாளில நாம ஊரைச் சுற்ற முடிந்த அளவு சுற்றிட்டு நம்ம ஊரைப் பார்க்க ஓடியாகனும்.. இதில இன்னைக்கு சாயந்திரம் வரை கிடைத்திருக்கிற பொழுதை வேஸ்ட் பண்ண முடியுமா..? அதனால ஹேண்ட் பேகை கையோடு எடுத்துக்கிட்டு கீழே போவோம்.. வந்திருக்கிற உறவுக்காரங்களுக்கு ஒரு 'ஹாய்' சொல்லிட்டு நாம ஊரைச் சுற்ற ஓடிப் போயிரலாம்.."

அதுவும் சரிதான் என்ற நினைவுடன் நந்தினி கண்ணாடி பார்த்துக் கொண்டாள்..

"அதெல்லாம் அழகாத்தான் இருக்கே.." என்ற சுவாதியின் குரலில் திரும்பி ஹேண்ட் பேகை கையில் எடுத்துக் கொண்டு சுவாதியைப் பின் பற்றினாள்..

"அட..! இங்கே பாருடி.. நம்ம 'ஹி மேன்' வந்திருக்காரு.." உற்சாகம் கொப்புளிக்கும் குரலுடன் துள்ளினாள் சுவாதி..

'எங்கே..?' நந்தினியின் கண்கள் அவனைத் துழாவின..

அவளது பார்வை உயர்ந்த அதே நொடியில் அவனின் பார்வையும் திரும்பியதில் இருவரின் பார்வையும் சந்தித்துக்



கொண்டன.. அவனது கண்களில் தெரிந்த மின்னலில் நந்தினியின் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

'இவன் எப்படி இங்கே வந்தான்..?' என்ற கேள்வி நெஞ்சில் எழுந்தாலும்.. அவனை அங்கே கண்டதில் அவள் மனதில் இனிப்பு பரவுவதை தடுக்க அவளால் முடியவில்லை..

"இதோ அவங்களே வந்துட்டாங்க.." தாமரை சொன்னாள்..

"என்னடி இது.. நம்மைப் பார்க்க வந்திருக்கிற கெஸ்ட் ஹிமேன் தானா..?" சுவாதி கிசுகிசுத்தாள்..

"தெரியலையே.." என்றாள் நந்தினி..

"பார்த்தியா.. இவர் வாக்குத் தவறாத மனுசரா இருக்காரு.. உன்னை மாதிரி பிரண்டுகிட்ட இருந்து காப்பாத்த எனக்காக அந்த ஆண்டவனே அனுப்பி வைச்ச ரட்சகன் இவர்டி.."

சுவாதி மெய் சிலிர்த்தாள்.. அவளின் அந்த 'எனக்காக' என்ற வார்த்தைப் பிரயோகத்தை நந்தினி ரசிக்கவில்லை.. அவள் மனம் கூம்பியது..

"ஹாய்.." சுவாதி பார்த்திபனைப் பார்த்து கையாட்டினாள்..

"ஹாய்.." என்ற பார்த்திபனிடம் அவனருகில் அமர்ந்திருந்த நித்யா..

"இவளையா மென்மையின் மறு வடிவம்னு சொன்ன..?" என்று மெலிதான சன்னக்குரலில் யோசனையுடன் கேட்டாள்..

ஆர்ப்பரிக்கும் அருவியைப் போன்ற கலகலப்புடைய சுவாதியா.. பத்து வார்த்தை பேசினால் ஒரு வார்த்தை பதில் பேசுவாள் என்ற எண்ணம் நித்யாவுக்கு..

"இல்லேம்மா.. இவ நந்தினியோட பிரண்ட்.." பார்த்திபன் அதே சன்னக்குரலில் பதிலளித்தான்..

"அதானே பார்த்தேன்.." சந்தேகம் தெளிந்தாள் நித்யா..

"இவங்க என்னோட அம்மா.." பார்த்திபன் பொதுவாக அறிமுகம் செய்த வைத்தான்..

"ஹாய் ஆண்ட்டி.." என்று கையாட்டினாள்..

நந்தினியோ இருகரத்தையும் குவித்து வணக்கம் சொன்னாள்..

நித்யாவின் முகத்தில் திருப்தி நிலவியது.. பார்த்திபனுக்கு அப்போதே நந்தினியின் கையைப் பிடித்து அவன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் போல இருந்தது..

"வாம்மா.. பார்த்தி சொன்னான்.. நீ சங்கரலிங்கம் பெரியப்பாவின் பேத்தியாமே.." நித்யா பரிவுடன் நந்தினியைப் பார்த்தாள்..

"இதைப் பாருடி.. ஸோ.. உன்னைப் பார்க்க வந்திருக்கிற சொந்தக்காரங்க இவங்கதானா..?" சுவாதி முகவாயில் ஒற்றைவிரலை வைத்து அதிசயித்தாள்..

நந்தினிக்கும் அது ஆச்சரியத்தை அளித்தது.. முதன் முதலாக அவள் மனதின் மெல்லிய உணர்வுகளைத் தொட்டுச் சென்று அவளது பெண்மையை தட்டியெழுப்பி தடுமாற வைத்த பார்த்திபன் அவளுக்கு உறவுக்காரனா..?

"இதைக் கவனிச்சியா..? உன்ன இவங்க பெரியப்பா வோட பேத்திங்கிறாங்க.. இதிலிருந்து என்ன தெரியுது..?"



சுவாதி புருவங்களை உயர்த்தி கிசுகிசுக்க.. நந்தினி திருதிருத்தாள்.. அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை..

"நீ சுத்த மக்கு பிளாஸ்திரிடி.." சுவாதி அலுத்துக் கொண்டாள்..

"இதையெல்லாம் நீ யோசிக்கவே மாட்டியா..?"

"எதைடி சுவாதி..?"

"அதான்.. இந்த உறவுமுறை வரைபடத்தை.."

நந்தினி அந்த வேலையை வைத்துக் கொள்வதே இல்லை.. தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் உறவு முறை வரைபடங்களில் அவளுக்கு தலைசுற்றல்தான் ஏற்படும் என்பதால் நேரடியாக அவர்கள் என்ன உறவு முறையாக வேண்டும் என்பதைச் சொல்லச் சொல்லி சங்கரலிங்கத்திடம் சொல்லி விடுவாள்.. அவரும் அவரின் நிற்க நேரமில்லாத நேரமின்மையை மனதில் கொண்டு உறவுமுறை வரைபடத்தை தவிர்த்து விடுவார்..

"ப்ம்ச்.. என்னன்னு சொல்லு..."

"என்னத்தைச் சொல்ல..? இவங்க சொல்கிற உறவு முறையில இருந்து பார்த்தா நீ இவங்களுக்கு அண்ணன் மகளாகிற.. அதாவது.. இவங்க உனக்கு அத்தை முறையாகிறாங்க..."

இதைச் சொன்ன சுவாதியின் குரலில் சன்னமான பொறாமையுணர்வு தென்பட்டதோ என்ற சம்சயம் நந்தினியின் மனதில் எழுந்தது..

பார்த்திபனின் அன்னை நந்தினிக்கு அத்தை முறையானால் பார்த்திபன் அவளுக்கு என்ன முறையாக வேண்டும் என்பதை ஏன் சுவாதி சொல்லவில்லை..? ஒருவேளை.. அவன் நந்தினிக்கு அத்தை மகன் உறவு

முறையில் வருவதைச் சொல்ல சுவாதி விரும்ப வில்லையோ..

நந்தினியின் பூஞ்சை மனம்.. கேள்விகளின் பாரம் தாங்காமல் கனத்தது.. அவளின் உணர்வுப் போராட்டத்தை அறியாத நித்யா வாஞ்சையுடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்..

"வாம்மா.. இப்படி வந்து உட்காரு.."

நந்தினி சுவாதியை விட்டு நகர மனமில்லாமல் தேங்கி நிற்க..

"போடி.." என்றாள் சுவாதி..

நந்தினி நித்யாவின் அருகே சென்று அமர்ந்தாள்.. பாசத்துடன் வருடிய அவளது பார்வையில் லஜ்ஜையுற்ற வளாக நிலம் பார்த்தாள்....

"அப்படியே எங்க அண்ணனையும்.. யாமினி அண்ணியையும் கலந்து செஞ்சு வைச்ச சிலையை மாதிரி இருக்கே.." தழதழத்தாள் நித்யா..

இதுபோன்ற சூழல்கள் நந்தினிக்கு அரிதாகத்தான் கிடைத்திருக்கின்றன.. அவளுடைய தாய்.. தந்தையை நினைவுபடுத்தி எவரும் அவளிடம் பேசியதில்லை.. அப்படிப் பேசுபவர்கள் மிகச் சிலரே.. அதுவும் ரூபாவின் வருகைக்குப் பின்னால் அந்தச் சிலரும் அவர்களின் வீட்டுப் பக்கம் வருவதில்லையென்பதால்.. நந்தினியின் பெற்றோரைப் பற்றிய நினைவு கூர்தல்கள் அத்தி பூத்ததைப் போல ஆகி விட்டன..

நந்தினியின் நெஞ்சம் நெகிழ்ந்தது.. அவளுடைய தாய் தந்தையை நினைவு கூர்ந்த நித்யாவின் மீது அவளுக்கு பாசம் ஏற்பட்டது..



"பார்த்தி சொன்னான்.. சங்கரலிங்கம் தாத்தாவோட பேத்தி நம்ம பக்கத்துக் கல்யாணத்துக்கு வந்திருக் கிறான்னு.. கேட்டதும் உன்னைப் பார்த்தே ஆகனும்னு கிளம்பி வந்துட்டேன்.. ஏம்மா.. இவ்வளவு கிட்டக்க வந்துட்டு நீ எங்க வீட்டில கை நனைக்காம போகலாமா..?"

என்னடா இது என்று ஆகிவிட்டது நந்தினிக்கு..

'கை நனைப்பதா..?' அவள் சுவாதியைப் பார்க்க..

"ஆண்ட்டி விருந்துக்கு கூப்பிடுகிறாங்கடி.." என்று அவள் எடுத்துக் கொடுத்தாள்..

"அது வந்து.. நாங்க இங்கே கெஸ்டா வந்திருக்கோம்.." நந்தினி மென்று விழுங்கிய போது..

"அதுக்கென்ன ஆண்ட்டி.. வந்துட்டாப் போச்சு.." என்று உடனடியாக ஒப்புக் கொண்டாள் சுவாதி..

"எப்ப வருகிறீங்கம்மா..?" நித்யா ஆனந்தத்துடன் கேட்க..

"அதுக்கு என்ன நாள் நட்சத்திரமா பார்க்கனும்..?" என்று சுவாதி பதிலுக்கு கேட்டாள்..

"இப்பவே வர்றோம் ஆண்ட்டி.. ஆக்சுவலா நந்தினிக்கு ஊரைச் சுற்றிக்காட்டத்தான் கிளம்பிக்கிட்டு இருந்தேன்.. நீங்க வந்துட்டிங்க... ஈவினிங் கல்யாண மண்டபத்துக்கு போயாகனும்.. நாளைக்கு முழுக்க கல்யாண மண்டபத்திலே பிஸியாகிருவோம்.. ஸோ.. இன்னைக்கு சாயங்காலத்துக்குள்ளே இவளுக்கு அய்யனார் அருவி.. சவேரியார் சர்ச்.. இருக்கன்குடி மாரியம்மன் கோவில் மூன்றையும் காட்டியாகனும்.. அதுக்கு இடையில உங்க வீட்டுக்கு சாப்பிட வந்துட்டாப் போச்சு.. குல்லூர் சந்தை லேக்கையும்.. புளவக்கல் அணைக்கட்டையும்

கல்யாணத்துக்கு அடுத்த இரண்டு நாளில் பார்த்துடறதா பிளான் வைச்சிருக்கோம்..."

சுவாதி விவரித்த நிகழ்ச்சி நிரலில் எங்கே நித்யா நந்தினியை 'சரியான ஊர் சுற்றி' என்று நினைத்து விடுவாளோ என்று பயந்து போனாள் நந்தினி..

நல்லவேளையாக அவள் அப்படி நினைக்காமல் சிரித்த முகத்துடன்..

"சொல்லிக்கிட்டே இருந்தா எப்படி.. கிளம்புங்க.. கிளம்புங்க.." என்று சொன்னாள்..

## 20

உன்னோடு நானுண்ட..
நிலாச்சோறு..!
எந்நாளும் அதுதானே..
பெரும் பேறு..!

நீண்ட நெடிய மதில் சுவர்களைக் கொண்ட சர்ச்சின் நுழைவாயிலுக்குள் கார் நுழைந்தது.. அங்கே விரவி நின்ற அமைதியினிலே மனம் திளைத்தாள் நந்தினி..

'இது சர்ச்சுக்கே உரித்தான அமைதி..' அவள் நினைத்துக் கொண்டாள்...

மன அமைதியில்லாத மனிதர்களுக்கு மன அமைதியைத் தரும் ஆலயமாக சர்ச் அமைந்திருப்பதைப் பற்றி என்றும் போல அன்றும் அவள் மனதில் பாராட்டுதல் எழுந்தது..



நந்தினியிடம் அந்த வழக்கம் இருந்தது.. அலையடிக்கும் ஆழ்மனதை சமனப் படுத்த அவள் சர்ச்சை நாடிச் செல்வதுண்டு.. திருப்பூரில் இருக்கும் மிகப்பெரிய சர்ச்சின் நீண்ட படிக்கட்டுகளில் தனிமையாக அவள் அமர்ந்திருப்பாள்.. அவள் மனம் அமைதியடைந்ததும் எழுந்து வந்து விடுவாள்..

'வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே.. என்னிடம் வந்து இளைப்பாறுங்கள்..'

சர்ச்சின் சுவரில் தெரிந்த வாசகத்தில் அவள் பார்வை பதிந்தது...

எந்வொரு பாரத்தையும் விட.. மனதின் துயரத்தின் பாரம் அதிகமான கனத்தைக் கொண்டது என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

மனதின் துயரின் பாரத்தை யாராலும் சுமக்க இயலாது.. எதைவேண்டுமானாலும் தாங்கிக் கொள்பவர்கள் மனது படும் வலியின் பாரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நொறுங்கித்தான் போவார்கள்..

"உங்களுக்கு சர்ச்சுன்னா பிடிக்குமோ..?"

அவள் முகத்தில் தெரியும் உணர்வுகளை அவதானித்த பார்த்திபன் கேட்டான்..

"எனக்கு கோவில்களைப் பிடிக்கும்.." நந்தினி முறுவலித்தாள்..

பார்த்திபனுக்கு அந்த பதிலை பிடித்திருந்தது.. உண்மைதானே.. இறைவன் குடி கொண்டிருக்கும் ஆலயங்களைத் தனித்துப் பிரித்துப் பார்க்க வேண்டுமா..?

அது சிவன் கோவிலாக இருந்தாலும்.. யேசு கிறிஸ்துவின் கோவிலாக இருந்தாலும்.. அல்லாவின்

கோவிலாக இருந்தாலும்.. கோவில் கோவில்தானே.. தெய்வம் தெய்வம்தானே..

"இந்த சர்ச்சை 2003-ம் வருசம் கட்டியிருக்காங்க.. பிரான்சிஸ் அஸோஸியேசனிலிருந்து பிரான்சிஸின் நினைவா இந்த சர்ச்சை கட்டினாங்க.. இங்கே உங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கு..."

பார்த்திபனின் முன்னுரையில் அந்த ஆச்சரியம் என்னவாக இருக்கக் கூடும் என்ற வினா நந்தினியின் முகத்தில் வந்தது.. அவர்கள் சர்ச்சுக்குள் பிரவேசித்தார்கள்.. அதன் சுவர்களில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் கிருஷ்ணன் தேரில் அமர்ந்து கீதையை அர்ஜுனனுக்கு உபதேசிப்பதைப் போன்ற சித்திரமும்.. இஸ்லாமியர்களின் பிறை வடிவச் சித்திரமும் பொறிக்கப் பட்டிருந்தன...

"பெண்டாஸ்டிக்.." மெய் சிலிர்த்துப் போனாள் நந்தினி..

பார்த்திபனின் முகத்தில் முறுவல் வந்தது.. சுவாதி செல்போனில் சித்திரங்களை படம் பிடிக்க ஆரம்பித்தாள்.. நந்தினி முழங்காலிட்டு அமர்ந்து சேலை முந்தானையை முக்காடிட்டுக் கொண்டு கண்மூடி பிரார்த்திக்க ஆரம்பித்தாள்..

கைகட்டி நின்றிருந்த பார்த்திபன் அவளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.. மனமுருக பிரார்த்தனை செய்யும் அவளிடம் மதபேதம் தெரியவில்லை.. வேண்டி விட்டு எழுந்தவளின் முகத்தில் தெரிந்த தேஜஸில் தன்மனதை பறிகொடுத்தான் அவன்.

"போகலாமா..."



அவன் கேட்டதும் அவள் தலையசைத்தாள்.. பேச்சுக்கள் தேவையற்ற மௌனம் அவர்களைச் சுற்றிப் படர்ந்திருந்தது.. அவர்கள் சர்ச்சை விட்டு வெளியே வந்தார்கள்.. சர்ச்சின் கோபுரத்தை செல்போனில் படம் பிடித்துக் கொண்டிருந்த சுவாதி அவர்களை திரும்பிப் பார்த்தாள்..

"என்னடி ஆச்சு.. சாமிகிட்ட ஒப்பிக்க வேண்டியதை எல்லாம் ஒப்பிச்சு முடிச்சுட்டியா..?" என்று கேட்டாள்..

"ஆச்சு.."

பார்த்திபன் கேட்டுக் கொண்டிருக்கிறானே என்ற லஜ்ஜையுடன் பதில் சொன்னாள் நந்தினி...

"வா.. வா.. போகலாம்.. அடுத்தது அய்யனார் அருவி தான்.. லன்சுக்கு செமத்தியா சமைச்சு வைச்சிருக்கேன்னு ஆண்ட்டி சொல்லியிருக்காங்க.. அருவியில குளியல் போட்டுட்டு அவங்க வீட்டைப் பார்த்து ஒட்டம் பிடிச்சா செம வெட்டு வெட்டலாம்.. இந்த நாலு நாளா சைவமா சாப்பிட்டு நாக்கு செத்துக்கிடக்கு.." சப்புக் கொட்டினாள் சுவாதி..

"நீ அதிலேயே இரு.." நந்தினி கடிந்து கொண்டாள்..

அவளுக்கு நித்யாவை நினைத்துப் பார்க்கும்போது இதமாக இருந்தது.. சுவாதியின் நிகழ்ச்சி நிரலில் அயர்ந்து போகாமல் அதை அங்கீகரித்ததோடு நிற்காமல் அன்றைய நிகழ்ச்சி நிரலை அவளே தயாரித்துக் கொடுத்தாள்..

"பார்த்தி.. என்னை வீட்டில டிராப் பண்ணிட்டு வந்து இவங்களைக் கூப்பிட்டுக்கிட்டுப் போய் சவேரியார் சர்ச்சையும்.. அய்யனார் அருவியையும் காண்பித்து விட்டு மதிய லன்ச்சுக்கு நம்ம வீட்டுக்கு அழைத்துக்கிட்டு வந்து

விடு.. சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுக்கட்டும்.. சாயந்திரமா இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு நாம எல்லோருமே போய்விட்டு அங்கிருந்தே நேரா மண்டபத்துக்குப் போயிரலாம்.. அதனால.. பெண்களா.. உங்களோட டிரஸ்.. ஜீவல்ஸ் எல்லாத்தையும் மூட்டை கட்டிக்கிட்டு ரெடியாய் இருங்க..."

அவளுடைய திட்டத்தின்படிதான் அவர்கள் சவேரியார் சர்ச்சிற்கு வந்திருந்தார்கள்.. பார்த்திபன் நித்யாவை விட்டுவிட்டு வருவதற்குள் காலைஉணவை முடித்து விட்டு.. உடைகளையும்.. நகைகளையும் ஒரு பெட்டியில் அடுக்கிக் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் தயாராகி விட்டார்கள்..

ரங்கநாதனும்.. சித்ரலேகாவும் ஆசுவாச பெருமூச்சை விட்டார்கள்.. நந்தினியைப் பற்றியும்.. சுவாதியின் லூட்டியைப் பற்றியும் கவலைப் பட்டு அவர்களை கண் காணித்துக் கொண்டிருக்காமல் அவர்கள் நிம்மதியாக திருமண வீட்டின் வேலைகளில் ஈடுபடலாமே...

'பத்திரம்..' என்று எச்சரிக்கத் தேவையின்றி பார்த்திபன் அந்தச் சுற்று வட்டாரங்களில் அறியப்பட்ட பிரபலமான மனிதனாக இருந்தான்..

"பார்த்தியாடி தாமரை.. நம்ம மாப்பிள்ளையோட பிரண்டு நித்யா குருப் ஆஃப் கம்பெனியோட எம்.டி. பார்ததிபனா இருக்காரு.. இவர் கூட வந்தவங்கதான் இவரோட அம்மா நித்யாவாம்.. பெரிய இடத்தில பிரண்ட்ஷிப் வைச்சிருக்காரே.. கெட்டிக்கார மாப்பிள்ளைதான்.."

அம்பலவாணன் மெச்சிப் போனார்.. கூடுதலாக பார்த்திபன் நந்தினிக்கு உறவுக்காரன் என்றும் ஆகிவிட..



அவர்கள் பயமில்லாமல் சுவாதியையும்.. நந்தினியையும் பார்த்திபனின் காரில் அனுப்பி வைத்தார்கள்..

சவேரியார் சர்ச்சைப் பார்த்துவிட்டு அவர்கள் விருதுநகரிலிருந்து 12கி.மீ. தொலைவில் இருந்த காட்டுப் பகுதிக்குள் காரில் போனார்கள்.. அடர்ந்த காட்டைப் பார்த்ததும் நந்தினியின் விழிகளில் பயம் சூழ்ந்தது..

"என்னடி சுவாதி.. இதுவும் காடா இருக்குது.." என்றாள்..

"பின்னே.. அருவியெல்லாம் நம்ம வீட்டு மொட்டை மாடியிலேயா வந்து கொட்டும்..? காட்டிலதான் கொட்டும்.." என்றாள் சுவாதி..

அடர்ந்த மரங்களின் அசைவுகள் எழுப்பிய இனிய இன்னிசை போன்ற ஓசையை செவி மடுத்தபடி அய்யனார் கோவில் கொண்டிருந்தார்.. சிவந்த விழிகளுடன் குதிரையில் அமர்ந்திருந்த அய்யானாரை வணங்கி விட்டு.. அந்தக் கோவிலை வலம் வந்தார்கள்..

அய்யனார் கோவிலை ஒட்டி பதினைந்து அடி உயரத்தில் இருந்து அய்யனார் அருவி விழுந்து கொண்டிருந்தது..

வெண்ணிற நுரையைப் போன்ற அதன் நீர்த்தி வலைகளின் தொடுப்பில் வழக்கம் போல சிலிர்த்துப் போனாள் நந்தினி..

"வாடி.. நனையலாம்.."

சுவாதி நீரில் புகுந்து விட்டாள்.. தொடர்ந்து நனைந்த நந்தினியைப் பார்த்தபடி காரின் மீது சாய்ந்து நின்றான் பார்த்திபன்.. அவன் மனதில் முதல் நாள் எழுந்த அதே அதிர்வு எழுந்தது..

ஒருவர் மீது ஒருவர் நீரை வாரியிறைத்தபடி கலகலத்துச் சிரித்த அந்தத் தோழிகளில் நந்தினியின் அழகைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தான் பார்த்திபன்..

தேவதையின் பேரெழிலும்.. மோகினியின் மயக்கும் வனப்பும் நிறைந்த அவளின் யௌவனத்தை அறை கூவும் நனைந்த உடலின்மீது அவனின் பார்வை விலக முடியாமல் மையம் கொண்டு சுழன்றது..

*'பொன் வண்ணம் பூசிய தாரகை..*
*பெண்ணே நீ காஞ்சனை..!'*

அவன் மனதில் பாடல் எழுந்தது..

*'ஓ சாந்தி.. சாந்தி.. ஓ சாந்தி..*
*உன் விழியில்.. விழியில் எனை ஏந்தி..*
*ஏன் சென்றாய்.. சென்றாய்.. எனை நீங்கி..*
*என்றும் நீயே எந்தன் அந்தாதி..'*

மனதுக்குள் கைகளை விரித்தபடி அவன் பாடினான்.. அந்த கைகளுக்குள் அவள் ஓடிவந்து அடைக்கலமானால் எப்படியிருக்கும் என்று நினைவில் அவன் உடல் தகித்தது..

"போகலாமா..?"

சுவாதியின் கேள்வியில் நிமிர்ந்தான்.. அன்று அவர்கள் கையோடு கொண்டு வந்திருந்த மாற்றுடைகளை மாற்றியிருந்தார்கள்.. ஈர உடைகளைப் பிழிந்து பிளாஸ்டிக் கவரில் போட்டு கையில் பிடித்திருந்தாள் நந்தினி... அவள் முகத்தில் படிந்திருந்த உலராத நீர்த் திவலைகள் பனியில் குளித்த மலரைப் போல இருந்ததில் மனம் மயங்கினான் பார்த்திபன்..



"ம்ம்ம்.." கார்கதவை திறந்து விட்டான்..

அவனது மௌனத்தைக் கவனிக்காமல் தோழியுடன பேசியபடி காரில் ஏறிக் கொண்டாள் நந்தினி.. ஒரு தாபப் பெருமூச்சுடன் காரின் முன்பக்கம் அமர்ந்து காரைக் கிளப்பிய பார்த்திபன் முன்பக்க கண்ணாடியில் வழியாக நந்தினியைப் பார்த்தபடியே காரை ஓட்டினான்..

சுவாதி சொன்ன ஏதோ ஒரு நகைச்சுவைக்கு கலகலத்துச் சிரித்தபடி யதேச்சையாக காரின் முன்பக்க கண்ணாடியைப் பார்த்த நந்தினி பார்த்திபனின் பார்வையைப் பார்த்து விட்டாள்.. அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தவனின் பார்வை விலகவில்லை.. நந்தினியின் சிரிப்பு மறைந்தது.. அவனது பார்வையின் வேகத்தைத் தாள மாட்டாமல் அவள் தவித்தாள்.. அவளது அந்தத் தவிப்பை ரசித்தபடி காரில் பாடலை ஒலிக்க விட்டான் பார்த்திபன்..

*"படைத்தானே.. பிரம்மதேவன்..*
*பதினாறு வயது கோலம்...*
*இது யார்மீது பழிவாங்கும்*
*சோதனை..?*
*உனைக் காண்போர்க்கு சுகமான*
*ஒரு வேதனை.."*

மனதைக் கவ்வும் அந்தப் பாடல் வரிகளில் அவனது பார்வை கூர்மையாக கண்ணாடியில் தெரிந்த அவளது பிம்பத்தின் மீது படிந்தது.. மயக்கும் அவளது பேரெழிலைக் கண்டவனால் அந்த சுகமான வேதனையை உணர்ந்து கொள்ள முடிந்தது..

# 21

நிலாக்கால வேளையிலே..
நீயிருந்தாய் என்னருகினிலே..
நிலாச்சோற்றை பகிர்ந்துண்ட..
நினைவுதன்னை ஏன் மறந்தாயோ..

**வா**சலிலே அவர்களின் வரவுக்காக காத்திருந்தாள் நித்யா.. அருவியிலே குளியல் போட்டதால் பசித்த வயிறுடன் காரிலிருந்து இறங்கிய சுவாதியை விட்டால்.. எங்கே சோறு.. எங்கே சோறு.. என்று பறந்துவிடுவாள் போலத் தோன்றியதில் அவளை கைபிடியாய் பிடித்து வைத்துக் கொண்டாள் நந்தினி..

அவளைப் பார்ப்பதற்கென்றே கல்லூரியிலிருந்து மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்திருந்த பவித்ரா..

"ஹாய்.." என்றாள்..

'ஆள் அழகா.. அம்சமாத்தான் இருக்காங்க.. அதான் அண்ணன் இப்படி பேஸ்தடிச்சதப் போல விழிச்சு வைக்குது..'

மனதுக்குள் நினைத்தபடி யாருக்கும் தெரியாமல் பார்த்திபனிடம் கட்டை விரலை உயர்த்தி சூப்பர் என்ற ரீதியில் சைகை காண்பித்தாள் பவித்ரா..

அவன் லேசாக தலையசைத்தபடி நந்தினியைப் பார்த்தான்.. அவன் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் மனம்



குழம்பியவளாக அவள் சுவாதியின் பின்னால் ஒளிந்து கொண்டாள்..

"பவித்ரா.. உன் ரூமுக்கு இவங்களை அழைச்சுக்கிட்டுப் போ.. பிரஷ்ஷாகிட்டு சாப்பிட வரட்டும்.." என்றாள் நித்யா..

"நாங்க அருவியிலே குளிச்சுட்டு பிரஷ்ஷாத்தான் வந்து சேர்ந்திருக்கிறோம் ஆண்ட்டி.. நீங்க தட்டைப் போடுங்க.. மத்ததை அப்புறமா பேசிக்கலாம்.." என்று சொல்லி விட்டாள் சுவாதி..

'மானத்தை வாங்கிட்டாளே..' மானசீகமாக தலையில் கைவைத்துக் கொண்டாள் நந்தினி..

"அப்படின்னா சரி.."

நித்யா சிரித்த முகத்துடன் அவர்களை டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றாள்... சுவாதி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார.. நந்தினியோ அருகில் உட்காராமல் சுற்று முற்றும் பார்த்தாள்..

"என்னடி..?" அழமாட்டாத குறையாக வினவினாள் சுவாதி..

"ஈரத்துணிகள்டி.. ஈவினிங் இங்கிருந்தே மண்டபத்துக்கு கிளம்பனும்.. இப்ப இந்த ஈரத்துணிகளை உலர்த்தனுமே..."

நந்தினியின் அந்த பொறுப்புணர்வை மனதுக்குள் மெச்சியபடி நித்யா செவ்வந்தியைக் கூப்பிட்டு ஈரத்துணிகளை உலர வைக்கச் சொன்னாள்..

"இனியாவது சாப்பிட வருவியாடி.."

சுவாதியின் எரிச்சலில் அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள் நந்தினி... பார்த்திபனும் பவித்ராவும் எதிரே உட்கார.. நித்யாவின் மேற்பார்வையில் வண்ணக்கிளியும்.. செவ்வந்தியும் பரிமாறினார்கள்..

பட்டை சோம்பு வாசனையை முகர்ந்தபடி அசைவ உணவுக்காக நாக்கை சப்புக் கொட்டிய சுவாதி.. பறிமாறப் பட்ட சைவ உணவில் வெறுத்துப் போய் விட்டாள்..

"சாயங்காலமா இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கும்.. குகன் பாறை குகைக் கோவிலுக்கும் போகனும்.. அதனால நான் வெஜ் சமைக்கல.."

சுவாதியின் மனதை அறிந்ததைப் போல விளக்கம் சொன்னாள் நித்யா.. சுவாதியை முறைத்துப் பார்த்து கண்களால் 'சாப்பிடு' என்று அதட்டினாள் நந்தினி..

'ம்ஹீம்.. பட்டை சோம்பு வாசனையில ஏமாந்துட்டேனே...'

எதனால் அந்த பட்டை சோம்பு வாசனை வந்தது என்ற ஆராய்ச்சியில் இறங்கிய சுவாதிக்கு வெஜிடேபிள் பிரியாணியைப் பார்த்ததும் விவரம் விளங்கியது..

நடுவிலே பிரியாணி.. ஓரமாக காலிபிளவர் பிரை.. சேப்பங் கிழங்கு வறுவல்.. உருளைக்கிழங்கு சிப்ஸ்.. பட்டாணி குருமா என்று அணிவகுத்திருக்க...

"முதலில் இனிப்பைச் சாப்பிடுங்கம்மா.." என்றாள் நித்யா..

அவள் கண்ணசைவில் பாதாம் அல்வா பரிமாறப் பட்டது.. சுவைத்துப் பார்த்த சுவாதிக்கு அசைவ சமையலின் மீதான ஏக்கம் மறந்து போனது..



"வாவ்.." என்று வாய் விட்டுப் பாராட்டியபடி சாப்பாட்டை ஒரு பிடி பிடித்தாள்...

மாலையில் சந்திக்கலாம் என்று சொல்லிவிட்டு பவித்ரா கல்லூரிக்கு கிளம்பிப் போய் விட்டாள்..

"கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திருங்கம்மா.."

நித்யா விருந்தினர் அறையின் பக்கம் கை காட்டினாள்.. பார்த்திபனுக்கு அவன் வீட்டிற்கு நந்தினி வந்திருக்கிறாள் என்ற ஒன்றே போதுமானதாக இருந்தது.. அவன் ஹாலில் உட்கார்ந்து விட்டான்..

"நீயும் ரெஸ்ட் எடுத்துக்கப்பா.."

நித்யாதான் வற்புறுத்தி அவனை அனுப்பி வைத்தாள்..

மாலையில் நந்தினியும்.. சுவாதியும்.. திருமண மண்டபத்திற்கு போவதற்காக பட்டுப்புடவை நகைகள் சகிதம் தயாராகி வந்தார்கள்.. கல்லூரியிலிருந்து வந்திருந்த பவித்ராவும் குளித்து உடைமாற்றி அவர்களுடன் இணைந்து கொண்டாள்.. நித்யா செவ்வந்திக்கும்.. வண்ணக்கிளிக்கும் வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி ஆணைகளை பிறப்பித்துக் கொண்டே அனைவருக்கும் காபி டிபனை கொடுக்கச் செய்தாள்..

ஒரு வழியாக அனைவரும் பார்ச்சுனர் காரில் ஏறினார்கள்.. கார் கழுகுமலை வெம்பக் கோட்டை சாலையில் விரைந்தது..

"இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கா போகிறோம்..?" என்று கேட்டாள் சுவாதி..

"முதலில் குகன் பாறைக் கோவிலுக்குப் போகலாம்.. அடுத்ததுதான் மாரியம்மன் கோவில்.." என்றாள் நித்யா...

சிறிய குன்றினைப் போல இருந்த குகன் பாறையின் அருகே கார் நின்றது.. பாறையின் அடியில் குகையாய் குடைந்து போன குகைக் கோவிலின் முகப்பை வியப்புடன் பார்த்தாள் நந்தினி...

"இது ஜெயின் துறவிகள் இருந்த இடம்.. இப்ப அவங்களின் கோவிலா இருக்கு..."

நந்தினியின் அருகே நெருங்கி நின்றபடி சொன்னான் பார்த்திபன்.. நந்தினியின் மனம் படபடத்தது.. சுவாதியும் பவித்ராவும் அரட்டையடித்தபடி முன்னால் சென்றிருந்தார்கள்.. அவர்களைத் தொடர்ந்து நித்யா நடந்து கொண்டிருந்தாள்.. பாறையின் பக்கச் சுவர்களில் செதுக்கப் பட்டிருந்த ஜெயின் துறவிகளின் சிற்பங்களைப் பார்க்கும் ஆவலில் தான் மட்டும் தேங்கி நின்று விட்டதை உணர்ந்தாள் நந்தினி...

"சிலைகளெல்லாம் அற்புதமா இருக்கும்.. மகாபலிபுரத்தில் பாறையைக் குடைந்து செய்யப்பட்ட குகைக் கோவிலைப் போன்றதுதான் இதுவும்.."

வெகு இயல்பாக அவளுடன் சேர்ந்து நடந்தபடி அவன் பேசிய விதத்தை அவளுக்குப் பிடித்திருந்தது.. அவர்களைக் கடந்து போனவர்கள் அவர்களைத் திரும்பிப் பார்த்து தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டே போனதைக் கவனித்தவளுக்கு அவர்கள் என்ன பேசியிருப்பார்கள் என்ற எண்ணத்தில் மனம் குறுகுறுத்தது...

"இவங்களின் ஜோடிப் பொருத்தம் பிரமாதம்ன்னு சொல்லியிருப்பாங்களோ என்னவோ..."

அவள் மனதைப் படித்தவனைப் போல குறுநகையுடன் சொன்னான் பார்த்திபன்.. அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது.. அதை ரசித்துப் பார்த்தவனுக்கு அவன் சொன்னதை அவள் மறுத்துப் பேசவில்லை என்பது கவனத்தில் பதிந்தது...



குகைக் கோவிலுக்குள் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் காணப்பட்டன.. சுவாதி நந்தினியின் அருகே வந்து விட்டதில் பார்த்திபன் பின்னால் நகர்ந்து கொள்ள வேண்டியதாயிற்று.. அதை ஓரக்கண்ணால் நந்தினி பார்த்ததை அவன் பார்த்து விட்டான்.. அதில் நந்தினியின் கன்னம் சிவக்க.. அவன் கண்களில் மின்னல் வந்தது..

குகைக் கோவிலில் இருந்து வெளியே வந்த போது அவன் பவித்ராவிடம் சன்னக்குரலில் முணுமுணுத்தான்.. அவள் கேலியாக...

"நடத்து.. நடத்து.." என்று சிரித்தாள்..

எதற்காக அவள் அப்படிச் சொல்கிறாள் என்று அப்போது நந்தினிக்குப் புரியவில்லை... பவித்ரா சுவாதியிடம் பேச்சுக் கொடுத்தபடி நித்யாவுடன் நடந்து விட்டபோது அது அவளுக்குப் புரிந்தது..

'இது உங்கள் வேலைதானா..?'

அவள் கண்களின் வினாவுக்கு இமை மூடி பதில் தந்தான் பார்த்திபன்.. மீண்டும் அவளுடன் அவன் இணைந்து நடந்த போது அந்த பொன்மாலைப் பொழுதின் அழகு பன்மடங்கு பெருகிவிட்டதாக அவளுக்குத் தோன்றியது.. காருக்குள் ஏறி அமர்ந்த போது.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் சொல்லில் விளக்க முடியாத கண்ணுக்குத் தெரியாத புதியதொரு பந்தம் உருவாகி விட்டிருந்ததை அவர்களால் உணர முடிந்தது...

வைப்பாறுக்கும்.. அர்ச்சுனன் ஆறுக்கும் இடைப் பட்ட மணல்திட்டில் இருக்கன்குடி மாரியம்மனின் கோவில் அமைந்திருந்தது.. இயற்கை அழகுடன் இருந்த கோவிலில் குடி கொண்டிருந்த அம்மனை வேண்டிவிட்டு அவர்கள் திருமண மண்டபத்திற்கு காரை விட்டார்கள்...

"ஆண்டாள் கோவிலை காலையில சேவிச்சுக்கலாம்.." என்றாள் நித்யா..

"ஆமாமாம்.. ஸ்ரீவில்லிப்புத்தூரிலதான் கல்யாணம்ன்ன உடனே என் பிரண்ட்ஸெல்லாம் இரண்டு விசயத்தை ஞாபகம் படுத்தினாங்க..." சுவாதி சொன்னாள்...

"என்னதும்மா..?"

"ஒன்னு ஆண்டாள் கோவிலை கும்பிட்டுட்டு வரனும்.. இன்னொன்னு இந்த ஊருக்கே பேமஸான பால்கோவாவை பார்சல் பண்ணிட்டு வரனும்.."

"அதுக்கென்னம்மா.. நீ ஊருக்குப் போகும் போது டின்டின்னா கொடுத்து அனுப்பறேன்..."

"உங்களுக்கு எதுக்கு ஆண்ட்டி சிரமம்...?"

"இதில சிரமப்பட என்னம்மா இருக்கு..? நாங்க பால்பண்ணை வைத்திருக்கிறதே.. சுத்தமான பாலில் தயாரிக்கிற பால்கோவாவை எக்ஸ்போர்ட் பண்ணனும் கிறதுக்காகத்தானே..?"

"நிஜமாவா ஆண்ட்டி.. நீங்க பால்கோவாவை தயாரிக்கறிங்களா..?"

"ஸ்வீட் ஸ்டால் வைத்திருக்கிற குடும்பத்தைப் பார்த்துக் கேட்கிற கேள்வியாம்மா இது..?"

"அட... இது எனக்குத் தெரியாம போச்சே..."



"தெரிஞ்சிருந்தா என்ன செய்திருப்பீங்க சுவாதி.. அங்கேயே குடி இருந்திருப்பீங்களா..?"

"இது கூட நல்லாயிருக்கே.. தேங்க்ஸ் ஃபார் யுவர் ஐடியா பவித்ரா.."

அரட்டையடித்துக் கொண்டிருந்தவர்கள் சீரியல் விளக்குகளால் ஒளிர்ந்த திருமண மண்டபத்தைக் கண்டதும் திருமண வீட்டின் கலகலப்பை உள் வாங்கினார்கள்..

"துணை மாப்பிள்ளை வர்ற நேரமாடா இது..?"

வாசலிலே இருந்த முகுந்தன் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டான்.. அதிலும் காரிலிருந்து இறங்கிய நந்தினியையும்.. சுவாதியையும் கண்டதும் அவனது வேகம் அதிகரித்தது.. நித்யாவையும்.. பவித்ராவையும் கண்டதும் வந்த வேகம் காற்றோடு போனது...



## 22

*முழுநிலவின் ஒளியினிலே..*
*மொட்டைமாடியில் நானிருந்தேன்..*
*நிழலைப் போல தொடர்ந்து வந்து*
*நிலாச்சோறை பகிர்ந்து தந்தாய்..*

திருமண வரவேற்பு நடந்து கொண்டிருந்தது.. திருமணத்திற்குப் பின்னால் நடக்க வேண்டிய வரவேற்பு...

காலத்தின் கட்டாயத்தில்.. முதல் நாளுக்கு இடம் மாறி விட்ட விந்தையை மனதுக்குள் வியந்தபடி முகுந்தனின் அருகே நின்றிருந்தான் பார்த்திபன்..

முகுந்தனும்தான் கோட்.. சூட்டை அணிந்திருந்தான்.. ஆனால்.. அருகில் நின்றிருந்த பார்த்திபனின் கம்பீரத்தின் முன்னால் அவனது கோட்டும் சூட்டும் எடுபடவில்லை...

தாரிணியின் அருகே துணைப் பெண்ணாக நிற்பதற்கு சுவாதி ஆட்சேபம் தெரிவித்து விட்டாள்.. இது போன்ற விழா நாள்களில் அவளால் அடங்கி ஒரு இடத்தில் நிற்கு முடியாது என்றும்.. இங்கும் அங்கும் ஓடியாடிச் செய்ய வேண்டிய வேலைகள் ஆயிரத்து ஐந்திற்கும் மேலாக அவள் தலையில் சுமத்தப் பட்டிருக்கின்றன என்றும்.. அவ்வாறு சுமத்தப் படா விட்டாலும்... இங்கும் அங்குமாகத்தான் அவளால் பவனி வர முடியுமென்றும்.. அப்படி பவனி வந்தால்தானே.. கடலை வறுத்து சைட் அடிக்க வந்திருக்கும் வாலிபர் கூட்டத்துக்கு வசதியாக இருக்கு மென்றும்.. கல்யாண வீட்டிலே கடலையை வறுக்காவிட்டால் அவளுக்கென்று இருக்கும் பிம்பம் அழிந்துவிடாதா என்றும்... அடுக்கடுக்கான பல கேள்விகளை அவள் எழுப்பியதில் தாரிணி நந்தினியின் தாடையைப் பிடித்துக் கெஞ்சி தன் அருகில் துணைப் பெண்ணாக நிற்க வைத்து விட்டாள்..

நந்தினிக்கு மேடையில் காட்சிப் பொருளாக நிற்பதற்கு சங்கடமாக இருந்தது.. அந்த சங்கடத்தை தாரிணியின் முகம் விரட்டியடித்துக் கொண்டிருந்தது.. பார்த்திபன் துணை மாப்பிள்ளையாக நிற்க.. அவள்



துணைப் பெண்ணாக நின்றதில் அவள் மனதில் இனம் புரியாத சந்தோசம் நிரம்பியிருந்தது..

பார்த்திபன் நொடிக்கொரு தரம் அவள் பக்கம் பார்வையைப் படர விட்டான்.. நந்தினியும்.. இமைகள் படபடக்க அவன் பார்வையை எதிர் கொண்டபடி இருந்தாள்..

போட்டோக்களும்... வீடியோக்களும்.. மணமக்களை படம் பிடித்ததை விட அதிகமாக பார்த்திபனையும்.. நந்தினியையும் படம் பிடித்தன.. சில சமயங்களில் மணமக்கள் முன்னால் நகர.. பின்னால் இருந்த பார்த்தி பனையும் நந்தினியையும் வீடியோ ஜோடி சேர்த்தது..

"அந்தப் பொண்ணு யாரு நித்யா..? நம்ம பார்த்திபனுக்குன்னே பிறந்ததைப் போல இருக்கே.."

மண்டபத்தில் இருந்த நித்யாவிற்குத் தெரிந்த பெண்மணி ஒருத்தி வினவினாள்.. நித்யாவின் முகத்தில் பெருமை பொங்கியது...

"ஆமாம் அண்ணி.. என் மனசிலயும் அப்படியொரு நினைப்பு இருக்கு.. ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்தீங்கள்ல.."

"பார்த்ததினாலதான பொண்ணு யாருன்னு கேட்டேன்.. நீ அதுக்குப் பதிலைச் சொல்லலையே.."

"நம்ம திருப்பூரு சங்கரலிங்கம் பெரியப்பாவோட பேத்திதான்.. அண்ணி.. நந்தினின்னு பேரு..."

"உங்களுக்கேத்த இடம்தான் நித்யா.. சீக்கிரமா பேசி முடிச்சிரு.."

"செய்யனும் அண்ணி.. பொண்ணு வீட்டு சார்பா இந்தக் கல்யாணத்தில கலந்துக்க அந்தப் பொண்ணு

வந்திருக்கு.. கல்யாணம் முடிஞ்சு அது திருப்பூருக்கு போனதும் பின்னாலேயே பெண் கேட்டுப் போயிர மாட்டேன்..?"

"அதானே.. என் தம்பி பெண்டாட்டியா.. கொக்கா..?"

மேடையில் இருந்த பார்த்திபன்-நந்தினியின் ஜோடிப் பொருத்தத்தை மெச்சி அவர்கள் பேசிக் கொண்டிருக்க.. அவர்களுக்குப் பின்னால் நின்று அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ரஞ்சித்தின் முகம் பயங்கரமாக மாறியது...

சங்கரலிங்கம் அப்படியொரு திட்டத்தை தீட்டுவார் என்று ரூபாவும் ரஞ்சித்தும் நினைத்தும் பார்த்திருக்க வில்லை.. சங்கரலிங்கம் ஊருக்குப் போவதற்கு முதல் நாளே சுவாதியுடன் நந்தினி கிளம்பிவிட..

"என்னங்க இது..?" என்று கணவனிடம் ஆட்சேபித்தாள் ரூபா...

"என்னங்கன்னா..?" அவன் சுள்ளென்று எரிந்து விழுந்தான்...

"நம்ம வீட்டுப் பெண்ணை அடுத்தவங்க வீட்டோட ஊர் விட்டு ஊர் அனுப்பி வைக்கிறது சரியாங்க..?"

"இதுக்கு முன்னாலே நந்தினி சுவாதி குடும்பத்தோட.. ஊட்டி.. கொடைக்கானல்ன்னு போய் வந்தவதான ரூபா..?"

"அதுவும்.. இதுவும் ஒன்னாங்க..? அங்கே நம்ம ரிஸார்ட்ஸ் இருக்குது.. அதில நாம சம்பளம் கொடுக்கிற வேலையாளுக இருக்காங்க.. நம்ம காரில நந்தினி போவா.. துணைக்கு சுவாதியும் அவளோட பேரண்ட்ஸீம் போவாங்க.. இப்ப அப்படியா..? சுவாதியோட சொந்தக் காரங்க வீட்டில கல்யாணமாம்.. அதில கலந்துக்க நம்ம



பெண்ணையும் அனுப்பி வைக்கிறதுங்கிறது சரியாப் படலைங்க..."

'எனக்கு மட்டும் சரியாய் படுதா..?' என்று நினைத்துக் கொண்டான் நந்தகுமார்..

வீட்டில் தங்கையைப் பாதுகாக்க வேண்டிய அண்ணன் இருக்க.. அவன் மீது நம்பிக்கை வைக்காமல் தங்கையின் தோழியின் மீதும் அவளின் குடும்பத்தின் மீதும் நம்பிக்கை வைத்து வெளியூருக்கு அனுப்பி வைத்திருக் கிறார் அவனுடைய தாத்தா...

இது அவனுடைய தன் மானத்திற்கு விழுந்திருக்கும் அடியல்லவா..?

'இது யாரால் நடந்தது..?'

மனைவியால் நடந்தது என்ற நினைவில் அவன் முறைக்க.. அவளோ கணவனை தூண்டி விட்டு விட்டோம் என்று மகிழ்ந்து போனாள்..

"இதுக்குத்தான் நான் முதலிலேயே சொன்னேன்.."

"என்னத்தைச் சொன்ன..?"

"பவரை உங்க கையில வைத்துக்கங்கன்னு.. பொறுப்புக்கு நீங்க வந்த பின்னாலே உங்க பேச்சைத்தான் உங்க தாத்தாவும்.. தங்கையும் கேட்கனும்.. எங்கே..? நான் சொல்கிறதுதான் காது கேட்காதவங்க காதில ஊதற சங்கைப் போல ஆகிப் போகுதே..."

"வாயை மூடறியா..?"

அதுவரை அவளையே இமைக்காமல் பார்த்தபடி அவள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த கணவன் சீறியதும்.. அவசரமாக வாயை மூடிக் கொண்டாள் ரூபா...

"கொஞ்சம் இடத்தைக் கொடுத்தா மடத்தைப் பிடிக்கப் பார்ப்பியே... யாருகிட்ட உன் சாகசத்தைக் காண்பிக்கற..? என் தாத்தா எனக்கு 'குரு'... அவரை நான் கண்ட்ரோலில் வைத்துக்கனுமா..? முதலில் நீ என் கண்ட்ரோலில் இருந்து பழகு..."

கணவனின் சீற்றத்தில் வாய் மூடிக் கொண்டவள் இரண்டு நாள்கள் வரை அமைதி காத்தாள்.. மூன்றாம் நாளில் இயல்பாக கேட்பதைப் போல...

"ஆமாம்.. உங்க தங்கை எந்த ஊருக்குப் போயிருக்கிறாளாம்..?" என்று விசாரித்தாள்....

"அதைத் தெரிந்துக்கிட்டு நீ என்ன செய்யப் போற..?"

நந்தகுமார் நிதானமாக ருசித்துச் சாப்பிட்டபடி கேட்டதில் ரூபாவின் முகம் கருத்துப் போனது..

"கடப்பாறையை வைத்து இடிக்காத குறையாய் விவரத்தை பேர்க்க டிரை பண்ணினாலும் விவரம் கசிய மாட்டேங்குதே அண்ணா.. அந்தப் பெரியவர்தான் அழுத்தக்காரர்ன்னா.. என் ஹஸ்பெண்ட் அதைவிட அழுத்தக் காரரா இருக்கார்.. இதை எங்கே போய் சொல்ல..?" ரூபா ரஞ்சித்திடம் புலம்பினாள்..

"இது என்ன பெரிய இமாலய ரகசியமா.. உன் நாத்தனார் ஒன்னும் அமெரிக்காவுக்கு தப்பிப் போயிடலை... இதோ இருக்கிற விருது நகருக்குத்தான் விருந்தாடப் போயிருக்கிறா.."

இலகுவாக ரஞ்சித் சொன்னதில் ரூபாவின் கண்கள் விரிந்தன.. அவளால் முடியாதது அவனால் மட்டும் எப்படி முடிந்தது..?



"எப்படிண்ணா..?"

"சிம்பிள்.. உன் வீட்டில் விவரம் தேராதுன்னு எனக்குத் தெரியும்.. அந்த சுவாதியின் வீட்டில் அப்படியில்லையே.."

"வாவ்.."

இது ஏன் ரூபாவிற்குத் தோன்றாமல் போய்விட்டது..

"ஆனா அண்ணா.. அவங்கதான் ஊருக்குப் போயிட்டாங்களே..."

"அவங்கதானே ஊருக்குப் போயிருக்காங்க..? அவங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரங்க ஊருக்குப் போகலையே..."

'இதைப் பாருடா...'

ரஞ்சித்தின் அறிவிற்கு அவனுக்கு திருஷ்டி கழித்துப் போட்டால் என்ன என்று ரூபாவிற்குத் தோன்றியது.. சில துணைக் கேள்விகள் தோன்றி அதை துரத்தி விட்டன..

"நீ போய் கேட்டதும் பக்கத்து வீட்டுக்காரங்க என்ன ஏதுன்னு கேட்காம விவரத்தை கக்கி விடுவாங்களா என்ன..?"

"நான் கேட்டாத்தானே அந்தப் பிரச்னை வரும்.. அதுவே கொரியர் பையன் போய் கேட்டா..?"

ரஞ்சித் அலட்டிக் கொள்ளாமல் கேட்டு வைக்க.. ரூபா.. விழிவிரிய

"அண்ணா..!" என்றாள்..

"இதெல்லாம் ஒரு மேட்டரா ரூபா.. அந்த சுவாதி வீட்டுக்கு கொரியர் வந்திருப்பதாக கொரியர் பையனிடம் சொல்லச் சொன்னேன்.. நேர்மை.. அது.. இதுன்னான்..

ஆயிரம் ரூபாயை நீட்டினேன்.. வாயை மூடிக் கொண்டான்.. அவன் நேர்மைக்கு விலை ஆயிரம் ரூபாய்.."

'உன்னைப் போல ஆளுகளால்தான் நேர்மை அல்லாடிக்கிட்டு இருக்குது..' மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் ரூபா..

"இவன் போய் கேட்டான்.. அடடா அவங்க விருது நகருக்கு போயிருக்காங்களேன்னு அவங்க சொன்னாங்க.. அட்ரஸ் இருந்தா அங்கே கொரியரை அனுப்பி வைச்சிடறேன்னு பெயர்.. இன்னவீதி.. இன்ன டோர் நம்பர்ன்னு எல்லாவிவரத்தையும் சொல்லிட்டு முழுசா எதுவும் தெரியாதுன்னு சொல்லுதுக அந்த கூமுட்டைக.."

"ஹா.. ஹா.. அந்த சுவாதி குடும்பம் திரும்பி வந்ததும் இந்த கொரியர் பையனை பிடித்து லெப்ட்.. அன்ட் ரைட்டா வாங்கிர மாட்டாங்களா.."

"அதுக்கும் வழி சொல்லிக் கொடுத்திருக்கேன்.. அவன் விவரம் கேட்ட அன்னைக்கு அதே தெருவில இருந்த வேறொரு வீட்டுக்கு கொரியர் வந்திருந்தது.. அதைச் சொல்லி.. அந்த அட்ரஸீக்கு இங்கே மாத்தி விவரம் கேட்டுட்டேன்னு சொல்லுன்னேன்.. அவனும் ஆஹான்னு புல்லரிச்சுப் போய் என் காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு வேலையைப் பார்க்கப் போயிட்டான்.."

இப்படியாகத்தானே.. சங்கரலிங்கம் நந்தினியை பாதுகாப்பாய் சுவாதியின் குடும்பத்துடன் அனுப்பி வைத்தும்.. அவளை நிழலாய் பின் தொடர்ந்து விருது நகர் வரை வந்து விட்டான் ரஞ்சித்...

அவன் வந்த அதே நேரத்தில்தான்.. பார்த்திபனும் நித்யாவும் நந்தினியைப் பார்க்க அங்கே வந்து



சேர்ந்தார்கள்.. அவர்களுடன் காரில் ஏறிய நந்தினியையும் சுவாதியையும் நோட்டமிட்ட ரஞ்சித்திற்கு மூக்கில் வியர்த்தது.. பின் தொடர்ந்தான்..

பார்த்திபனின் ஆசை கலந்த பார்வையையும்.. அதை நாணத்துடன் எதிர் கொண்ட நந்தினியின் பார்வையையும் கண்டவனுக்கு விவரம் விளங்கிவிட்டது...

'காத்திருந்தவன் வைச்ச குறியை நேற்று வந்தவன் அபேஸ் பண்ணிட்டுப் போறதா..?'

## 23

*கண்மணியே..! என்னிடத்தில்*
*காதலென்று நீ கூறு...*
*எந்நாளும் என் வாழ்வில்..*
*அதுதானே நிலாச்சோறு..!*

விடியாத கருக்கலை ஜன்னலில் தெரிந்த மறையாத இரவின் கருக்கல் உணர்த்திக் கொண்டிருந்தது.. அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நந்தினி.. கதவு தட்டப்படும் ஓசையில் கண் விழித்தாள்.. பக்கத்திலிருந்த சுவாதியை எழுப்பினாள்..

"தூங்க விடுடி.." அவள் சிணுங்கினாள்..

"கதவை தட்டறாங்க சுவாதி.."

"நீயே போய் என்னன்னு பாரு.."

சுவாதி புரண்டு படுத்து தலையணையை இறுக்கிக் கொண்டு தூக்கத்தில் கவிழ்ந்து விட.. தலையை ஆட்டி அதை ரசித்த நந்தினி கட்டிலை விட்டு இறங்கினாள்.. கதவைத் திறந்தாள்.. வெளியே நித்யா நின்று கொண்டிருந்தாள்.. அவளுக்குப் பின்னால் கையில் காபி டிரேயுடன் செவ்வந்தி நின்றிருக்க..

"ஆண்ட்டி..?" என்று அழைத்தபடி பதட்டத்துடன் அறையின் கதவை விரியத் திறந்தாள் நந்தினி..

"நல்லாத் தூங்கினிங்களாம்மா..?" நித்யா கேட்டாள்..

"ம்ம்ம்.." நந்தினிதலையாட்டினாள்...

பதில் சொல்ல வேண்டிய அவசியமின்றி சுவாதி ஆழ்ந்த நித்திரையில் இருக்க.. மெல்லிய முறுவலுடன் செவ்வந்தியிடம் கண்ஜாடை செய்தாள்... அவள் அறையிலிருந்த டீப்பாயில் காபிடிரேயை வைத்து விட்டு வெளியேறினாள்..

"சீக்கிரமா தயாராகி வந்தீங்கன்னா ஆண்டாள் கோவிலுக்குப் போயிட்டு டிபன் சாப்பிட கல்யாண மண்டபத்துக்கு போயிடலாம்..."

"இதோ ஆண்ட்டி.. ஆறே நிமிசம்தான்.. குளிச்சு ரெடியாகிடறோம்.."

நந்தினியின் வார்த்தைகளைக் கேட்டவள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த சுவாதியின் மீது அர்த்தம் பொதிந்த பார்வையை வீசி விட்டு புன்முறுவலுடன் தலையசைத்து விட்டு நகர்ந்தாள்..

அறைக் கதவை தாழிட்டு விட்டு.. கும்பகர்ணியாய் மாறிவிட்டிருந்த தோழியை அடித்து எழுப்பினாள் நந்தினி..



"ஸ்ஆ.. வலிக்குதுடி.." தூக்கம் கலைந்து எழுந்து அமர்ந்த சுவாதி நந்தினியை முறைத்தாள்..

"எழுந்திரு.. பல்தேய்ச்சுக் காபியைக் குடிச்சுட்டு குளிக்கப் போகிற வழியைப் பாரு.." நந்தினி சுவாதியின் மீதிருந்த போர்வையை பிடுங்கினாள்..

"என்னது..?" ஜன்னலில் தெரிந்த கருமையில் சுவாதி அரண்டு விட்டாள்..

"எதுக்காகடி அர்த்த ஜாமத்திலே குளியல் போடச் சொல்ற..?"

"பிசாசே.. இப்ப விடிஞ்சுருச்சு.. மணியைப் பாரு."

செல்போனின் திரை அதிகாலை நான்குமணி என்று அறிவித்தது..

"ஏண்டி.. இந்த நேரத்தில கல்யாணப் பெண் கூட எழுந்து குளிச்சு தயாராக மாட்டா.. நாம எதுக்காக அந்த வேலையைச் செய்யனும்..? எப்படியும் காலை டிபனுக்கான பந்தியை ஏழு மணிக்கு மேலேதான் ஆரம்பிப்பாங்க.. அந்த நேரத்தில அங்கே போய் நின்னா பத்தாதா..?" சுவாதி கொட்டாவி விட்டாள்..

"நீ கொட்டிக்கிறதிலேயே குறியாய் இரு.." அவள் முதுகில் மொத்தினாள் நந்தினி...

"மண்டபத்துக்கு போகிறதுக்கு முன்னாலே.. நாம கோவிலுக்குப் போகனும் சுவாதி.. மறந்துட்டியா..?" நந்தினி நினைவு படுத்த..

"ஆமாமில்ல.." என்று ஒரு வழியாக தூக்கத்தை ஏக்கத்துடன் வழியனுப்பி வைத்து விட்டு காபிக் கப்பை கைப்பற்றி உறிஞ்ச ஆரம்பித்தாள் சுவாதி...

"பல் தேய்க்கல..?"

"காபிக்கெல்லாம் பல் தேய்க்கனும்னு ஆர்டர் போட்டேன்னு வைய்யி.. நான் திரும்பவும் இழுத்துப் போர்த்திக்கிட்டுப் படுத்து தூங்கிருவேன்.. எப்படி வசதி..?"

"வேண்டாம் தாயே.. உனக்கு கோடி புண்ணியம் உண்டு.. காலா காலத்தில ரெடியாகு.."

"அஃது.. அந்த பயம் மனசில இருக்கட்டும்..."

நந்தினியை மிரட்டி விட்டு காபியை ருசித்து குடித்தாள் சுவாதி.. அழகான பெரிய அந்த அறையின் அழகை ரசித்தபடி அவள் பார்வை சுழன்றது..

"என்னவோ போடி நந்தினி.. உன்கூட ஒட்டிக்கிட்டு நானும் நிம்மதியா தூங்கி எழுந்திருச்சேன்.. இல்லைன்னா இந்த ராத்திரி சிவராத்திரியாத்தான் இருந்திருக்கும்.. மண்டபத்தில நமக்கு தனிரூம் கிடைச்சிருக்கும்ன்னா நினைக்கிற...?"

"அதனால என்னடி..? கல்யாண சந்தடியை ரசிச்சுக்கிட்டு ஒருநாள் ராத்திரி தூங்காம இருந்தாத்தான் என்ன..? எனக்கு அங்கே இருக்கத்தான் ஆசை... ஆண்ட்டி வற்புறுத்திக் கூப்பிட்டதும் அம்மாவும்.. அப்பாவும் நம்மள கிளம்பச் சொல்லிட்டாங்க.. அதனாலதான் இங்கே வந்தேன்.."

"நீயிருக்கயே..! உன்னைத் திருத்தவே முடியாதுடி.. சந்தைக் கூட்ட இரைச்சலுக்கு மத்தியிலேயே இருக்கனும்னு எப்படித்தான் ஆசைப்படறியோ..?"

சுவாதி அலுத்துக் கொண்டபடி குளியலறைக்குள் புகுந்தாள்... எதை உடுத்திக் கொள்ளலாம் என்ற யோசனையுடன் பெட்டியைத் திறந்தாள் நந்தினி.. முதல் நாளைப் போல அன்றும் துணைப் பெண்ணாய் தாரிணியின் அருகில் நிற்க வேண்டியிருக்கும் என்ற நினைவில் அவள் மனம் இனித்தது.. துணை மாப்பிள்ளையாய் அவனும் இருப்பான் என்பதில் ரகசிய சந்தோசம் அவள் மனதில் பரவியது..



அரக்குச் சிகப்பு புடவையை தவிர்த்தாள்..

'இந்த நிறத்தில் தான் கல்யாணப் பெண்ணுக்கும் புடவை எடுத்திருப்பாங்க..'

மேக வண்ணத்தில் அரக்கு நிறத்தில் கெட்டி ஜரிகையிட்ட பட்டுப் புடவையை எடுத்து விரித்துப் பார்த்தாள்.. உடலெங்கும் ஜரிகைப் புள்ளிகளோடு அழகாக இருந்தது..

'இதை உடுத்திக்கலாமா..?'

முடிவு செய்வது அவளுக்கு சிரமமாக இருந்தது.. அதுவரை அதைப் போல உடை விசயத்தில் அவள் குழம்பிக் கொண்டதில்லை.. கைக்கு கிடைத்ததை உடுத்திக் கொள்வாள்.. அன்று அதுவா.. இதுவா.. என்று தேர்வு செய்வது அவளுக்கு சிரமமாக இருந்தது...

மேகவண்ணத்தையும் கடாசிவிட்டு... பாட்டில் பச்சை வண்ணப் புடவையை கையில் வைத்திருந்தவளின் பின்னே வந்து நின்ற சுவாதி..

"என்னடி..?" என்று ஆச்சரியப்பட்டுப் போனாள்..

"ம்ப்ச்.. எதை உடுத்திக்கலாம்ன்னு செலக்ட் பண்ண டிரை பண்றேன் முடியல.." சுள் கொட்டினாள் நந்தினி..

"இது நீயாடி.." தன் கையைக் கிள்ளிக் கொண்ட சுவாதி...

"நகரு.." என்று நந்தினியைப் பிடித்துத் தள்ளி விட்டு ஊதா வண்ணச் சேலையை எடுத்தாள்...

"இது நல்லா இருக்கும்கிற..?" சந்தேகப் பட்டாள் நந்தினி...

"நிச்சயமாய் இருக்கும்ங்கிறேன்.."

"எதை வைச்சுடி சொல்ற..?"

"நேத்து இலக்கியதரமான கானா பாட்டொன்னைக் கேட்டேன் நந்தினி.. அதில வந்த வார்த்தைகள் இருக்கே.. ஹப்பா.. அதை வைச்சுத்தான் இந்த ஸாரியை செலக்ட் பண்ணினேன்..."

"என்ன பாட்டுடி..."

சேலையை எடுத்து தன் மேல் சரித்து அழகு பார்த்தபடி நந்தினி கேட்டாள்...

"ஊதாக் கலரு ரிப்பன்..
உனக்கு யாரு அப்பன்..?"

சுவாதி ஒரு கையால் காதை மூடிக் கொண்டு.. மறுகையை விரித்து நீட்டி.. என்னவோ கஜல் பாட்டைப் பாடும் பாடகியைப் போல பாடிக்காட்டினாள்.. நந்தினிக்கு அந்தச் சேலையைக் கட்ட வேண்டுமென்ற ஆசை அறவே அற்றுப் போய் விட்டது..

ஒருவழியாக முதலில் எடுத்த மேகவண்ணச் சேலையையே தேர்வு செய்து வைத்து விட்டு குளிக்கப் போனாள் நந்தினி...

அதிகாலை குளிர் காற்றில் வாசலுக்கு வந்த நித்யா..

"இன்னுமாடி ரெடியாகிற..?" என்று பவித்ராவை சப்தம் போட்டாள்..



"ஆச்சும்மா.." அறையை விட்டு வெளியே வந்த பவித்ரா.. பட்டு சல்வாரில் அம்சமாக இருந்தாள்..

அவள் மீது வைர நகைகள் ஒளிர்ந்தன.. நந்தினியும் சுவாதியும் வந்து விட்டார்கள்.. சுவாதி பவித்ராவைப் போலவே பட்டு சல்வாரில் இருந்தாள்.. மேக வண்ணப் பட்டுப் புடவையில் தலைமுடியை பின்னலிட்டு வந்திருந்த நந்தினியின் தோற்றத்தில் நித்யா திருப்தி பட்டுப் போனாள்..

தங்க நகைகளை அணிந்திருந்த நந்தினியிடம் வைர நகைகள் இல்லாததை உணர்ந்தவளுக்குள் 'ஏன்' என்ற கேள்வி எழுந்தது..

'சங்கரலிங்க பெரியப்பாவின் வீட்டில் இல்லாத வைரமா..?'

சுவாதி அறியாமல் நந்தினியிடம் வினவியபோது அவள் மென்மையாக முறுவல் செய்தாள்..

"இது சுவாதியோட மாமா பெண்ணின் கல்யாணம் ஆண்ட்டி.. அவளிடம் டயமண்ட் ஜீவல்ஸ் இல்லை.. நான் கொடுத்தாலும் போட்டுக்க மாட்டா.. அதான்.. அவளைப் போலவே கோல்டில் ஜ்வல்ஸ் போட்டுக்கலாம்னு நான் டயமண்ட் ஜ்வல்ஸை கொண்டு வரலை..."

நந்தினியின் அந்த சுபாவத்தில் மனம் கரைந்து போனாள் நித்யா.. என்னிடம் இருக்கிறது.. நான் போட்டுக் கொள்கிறேன் என்று அவளின் பணக்காரத்தனத்தை பறைசாற்றாமல் இருக்கும் இடத்திற்கு ஏற்ப இசைந்து போகும் நந்தினியின் குண இயல்பில் நித்யா வசீகரிக்கப் பட்டாள்..

"என்னைச் சொன்னீங்க.. நான் ரெடியாகி வந்தாச்சு.. அண்ணனைத்தான் இன்னும் காணோம்.." என்றாள் பவித்ரா..

"நானும் வந்தாச்சு..."

பார்த்திபனின் குரலில் தன்னையுமறியாமல் நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.. பட்டு வேட்டி.. பட்டுச்சட்டையில் மாப்பிள்ளை போல கம்பீரமாக வந்தவனை பார்த்ததும் அவளுக்கு இமை கொட்ட மறந்து விட்டது..

அவனது அடித்துப் போடும் அழகில் அவளது கன்னி மனம் அடித்துப் போடப்பட்டது.. அலையில் சிக்கிய துரும்பாக அவனது ஆண்மை ததும்பும் அந்த பேரழகில் ஆகர்ஷிக்கப் பட்டவளின் சின்னஞ்சிறு இதயத்தில் சலனம் உண்டானது..

"போகலாமா..?"

அவளையே பார்த்த வண்ணம் நித்யாவிடம் அவன் கேள்வி கேட்டான்..

"ம்ம்ம்.. உனக்காகத்தானே காத்திருக்கிறோம்.."

முதல்நாளைப் போல அவர்கள் பார்ச்சுனர் காரில் ஏறிக் கொண்டார்கள்..

"இவ்வளவு காலையிலே கோவில் திறந்திருக்குமா..?" சுவாதி சந்தேகம் எழுப்பினாள்..

"ஏண்டி..?" என்றாள் நந்தினி..

"இல்லைடி நந்தினி.. சாமிக்கு தூக்கம் கலைஞ்சிருக்குமான்னு ஒரு டவுட்டு.. அதான்.. அவர் பாட்டுக்கு தூங்கிக்கிட்டு இருக்க.. நாம போய் தூக்கத்தைக் கலைச்சிட்டோம்ன்னா என்ன பண்றது..?"

"நீ தூக்கத்திலேயே குறியாய் இரு.. வெளியே பாரு.."

சுவாதி பார்த்தாள்.. அதிகாலையின் வெளிச்சம் பரவ ஆரம்பித்திருந்தது..



"கோவிலிலில் திருப்பள்ளி எழுச்சி பாடி சாமியை எழுப்பி விட்டிருப்பாங்க.. அவரும் காப்பிக்குப் பதிலா தீர்த்தத்தைச் சாப்பிட்டுட்டு.. நீராடி.. புதுத்துணி உடுத்தி.. நம்மளுக்கு அருள் பாலிக்கத் தயாரா உட்கார்ந்திருப்பாரு. ஸோ.. அந்தக் கவலையே உனக்கு வேணாம்.. புரியுதா..?"

"புரியுது.."

சுவாதி வாய் மூடிக் கொண்டாள்.. கோவில் வாசலில் அர்ச்சனைத்தட்டை வாங்கிய நித்யா... மல்லிகைப் பூப்பந்தை அப்படியே வாங்கி.. பெண்கள் மூவரிடமும் கொடுத்தாள்.. அதை அவர்கள் பகிர்ந்து தலையில் வைத்துக் கொண்டார்கள்.. பட்டுப் புடவையும்.. பின்னலுமாக இருந்த நந்தினியின் தலையில் சூடியிருந்த மல்லிகைப்பூ தோளில் வழிந்து அவளது சோபையை அதிகரித்துக் காட்டியது..

முதல் நாளைப் போலவே தமையனின் கண்சமிக்ஞையில் பவித்ரா சுவாதியுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ள.. அவர்கள் இருவருடன் பேசியபடி நித்யா முன்னே நடந்து விட்டாள்..

பார்த்திபன் நந்தினியின் அருகே இணைந்து நடந்ததில் நந்தினியின் மனது படபடத்தது.. முதல் நாளைப் போல இல்லாமல் அடிக்கடி அவனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டாள்..

ஓடிவந்த ஒரு சிறுமி நந்தினியின் மீது மோதிவிட... தடுமாறிவிழ இருந்த சிறுமியை தாங்கிப் பிடித்துக் கொண்டாள் நந்தினி..

"ஸ்வர்ணா.."

சிறுமியை அழைத்தபடி வந்த நபர் அவளுக்கு தந்தையாக இருக்கக்கூடும் என்று யூகித்தாள் நந்தினி.. சிறுமியை அவள் இறக்கி விடும் வரை காத்திருந்து தூக்கிக் கொண்டவர்.. பார்த்திபனை பார்த்து..

"ஸாரி சார்.. விளையாட்டுக்கு குழந்தை.. உங்க வொய்ப் மேலே தெரியாம மோதிட்டா.." என்று சொன்னார்..

நந்தினிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. அவள் முகம் சிவந்து விட்டது..

# 24

குறுநகையில் என் மனதை..
கொள்ளை கொண்டாய்..
நிலாச் சோறு வாழ்வு தன்னை..
நீ தந்தாய்...

"இட்ஸ் ஆல்ரைட்..."

வெகு இயல்பாக சிறுமியின் தந்தைக்கு சமாதானம் சொல்லி அனுப்பி வைத்து விட்டு நந்தினியின் முகம் பார்த்தான் பார்த்திபன்.. குங்குமமாய் சிவந்திருந்த முகத்திலிருந்து அவள் மனதை படித்தவனாய்..

"அவருக்கு அப்படித் தோனியிருக்கு.. இதில ஒன்னும் தப்பில்லையே.." என்றான்..

'தப்பில்லையா..?' நந்தினியின் மனம் கேள்வி கேட்டது..



அவள் என்ன அவனது மனைவியா..?

"இன்னைக்கு இல்லைதான்.. நாளைக்கு ஆகலாமில்லையா..?"

வெகு நிதானத்துடன் கேள்வி கேட்டான் பார்த்திபன்.. ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் கட்டுண்டவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.. இருவரின் பார்வையும் பின்னிப் பிணைந்த அந்த நொடியில் அவன் சொன்னான்..

"யெஸ்.. ஐ லவ் யு.." என்று..

கோவிலின் மணி அடிக்க ஆரம்பித்தது.. பூஜை ஆரம்பித்து விட்டதை உணர்ந்தவர்களாக மற்றவர்கள் பரபரப்புடன் அவர்களைக் கடந்து செல்ல.. அசையாமல் நின்றாள் நந்தினி..

"உன்னைப் பார்த்தவுடன் பிடிச்சிருச்சு.. அது ஏன்னு எனக்கே தெரியலை.. மனதுக்கு பிடிப்பதற்கும்.. பிடிக்காமல் போவதற்கும் அது நம்மிடம் வந்து விளக்கம் சொல்கிறதா என்ன..?"

வரிசைப் பற்கள் தெரிய அவன் சிரித்தான்.. சிரித்த போது கூடிய அவனது கம்பீரத்தில் அவள் மனம் சிக்கிக் கொண்டது..

சும்மாவே அவள் பேச மாட்டாள்.. இப்படி அவள் மனம் கவர்ந்த ஆண்மகன்.. அவள் எதிர்பாராத ஒரு தருணத்தில் காதல் சொன்னால் பேசித் தீர்த்து விடுவாளா என்ன..?

அவள் பேசாமடந்தையாய் நின்றாள்..

"நீதான் என் வாழ்க்கைத் துணைன்னு நான் தீர்மானிச்சுட்டேன்.. அம்மாவிடமும்.. பவித்ராவிடமும் சொன்னேன்.. அவங்களுக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு.. இந்தக் கல்யாணம் முடிந்து நீ திருப்பூர் போனதும் ஒரு நல்ல

நாளாய் பார்த்து உன்னைப் பெண் கேட்டு வரலாம்ன்னு இருக்கோம் நீ என்ன சொல்ற..?"

அவள் என்ன சொல்வாள்..? அடுத்தடுத்து வந்த ஆனந்த அதிர்ச்சிகளால் அவள் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது..

"சொல்லு நந்தினி.. என்னைப் பிடிச்சிருக்கா..?"

மென்மையாக வினவினான் பார்த்திபன்.. அவள் பதில் சொல்வதற்குள் முன்னால் போய் கொண்டிருந்த நித்யா திரும்பிப் பார்த்து அவர்களை கையசைத்து அழைத்தாள்.. நந்தினி முன்னே விரைந்து விட... வேறு வழியின்றி பார்த்திபன் அவளைத் தொடர வேண்டியதாகி விட்டது...

"அபிஷேகம் ஆரம்பித்துட்டாங்க.." நித்யா சொன்னாள்

அவர்கள் கரம் குவித்து சன்னதியின் முன்னால் வரிசையாக நின்றார்கள்.. சேவித்து முடித்து விட்டு கோவில் பிரகாரத்தை வலம் வந்த போது சுவாதி வந்து நந்தினியிடம் அட்டை போல ஒட்டிக் கொண்டாள்.. பார்த்திபனின் சமிக்ஞையில் பவித்ரா அவளை நந்தினியிடமிருந்து அகற்றி விட பகீரதப் பிரயத்தனம் செய்தாள்.. சுவாதி பசையில்லாமலே நந்தினியிடம் ஒட்டிக் கொண்டவளாய் அவளை விட்டுப் பிரிய மறுத்து விட்டாள்..

"நோ யூஸ் அண்ணா..." பவித்ரா பார்த்திபனிடம் கிசுகிசுத்து கை விரித்து விட்டாள்..

அண்ணாந்து கோவில் கோபுரத்தின் அழகை ரசித்த நந்தினியிடம்

"என்ன பார்க்கறிங்க.." என்று கேட்டான் பார்த்திபன்..

இப்போது மட்டும் மரியாதை திரும்பி வந்து விட்டதா என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் நந்தினி..



"அழகாய் இருக்கு.." முணுமுணுத்தாள்..

"இதுதான் நம்ம தமிழ்நாடு கவர்ண்மெண்டோட லச்சினையில் இருக்கும் கோவில் கோபுரம்.." என்றான் பார்த்திபன்..

"நீயென்ன டூரிஸ்ட் கைடா..? உன்கிட்ட அவங்க வந்து விளக்கம் கேட்டாங்களா..?" ரகசியமாக தமையனை வாரினாள் பவித்ரா...

"பின்னே.. கிடைச்ச சான்ஸை மிஸ் பண்ண முடியுமா..? நீயும் இந்த சுவாதியை கடத்த மாட்டேங்கிற.. நான் வேற என்னதான் செய்கிறது..?" அலுத்துக் கொண்டான் பார்த்திபன்..

"சீக்கிரமா வாங்க.. கல்யாண மண்டபத்துக்கு போகலாம்.." பறப்பாய் பறந்தாள் சுவாதி..

"ஏண்டி..?" நந்தினி அதட்டினாள்..

"உனக்கென்ன.. கோவிலைக் கண்டு விட்டா... சுவரைப் பார்த்தேன் தூணைப் பார்த்தேன்... அதில செதுக்கியிருக்கிற சிலையைப் பார்த்தேன்.. கோபுரத்தைப் பார்த்தேன்.. அதில கூடு கட்டியிருக்கிற புறாக்களைப் பார்த்தேன்னு அப்படியே நின்னுடுவ.. பசிக்கிறது எனக்குத்தானே..."

சுவாதியின் பேச்சில் நித்யா சிரித்து விட்டாள்.. அவர்கள் மண்டபத்துக்குப் போகும் போது காரின் முன்பக்க கண்ணாடியின் வழியாக நந்தினியையே பார்த்தபடி காரை ஓட்டினான் பார்த்திபன்..

'பிடிச்சிருக்குன்னு சொல்ல மாட்டேங்கிறாளே..' அவனது புருவங்கள் முடிச்சிட்டன...

அதே சிந்தனையுடன் மண்டபத்தை அடைந்தவனை பொறாமையுடன் வரவேற்றான் கல்யாண மாப்பிள்ளையான முகுந்தன்...

"கல்யாணம் உனக்கா.. இல்லை எனக்கா..?"

"என்னடா ஆச்சு..? இப்பப் போய் இந்த சந்தேகத்தைக் கிளப்பற..?"

"பின்னே என்னடா..? மாப்பிள்ளையே அடக்கி வாசிக்கறேன்.. துணை மாப்பிள்ளை தூள் கிளப்பறேன்னா வயிற்றில் புளியை கரைக்காதா எதுக்கும் அய்யர்கிட்ட நான் தான் மாப்பிள்ளைன்னு ஒரு தடவைக்கு இரண்டு தடவையா சொல்லி வைச்சிரனும்.. அவர் பாட்டுக்கு தாலியைத் தூக்கி உன் கையில கொடுத்திரப் போறாரு.."

முகுந்தனின் கவலை அவனுக்கு.. பார்த்திபனுக்கோ அவனது அந்தக் கவலையில் சிரிப்புத்தான் வந்தது...

"ஹா.. ஹா..."

"சிரிக்காதேடா.. நீதான் கொஞ்சம் அடக்கி வாசிக்கக் கூடாதா..?"

"என்னத்த அடக்கி வாசிக்கிறது..? நானென்ன கழுத்தில இரும்புச் சங்கிலிபோல தங்கச் சங்கிலியும்.. பத்து விரல்களிலேயும் மோதிரமுமா அலட்டறேனா..? ஒரு பட்டு வேட்டி சட்டை.. அதுக்கா இந்தப் பாடு..?"

"அது.. அது.. வந்து.."

"என்னத்த.. வந்து போயி.. துணை மாப்பிள்ளை பேண்ட் சர்ட்டில் வந்தா அதுக்கும் நீ சும்மா இருப்பியா..?"

எப்படி சும்மா இருப்பான்..? முகுந்தன் வேட்டி சட்டையில் சுமாராகத்தான் இருப்பான்.. அவன் பக்கத்தில் டிப்டாப்பாக பேண்ட் சர்ட்டில் பார்த்திபன் வந்து நின்றால் அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா..?



"சும்மா தூள் கிளப்பறேன்னு சொல்லிக்கிட்டு.. பாத்திரத்தில இருக்கிறதுதானேடா கரண்டியில் வரும்..? இருக்கிறதை குறைச்சுக்கன்னா எங்கே போய் குறைச்சுக்கறது..?"

பார்த்திபனின் கோபத்தில் அவன் முகுந்தனைச் சொல்லிக் காட்டுகிறானோ என்ற சந்தேகம் முகுந்தனின் மனதில் எழுந்தது.. அதை வெளிப்படையாக கேட்டு விட முடியுமா..? அப்படிக் கேட்டு பார்த்திபன் அதை ஆமாம் என்று ஒப்புக் கொண்டால் முகுந்தன் எங்கே போய் முகத்தை வைத்துக் கொள்வான்..? திருமணம் நடக்கப் போகிற சமயத்தில் முகத்தை மறைப்பதென்பது இயலாத ஒன்றல்லவா..

அதனால் பார்த்திபனின் கேள்வியை கண்டு கொள்ளாமல் அவனை சமாதானப் படுத்த முயன்றான் முகுந்தன்.. அவனது திருமணத்தில் அவனுக்கு அருகே துணை மாப்பிள்ளையாக முகுந்தன் நிற்பதென்பது அவனுக்கு அத்தியாவசியமானதாக இருந்தது..

பார்த்திபன் அந்த வட்டாரத்தின் பெரிய மனிதன்.. அவனுக்கும் முகுந்தனுக்கும் இருக்கும் ஆழ்ந்த நட்பை திருமணத்திற்கு வருபவர்களுக்கு அவன் வெளிப்படுத்தியே ஆக வேண்டும்.. அதனால் அவனுக்கும்.. அவன் குடும்பத்திற்கும் கிடைக்கப் போகும் மரியாதையின் அளவு வானளாவியதாக இருக்கும்..

"நீ சொல்கிறதும் சரிதான்.. ஆனா எந்நிலைமையையும் கொஞ்சம் யோசிச்சுப் பாரு..."

"பாருடா முகுந்தா.. தாரிணிக்கு நான் அண்ணன்.. அண்ணன்காரன் மன்மதனாவே இருந்தாலும் நீ கவலைப் படவேண்டியதில்லையே..."

'அதுதானே..' மனதைரியம் வரப் பெற்றவனாக மனம் தெளிந்தான் முகுந்தன்..

மணமேடையில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் விட துணைப்பெண்.. துணை மாப்பிள்ளையும் வெகு அழகாக இருப்பதாக அனைவரும் பேசிக் கொண்டார்கள்.. சந்தடி சாக்கில் மணமேடையிலேயே நந்தினியின் காதோரமாக சரிந்து

"பிடிச்சிருக்கா..?" என்று கிசுகிசுத்து வைத்தான் பார்த்திபன்..

நந்தினியின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது..

அது மற்ற எவரின் செவிகளுக்கும் எட்டி விடாமல் மிகச்சரியாக முகுந்தனின் செவிகளுக்கு எட்டிவிட.. நண்பன் நடத்தும் காதல்லீலையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பொறாமையில் தவித்துப் போனான் அவன்..

"டேய் மச்சான்.. இது உனக்கே நல்லாயிருக்காடா..?"

அய்யரையும் அவர் முன்னால் இருக்கும் அக்கினியையும் அவர் உச்சரித்துக் கொண்டிருந்த மந்திரங்களையும் மறந்து விட்டு பார்த்திபனிடம் நியாயம் கேட்டான் முகுந்தன்...

"முதல்ல நீ கையில இருக்கிறத அக்கினியில போடு.."

"கல்யாணம் எனக்கு.. ரொமான்ஸ் உனக்கா..?"

"அறிவு கெட்டதனமா பேசி வைக்காதே.. யார் காதிலயாவது விழுந்து வைச்சா தப்பா நினைச்சுக்கப்



போறாங்க.. துணைப் பெண்கிட்ட நான் ரொமான்ஸ் பண்ணினா உனக்கென்னடா நட்டக் கழுதை வந்தது..? தாரிணி என் தங்கைடா.."

"என்னவோ போடா..."

முகுந்தன் புலம்பியபடி அய்யர் சொல்லிய மந்திரங்களுக்கு வாயை அசைத்தபடி அடுத்து பார்த்திபன் நந்தினியிடம் என்ன நூலை விடுகிறான் என்று கண்காணித்துக் கொண்டிருந்தான்..

"டேய் மாப்பிள்ளை.. அய்யர் அப்போ பிடிச்சு தாலியை எடுத்து நீட்டிக்கிட்டு இருக்காரு.. நீ அதைக் கவனிக்காம வேற எதைக் கவனிக்கிற.. என்னடா.. தாலியை கட்டற ஐடியாவில இருக்கியா.. இல்லியா..?" ரகசியமாக முகுந்தனின் தொடையில் கிள்ளி வைத்தான் பார்த்திபன்..

"உனக்கு நண்பனா வாய்ச்ச பின்னாலே கல்யாண மேடையில இருந்தாலும் என் மனசு கல்யாணத்தில நிற்குமாடா ராசா..?"

பெருமூச்சு விட்டபடி தாலியை வாங்கி தாரிணியின் கழுத்தில் கட்டினான் முகுந்தன்.. பார்த்திபனின் விழிகள் உயர்ந்து நந்தினியைப் பார்த்த அதே நேரத்தில் அவளது விழிகளும் அவனைப் பார்த்தன...

அவன் தாலிகட்டிக் கொண்டிருந்த முகுந்தனை கண் ஜாடையில் சுட்டிக்காட்டி.. அதுபோல எப்போது அவன் அவள் கழுத்தில் தாலியைக் கட்டுவது என்று புருவங்களை உயர்த்தினான்.. அவள் முகம் சிவந்தது...

# 25

*என் மனதில் உன் நினைப்பை..*
*வைத்தது யாரு..?*
*எனக்காக நீ தருவாயா..*
*நிலாச்சோறு...!*

கவுசிக மகாநதி இருகரையும் தொட்டபடி ஓடிக் கொண்டிருந்தது.. அதன் கரையோரமாக நடந்த நந்தினி காருக்கு அருகில் நின்றிருந்த பார்த்திபனை திரும்பிப் பார்த்தாள்...

பிப்ரவரி மாதத்தின் குளிரும் இல்லாத.. வெக்கையும் இல்லாத சீதோஷ்ணம்.. நீரைத் தொட்டு வந்த ஈரக்காற்று உடலைத் தழுவ செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த பார்த்திபனும் அவளைப் பார்த்தான்...

பிங்க் வண்ண ஷிபான் சேலையில் தேவதை போல அவள் இருந்தாள்.. ஜரிகை வேலைப்பாடுடன் கூடிய அச்சேலையின் அழகை அவளது அழகு கூட்டிக் காட்டியது.. அடர்ந்த கூந்தலை பின்னலிட்டு ஒற்றை ரோஜாவை செருகியிருந்தாள்...

'ஒரு ரோஜாவே.. ரோஜாவை சூடியிருக்கிறதே..!...'

அவன் மனதில் கவிதை வந்தது.. செல்போனை சட்டைப் பையில் போட்டு விட்டு அவளை நோக்கி



நடந்தான்.. நந்தினியின் உடலில் எதிர்பார்ப்பின் பரவச அலைகள் தாக்கின...

'இந்த சுவாதி எங்கே போனா..?'

பார்வையால் துழாவினாள்.. கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவளையும்.. பவித்ராவையும் காணவில்லை...

"யாரைத் தேடற..?"

அவன் புருவங்களை உயர்த்திய விதத்தில் அவள் வசீகரிக்கப் பட்டாள்.. அவளால் பதில் சொல்ல முடியவில்லை.. பேச முடியாமல் நாணம் அவளைத் தடுத்தது.. அப்போதுதான் என்றில்லை.. எந்த நொடியில் கோவிலில் வைத்து அவன் மனதை அவளிடம் சொன்னானோ அந்த நொடியிலிருந்து அவனிடம் இயல்பாக பேசிப் பழக அவளால் முடியவில்லை..

"சுவாதியையா..?"

விடாமல் அவன் கேட்டான்.. அவள் முகம் வியர்த்துப் போனாள்.. நதியோரமாக நின்று கொண்டிருந்த அந்த மாலை வேளையில்.. ஈரக்காற்று அவள் உடல் தழுவிச் சென்ற இதமான அந்தப் பொழுதில் வியர்த்து நின்றவளை அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான்...

"எதுக்காக நெர்வஸ் ஆகிற..?"

என்னவென்று அவள் பதிலைச் சொல்லுவாள்..?

உதட்டைக் கடித்தபடி நதிநீரை பார்த்தவளை ஆசையுடன் அவன் பார்த்தான்..

"பவித்ரா சுவாதியை கடத்திட்டு போயிருக்கா.." சாவாதானமாக அவன் சொல்ல..

"என்னது.." என்று அவள் பதறி நிமிர்ந்தாள்..

"மெல்ல.. மெல்ல.. எதுக்காக இந்தப் பதட்டம் நந்தினி..? கடத்திட்டு போயிருக்கான்னுதானே சொன்னேன்..? நாடுவிட்டு நாடு கடத்திட்டுப் போயிருக்கான்னா சொன்னேன்..?"

"எங்கேதான் போயிருக்காங்க..."

"என்மேல் குற்றமில்ல நந்தினி.. இந்த குல்லூர் சந்தை லேக்கில போட்ஹவுஸ் இருக்கு.. பார்க் இருக்கு.. சுற்றிப் பார்க்க சீனரிஸ் இருக்கு.. ஆகஸ்டில இருந்து பிப்ரவரி வரை வருகிற நீர் பறவைகள்ளால் இருக்கு.. இத்தனையும் இங்கிருக்க.. தொலைதூரமா இருக்கிற ரெஸ்டாரெண்டில வறுத்த மீன் இருக்குன்னு அதைத் தேடிக்கிட்டு போயிருக்கிறா உன் தோழி... இதில என் தப்பிருக்கான்னு சொல்லு பார்ப்போம்..."

இவன்தான் பவித்ராவிடம் அப்படிச் சொல்லச் சொல்லியிருப்பான் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அவனது சிரிக்கும் கண்களும் சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்த இதழ்களும் அதை உறுதிபடுத்தின..

'தின்னிப் பண்டாரம்..'

மனதுக்குள் சுவாதியைத் திட்டித் தீர்த்தாள் நந்தினி..

"வா.. இப்படியே ஓரமா ஒரு வாக் போயிட்டு வரலாம்.." பார்த்திபன் அழைத்தான்...

வேறு வழியில்லாமல் அவனுடன் இணைந்து நடந்தாள் நந்தினி.. இன்னும் இரண்டு நாளில் அவள் திருப்பூருக்கு திரும்ப வேண்டுமென்ற நினைவு அவள் மனதில் பாரமாக அழுத்தியது..

சொந்த வீட்டிற்குத் திரும்புவதைப் பற்றி எதற்காக இந்த மனவேதனை என்று தன்னைத்தானே அவள் கடிந்து கொண்டாள்.. இருந்தும் அவள் மனம் கலங்கித் தவித்தது..



அவளுடைய வீட்டை 'வீடு' என்று சொல்வதை விட மாளிகை என்றுதான் சொல்ல வேண்டும்.. அந்த வீட்டோடு ஒப்பிடுகையில் சுவாதியின் மாமா அம்பலவாணனின் வீடு. அவள் வீட்டின் போர்டிகோவின் அளவில்தான் இருக்கும்..

இருந்தும் அவளுக்கு இந்த வீட்டில் இருந்த மகிழ்வில் துளிக்கூட அந்த வீட்டில் இருந்ததில்லையே..

தாரிணியின் திருமணம் முடிந்தவுடன் மணமக்களோடு அவர்கள் பார்த்திபனூருக்கு சொன்றார்கள்.. மறுநாள் மறுவீட்டு விருந்து இருந்தது.. அன்றைய இரவு மணமக்களுக்கு முதலிரவு என்பதால்.. வயதுப் பெண்களான நந்தினியையும்.. சுவாதியையும் விருது நகருக்கு அழைத்துக் கொண்டு போய் விடலாமா.. என்று அம்பலவாணன் கேட்டார்.. ஆனால் தாரிணியோடு சுவாதியின் தாய் சித்ரலேகா துணைக்கு இருக்க வேண்டி வந்ததில் அவளும் ரங்கநாதனும் பெண்கள் இருவரையும் விருதுநகருக்கு அனுப்பி வைக்க யோசித்தார்கள்.. அவர்கள் மறுவீட்டுக்கு மணமக்களை அழைத்துக் கொண்டு போக வேண்டியிருந்தது..

"சுவாதி மட்டும்ன்னா பரவாயில்லை.. அண்ணன் கூட அனுப்பி வைச்சிரலாம்.. நந்தினியும் இருக்கா.. அண்ணியும் நம்ம கூட இருக்காங்க.. இதில அந்த வீட்டில இந்தப் பெண்களை யார் கவனிச்சுக்கிறது..?"

இந்தப் பிரச்னையை எளிதாக தீர்த்து வைத்தாள் நித்யா.. அவளும் பார்த்திபனுடன் முகுந்தனின் வீட்டில் மணமக்களை விட்டுவிட்டு வர வந்திருந்தாள்.. வந்தவள் பெண்கள் இருவரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டாள்..

"இதோ பாருங்க சித்ரலேகா... நீங்க உங்க அண்ணன் மகளைக் கவனிங்க... அவ புதுப்பெண்.. நீங்கதான் அவளைப் பக்கத்தில இருந்து பார்த்துக்கனும்.. நாளைக்கு மறுவீட்டு அழைப்பு வேற இருக்கு.. அங்கேயும் நீங்க புதுப்பெண்-மாப்பிள்ளைக்கு விருந்து சமைத்துப் போடறதில பிஸியா இருப்பீங்க.. அதுக்குப் பின்னாலே இருக்கவே இருக்கு 'பலகாரக்கூடை' பெண்ணுக்கு தாய் வீட்டுச் சீரோட பலகார வகைகளை செய்து அண்டாக்களில் போட்டு அனுப்பனும்.. அது என்ன லேசான வேலையா..? இத்தனை வேலைகளுக்கு மத்தியில இந்தப் பெண்களை எப்படிப் பார்த்துக்குவீங்க.. அதனால நீங்க நிம்மதியா ஆக வேண்டிய வேலைகளைக் கவனிங்க.. சுவாதியும் நந்தினியும் எங்க வீட்டில பவித்ராகூட இருக்கட்டும்.. எங்க வீட்டுக்கும் விருந்தாளிக வந்து நாளாச்சு.. பவித்ரா இவங்க கூட ஒட்டிக்கிட்டா.. எப்படியும் நீங்க மூன்று நாள் கழிச்சு பலகாரக் கூடையோட பார்த்திபனூருக்குத்தானே வந்து சேரனும்..? அப்ப பிள்ளைகளை கூப்பிட்டுக்கங்க.. என்ன நான் சொல்கிறது...?"

சித்ரலேகாவிற்கு ரங்கநாதனுக்கும் சொல்வதற்கு என்ன இருந்தது..? பிசிறில்லாத நித்யாவின் திட்டத்தை மனப்பூர்வமாக அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.. திருமணத்திற்கு முந்தைய நாளில் இருந்து சுவாதியும் நந்தினியும் நித்யாவின் வீட்டில்தானே இருக்கிறார்கள்..? புதிதாக அவர்கள் அங்கு போகப் போவதில்லையே.. அவர்களின் பெட்டியும் நித்யாவின் வீட்டில்தான் இருந்தது.. அதனால்

"தேங்க்ஸ்ங்க.." என்று மனமார நன்றி சொன்னாள் சித்ரலேகா..



"நல்ல வேளை செய்றிங்க போங்க.. நாம ஒன்னுக்குள்ள ஒன்னா இருக்கிறவங்க.. கைக்கு வாய் தேங்க்ஸ் சொல்லுமா..?"

நித்யா என்னவோ நந்தினியை தங்களின் வீட்டுப் பெண்ணாக சித்ரலேகா நினைப்பதை குறிப்பிட்டுத்தான் அப்படிச் சொன்னாள்.. சித்ரலோகாவோ.. அவ்வளவு பணக்காரப் பெண்மணி தங்களுக்குள் ஒன்று என்று அவளைக் குறிப்பிட்டு விட்டதில் பெருமைப் பட்டுப் போனாள்.. அதிலும் அந்த வார்த்தைகளை முகுந்தனின் பெற்றோர் முன்னால் அவள் சொன்னதால் மாப்பிள்ளை வீட்டினரிடம் அவளுக்கான மதிப்பு உயர்ந்து விட்டது..

"பார்த்திபனோட அம்மாவை உங்களுக்கு இந்த அளவுக்கு தெரியுமா..?"

அவர்கள் ஓடியோடி சித்ரலேகாவை தாங்கு தாங்கென்று தாங்கியதில் தான் பெண் வீட்டைக் சேர்ந்தவளா.. இல்லை மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவளா என்பதில் அவளுக்குச் சந்தேகமே வந்து விட்டது...

நித்யாவுடன் ஸ்ரீவில்லிபுத்துரிலிருந்த பார்த்திபனின் வீட்டிற்குப் போனபோது நந்தினியின் மனதில் காலையில் அவன் சொன்ன காதல் குறுகுறுத்தது.. முதல் நாளைப் போல இயல்பாக அவன் வீட்டுக்குள் கால் வைக்க முடியாமல் அவள் மனம் மயங்கினாள்...

அவள் வாழப் போகும் வீடு என்பதைப் போன்ற எண்ணம் மனதுக்குள் அலையாய் சுழன்றதில் அன்று இரவு தூக்கத்தைத் தொலைத்தாள்.. விடிந்ததும் அவர்களை ஊரைச் சுற்றிப் பார்க்க பவித்ரா.. பார்த்திபனுடன் அனுப்பி வைத்து விட்டாள் நித்யா..

"இன்னும் மூன்று நாள் கையில் இருக்கு.. வீட்டுக்குள் அடைந்து கிடந்து என்ன செய்யப் போறீங்க.. பக்கத்திலே குல்லூர் சந்தை டேம் இருக்கு.. பெரியார் அணை, கோவிலூர் அணைன்னு இருக்கு குல்லூர் சந்தை லேக்குக்கு போயிட்டு வாங்க.. மத்ததை நாளைக்குப் பார்த்துக்கலாம்..."

நிகழ்ச்சி நிரலை அவளே வகுத்துக் கொடுத்ததில்..

"ஸ்வீட் ஆண்ட்டி.." என்று மெச்சிப் போனாள் சுவாதி..

பவித்ரா மூன்று தினங்களுக்கு கல்லூரிக்கு மட்டம் போட்டு விட்டதாக அறிவித்து விட்டாள்.. சுவாதியுடன் அவள் விரல் பிணைந்து நட்புப்பயிர் வளர்த்ததில் பார்த்திபனின் மகத்தான பங்கு இருக்கிறது என்று நந்தினி சந்தேகித்தாள்..

பார்த்திபன் அவளை பார்வை வட்டத்துக்குள்ளேயே வைத்திருந்தான்.. லேக்கை அடந்து நீர்பறவைகளை ரசித்த போது.. அவன் மட்டும் அவளை ரசித்துக் கொண்டிருந்தான்..

நந்தினி அவளைச் சுற்றி வளைக்கும் அவன் பார்வையை உணர்ந்தபடிதான் இருந்தாள்.. அவளது மேனி முழுதும் அவனது பார்வை படிந்து வருடி வருவதை இதமான இம்சையுடன் உணர்ந்தபடிதான் இருந்தாள்.. ஆவலடன் அவன் பார்வை ஆக்டோபசைப் போல அவளை வளைத்துப் பிடித்து தனக்குள் அடக்கிக் கொள்ள முனைவதை நடுக்கத்துடன் உணர்ந்தபடிதான் இருந்தாள்..

தமையனின் கண்ணசைவில் காரியமாற்றும் பவித்ரா சுவாதியை 'மீன்' ஆசை காட்டி அழைத்துப் போன பின்பு தனித்து விடப்பட்ட அவனும் அவளும்.. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..



ஒரு திருப்பத்தில்.. பூச்செடியின் மறைவில் நந்தினியின் கைபிடித்து நிறுத்தினான் பார்த்திபன்.. அவள் முகத்தை கூர்ந்து பார்த்து..

"சொல்லு.. உனக்கு என்னை பிடிச்சிருக்கா.. இல்லையா.." என்று கேட்டான்..

அவள் பதில் சொல்ல தவித்த போது அவனது புருவங்கள் சுருங்கின..

"புரிஞ்சுக்க நந்தினி.. உன் பதிலை கேட்ட பின்னாடி தான்.. எந்த ஸ்டெப்பையும் நான் எடுத்தாகனும்.." என்று கடினமான குரலில் சொன்னான்..

## 26

உன் விரலை என் விரல்தான்
தொட்ட நேரம்..
நிலாச்சோறு அனுபவத்தை..
மனது உணரும்...

நந்தினி துணுக்குற்றாள்.. அவளது அமைதியில் அவனை அவளுக்குப் பிடிக்கவில்லையென்று அவன் நினைத்து விடுவானோ..?

நினைக்கும் போதே அவளது நாக்கு வறண்டு தொண்டை உலர்ந்ததில்..

"பிடிச்சிருக்கு.." என்று அவசரமாக சொல்லி விட்டாள்..

அவன் கண்கள் மின்னின.. அவளது அவசரமான பதிலில் அவனது ஆண்மை கர்வம் கொண்டது.. அவள் மனத்தை வென்று விட்ட வெற்றியாளனாக அவன் அவள் முகத்தை இறுக்கிப் பற்றி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.. நடப்பது என்னவென்று அவள் உணரும் முன்னாலே அவள் இதழ்களில் அவன் இதழ்கள் அழுந்த பதிந்து விட்டன...

நந்தினி அந்த மணித்துளியில் உறைந்து போனவளாக அசைவற்று ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள்.. அதுவரை அவளறியாத அனுபவம் அது.. ஓர் ஆணின் ஸ்பரிசத்தை அவளுக்கு உணர்த்தியவனிடமிருந்து விலகிவிடச் சொல்லி அவளது அறிவு அறைகூவியும் அவள் விலக முடியாமல் அவன் பிடிக்குள் அகப்பட்டு நின்றாள்..

அந்த முதல் முத்தம் அவளுக்குள் ஏற்படுத்திய அதிர்சியில் எழுந்த பேரலையில் அவள் அடித்துச் செல்லப் பட்டாள்.. அவன் தொட்டவுடன் உருகிய உடலைக் கட்டுப் படுத்தும் வகையறியாமல் அவள் திணறிப் போனாள்..

நீண்ட முத்தத்திற்குப் பின்னால் விலகிய அவனது கைகள் அவளது கன்னத்தை வருடின.. அவள் முகத்தை ஆசையாசையாய் பார்த்தவனின் விழிகளில் தெரிந்த காதலின் ஜீவாலையில் அனலில் பட்ட மெழுகாக அவள் உருகினாள்..

'அலை மேல் துரும்பானேன்..
அனல் மேல் மெழுகானேன்..
அய்யன் கை பட்டவுடன்..
அழகுக்கு அழகானேன்..'



என்றோ கேட்ட பாடல் அவள் மனதில் ஒலித்தது.. அவள் தோள் தடவிய அவனது கைகளிடமிருந்து விடுபட்டு விலகி நின்றாள்...

"என் நந்தினி.." அவன் இழுத்துக் கொள்ள முனைந்தான்..

சட்டென்று அவள் விலகி நடக்க அவன் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது...

"நில்.." என்று அதட்டினான்..

அவள் நிற்கவில்லை.. அந்த தனிமையிலிருந்து விடுபட்டு.. ஆள்கள் நடமாடிக் கொண்டிருந்த பகுதியை அடைந்ததும்தான் அவள் நின்றாள்...

அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தவனின் முகத்தில் குற்றச்சாட்டு இருந்தது..

"உன் தனிமையை நான் பயன் படுத்திக்கிட்டேன்னு நினைக்கறியா..?" கோபத்துடன் கேட்டான்..

"இல்லை.." மெல்லிய குரலில் அவள் பதில் சொன்னாள்..

"அப்புறமும் எதுக்காக இந்த ஓட்டம் நந்தினி..?"

அவன் கேள்வி அவளுக்குப் புரிந்தது.. பதில் சொல்லத்தான் அவளால் முடியவில்லை...

எதற்காக அவள் ஓடினாள்..? அவளது தனிமையை அவன் பயன்படுத்திக் கொள்வான் என்றா ஓடினாள்..?

அந்தத் தனிமையில் எங்கே அவனிடம் உருகிக் கரைந்து விடுவோமோ என்ற பயத்தில் அல்லவா ஓடினாள்..?

"என்னைப் பார்த்தா உனக்கு வில்லனைப் போல இருக்கா..?"

அவன் கேள்வியில் அவள் கண்கள் கலங்கி விட்டன..

அவள் அவனை வில்லனாக நினைக்கிறாளா..? அப்படி நினைத்திருந்தால் சற்று முன்னால் அவன் பதித்த முத்தத்திற்கு இசைந்து கொடுத்து நின்றிருப்பாளா..?

"ஒரு ஹீரோ.. இந்தக் கேள்வியைக் கேட்கிறதை நினைச்சா ஆச்சரியமா இருக்கு..."

அவளையுமறியாமல் அவள் சொல்லி விட்டாள்.. அவன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்..

"பேசியது யார்.. நீதானா..? உனக்கு இவ்வளவு நீளமாகக் கூடப் பேசத் தெரியுமா..? மணிரத்னம் பட ஹீரோயின் போல ஒன்றிரண்டு வார்த்தைகளுக்கு மேலே நீ பேச மாட்டியே..."

அவளுக்கு வெட்கமாகி விட்டது.. இந்த ஸ்வாதியும்.. பவித்ராவும் வந்து விட்டால் தேவலையென்ற நினைவுடன் அவர்கள் வருகினற வழியை பார்த்தபோதுதான் ரஞ்சித்தை அவள் பார்த்துவிட்டாள்..

சற்றுத் தொலைவில் கண்களை கூலிங்கிளாஸ் கண்ணாடியில் மறைத்துக் கொண்டு அவர்களையே பார்த்தபடி நின்றிருந்தவனை அவள் அடையாளம் கண்டு கொண்டாள்..

'இவன் இங்கே எங்கே வந்தான்..?' அவள் முகம் மாறியது.. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபனின் முகத்தில் கேள்விவந்தது.. அவள் பார்வை போன திக்கில் பார்த்தவன்..

"அவன் யார் நந்தினி..? உனக்குத் தெரிந்தவனா..?" என்று கேட்டான்..

"ம்ம்ம்.. என் அண்ணியின் ஒன்றுவிட்ட அண்ணனைப் போலத் தெரிகிறது.." யோசனையுடன் சொன்னாள் நந்தினி...



"ஓ.. சொந்தக்காரன்னா தள்ளி நின்று எதுக்காக முறைக்கிறார்..? கிட்ட வந்து பேச வேண்டியதுதானே..?" பார்த்திபன் கேட்டான்..

"அதுதான் என்னன்னு தெரியலை.." தயக்கத்துடன் சொன்னாள் நந்தினி..

அவனைப் பற்றிய சங்கரலிங்கத்தின் அனுமானத்தைப் பற்றி அவளால் பார்த்திபனிடம் கூற முடியவில்லை.. அப்படிக் கூறியிருந்தால் பல விபரீத விளைவுகளிலிருந்து அவள் தப்பியிருக்கலாம்.. அதை மறைத்து அண்ணனின் மனைவியைப் பற்றிக் குறைகூற முடியாமல் மேலோட்ட மாக அவள் சொல்லி வைத்ததால் பார்த்திபனுக்கு ரஞ்சித்தின் மீது சந்தேகம் எதுவும் வராமல் போய்விட்டது...

அவர்கள் பார்ப்பதை பார்த்த ரஞ்சித் கூலிங்கிளாஸை கழட்டி கையில் பிடித்தபடி அவர்களை நோக்கி வந்தான்..

"ஹாய்.." என்று கைநீட்டியவனை முதல் பார்வை-யிலேயே பார்த்திபனுக்கு பிடிக்காமல் போய் விட்டது..

"நீங்க நந்தினியின் ரிலேடிவ்வா..?" அவன் கேட்டான்

"யெஸ்.." படுஸ்டைலாக சொன்னான் ரஞ்சித்..

"ரிலேடிவ்ன்னா கிட்ட வந்து பேச வேண்டியதுதானே.. ஏன் தள்ளி நின்று பார்க்கறிங்க..?" பட்டென்று நேரடியாகவே கேட்டு விட்டான் பார்த்திபன்..

"உங்களை எதுக்கு டிஸ்டர்ப் பண்ணனும்னுதான் தள்ளி நின்னு பார்த்துக்கிட்டு இருந்தேன்..."

அவன் பேச்சில் தொனித்த மறைபொருளில் நந்தியின் முகம் மாறி விட்டதை கவனித்தான் பார்த்திபன்.. அவன் முகத்தில் கடுமை பரவியது..

"தள்ளி நின்னு பார்க்கிறதுதான் ரொம்ப டிஸ்டர்ப் பண்ணும்.. இப்படி நினைக்கிறவர்.. வந்த வழியில் திரும்பிப் போயிருக்கனும்.. நின்று நோட்டம் பார்த்திருக்கக் கூடாது.."

மீண்டும் பார்த்திபனின் நேரடித் தாக்குதலுக்கு ஆளான ரஞ்சித்தால் பதில் சொல்ல முடியவில்லை.. திருப்பூர் வீட்டில் ரூபாவின் பக்க பலத்தோடு பேசிப் பழகியவன் அவன்.. இப்படி தனித்து நின்று பார்த்திபனைப் போன்ற ஆண் மகனுடன் நேருக்கு நேர் நின்று பேசி அவனுக்குப் பழக்கமில்லையே.. அதனால் வெற்றிகரமாக ஜகா வாங்கி விட்டான்...

"இங்கே ஒரு பிரண்டைப் பார்க்க வந்தேன்.. வந்த இடத்தில் நந்தினியைப் பார்த்ததும் நின்னுட்டேன்..."

"எந்த பிரண்ட்..?"

"என்னோட பிரண்ட்...."

"பெயர் என்ன..? எந்த ஊர்..? என்ன பண்றார்..?"

இத்தனை கேள்விகளை பார்த்திபன் கேட்டு வைப்பான் என்று தெரிந்திருந்தால் அவர்களின் பக்கத்தில் கூட அவன் வந்திருக்க மாட்டான்...

'தள்ளி நின்னு நோட்டம் பார்த்ததோட எஸ்கேப் ஆகியிருக்கலாம்.. அதை விட்டுட்டு.. பக்கத்தில் வந்து பேச்சுக் கொடுத்ததுதான் தப்பாப் போச்சு..'

தன்னைத்தானே நொந்து கொண்டவனாக எப்போதும் கை கொடுக்கும் செல்போனை எடுத்து காதுக்கு கொடுத்தவன்..

"எக்ஸ்கியூஸ்மி.." என்றபடி அகன்று விட்டான்...

பவித்ராவிடம் மீன் வறுவலின் மணம்.. குணம்.. ருசி பற்றி விவாதித்தபடி வந்து சேர்ந்த சுவாதி.. தூரத்தில் போன ரஞ்சித்தைப் பார்த்துவிட்டாள்..



"யாருடி அது..? அந்தக் கோட்டான் ரஞ்சித் மாதிரி யில்ல..?" என்று மிகச் சரியாக கண்டு பிடித்து விட்டாள்..

"அவன்தான்.." என்ற பார்த்திபனின் நெற்றியில் ரேகைகள் படிந்தன..

"எதனால அவனை கோட்டான்ங்கறிங்க..?" சுவாதியிடம் விசாரித்தான்...

"அவன் பக்கா வில்லன் சார்.. நந்தினியோட அண்ணிக்கு சுத்தி வளைச்சு சொந்தமாகனுமாம்.. அடிக்கடி இவ வீட்டுக்கு விருந்தாளியா வந்துருவான்.. தாத்தாவுக்கு இவனைக் கண்டாலே ஆகாது.. இவன் வந்தா நந்தினி ரூமை விட்டு வெளியே வரவே மாட்டா.. அப்படி இவளோட சொந்த வீட்டிலேயே இவளை ரூம் அரெஸ்டில் வைச்சிருக்கிற ராஸ்கல் இவன்..."

நந்தினியின் கண்ஜாடையை கண்டு கொள்ளாமல் பார்த்திபனிடம் ஒப்பித்து விட்டாள் சுவாதி..

தனிமை கிடைத்த போது..

"எதற்காக இதை என்னிடமிருந்து மறைத்தே.." என்று அதட்டினான் பார்த்திபன்...

பதில் சொல்ல முடியாமல் அவள் கண்கலங்கியதில் அவனது சினம் மறைந்தது.. எதற்கும் ஜாக்கிரதையாய் இருந்து கொள்ள வேண்டுமென்று சுவாதி சொன்னாள்.. அவனைமீறி நந்தினியை யாரும் நெருங்கிவிட முடியாது என்று பார்த்திபன் கோபப்பட்டான்...

அவனது அந்த கோபத்தில் தாய் பறவையின் சிறகுக் கடியில் பாதுகாப்பாக இருக்கும் சேய் பறவையைப் போல உணர்ந்தாள் நந்தினி...

மறுநாள் அவர்கள் அணைக்கட்டைச் சுற்றிப் பார்த்தார்கள்.. படகுசவாரி செய்தார்கள்.. மாலையில் வீடு திரும்பியபோது தனிமையில் அவளிடம் காதல் சொல்லிய பார்த்திபனிடம் பதிலுக்கு காதல் சொன்னாள் நந்தினி...

அன்றைய இரவு பௌர்ணமியின் முழுநிலவு இரவு என்று பவித்ரா சொன்னாள்.. மொட்டை மாடியில் நிலாச் சோறு சாப்பிடலாமா என்ற அவளின் ஆசைக்கு நித்யா சம்மதித்தாள்.. பார்த்திபனுக்கு கம்பெனியில் வேலை இருந்ததால்.. அவன் இரவுச் சாப்பாட்டை கேரியரில் எடுத்துக் கொண்டு கம்பெனிக்கு கிளம்பி விட்டான்...

தெருமுனைக் கடை வரை போய் விட்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற சுவாதி வீடு திரும்பவில்லை.. மாறாக நந்தினியை போனில் அழைத்தவள்.. தெரு முனைக் கடையில் பொருள்கள் வாங்கியதாகவும் பர்ஸைப் பார்த்தால் அது தொலைந்துவிட்டதாகவும் சொல்லி அவசரமாக பணத்துடன் வரச் சொன்னாள்...

"இவளோட முடியாது..."

செல்லமாக அலுத்துக் கொண்ட நந்தினி.. வீட்டை விட்டு வெளியில் வந்தபோது காருடன் நின்ற ரஞ்சித்தைப் பார்த்து விட்டாள்.. திரும்பவும் வீட்டுக்குள் போய் விடலாமா என்று நினைத்த போது அவள் பின்னாலிருந்து ஒருவரின் கை கைக்குட்டையுடன் அவள் முகத்தில் பதிந்தது.. நந்தினி மூச்சையடக்க முயன்ற போது அவன் காருக்குள் நந்தினியை தள்ளி விட்டு விட்டான்.. கார் கிளம்பியது.. மயங்கியவளைப் போன்ற பாவனையுடன் இருந்த நந்தினி.. ஊருக்கு வெளியே டீக்கடையில் கார் நின்ற போது இறங்கி ஓட ஆரம்பித்தாள்..



"ஏய்.. அவ ஓடுறாடா.."

காபியை மறந்த தடியன்கள் அவளைத் துரத்த ஆரம்பித்தார்கள்.. ஓடிக் களைத்த நந்தினி எதிரே வந்த காருக்கு முன்னால் விழுந்தாள்.. கார் கதவைத் திறந்து இறங்கிய பார்த்திபன் பதறிப் போனவனாக..

"நந்தினி.." என்று அவளை எழுப்பினான்...

"நீங்களா..?!..."

அது சாலையென்றும் பாராமல் ஆனந்தத்துடன் அவனைக் கட்டிக் கொண்டாள் நந்தினி.. அவளின் அந்தச் செய்கையில் அவன் கரைந்து விட்டான்..

"என்னடி ஆச்சு..?"

"சுவாதியோட பர்ஸைக் காணோமாம்.. போன் பண்ணினா.. பணத்தோட வீட்டை விட்டு வெளியில வந்தேன்.. இவங்க என் முகத்தில மயக்க மருந்து கர்சீப்பை வைச்சுக் கடத்தப் பார்க்கிறாங்க..."

பார்த்திபனின் வெறிகொண்ட பார்வையில் ரஞ்சித் அஞ்சிப் போனவனாக பின்வாங்கினான்.. பார்த்திபன் அவன்மீது பாய்ந்து விட்டான்.. அவன் கொடுத்த அடியில் ரஞ்சித்தின் மூக்கு உடைந்து.. முகம் கை காலெல்லாம் ரத்தக் களறியாகி விட்டிருந்தன.. அதற்குள் மற்றவர்கள் ஒன்று சேர்ந்து பார்த்திபனின் மீது பாய நந்தினிக்கு பயம் வந்து விட்டது..

ஒற்றை ஆளாய் ஆயிரம் பேரை அடித்துச் சாய்ப்பது சினிமா ஹீரோவுக்குத்தான் சுலபம்.. நிஜத்தில் அது சாத்தியமில்லையே..

இருள் சூழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில்.. பார்த்திபன் அவர்களுடன் போராடியபடி காருக்கு அருகில்

வந்து விட்டான்.. சட்டென்று கார் கதவைத் திறந்து நந்தினியை உள்ளே தள்ளியவன் அவர்களில் ஒருவனின் கையைப் பிடித்து முறுக்கி மற்றவர்களின் மீது தள்ளி விட்டான்.. அவர்கள் சரிந்து விழுந்த அந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டவன் காரில் ஏறி.. காரைக் கிளப்பிப் பறக்க விட்டான்.. பின்னால் தொடர்ந்து வந்த ரஞ்சித்தின் கார்.. ஒரு வளைவில் மறைந்து காணாமல் போனது..

காரை நிறுத்தாமல் ஓட்டியபடி ஒருகையில் செல்போனை எடுத்து பார்த்திபன் வீட்டுக்கு போன் போட்டான்..

“அம்மா.. நந்தினி ஆபத்தில் இருக்கா.. எங்களை ஒரு கார் நிறைய ஆள்கள் ஃபாலோ பண்ணிக்கிட்டு இருக்காங்க.. நான் எப்படியாவது அவங்களிடமிருந்து தப்பிச்சு நந்தினியோட வீடு வந்து சேர்ந்துடுவேன்.. அது வரைக்கும் வீட்டில யாருக்கும் விவரம் தெரிய வேணாம்.. நந்தினியை நம்ம சொந்தக்காரங்க வீட்டுக்குக் கூப்பிட்டுக் கிட்டு போயிருக்கிறதா சொல்லிருங்க.. திரும்பி வந்த நந்தினி உங்க ரூமிலேயே படுத்திட்டான்னு சொல்லிடுங்க.. பவித்ராவை சுவாதியுடன் படுக்கச் சொல்லுங்க.. ஜாக்கிரதை.. சுவாதிக்கு சந்தேகம் வந்து விடக்கூடாது..”

“......”

“போலிஸிக்குத் தகவல் சொல்லலாம் தான்.. ஆனா.. நந்தினியோட பெயரைச் சொல்ல வேண்டியிருக்கும்.. அவளோட தாத்தா அதை விரும்ப மாட்டார்...”

“......”

“நான் பார்த்துக்கறேன்ம்மா.. இப்போதைக்கு நாங்க ஓடிக்கிட்டு இருக்கோம்.. வேற எதுவும் பேச நேரமில்லை..



பார்த்திபன் போனை அணைத்து விட்டான்.. அவனது கார் மலையடிவாரத்தை அடைந்து ஒரு பாறையின் மறைவில் நின்றது.. காருக்குள் இருந்தபடியே விளக்குகளை அணைத்து விட்டுக் காத்திருந்தான்.. அவன் எதிர் பார்த்ததைப் போலவே ரஞ்சித்தின் கார் வந்தது.. இறங்கிய தடியன்கள் அங்கும் இங்கும் தேடிவிட்டு.. ஏமாற்றத்துடன் காரில் ஏறினார்கள்..

“இங்கேதான் எங்கேயோ இருக்கனும்டா.. இந்த ஊரை அவங்க கடக்கலைன்னு அங்கே காத்திருக்கிற நம்ம ஆளுக அடிச்சுச் சொல்றானுகடா..” ரஞ்சித்.. அடிபட்ட காயத்தோடு உறுமினான்..

“நினைச்சேன்.. இவங்க வழி பூராவும் ஆள் வைச்சிருப்பாங்கன்னு.. சங்கரலிங்கத்தின் பேத்தியை கடத்தறதுன்னா சும்மாவா..?” பார்த்திபன் முணுமுணுத்தான்.. அவர்களின் கார் நகர்ந்ததும்.. பையுடன் காரை விட்டு இறங்கினான்..



# 27

*இந்த இரவும் நிலவும் அறிய...*
*நீயும் நானும் உண்ட...*
*நிலாச் சோறு விருந்தை..*
*நம் வாழ்நாளில் மறப்போமா..?*

“இறங்கு நந்தினி..” என்ற பார்த்திபன் பையை தோளில் மாட்டிக் கொண்டான்.. அச்சத்தினால் நடுங்கிக்

கொண்டிருந்த நந்தினியின் கையைத் தன் கைக்குள் அடக்கிக் கொண்டான்.. வேகமாக ஓட ஆரம்பித்தான்...

நந்தினி அவன் கூட ஓட சிரமப்பட்டாள்.. அவள் கையை இறுக்கிப் பிடித்திருந்த அவனது வலிமையான கை இழுத்துப் போனதில் அவன் பின்னாலேயே அவளால் செல்ல முடிந்தது..

பார்த்திபன் எந்தப் பக்கமும் பார்க்காமல் ஒரே குறியாக முன்னேறிக் கொண்டிருந்தான்.. அவன் எங்கே அழைத்துப் போகிறான் என்பதைப் பற்றிய விவரம் எதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நந்தினிக்குத் தோன்ற வில்லை..

அவளைப் பொருத்தவரை அவன் அழைத்துக் கொண்டு போகிறான்.. அவ்வளவுதான்.. அவன் எங்கே அழைத்துக் கொண்டு போனாலும் அங்கே போவதற்கு அவள் சித்தமாக இருந்தாள்..

எந்த நொடியில் இந்த நம்பிக்கையின் வித்து அவள் மனதில் விழுந்ததென்று அவளால் அனுமானிக்க முடிய வில்லை.. சொந்த வீட்டில்.. கூடப் பிறந்த அண்ணனின் மனைவியை நம்பாதவள்.. சுவாதியைத்தவிர வேறு எந்தத் தோழியிடமும் நெருங்கிப் பழகாதவள்.. பார்த்திபனை நம்பினாள்.. அந்த முழுநிலவின் இரவில்.. அவள் கைபிடித்து மலையேறிக் கொண்டிருந்தவனின் கரம் பற்றி ஏனென்று கேட்காமல் அவனைப்பின் தொடர்ந்து கொண்டிருந்தாள்..

மலைப்பகுதியின் சரிவில் கால் வைத்த நந்தினி.. சரிந்து விழுந்தாள்.. அவள் பூமியின் மீது சாய்வதற்குள் பார்த்திபனின் கரங்கள் அவளைத் தாங்கிப் பிடித்தன.. அவனது வலிமையான கரங்கள் பூமாலை போல



ஏந்திக் கொண்டதில்.. அவளது மென்மையான கரங்கள் பூமாலையில் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டன..

"பயந்துட்டியா..?"

அவளது காதோரமாக அபத்தமாக வினவினான் பார்த்திபன்.. அவனைப் போன்ற ஓர் 'ஹி மேன்' கூட அபத்தமாக பேசக்கூடும் என்பதை அன்றுதான் நந்தினி கண்டாள்..

முன்னிரவைக் கடந்து கொண்டிருந்த அந்த இரவு வேளையில்.. ரௌடிகள் துரத்த.. அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு.. மலைமீது ஏறுகிறவளிடம் பயந்து விட்டாயா என்று கேட்டால் அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்..?

"ம்ம்ம்ம்..." அவள் முணுமுணுத்தாள்..

"நானிருக்கேனில்ல.. அப்புறம் பயமெதுக்கு.. ம்ம்ம்..?"

அவனது அந்த அதட்டுதலை அவளுக்குப் பிடித்திருந்தது.. இறங்க முயன்றவளை அவன் இறக்கி விடவில்லை...

"பேசாம இரு.." அதற்கும் அதட்டினான்..

"ஏன்..?" அவளுக்கு விளங்கவில்லை...

"உன்னால மலையேற முடியாது.."

"அதுக்கு..?"

"இப்படியே இரு..."

"அதுசரி.. ஒற்றை ஆளாய் மலையேறுகிறதே சிரமம்.. இதிலே என்னைத் தூக்கிக்கிட்டு வேற மலையேறுவீங்களா..?"

"எனக்குச் சிரமமில்லைடி.."

கையில் சுமந்து கொண்டிருந்த நந்தினியின் முகம் நோக்கிக் குனிந்து இதழ் பதித்தான் பார்த்திபன்.. அவள் பேச்சிழந்தாள்.. அவன் உரிமையாக கட்டிய மனைவியை அழைப்பதைப் போல் அழைத்த விதத்தில் அவளுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தன..

அவள் தலை அவன் மார்பில் புதைந்தது.. பார்த்திபனின் நாடி நரம்புகளில் உணர்வின் அலைகள் ரீங்காரமிட்டன.. மௌனமான அவளது ஒன்றுதலில் அவளது சரணாகதியை புரிந்து கொண்டவனின் மனதில் ஆண்மையின் கர்வம் எழுந்தது.. அவனுடன் ஒட்டிக் கிடந்த அவளின் உடலின் உராய்வில் அவன் மனதில் மோகத்தீ பற்றிக்கொண்டது..

"எங்கே போகிறோம்..?"

"எங்கேயோ.. ஏன்..? எங்கேன்னு சொன்னாத்தான் நீ வருவியா..?"

பார்த்திபன் கோபப்பட்டான்.. அவனின் அந்தக் கோபத்தை அவளுக்குப் பிடித்திருந்தது. அவள் நுகர்ந்த அவனின் வாசனையில் அவளுக்குள் எழுந்த உணர்வின் பேரலைகளில் அவள் மூச்சுத்திணற மூழ்கிக் கொண்டிருந்தாள்..

"இல்லை.." அவள் முணுமுணுத்தாள்..

"எது இல்லை..?"

"எங்கேன்னு நான் தெரிஞ்சுக்க வேண்டியதில்லை.. நீங்க எங்கே கூப்பிட்டாலும் எனக்குச் சம்மதம்தான்.. அது இந்த மலையுச்சியாய் இருந்தாலும் சரி..."

"ஊஹீம்..? மலையுச்சியில் இருந்து குதிக்கச் சொன்னால் குதித்து விடுவியா..?"



பார்த்திபன் என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டான்.. ஆனால் அவளின் பதிலோ எந்தவிதமான விளையாட்டுத்தனமும் இல்லாத உறுதியுடன் வெளிவந்தது..

"குதிப்பேன்.."

பார்த்திபன் நின்று விட்டான்.. அவனுக்குத் தெரியும்.. அவள் எதைச் சொன்னாலும் உண்மையாக மனதிலிருந்து தான் சொல்வாள் என்று..

அந்த நந்தினி அவன் சொல்லும் ஒற்றைச் சொல்லில் மலையுச்சியிலிருந்து குதித்து விடுவாளா..?

"நந்தினி.." உணர்வுப் பெருக்கில் அவன் தொண்டை கரகரத்தது..

சடசடவென்று மழைத்துளிகள் அவர்கள் மீது விழுந்ததை உணர்ந்தவன் சட்டென்று திரும்பி அருகிலிருந்த பெரிய பாறையை அடைந்தான்.. அவளை இறக்கிவிட்டான்.. நந்தினி நிலவொளியில் தெளிவாகத் தெரிந்த அந்த பெரிய பாறையை வியப்புடன் பார்த்தாள்..

"மழைக்கு மரத்தடியில் ஒதுங்காம.. பாறைப் பக்கம் வந்திருக்கீங்களே..."

"இது வெறும் பாறையில்லைடி..."

"அப்புறம்..?"

"சஞ்சீவி மலையின் பாறை.. வா.."

"ஓ.." நந்தினியின் கண்கள் விரிந்தன.. சஞ்சீவிமலை..! அவள் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டது இந்த மலையைத் தானா..?

'என்னவொரு விசித்திரம்..?'

பகல் பொழுதில் அவள் பார்க்க விரும்பிய மலையை பௌர்ணமி இரவில்.. கொட்டும் மழையில் தரிசிக்கிறாள்..

"இந்த மலையிலா மூலிகைகள் இருக்கு..?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க..."

பார்த்திபன் அவள் கைப்பற்றி பாறைக்கு அடியே பிரவேசித்தான்.. அதன் அடியில் தெரிந்த மறைவில் அவர்கள் மழைக்கு ஒதுங்கினார்கள்..

பாறையின் அடிப்பகுதி ஒரு அறையைப் போலவே இருந்தது.. பார்த்திபனின் செல்போனில் டார்ச் ஒளியில் அந்தப்பாறை வெளிச்சவட்டத்துக்குள் வந்தது.. மின்னல் வெட்டியதில் பார்த்திபன் செல்போனை அணைத்து விட்டான்.. இடியிலும்.. மின்னலிலும் நடுங்கிய நந்தினியை அவன் கைகள் அரவணைத்துக் கொண்டன.. அவனது வெப்பமான மார்பில் குளிருக்கு இதமாக ஒன்றினாள் நந்தினி..

கொட்டும் மழையை பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவளை அந்த மெலிதான வெளிச்சத்தில் பார்த்தவனின் மனதில் மத்தாப்பூ சொரிந்தது..

அவர்கள் இருக்கும் அந்த இக்கட்டான சூழலைப் பற்றிக் கவலைப்படாமல் மழையின் இடியில் நடுங்கி அவனிடம் அடைக்கலமானவளின் மனதில் அவன் மீதான நம்பிக்கை எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டும்..?

அவனருகில் இருக்கும் போது எதுவும் நேராது என்ற அச்சமின்மையா.. இல்லை.. அவனருகில் இருக்கும் போது எது நேர்ந்தாலும் சம்மதமே என்ற எண்ணமா..?

எது.. அது போன்ற சூழலில்.. மழைபொழியும் இரவு வேளையில் எதைப் பற்றியும் யோசிக்கத் தோன்றாமல் அவனிடம் அடைக்கலம் கொள்ளச் செய்தது..?

நந்தினியின் பார்வை அந்தப் பாறையை சுற்றி வட்டமிட்டது.. அவளுக்கு என்னவோ.. அந்தப் பாறையைப்



பார்த்தால் அவர்களுக்கு எனவே செய்து வைத்திருந்ததைப் போல தோன்றி வைத்தது..

'என்ன மாதிரியான அனுபவம் இது..!' அவள் உடல் சிலிர்த்தது..

பாறையின் அடிப்பகுதியில் அமர்ந்திருந்த பார்த்திபன் விழிகளால் அவளை அழைத்தான்.. அவன் அழைப்பை ஏற்று அவனருகில் சென்று அமர்ந்தவளின் தோளைச் சுற்றி அவன் கரங்கள் வளைத்தன.. ஓடிவந்த களைப்புத் தீர.. அவன் மடியில் அவள் சரிந்தாள்.. பார்த்திபனின் கையணைவில் பாதுகாப்பை உணர்ந்தவளுக்கு விழிகள் சொக்கின.. அப்படியே அவள் தூங்கிப் போனாள்.. அவள்மீது முகம் சாய்த்துக் கவிழ்ந்த பார்த்திபனும் தூங்கிப் போனான்..

பாறையின் மேற் கூரையில் பறவை எதுவோ சிறகடித்ததைப் போன்ற சப்தத்தில் கண் விழித்தவனுக்கு உறக்கம் கலைந்து விட்டது.. செல்போனில் மணி பார்த்தான்.. இரவு பத்து என்று அறிவித்தது.. ஓடி வந்த களைப்பில் ஓய்வெடுத்தவனின் வயிறு பசித்தது..

"நந்தினி..."

அவன் மடிமீது எந்தவிதக் கவலைகளுமின்றி நிச்சிந்தையாக உறங்கிக் கொண்டிருந்தவளை பிரியத்துடன் அசைத்து எழுப்பினான்..

"ம்ம்ம்...."

தூக்கக் கலக்கத்துடன் அவன் மடியில் புரண்டவளின் முடி கோதி.. முகம் வருடிய அவனது ஸ்பரிசத்தில் கண் விழித்தவள் மெலிதான வெளிச்சத்தில் அவன் முகத்துக்கு வெகு அருகாகத் தெரிந்த அவன் முகத்தை யுணர்ந்து சிரித்தாள்..

அந்த முல்லை மலர் சிரிப்பினிலே பார்த்திபனின் மனம் நனைந்தது..

"பசிக்கலையா..?"

என்னவோ.. வீட்டினில் இருந்தபடி கேட்பவனைப் போலக் கேட்டவனைப் பார்த்தவளின் சிரிப்பு அதிகரித்தது..

'பசிக்குதுன்னா என்ன செய்வான்..?'

அந்தக் கொட்டும் மழையில் பாறைக்கு அடியில் சாப்பிட என்ன கிடைக்கப் போகிறது என்ற நினைவுடன் அவள் மென்மையாக தலையை அசைத்து மறுத்தாள்..

"ஊஹீம்..."

அதில் தொனித்த பொய்யில் அவன் நெகிழ்ந்தான்.. அவள் பசியை அறிந்தால் அவன் வருத்தப்படுவான் என்று தானே இல்லையென்று மறுக்கிறாள்..?

"ஆனா.. எனக்குப் பசிக்குதுடி.."

நந்தினி எழுந்து விட்டாள்.. அவனது பசிக்கு உணவு பரிமாற முடியாத அந்தச் சூழலில் அவளுக்குத் துக்கமாக இருந்தது..

"என்னால்தானே உங்களுக்கு இந்த சிரமம்..?"

அவளின் கேள்வியில் அவனுக்கு கோபம் வந்து விட்டது..

"கொஞ்சமாவது என்ன பேசுகிறோம்ன்னு யோசித்துப் பேசறியாடி.." எரிந்து விழுந்தான்..

"சிரமமாக இருக்கக் கூடாதுன்னா நான் என்னடி செய்திருக்கனும்..? உன்னை அவனுக கையில தாரை வார்த்துக் கொடுத்துட்டு வளையலை மாட்டிக்கிட்டுப் போயிருக்கனுமா..? எந்த ஆம்பளையாவது அந்த வேலையைச் செய்வானாடி..?"



"ஐ ஆம் ஸாரி.."

"ப்ம்ச்.. ஸாரி சொல்லிட்டாப் போதுமா.. உன் மேல மத்தவன் விரல்பட என்னால அனுமதிக்க முடியாது.. அதை முதலில் புரிஞ்சுக்க.. சிரமப்படறேனாம்.. இவ கண்டுட்டா.."

"அதான் ஸாரி சொல்லிட்டேனில்ல.."

நந்தினி கெஞ்சினாள்.. ஒரு வழியாய் கொதிப் படங்கியவன்.. அவள் கன்னத்தில் செல்லமாக தட்டினான்.

"இனிமே இப்படி உளரக் கூடாது.."

"ம்ம்ம்..."

சொன்னதைக் கேட்கும் சிறு குழந்தையாக தலையசைத்தவளை பார்த்தபோது அவனுக்குள் காதல் பொங்கியது..

"வா.." அவன் எழுந்தான்..

"எங்கே.." அவள் எழுந்து கொள்வதற்காக கை நீட்டிய அவன் கரத்தைப் பற்றி எழுந்து கொண்ட நந்தினி கேட்டாள்..

"நிலாச் சோறு சாப்பிட...."

பார்த்திபன் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தான்..

## 28

எத்தனையோ விருந்துகளை..
என் நாவு ருசித்தாலும்..
நீ கொடுத்த நிலாச் சோறின்
ருசி அவற்றில் வரவில்லை..

"நிலாச் சோறா..?"

ஆச்சரியத்துடன் கேட்டாள் நந்தினி..

"ம்ம்ம்.. நிலாச்சோறுதான்.. நீதானே அதைச் சாப்பிடனும்னு ஆசைப்பட்ட..? உன் ஆசைக்காக இந்த பௌர்ணமியில் நாம் நிலாச்சோறு சாப்பிடலாம்..."

பார்த்திபன் பாறையின் அடிப் பகுதியிலிருந்து வெளியே வந்தான்.. நந்தினி அவனை தடுத்தாள்.. அவன் புருவங்கள் கேள்வியுடன் உயர்ந்தன..

"என்னடி..?"

"வெளியே மழை கொட்டுச்சே.."

"இப்ப விட்டிருச்சுன்னு நினைக்கிறேன்.. மழையின் சத்தம் கேட்கலை.. வா.." அவன் வெளியேற முற்பட்டான்..

"ஆனாலும்.." நந்தினி தயங்கி நின்றாள்..

"என்ன ஆனாலும்..?" அவள் கையைப் பற்றி அவன் சுண்டியிழுத்தான்..

"இந்த பாறைக்கு அடியில் நாம இருந்தா பாதுகாப்பாய் இருக்குமே.."

"பாதுகாப்பாய் இருக்கும்தான்.. பட்.. ஃப்ரீ மைன்ட் இருக்காது.."

"புரியலை.."

"உனக்குப் புரியாது.." அவன் உரக்கச் சிரித்தான்..

"மக்கு.." என்று அவள் தலையில் செல்லமாய் ஒரு குட்டுக் குட்டவும் செய்தான்..

"ஏனாம்..?"



"அடி என் புத்திசாலி காதலியே..! இடுக்கு போல இருக்கிற இந்த இடத்திலே காதலர்களுக்கு என்னடி வேலை..?"

பார்த்திபனின் கேள்வியில் எதுவோ புரிவதைப் போல இருக்க.. நந்தினி லஜ்ஜையுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவள் முகச்சிகப்பை.. மெலிதான செல் போனின் வெளிச்சத்தில் பார்த்தவனுக்குள் மோகவெள்ளம் பாய்ந்தது...

"ஒளியிலே தெரிவது..
தேவதையா..?"

பாட்டால் கேள்வி கேட்டான்..

"போதும்.."

"என் அறிவுக் களஞ்சியத்துக்கு இப்பவாவது புரியுதா.. ஏன் நான் நிலாச்சோறு சாப்பிட வெளியே போகலாம்னு சொன்னேன்னு..?"

"ம்ம்ம்.." வெட்கத்துடன் முணுமுணுத்தவளின் கன்னச் சிகப்பில் அவன் தடுக்கி விழுந்தான்..

அவனும்.. அவளும் பாறையின் அடிப்பகுதியை விட்டு வெளியே வந்தார்கள்.. மழை நின்றிருந்தது.. பௌர்ணமியின் முழுநிலவு வானில் சிரித்தது.. அதன் ஒளி வெள்ளம் பட்டப் பகலைப் போன்ற வெளிச்ச வட்டத்தைப் பாய்ச்சியதில் நந்தினி மலைத்துப் போனாள்..

அந்த இரவின் நிலவொளியில் தெரிந்த மலையின் அழகை வாழ்நாளில் ஒருபோதும் மறக்கவே முடியாது என்று அவளுக்குத் தோன்றியது...

நிலவின் ஒளியில் நனைந்தபடி தேவதையாய் நின்றவளின் அழகை தெவிட்டும் வரை பார்த்தான் பார்த்திபன்..

"இப்படி வா நந்தினி.."

அருகிலிருந்த சமவெளிக்கு அழைத்தான்.. பளிங்குக் கல் பதிக்கப் பட்ட தரையைப் போல அதை உணர்ந்தாள் நந்தினி..

பாறையை சமப்படுத்தி வைத்த சிற்பி யாராக இருக்கக் கூடும் என்ற வினா அவள் நெஞ்சில் எழுந்தது..

அவர்கள் இருவரும் அந்தப் பாறையில் எதிரும்.. புதிருமாக அமர்ந்தார்கள்.. மழை நீரில் நனைந்திருந்த பாறையை.. ஈரக்காற்று உலர வைத்திருந்ததில்.. அது கழுவித் துடைக்கப் பட்டதைப் போல படு சுத்தமாக இருந்தது...

நந்தினிக்கு அந்தப் பாறையில் அமர்ந்திருந்த அந்த நொடிகளைப் பிடித்திருந்தது.. வானத்தில் முழுநிலவு.. எதிரே பார்த்திபன்.. யாருமில்லாத தனிமையுடன் கூடிய இரவுப் பொழுது.. அழகான மலைச்சூழல்..

நகர்ந்து கொண்டிருந்த அந்த இரவின் மணித்துளிகளை சேகரித்து மனப் பெட்டகத்தில் பொதித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் இருவருமே ஆசைப்பட்டார்கள்..

"நிலாச்சோறு சாப்பிடலாமா..?" பார்த்திபன் கேட்டான்..

அந்த இடத்தில் உணவுக்கு அவன் எங்கே போவான் என்று தோன்றிய போதும்.. கேட்பது அவனாக இருந்ததில்.. தலையை அசைத்து சம்மதம் சொன்னாள் நந்தினி..

தோளில் மாட்டியிருந்த பையை எடுத்தான் பார்த்திபன்.. அதற்குள் இருந்த பேப்பர் தட்டுக்களையும்..



குவளைகளையும் வெளியே எடுத்தவன்.. அவள் முன்னாலும்.. அவன் முன்னாலும் அவற்றை வைத்தான்..

அவனது செய்கைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.. வாய் திறந்து எதையும் கேட்கவில்லை.. அவனும் சொல்லவில்லை.. பைக்குள் கை விட்டவன் அடுத்து எடுத்த செல்லோ கேரியரில் நந்தினியின் கண்கள் விரிந்தன..

'நிஜமாகவே இவன் நிலாச்சோறு தரப் போகிறானா..?'

அவன் தந்தான்.. செல்லோ கேரியரின் மூடியைத் திறந்து உள்ளே இருந்த கேரியரை எடுத்துப் பிரித்து அடுக்குகளை அவள் முன்னால் பரத்தி வைத்தான்.. உணவின் மணத்தில் அவள் வாயில் உமிழ் நீர் சுரந்தது..

"வெஜிடபிள் பிரியாணி.. தயிர் சாதம்.. கேரட் அல்வா.. காலிபிளவர் ப்ரை.. வெள்ளரிக்காய் தயிர் பச்சடி.." ஒப்பித்தவன்..

"போதுமில்ல..?" என்ற கேள்வியையும் கேட்டு வைத்தான்..

"பெண்டாஸ்டிக்.." அவள் குதூகலித்தாள்..

தண்ணீர் பாட்டிலை எடுத்து பேப்பர் கப்புகளில் தண்ணீரை ஊற்றியவன்.. கேரட் அல்வாவை முதலில் பரிமாறினான்..

"இனிப்போடு ஆரம்பிக்கலாம்.."

அவன் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவள் மனம் சிக்கித் திணறியது.. எதை ஆரம்பிக்கப் போகிறான் என்ற கேள்வி மனதில் எழுந்தது.. அதைக் கேட்கும் தைரியம் இல்லாதவளாக அவள் நிலாச்சோறில் மனம் லயித்தாள்..

"ம்ம்ம்.."

அவர்கள் அல்வாவை ருசித்தார்கள்.. பாதியில் அவள் தட்டையும்.. அவன் தட்டையும் அவன் மாற்றிய போது.. நந்தினியின் மனம் சிறகடித்தது..

அவன் எச்சிலை அவள் விரும்பி உண்ண.. அவள் சுவைத்த கேரட் அல்வாவை அவன் விரும்பி ருசித்தான்..

அந்த நிலாச்சோறு விருந்து அற்புதமான அனுபவத்தோடு ஆரம்பித்தது..

வெஜிடபிள் பிரியாணியை பரிமாறி... ஓரமாக வெள்ளரிக்காய் தயிர்பச்சடியையும்.. காலிபிளவர் பொரியலையும் அவன் வைத்தான்..

இப்போதும் அதுபோலவே.. பாதி உணவில் இருவரின் தட்டுக்களும் மாற்றப்பட்டன.. நந்தினிக்கு அவனின் அந்த செயல்பாட்டை பிடித்திருந்தது.. தயிர்சாதத்தையும் பாதியில் தட்டை மாற்றி பகிர்ந்து உண்டவர்கள்.. உண்டு முடித்ததும் எழுந்து பாறையின் ஓரத்துக்குச் சென்று சரிவில் கையலம்பி திரும்பி வந்தார்கள்..

நந்தினி அவர்கள் சாப்பிட்ட பேப்பர் தட்டுக்களை சேகரித்து சரிவில் எரிந்தாள்..

"கூல்டிரிங்க் குடிக்கலாமா..?"

கொண்டு வந்திருந்த குளிர்பானபாட்டிலைத் திறந்து பேப்பர்கப்புகளில் ஊற்றி அவளிடம் ஒன்றை நீட்டினான் பார்த்திபன்..

அவனைப் பார்த்தபடி அவளும்.. அவளைப் பார்த்தபடி அவனும்.. சொட்டுச் சொட்டாக ரசித்துக் குடித்து முடித்ததும்.. அந்த பேப்பர்கப்புகளை சரிவினில் எறிந்து விட்டு.. பாறையின் மையப் பகுதியில் அமர்ந்தார்கள்..



குத்துக் காலிட்டு அமர்ந்த நந்தினி.. விரலால் பாறையின் தரையில் கோலமிட்டாள்.. அவளருகில் சாய்ந்து படுத்து கைகளை மடித்து தலைக்கு அணைவாக கொடுத்த பார்த்திபன் வானத்தின் வெந்நிலவை பார்த்தான்..

"என்னருமைக் காதலிக்கு..
வெண்ணிலாவே..!
நீ இளையவளா.. மூத்தவளா..?
வெண்ணிலாவே.."

வாய்விட்டு அவன் பாடியபோது நிலாச்சோறு விருந்தின் முழுமையை உணர்ந்தாள் நந்தினி..

"வெண்ணிலா முற்றத்திலே..
வேணு கானம்..
மேல் மாடி முற்றத்திலே..
நீயும்.. நானும்.."

பதிலுக்கு முழங்கால்களில் முகவாயை பதித்து அவள் பாடியபோது அவன் கிறங்கிப் போனான்.. ஒருக்களித்துத் திரும்பிப் படுத்து.. அவள் முகம் பார்த்தவன்.. ஒரு கையை மட்டும் ஊன்றி அதில் தலை பதித்து பாடலைத் தொடர்ந்தான்..

"ஒரு பெண்ணைப் பார்த்து
நிலவைப் பார்த்தேன்..
நிலவில் ஒளியில்லை..
அவள் கண்ணைப் பார்த்து
மலரைப் பார்த்தேன்..
மலரில் அழகில்லை.."

அவன் பாடலின் தொனித்த காதலில் அவள் கட்டுண்டாள்.. அவன் மனதில் கிடைத்திருக்கும் இந்த இடம் என்றும் நிலைக்குமா என்ற சந்தேகம் அவளுக்குள் எழுந்தது.. அவன் காதல் நிலைக்குமா என்ற சஞ்சலத்துடன்

"நீயோ.. நானோ..
யார் நிலவே..?
அவர் நினைவைக் கவர்ந்தது..
யார் நிலவே..?"

என்று பாடினாள்.. பார்த்திபனுக்கு அவளது கேள்வியைப் புரிந்தது.. மெல்லிய சிரிப்புடன் அவள் பக்கமாக புரண்டு படுத்து நெருங்கியவன் அவள் கையைப் பற்றி அவன் மார்பில் பதித்துக் கொண்டான்..

"என் மனது ஒன்றுதான்..
உன் மீது ஞாபகம்...
வான் நிலவு ஒன்றுதான்..
வான் மீது சத்தியம்.."

நந்தினி மடித்த கால்களை சரித்து அவனருகே சாய்ந்து அமர்ந்தாள்.. அவளது பின்னல் கழுத்தைச் சுற்றி முன்னே வந்து அவன் மார்பில் விழுந்தது..

"அன்றொரு நாள் இதே நிலவில்
அவன் இருந்தான் என்னருகே..
நான் அடைக்கலம் ஆனேன் அவனிடமே
நீயறிவாயே வெந்நிலவே.."

அவன் முகத்தை நோக்கிக் குனிந்து பாடியவளின் முகம் ஆகாயத் தாமரையைப் போல இருந்தது.. அந்த முகத்தின் வடிவழகில் அவன் மயங்கினான்.. அவன் மார்பில் பதிந்திருந்த கையை எடுத்து உதட்டில் வைத்து முத்தம்



கொடுத்தான்.. அவள் சிலிர்த்துப் போனாள்.. அவள் கைவிரல்களை வருடிக் கொடுத்தவனின் கை உயர்ந்து அவள் தோள் பற்றியது.. அவன் மார்பில் சரிந்தவளை அணைத்து வளைத்துக் கொண்டவனிடம் அவள் அடைக்கலமானதை வானத்தில் பவனி வந்த முழுநிலவு பாராதது போல மேகத்தின் மறைவில் ஒளிந்து கொண்டது..

அந்த வெட்டவெளிப் பாறை அவர்களுக்கு மஞ்சமானது.. மலை மீதிருந்த செடிகளின் பூக்களின் நறுமணம் அதை முதலிரவின் பஞ்சணையாக்கியது.. தன்மீது சரிந்திருந்தவளை அவன் அணைத்துக் கொண்டான்..

## 29

நிலவொளியில் நனைந்தபடி..
நாம் உண்ட நிலாச்சோற்றை..
ஒரு பொழுதும் நான் மறவேன்..
உயிரே..! நீ மறப்பாயோ..?

நந்தினியின் இதயத் துடிப்பு அதிகமானது.. அவன் மேல் சரிந்திருந்த அவளது இதயத்தின் 'டிக்.. டிக்..' என்ற இதயத்துடிப்பின் ஒலி அதிகமானதை அவனும் உணர்ந்திருந்தான்.. அவனது மூச்சுக்காற்றின் வெப்பம் அவள் கன்னத்தின் மீது படிந்தது.. அவனது அடர்ந்த மீசையின் ஸ்பரிசம் அவளது இதழோரம் படிந்ததில் உண்டான இனிப்பான ஹிம்சையைத் தாங்க முடியாமல்

உடல் நடுங்கியவளாக அவள் கண்களை மூடிக் கொண்டாள்..

"நந்தினி.." தாபத்துடன் அவன் அழைத்தான்..

அந்த அழைப்பில் தெரிந்த தாகத்தில் கிளர்ச்சியுற்றவளாக அவள் உதட்டைக் கடித்து தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றாள்..

"ஊஹீம்.." அவன் அதட்டினான்..

அவளது பற்கள் பதிந்த இதழ்களை அவன் விரல்கள் வருடின.. அவள் கன்னத்தைத் தடவிய கைகள் அழுந்தப் பதிய அவள் இதழ்மீது அவன் இதழ்களை அவன் பதித்தான்.. அந்த முத்தத்தில் எழுந்த உணர்வின் பேரலைகளில் அவள் அடித்துச் செல்லப்பட்டாள்.. அவள் கரங்கள் அவனது பின்னந்தலையின் முடியில் பதிந்து இறுக்கியதில் அவன் கிறங்கிப் போனான்..

"நீ என்னுடையவடி.."

என்னவோ அவள் இல்லையென்று மறுத்ததைப் போல அவன் அதட்டினான்.. அவளால் பேச முடியவில்லை.. அதற்கு அவள் யத்தனிக்கவுமில்லை.. அந்த நேரத்தின் பேச்சுக்கள் எல்லாம் அர்த்தமற்ற பிதற்றல்களாவே இருக்கும் என்பதை அறியாதவள் அவள்.. ஆயினும் அவன் பேச்சுக்கு அவளால் செவி மடுத்துப் பதில் பேச முடியவில்லை..

அவன் சொற்கள் உணர்த்திய செய்தியை விட.. அவனது கைகள் உணர்த்திய செய்தியின் மொழியில் அவள் கட்டுண்டிருந்தாள்..



"என் நந்தினி.."

கரகரத்த குரலில் அவள் காதோரமாக அவன் முணுமுணுத்தான்.. அந்தக் குரலில் வழிந்தோடிய காதல் கலந்த வேட்கையில் அவள் உடலின் அத்தனை செல்களும் கிளர்ச்சி கொண்டன..

அவள் கன்னத்தில் இதழ் பதித்து முத்தமிட்டவனின் மீசை முடியின் உராய்வை உணர்ந்தவளின் இன்பமான வேதனையை அறியாதவனாய் அவளது பட்டுக் கன்னத்தை பற்களால் வருடினான் பார்த்திபன்..

"பட்டுக் கன்னம்டி.. உன் கன்னம்.."

ஆசையுடன் முணுமுணுத்தான்... அவனிடம் முழுமையாக அடைக்கலமாகியிருந்த அந்த பதில் பேச முடியாத பேதை.. தனக்குப் பிடித்தவனுக்குத் தான் பிடித்தமானவளாக இருக்கும் நிறைவை அனுபவித்தவளாக கண்திறந்து நிலவொளியில் அவன் முகம் பார்த்தாள்..

குடைபோல் கவிழ்ந்த இமைகளின் அடியில் வண்டாடும் கண்களுடன் அவள் அவனைப் பார்த்த விதத்தில் அவனுக்குள் கள்ளூறியது..

அவளது அழகில் அவன் மயங்கினான்.. அவளது இமைகளின் மீது அவன் உதடுகள் படிந்ததில் அவளது இமைகள் மூடி.. அவனது இதழ்களின் தொடுகையை ஏற்றுக் கொண்டன.. அவனது ஆலிங்கனத்தில் அடங்கியிருந்த அவளை மென்மையாக சரித்து.. பாறையில் கிடத்தியவன்.. அவள்மீது கவிழ்ந்து.. அவள் முகத்தை முகர்ந்தான்..

நறுமணம் கவழ்ந்த அவளது வதனத்தில் அவன் இதழ்கள் பதித்த ஈரத்தில் நனைந்தவள் தாளாத தவிப்புடன் கண்மூடிக் கிறங்கியபோது அவனது இதழ்கள் இறங்கி அவள் கன்னத்தில் முத்தத்தைப் பதித்தன...

"மயக்கறயேடி..."

அவனது வேட்கையின் தாபத்தை கட்டுக்குள் அடக்க முடியாதவனாய் அவன் முணுமுணுத்தான்..

அந்த முழுநிலவில்.. யாருமற்ற வனாந்திரத்தின் பாறைப் பஞ்சணையில் அவனிடத்தில் அடைக்கலமாகி யிருந்தவளை அடைக்கலம் கொள்ளாமல் விட்டு விலகிவிட அவனுக்கு மனம் வரவில்லை..

"என்னடி செய்யட்டும்..?"

அவளிடமே அவன் கேட்டான்.. அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்..?

"உன்னை விட்டு விட முடியாதுடி.. இந்த நொடியில் எனக்கு உன்னுடன் வாழ்ந்தாகனும்.. கட்டாயமாக நான் உன் கழுத்தில் தாலி கட்டுவேன் நந்தினி.. அப்போது உனக்கும் எனக்கும் முதல் இரவு நடக்கும்.. அந்த இரவில் இந்த இரவில் நான் தவற விடப் போகும் இன்பம் எனக்குக் கிடைக்கவே கிடைக்காதுடி.. இந்த நொடிகளில் கிடைக்கிற இன்பத்தின் மதிப்பே தனி.. சொல்லுடி.. நான் என்ன செய்யட்டும்..?"

அவன் கேட்டு விட்டான்.. அந்த முழுநிலவின் தண்ணொளியில் அவனிடம் முழுமையாக அடைக்கலமாகி யிருந்தவளிடம் தன் மனதைச் சொல்லி விட்டான்..



அவளை முழுமையாக எடுத்துக் கொள்ளும் அனுமதியை கேட்டு விட்டான்..

இப்போது அவள் என்ன பதிலைச் சொல்ல முடியும்..?

நந்தினியின் கண்களில் நீர் துளிர்த்தது.. அந்த நொடிகளின் உணர்வில்.. அவன் வேறு.. அவள் வேறு என்று தோன்றாத நிலையில் அவனுடன் பின்னிப் பிணைந்திருந்தவளுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியவில்லை..

"நான் என்ன பதிலைச் சொல்ல..?"

விம்மலோடு அவனிடமே அவள் கேட்டாள்... அந்த பேதையின் தவிப்பை உணர்ந்தவனுக்கு மனம் தாளவில்லை.. அவளை அணைத்துக் கொண்டான்..

"நந்தினி.. ஐ லவ் யு டி.."

"ம்ம்ம்.."

"என்னைப் பொருத்த வரைக்கும் நீ என்னுடையவடி.. என் வாழ்வில் இனி இன்னொரு பெண்ணுக்கு இடமில்லை நந்தினி..."

இதைவிட அவளுக்கு வேறென்ன வேண்டும்..?

"நான் கொடுத்து வைத்தவ..."

அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினாள் நந்தினி..

இரண்டு வயதிலேயே தாய் தந்தையை இழந்தவள்.. அவளுடன் நின்று பேச நேரமில்லாத அண்ணனுடன் பிறந்தவள்.. அவளுடன் நின்று பேச அவள் அண்ணனுக்கு நேரம் வந்தபோது.. அந்த நேரத்தை தன்னுடையதாக்கிக் கொண்ட அண்ணியை அறிந்தவள்.. தாத்தா என்ற ஓர் உறவின் பாதுகாவலில் வாழ்பவள்.. தன்னைச் சுற்றிக்

கவிந்திருக்கும் தனிமையை விலக்கித் தனக்கென்று ஒரு குடும்பத்தை வேண்டித் துடிப்பவள்.. அவனிடம் என்ன சொல்லுவாள்..?

"எனக்கு எல்லாமே நீங்கதான்.. நீங்க மட்டும்தான்.."

அந்த வார்த்தைகள் அவனுக்குப் போதுமானதாக இருந்தன.. பார்த்திபன் அவளை அணைத்தபடியே.. அவளிடமிருந்து விலகாமல் தன் கழுத்தில் கிடந்த வைர முகப்புடன் கூடிய தங்கச் சங்கிலியை கழட்டினான்.. அவள் கழுத்தில் போட்டுவிட்டான்..

"இந்த வானும்.. நிலவும்.. கானும்.. காற்றும்.. இந்த மலையும்.. சாட்சியாக உன் கழுத்தில் நான் கட்டும் தாலி இது நந்தினி..."

விரல் நடுங்க அந்தச் செயினைத் தொட்டுப் பார்த்த நந்தினி.. அதன் முகப்பைத் தூக்கி மெலிதான முத்தமொன்றைப் பதித்தாள்..

"கொடுத்து வைத்த டாலர்.." பொறாமையுடன் அவன் சொன்னான்..

"அந்த முத்தத்தை எனக்குக் கொடுத்திருக்கியா..?"

அவனது கேள்வியின் தாபத்தைத் தாங்க முடியாமல் அவன் முகம் வருடி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் நந்தினி...

அவள் தந்த அந்த முதல் முத்தத்தில் கிறங்கிப் போனான் பார்த்திபன்..

"தேங்க்ஸ்.."

அவளது காதோரமாக முணுமுணுத்த அவன் மூச்சுக்காற்றின் வெப்பத்தில் அவனது உடலின் தகிப்பை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. அந்த தகிப்பு



அவளுக்குள் தவிப்பைக் கொடுக்க.. உடல் நடுங்க அவள் கண்களை மூடிக் கொண்டாள்.. அவனது ஆவேசமான கைகள் அவள் உடலை ஆக்ரமிக்க ஆரம்பித்ததில் அவளுக்குள் மோகத்தின் ஜீவாலை எழுந்தது..

அதற்குமேல் அவர்களிடமிருந்து பேச்சுக்கள் விலகிப் போய் விட்டன.. உடல்கள் உணர்த்திய பரிபாஷைகள் மட்டுமே அவர்களிடமிருந்து பரிவர்த்தனை ஆகின.. அவன் விரல்கள மீட்டும் வீணையாக அவள் மாறிப் போனாள்.. அதில் எழுந்த இன்னிசையை அவர்கள் மட்டுமே அறிந்தார்கள்.. அத்து மீறிப் பிரவேசித்த அவனது கைகளை மறுத்த அவள் கைகளை அவன் புறக்கணித்து வெற்றிகரமாக முன்னேறினான்..

அது யுத்த களம்.. சூடான மூச்சுக்களும்.. இன்பமான இம்சைகளும் நிறைந்த புது உலகம்..

அவன் சகல விதமான ஆயுதங்களையும் தரித்தவனாக இருந்தான்.. அவளோ நிராயுதபாணியாக அவனிடம் அகப்பட்டுக் கொண்டவளாக இருந்தாள்.. அவன் சூறையாட ஆரம்பித்தான்.. அவளை முழுமையாக ஆக்ரமித்து வெற்றியாளனாக முரசு கொட்டினான்..

*'மலர் மஞ்சம் தேவையில்லை..*
*மங்கையிவள் மஞ்சமானாள்..*
*நறுமணங்கள் தேவையில்லை..*
*நங்கையிவள் அதனைத் தந்தாள்..*
*பழரசங்கள் தேவையில்லை..*
*பாவையிவள் இதழைத்தந்தாள்..*
*கனிவகைகள் தேவையில்லை..*
*கன்னியிவள் செங்கனியே யாவாள்..'*

கண்மூடி கலைந்து கிடந்தவளிடமிருந்து விலகிப் படுத்தவனின் மனதுக்குள் கவிதை வரிகள் தோன்றின.. கலைந்து கிடந்த அவள் முடியை கோதி விட்டான்.. வியர்த்துளிகள் அரும்பு கட்டியிருந்த அவள் முகத்தை தன் கைக்குட்டையில் ஒற்றியெடுத்தான்.. ஆடைகளை சரி செய்து கொண்டவளை ஆசையுடன் பார்த்தான்..

அவர்களுக்குள் ஏற்பட்டுவிட்ட உறவிற்குப் பின்னால் அவர்கள் இருவரும் மனதுக்குள் ஓர்விதமான அமைதி விரவியிருந்ததை உணர்ந்தார்கள்.. பார்த்திபன் எழுந்தான்.. தண்ணீர் பாட்டிலை எடுத்து தொண்டையில் சரித்தான்.. அவளிடம் நீட்டினான்.. மறுக்காமல் வாங்கிக் குடித்தவளை ஆதுரத்துடன் பார்த்தான்..

நிலவொளியில் மீண்டும் முழங்கால்களைக் கட்டி அமர்ந்தவளிடம் அவனுக்குள் காதலும் பிரியமும் போட்டி போட்டுக் கொண்டு பொங்கின..

"நந்தினி.."

"ம்ம்ம்.."

"என் மேல் கோபமா..?"

அவள் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவனது வேட்கை தீர்ந்து.. தாபம் தணிந்து.. அவன் கேட்டது கிடைத்து.. ஆண்டு முடித்த திருப்தியை அடைந்த பின்பு அவனுக்குள் அமிழ்ந்திருந்த குற்றஉணர்வு எழும்பி நிற்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

'இது கூடாது..' அவள் நினைத்துக் கொண்டாள்..



இது இனிமையான மணித்துளிகளைக் கொண்ட தருணம்.. இதை ஒரு குற்ற நிகழ்வாக அவன் கருதி மனதில் புழுக்கம் கொள்ளலாகாது.. அவளால் அதை அனுமதிக்க முடியாது..

அவன் அறிவானா.. அந்த நிலாச்சோறு அனுபவத்தை தன் வாழ்நாளில் பொற்கால நிகழ்வாக அவள் மனப் பெட்டகத்தில் போற்றி பாதுகாக்கப் போகிறாள் என்பதை..

"இல்லை.."

பிசிறில்லாத தெளிவான குரலில் அவள் சொன்னாள்..

## 30

*நிலவொளியின் துணையோடு..*
*நீ வரவே காத்திருந்தேன்..*
*நிலாச்சோறை தர மறந்து..*
*நீயெங்கு சென்று விட்டாய்..?*

அந்த வார்த்தையில் அவன் உயிர்த்தெழுந்தான்..

"நிஜமாத்தானே சொல்ற..?" தவிப்புடன் கேட்டான்..

அவள் கருணையுடன் சரிந்து அமர்ந்து அவனைக் கை நீட்டி அழைத்தாள்.. கண்கள் மின்ன அவள் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டவனின் முடியை அவள் விரல்கள் கோதின.. அவள் விரல்களின் ஸ்பரிசம் உணர்த்திய உண்மையில் நெகிழ்ந்து போன பார்த்திபன்

அவள் கைவிரல்களில் தன் விரல்களைப் பிணைத்து அவன் உதட்டில் வைத்து முத்தம் கொடுத்தான்...

"ஆரம்பிச்சாச்சா..?" அவள் மெலிதாக சிரித்தாள்..

"அதெல்லாம் எப்பவோ ஆரம்பிச்சு முடிச்சாச்சு.." அவன் கண்சிமிட்டி பூடகமாக பதில் சொன்னான்..

"போக்கிரி..."

"நான் இல்லைன்னு சொன்னேனா..?"

"ஸோ.. ஊருக்குத்தான் கண்ணியவான் வேசம் போல.."

"பின்னே.. கட்டிக்கிட்ட பெண்டாட்டிகிட்ட கண்ணியவானாய் எந்தமாங்கா மடையனாவது இருப்பானா..?"

"உண்மைவிளம்பி..."

"இதிலெல்லாம் பொய் சொல்லக் கூடாதுடி.."

"கள்ளன்.."

"களவும் கற்றும் மறன்னு பெரியவங்களே சொல்லியிருக்காங்க.."

"எல்லாத்துக்கும் பதில் வைச்சிருப்பீங்களே.."

"இல்லைன்னா உன்னை ஜெயிக்க முடியுமா..?"

அவன் மீண்டும் கண் சிமிட்டினான்.. அவளுக்கு அந்த இரவைப் பிடித்திருந்தது.. அந்த நிலவைப் பிடித்திருந்தது.. வெட்ட வெளிப்பாறையைப் பிடித்திருந்தது.. அவள் மடியில் படுத்திருந்த அவனைப் பிடித்திருந்தது..

குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்..

அவள் இதழ்களின் ஸ்பரிசத்தில் மனம் நெகிழ்ந்த பார்த்திபன் அவள் தந்த முத்தத்தில் மனம் திளைத்தான்..



அது அவன் கேட்காமலே அவளாகத் தந்த முதல் முத்தம்...

அவள் இதழ்களின் ஸ்பரிசம் உணர்த்திய செய்தி ஒன்றுதான்.. அது.. சற்றுமுன் நடந்த உறவின் கலப்பில் அவளுக்கு கோபமில்லை என்பது..

அவன் கைகள் உயர்ந்து அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டன.. அவன் முகத்தின் மீது கவிந்த அவள் முகத்தில் அவள் இதழ்களை அவன் இதழ்கள் தேடிப் பதிந்த போது அவனது செல்போன் ஒலித்தது..

"ம்ப்ச்.. பூஜை வேளையில கரடி.. இந்த செல்போனை கண்டு பிடிச்சவனைத் தூக்கில் தொங்கவிடனும்.."

அவன் சலித்துக் கொண்டபடி செல்போனை எடுத்தான்.. திரையைப் பார்த்தான்.. அதில் அம்மா அழைக்கிறாள் என்று எழுத்துக்கள் அறிவிப்புடன் ஒளிர்ந்தன..

"'அம்மாடி..'" நந்தினியின் மடியிலிருந்து விலகி எழுந்தான்.. போனை காதுக்கு கொடுத்தான்..

"அம்மா.."

"......"

"அது பெரிய கதைம்மா.. நந்தினியோட அண்ணியோட தூரத்துச் சொந்தமாம்.. அவங்க அண்ணிக்கு அண்ணன் முறையாகனுமாம்.. நந்தினி மேல நோக்கம் போல.. நந்தினியோட தாத்தாவுக்கும்.. அண்ணனுக்கும் தெரிந்தா அவனைச் சும்மா விட மாட்டாங்கன்னு அந்த நாய்.. வெளியூரில் நந்தினியைக் கடத்தப் பிளான் போட்டிருக்கான்.."

"......"

"பயப்படறதைப் போல ஒன்னுமில்ல.. நான் பார்த்திட்டேன்.. இவளைக் காப்பாத்திட்டேன்.. ஆனா பாருங்க.. நான் ஒற்றையாளு.. அவனுக கூட்டமா ஒரு டாடா சுமோ வண்டி நிறைய தொற்றிக்கிட்டு இருக்கானுக.. அதில அவனுக கூட எங்கே மோதறது..?"

"......"

"பகல்ல பத்துப் பேர் என்னம்மா.. நூறுபேர் வந்தாக் கூட பந்தாடிருவேன்.. ராத்திரி நேரத்தில என்னம்மா பண்றது..? என்னதான் பட்டப் பகலைப் போல நிலா வெளிச்சம் இருந்தாலும் அதெல்லாம் போதாதும்மா.. நந்தினியோட பாதுகாப்பு மட்டும்தான் இப்ப முக்கியம்.. அதான்.. காரை மறைவா நிப்பாட்டிட்டு நந்தினியோட ஊருக்குள்ளே போயிட்டேன்.."

பார்த்திபனின் பேச்சில் நந்தினி திகைத்து நிமிர்ந்தாள்... அவளது திகைப்பைக் கவனித்தபடி பார்த்திபன் அவளை அமைதியாக இருக்கும்படி கண் சமிக்ஞை செய்துவிட்டு பேச்சைத் தொடர்ந்தான்..

"நீங்க சுவாதியிடம் தைரியம் சொல்லுங்க.. நந்தினி நம்ம வீட்டில பத்திரமா தூங்கிக்கிட்டு இருக்கான்னு சொல்லுங்க.. நான் விடிஞ்சதும் நந்தினியோட நம்ம வீட்டுக்கு வந்துடறேன்.."

"......"

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்ம்மா.. கிராமத்தில தெரிந்தவங்க வீட்டிலதான் தங்கியிருக்கோம்.. கார் ரிப்பேர்ன்னு கதை சொல்லியிருக்கேன்.. அடை மழையில மெக்கானிக்கைத் தேட முடியாது.. கிராமத்தில தங்கிட்டு விடிஞ்சதும் போகலாம்ன்னு வந்திருக்கோம்ன்னு சொன்னேன்.."



"......"

"சாப்பிட்டாச்சும்மா.. வீட்டில இருந்து கொண்டுவந்த சாப்பாடு இருந்துச்சு.. ம்ம்ம்.. சரி.. கவலைப் படாதீங்க.."

போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு நிமிர்ந்தவன் நந்தினியைப் பார்த்து இமை சிமிட்டினான்..

"எதுக்கு அப்படி முழிச்சுப் பார்த்த..? பொய்மையும் வாய்மையிடத்துன்னு வள்ளுவர் சொல்லியிருக்கார்.. அதை நான் யூஸ் பண்ணிக்கிட்டேன்..."

"வள்ளுவர் இதைப் போல பொய்யை சொல்லியிருக்க மாட்டார்ன்னு நான் நினைக்கிறேன்..."

"ஏனாம்..? வள்ளுவர் அறத்துப் பாலைப் பற்றி மட்டுமா எழுதினார்..? இன்பத்துப் பாலையும் சேர்த்துத் தாண்டி எழுதினார்.. அவரோட குறள்களில் இல்லாத காதல் ரசமா..?"

"வள்ளுவரையும் கூட்டணியில சேர்த்துட்டிங்களா..?"

"அவர் கூப்பிடாமலே கூட்டணியில ஐக்கியமாகிடுவாருடி..."

"ஏன்.. உங்க அம்மாகிட்ட நாம ஊருக்குள்ளே இருக்கிறதா சொன்னீங்க..?"

"என் அம்மாவா..?" அவன் முறைத்தான்..

தவறை உணர்ந்தவளாக அவள் நாணத்துடன் நாக்கைக் கடித்தாள்...

"ஸாரி.."

"அதெல்லாம் மன்னிக்க முடியாது.. என் அம்மாவாமில்ல.. என் அம்மா உனக்கு யாருடி..?"

"அத்தை.." சொல்லும் போதே அவளுக்கு வாய்க்குள் இனித்தது...

"அப்ப.. அத்தைன்னு சொல்ல வேண்டியதுதானே.. அது என்ன உங்க அம்மான்னு பிரிச்சுப் பேசறது..?"

"தப்புத்தான் சாமி.. வேணும்னா கன்னத்தில் போட்டுக்கவா.."

நந்தினி கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.. அவன் கோபம் விலகியவனாக அவளை இழுத்து மடியில் சரித்துக் கொண்டான்.. அவன் மடியில் ஒன்றி விட்டவளை காதலுடன் பார்த்தபடி..

"அஃது.. அந்த பயம் மனசில இருக்கனும்.. மாமியாரை அத்தைன்னு கூப்பிடாமல் உங்க அம்மான்னு சொல்லுவியா..?"

"இனிச் சொல்ல மாட்டேன்.."

"பிழைத்துப் போ.. என்ன கேட்ட.. எதுக்காக நாம இங்கே இருக்கிறதைச் சொல்லலைன்னுதான கேட்ட... எப்படிட சொல்ல முடியும்..? சொன்னா உனக்கு சங்கடமாக இருக்காதா..?"

'இருக்கும்தானே.'

அவளுக்காக அவன் பொய் சொல்லியிருக்கிறான் என்ற நினைவில் உதட்டைக் கடித்துக் கொண்டாள் நந்தினி.. அந்த நினைவே அவளுக்கு இதமாக இருந்தது..

"இப்பன்னா நாம மலையடிவார கிராமத்தில தங்கியிருக்கோம்ன்னுதான் அவங்க மனசில பதிவாகும்.. இதில உனக்கு எந்தவித சங்கடமும் இருக்காது.."



"ம்ம்ம்..."

அவர்கள் பேசினார்கள்.. ஒருவரைப் பற்றி ஒருவர் பேச்சின் மூலம் தெரிந்து கொண்டார்கள்.. அடி மனதின் ஆழத்தில் புதைந்திருந்த அத்தனை ரகசியங்களையும் பகிர்ந்து கொண்டார்கள்.. இனிப் பகிர்வதற்கு எதுவுமில்லை என்ற அளவில் பேசித் தீர்த்தபோது கீழ்வானில் விடிவெள்ளி தோன்றியிருந்தது..

"விடியப் போகுது.." என்றாள் நந்தினி..

"ம்ம்ம்.." பார்த்திபனுக்கு ஏன் விடிந்தது என்ற கோபம் எழுந்தது..

"நந்தினி.." தாபத்துடன் அழைத்தான்..

இப்போது அவள் "ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள்..

"விடிஞ்சவுடன் உன்னை சுவாதியிடம் ஒப்படைச் சாகனும்டி.. அதுக்குப் பின்னாலே நீ அவங்க குடும்பத்தோட ஜாயின் ஆகிடுவ.."

அவளுக்கும் அந்த நினைவுதான்.. அந்த இரவில் நிலாவை சாட்சியாய் வைத்து அவனும்.. அவளும் ஓடிய ஓட்டமும்.. ஏறிய மலையும்.. குளிரில்லாத வெதுவெதுப்புடன் மழைக்குப் பாதுகாப்பு தந்த பாறையடி வாரமும்.. பாறையடியிலிருந்து வெளியே வந்து.. அவர்களுக்கென்று அமைக்கப்பட்ட.. பாறையால் ஆன பஞ்சணை போன்ற சமதளமான பாறையும்.. மழை நீரில் கழுவித் துடைத்து அவர்களுக்காவே காத்திருந்ததைப் போன்ற அதன் அமைப்பும்.. அதில் அமர்ந்து உண்ட 'நிலாச்சோறு' விருந்தும்.. அந்தப் பாறையையே பஞ்சணையாக்கி அவனுடன் கலந்த அந்த நொடிகளும்

அவள் வாழ்வில் மறக்க முடியாத நினைவுச் சின்னங்களாகி அவள் மனதில் பொதிந்து விட்டன..

"போகனும்.." துயரத்தோடு அவளும் சொன்னாள்..

அந்த இரவு ஏன் விடிந்தது என்று அவர்களுக்குள் கோபம் எழுந்தது.. விடியாத இரவாக அது நீண்டிருக்கக் கூடாதா..? அவளுக்கும்.. அவனுக்குமான மாய உலகை அவர்களுக்கென்றே சிருஷ்டித்து பரிசாக கையில் கொடுத்த அந்த அற்புத 'நிலாச் சோறு' இரவை அவள் வாழ்நாளில் மறக்க முடியுமா..?

"கலங்காதே.." அவன் உறுதியுடன் அவள் கைபிடித்து அதை விரித்தான்..

"நீ முன்னால் போ.. நான் பின்னால் என் குடும்பத்துடன் வருகிறேன்.. உன் தாத்தாவிடம் உன்னைப் பெண் கேட்கிறேன்.. இது சத்தியம்டி.."

அவள் உள்ளங்கையில் தன் உள்ளங்கையை வைத்து சத்தியம் செய்தான்..

"நான் கேட்டேனா..?" அவள் கையை இழுத்துக் கொண்டாள்..

"இதெல்லாம் தேவையில்லை.. நீங்க என்னைப் பெண் கேட்டு வந்து ஊரறிய கல்யாணம் பண்ணிக்கிட்டாத் தான் உங்களுடன் நான் சேர்ந்து வாழ்வேன்கிற அர்த்தமில்ல.. இப்ப வாழ்ந்தது வாழ்க்கையில்லையா.. இந்த நினைவோடயே கடைசிவரைக்கும் வாழ்ந்து விட என்னால் முடியும்..."

எதற்காக அதைச் சொன்னாள் என்று நந்தினியே அறியவில்லை.. அந்த 'நிலாச் சோறு' தந்த இரவின்



விடியலின் அருகாமையில் அந்த வார்த்தைகளை அவள் வாய் மொழி உதிர்த்ததை அருகிலிருந்த தேவதைகள் 'ததாஸ்து' என்று சொல்லி வைப்பார்களே என்ற எண்ணம் அவளுக்கு இருந்திருக்க வேண்டும்...

அது 'உஷா' காலம்.. 'உசாதேவி' கதிரவனின் மனைவி என்பதால் விடிகின்ற அந்த அதிகாலை வேளையை மனைவிக்கென்று அவர் அர்ப்பணம் செய்தாரோ என்னவோ.. அந்தப் பொழுதில் எதைச் சொன்னாலும்.. அது பலிக்கும் என்பது கதிரவனின் வாக்கு..

## 31

*சிந்துகிற வார்த்தைகளைச்*
*சிந்தித்து நீ பேசு...*
*எந்நாளும் உந்தனுக்கு...*
*அதுதருமே நிலாச்சோறு..*

**வா**ய்மொழியில் உதிர்கின்ற வார்த்தைகளை இனம் பிரித்து யோசித்து அதன் பின்னரே பேச வேண்டுமென்றால்.. அது பேச்சாக இருக்குமா..? நினைத்ததை பேச வேண்டும்.. அதுதான் பேச்சு.. நம்மில் எத்தனைபேர் அந்த வரத்தை வாங்கிப் பிறந்திருக்கிறோம்..?

நந்தினியும் சரி.. பார்த்திபனும் சரி.. கோடிஸ்வர பாரம்பர்யத்தைக் கொண்டவர்கள்.. ஒரே இனத்தைச்

சேர்ந்தவர்கள்.. சங்கரலிங்கத்தை பார்த்திபனுக்கும்.. பார்த்திபனை சங்கரலிங்கத்திற்கும் தெரிந்திருந்தது.. இன்னும் சொல்லப் போனால்.. பார்த்திபனைப் போன்ற ஒருவன் நந்தினியைப் பெண் கேட்டால்.. பழம் நழுவி பாலில் விழுந்து.. அதுவும் நழுவி வாயில் விழுந்ததைப் போல சங்கரலிங்கம் மகிழ்ந்து போய் விடுவார் என்பது தான் நிதரிசனமான உண்மை..

அவர் அவனைப் போன்ற பராக்கிரமசாலிக்காகத்தான் காத்திருந்தார்.. நந்தினியை கைபிடிக்கப் போகிறவனிடம் அவர் எதிர்பார்த்த அத்தனை தகுதிகளுடன் சேர்ந்து கூடுதலான பல தகுதிகளைக் கொண்டவன் அவன்.. அவனிடம் நந்தினியை கைபிடித்து கொடுத்து விட்டால் நிம்மதியாக அவர் உறங்குவார் என்பது தான் நிதரிசனமான உண்மை..

அவர் தூக்கத்தை தொலைத்திருந்தார்.. அல்லும் பகலும்.. நந்தினியின் வாழ்வைப் பற்றிய நினைவோடே காலம் கழித்தார்.. அவளை தகுந்த மணமகனுக்கு திருமணம் பண்ணி வைக்க வேண்டும்.. அவன் அவளைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.. பிறந்த வீட்டில் அவள் உணராத அழகான நந்தவனம் போன்ற குடும்பச் சூழலை புகுந்த வீட்டில் அவள் உணர்ந்து வாழ வேண்டும் என்ற வேண்டுதலோடு அவர் வாழ்ந்து வந்தார் என்பதுதான் நிதரிசனமான உண்மை..

நந்தினியை நிறைய குடும்பங்களில் இருந்து பெண் கேட்டார்கள்.. சங்கரலிங்கத்தின் பேத்தி.. நந்தகுமாரின் தங்கை.. சடகோபனின் மகள்.. என்று அவர்கள் நந்தினியை



சொத்தின் அளவை வைத்து மதிப்பிட்டார்களே யொழிய.. அவளுக்காக அவளை நேசித்துப் பெண் கேட்டு எவரும் வரவில்லை..

நந்தினியின் மென்மை காணக் கிடைக்காத வரம் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.. அதை உணர்ந்தவன் எவனோ.. அவனுக்கே நந்தினியை மணமுடித்து தர வேண்டுமென்பது அவருடைய அவா.. அந்த 'அவா' வை அறிந்தவனைப் போல பார்த்திபன் நந்தினியின் மென்மையான அந்த தன்மையைத்தான் அதிகமாக நேசித்தான்...

நிலைமை இவ்வாறு இருக்க.. எளிதாக முடியப் போகும் திருமணத்தை எது நிறுத்தப் போகிறது என்று அவள் அவனுடன் கழித்த அந்த 'நிலாச் சோறு' இரவின் நினைவுடனே வாழ் நாளைக்கழித்து விட முடியுமென்று கூறினாள்..?

"உளராதே.." அதட்டினான் பார்த்திபன்..

அவன் கோபத்தில் அவள் திகைத்தாள்.. எதற்காக அந்த அளவுக்கு கோபப் படுகிறான் என்று புரியாதவளாக அவன் முகம் பார்த்தாள்..

"பேசற வார்த்தையை யோசிச்சுப் பேச மாட்டியா..? ஒரு வார்த்தை வெல்லும்.. ஒரு வார்த்தை கொல்லும்ன்னு எங்க அம்மா சொல்லுவாங்க.. அந்தப் புத்தி உனக்கு இல்லையா..?"

"ஏன்னா.. எனக்கு இதைச் சொல்ல அம்மா இல்லையே..."

நந்தினி சிரிக்க முயன்றாள்.. அதில் இழையோடிய சோகத்தில் அவன் மனம் வலித்தது.. கோபம் பறந்து

போனவனாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் அவன்...

"அச்சாணியமா பேசக் கூடாது நந்தினி.." குழந்தைக்குச் சொல்வதைப் போல சொன்னான்...

"ஏன்..? என் மனசில இருக்கிறததைத்தானே சொன்னேன்.?" அவளும் குழந்தையாக கேட்டாள்..

"முட்டாளாடி நீ.." கடிந்து கொண்டான் பார்த்திபன்..

"உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கிறதில எந்த வித தடங்கலும் வரப் போறதில்ல.. அம்மாவுக்கும்.. பவித்ராவுக்கும் உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு.. உன் தாத்தாவுக்கு என்னைத் தெரியும்.. இப்படியிருக்கிறப்ப நீ லூசைப்போல உளறித் தள்ளலாமா..?"

"கல்யாணம்ங்கிற ஒன்று நடந்தாத்தான் நீங்களும்.. நானும் புருசன் பெண்டாட்டியா..? இப்ப இல்லையா..?"

அவள் கேள்வியில்..

"நந்தினி.." என்று அவளை இறுக்கிக் கொண்டான் பார்த்திபன்..

கருமை விலகாத அந்த இரவில் விடியும் வரை கதை பேசிய அவர்கள் இருவரும் அணைப்பில் அடங்கினார்கள்..

"இரவே.. இரவே விடியாதே..
இன்பத்தின் கதவை மூடாதே..
பொழுதே.. பொழுதே புலராதே..."

என்னதான் அவர்கள் பாடினாலும் இரவு நகராமல் நிற்கவில்லை.. பொழுது புலராமல் இருக்கவில்லை.. விடிந்தது.. அவர்கள் மலையை விட்டு கீழே இறங்கினார்கள்..



# 32

கண்ணான கண்ணனுக்கு..
நிலாச் சோறு..
தந்ததிலே என்ன பலனென்று..
நீ கூறு...

மலையை விட்டு இறங்குவதற்கு முன்னால் பார்த்திபன் ஒரு போன் செய்தான்.. நந்தினியிடம் மென்மையாக சிரித்தபடி..

"இங்கேயும் ஒரு அருவி இருக்கு.. பார்க்கலாமா..?" என்றான்..

எப்படி அந்தச் சூழ்நிலையிலும் அவனால் உல்லாசம் கொண்டாட முடிகிறது என்று தோன்றினாலும் நந்தினி அந்த உல்லாசத்தில் பங்கு பெற விழைந்தாள்..

முதல்நாள் இரவைப் போல நிலவொளியில் இல்லாமல்.. புலர்ந்திருந்த காலையில் கதிரவனின் கதிர்களில் வெளிச்சத்துடன் இருந்த மலைப் பாதையில் அவர்கள் இறங்கினார்கள்..

"அதோ பார்..."

பார்த்திபன் கை காட்டிய இடத்தில் சிற்றருவி கொட்டிக் கொண்டிருந்தது..

"உனக்கு அருவின்னா பிடிக்குமில்ல..."

அவள் கைபற்றி இழுத்தபடி அருவிக்குள் நுழைந்தான்.. கொட்டிக் கொண்டிருந்த அருவியில் இருவரும் நனைந்தார்கள்.. ஓங்கி விழுந்த அருவி நீரின் வேகத்தை கண்மூடி சிலிர்த்து ரசித்து மகிழ்ந்தாள் நந்தினி..

ஈர உடைகள் அவள் உடலோடு ஒட்டியிருந்த அந்த வேளையில் தாபத்துடன் அவளைத் தழுவிக் கொண்ட பார்த்திபன் அவள் காதோடு ரகசியம் பேசினான்.. கிளர்ந்து பிரிந்தவளின் கையை இறுக்கிப்பிடித்து அவள் போகாமல் தடுத்து நிறுத்தினான்..

"இரண்டு தடவைடி.. நீ அருவியில குளிச்ச அழகை நான் தள்ளி நின்று ரசித்தது இரண்டு தடவை.. அப்ப என் மனசு என்ன பாடுபட்டுச்சுன்னு உனக்குத் தெரியுமா..?"

தள்ளி நின்று ரசித்த அந்தத் தங்கத் தாமரை மலரின் அழகை கைகளில் அள்ளிக் கொண்டான் அவன்.. தத்தித் தாவிய அவன் மனம் அவளது அருகாமையில் குளிர்ந்தது..

அருவி நீரை விட்டு அவர்கள் வெளியே வந்தார்கள்.. உடைகளில் வழிந்த நீரைப் பிழிந்தவளின் கணுக்கால் அழகில் அவன் பார்வை பதிந்தது.. அதில் அவள் முகம் சிவந்தாள்.. விரித்து விட்டிருந்த கூந்தலில் சொட்டிய நீரைப் பிழிந்து.. அப்படியே விரிய விட்டாள்.. பார்த்திபன் அவளையே பருகுவதைப் போல பார்த்தபடி கை நீட்ட.. அதைப் பற்றிக் கொண்டாள்.. அவர்கள் மலையை விட்டு இறங்க ஆரம்பித்தார்கள்..



காலைக் கதிரவனின் இதமான வெயிலில் நனைந்திருந்த அவர்களின் உடைகள் உலர்ந்து விட்டிருந்தன.. மலையடிவாரத்தை அடைந்த போது ஈரத்தின் உணர்வு துளிக்கூட உடலில் இல்லை என்பதை உணர்ந்தாள் நந்தினி..

கார்கதவைத் திறந்து விட்டான் பார்த்திபன்.. நந்தினி திரும்பி மலையை ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.. அதில் கழித்த இரவையும்.. உண்ட நிலாச்சோறையும் நினைத்துக் கொண்டவளின் கண்கள் பனித்தன..

இதுபோன்ற ஓர் இரவு இனிமேலும் அவள் வாழ்வில் வருமா என்ற ஏக்கம் அவள் நெஞ்சில் எழுந்தது...

அவள் பார்த்திபனின் மனைவியாகலாம்.. உறங்காத பல இரவுகளை உறவாடி அவன் தரலாம்.... அந்த இரவுகளெல்லாம் இந்த இரவுக்கு இணையாகக் கூடுமா..? பார்த்திபன் கேட்டானே.. இப்போது நழுவ விட்டால் இதைப் போன்ற ஓர் இரவு கிடைக்கவே கிடைக்காது என்று..

அதிலிருந்த உண்மையை அப்போது அவள் உணர்ந்தாள்..

பார்த்திபன் கார் கதவை விட்டு விட்டு அவள் தோளில் கை வைத்தான்.. அப்படியே அவன் மார்பில் சாய்ந்து விட்டாள் நந்தினி.. தூரத்தில் வந்த காரின் சப்தத்தில் அவர்கள் இருவரும் பிரிந்து நின்றார்கள்..

வந்தது போலிஸ் கார்.. காரிலிருந்து இறங்கிய போலிஸ் அதிகாரி பார்த்திபனிடம் வந்து கைகுலுக்கினார்..

"ஷி இஸ் மை வுட்பி.." பார்த்திபன் நந்தினியை அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தான்..

"வணக்கம்.." நந்தினி கரம் குவித்தாள்..

"எங்க வீட்டுக்கு கெஸ்டா வந்திருக்கிறா.. நேத்து ஈவினிங்ல இவளை கடத்தப் பார்த்திருக்காங்க.. தப்பியோடி வந்தப்ப நான் இவளைப் பார்த்துட்டேன்.. அவங்க பத்துப் பேருக்கு மேலே இருந்தாங்க.. போகிற வழியில் கண்காணிக்க ஆள்களை நிறுத்தி வைச்சிருக்காங்க.."

"என்ன சொல்றீங்க பார்த்திபன்.. இதை ஏன் நேற்று நைட்டே என்னிடம் சொல்லலை..?"

"சொல்ல முடியாத சூழ்நிலை சார்.. அப்ப தப்பிக்கிறது மட்டும்தான் குறியாய் இருந்தது.. அத்தோடு என் வுட்பியின் பெயர் இதில இன்வால்வ் ஆகிறதை நான் விரும்பலை.. இப்பவும் அவங்க மேல ஆள் கடத்தல் குற்றத்தை நான் சொல்லப் போறதில்ல.. என் கம்பெனியில நுழைஞ்சு.. சேலரி கொடுக்க வைத்திருந்த பணத்தை அவங்க கொள்ளையடிச்சுட்டுப் போயிட்டாங்கன்னுதான் கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறேன்.. நந்தினியின் பெயர் இதில் வரக்கூடாது.."

"ஓகே.. நான் பார்த்துக்கிறேன்.. நீங்க கம்ப்ளெயிண்ட் கொடுங்க.."

பார்த்திபன் காரிலிருந்த லெட்டர் பேடை எடுத்து மடமடவென்று புகாரை எழுதி கையெழுத்து போட்டு அவரிடம் கொடுத்தான்..



"கிளம்பறோம் சார்.. வழியில் அவங்க காத்திருக்கலாம்.."

"கவலைப் படவேணாம்.. நான் இப்பவே கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கொடுத்துடறேன்.." என்றார் அவர்..

அவரிடம் விடைபெற்ற பார்த்திபன் காரைக் கிளப்பினான்.. அவன் நினைத்ததைப் போலவே சற்றுத் தொலைவிலிருந்த மரத்தின் மறைவிலிருந்து அவர்கள் வெளிப்பட்டார்கள்.. சாலையின் குறுக்கே மறித்து நின்றவர்கள் வேகம் குறைக்காமல் வந்த காரைக் கண்டதும் அலறியடித்துக் கொண்டு விலகி ஓடினார்கள்..

"அடிபட்டுறப் போறாங்க.." நந்தினி பயந்தாள்..

"பர்ஸ்ட் கம்ப்ளெயிண்டை நான் கொடுத்திட்டேன்.. காரை வழிமறிச்சு என்னைத் தாக்க வந்தாங்க.. அவங்க கிட்ட இருந்து தப்பிக்க காரைக் கிளப்பினேன்.. அவங்க தடுக்கப் பார்த்து அடிபட்டுட்டாங்கன்னு சொல்லிருவேன்.. இவனுகள்ளாம் இருக்க வேண்டியவனுகளே இல்லை.. போய் சேர வேண்டியவனுக... ஒரு பெண்ணைக் கடத்தனும்.. வான்னு ஒருத்தன் கூப்பிட்டா.. பணத்துக்காக கூடவந்து நிற்கிறானுகளே.. நீ கூட இருக்கிறயேன்னு பார்க்கிறேன்.. இல்லைன்னா.. நானா.. இவனுகளான்னு மோதிப் பார்த்திருவேன்.."

அவனின் அந்த ரௌத்ரத்தை அவளுக்குப் பிடித்திருந்தது.. அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டவளின் விரிந்த கூந்தல் அவன் தோளில் படிய.. அவசரமாக அதைப் பின்னலிட்டாள்..

"இப்ப இதுதான் ரொம்ப முக்கியமா..?" கேலியாக அவன் கேட்டான்..

"இதுவும் முக்கியம்.. ஏன் தலைமுடியை விரிய விட்டிருக்கேன்னு அத்தை கேட்டா என்ன பதிலைச் சொல்றதாம்..?" நந்தினி பதிலுக்கு கேட்டாள்..

"ஏன்..? அருவியில் நானும் உங்க மகனும் சேர்ந்து குளித்தோம்.. அதில நனைஞ்ச தலைமுடியை உலர வைக்க விரித்துப் போட்டேன்னு சொல்ல வேண்டியது தானே..?" குறும்பாக அவன் சிரித்தான்..

"ம்ப்ச்.." வெட்கத்துடன் அவன் கையைக் கிள்ளினாள் நந்தினி..

"மச்சானுக ஃபாலோ பண்றானுகடி.." காரின் பக்கவாட்டு கண்ணாடி வழியே பார்த்த பார்த்திபன் சொன்னான்..

"திரும்பவும் ஃபைட் பண்ணப் போறிங்களா..?" நந்தினி பயந்தாள்..

"அது என்ன தேவைக்கு..? அதையெல்லாம் போலிஸ் கவனிச்சுக்கும்.. ஐயா ஜாலி மூடில் இருக்கேன்.. ஃபைட் பண்ணி திரும்பவும் சட்டையில புழுதியை அப்பிக்க இப்போது உத்தேசமில்லை.." பார்த்திபன் கண் சிமிட்டினான்..

அவனது சமயோசிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மனதுக்குள் மெச்சிக் கொண்டாள்



நந்தினி.. மலையடிவாரத்தின் அருகில் ரஞ்சித்தின் ஆள்கள் சுற்றிக் கொண்டிருப்பார்கள் என்பதை பார்த்திபன் எதிர்பார்த் திருக்கிறான்.. இரவு வேளையில் அவர்களின் கண்களிலிருந்து மறைந்து ஒளிந்து கொண்டாலும் விடிந்தபின்பு வீட்டுக்குப் போக ரோட்டுக்கு வந்துதானே ஆகவேண்டும் என்பது அவர்களின் கணக்கு...

அந்தக் கணக்கை பார்த்திபனும் கணித்திருக்கிறான்.. அதனால்தான் மலையை விட்டு இறங்கும் போதே போலிஸிற்கு தகவல் கொடுத்து வரவைத்து விட்டான்.. அதையறியாமல் துரத்தி வந்த ரஞ்சித்தின் ஆள்களை போலிஸ் வளைத்துப் பிடித்துவிட்டது.. எப்படி போலிஸிற்கு தகவல் போனது என்று தெரியாமல் ரஞ்சித் தலையை பிய்த்துக் கொண்டான்.. அவன் நினைத்ததே வேறு.. நந்தினியின் பெயர் வெளியில் வந்து விடக்கூடாது என்று பார்த்திபன் தனியாளாகத்தான் போராடுவான்.. அவனை மடக்க இன்னும் கொஞ்சம் ஆள்களை இறக்குமதி பண்ணி விட்டால் போதும்.. ஒற்றை ஆளாய் போராடுபவனிட மிருந்து நந்தினியை எளிதாக கவர்ந்து சென்றுவிடலாம் என்று நினைத்திருந்தான்..

அந்த நினைப்பில் ஒரு லாரி மண்ணைக் கொண்டு வந்து போட்டு விட்டான் பார்த்திபன்..

போலிஸில் அகப்பட்டுக் கொண்டவன் ரூபாவிற்கு செய்தி அனுப்ப.. நித்யா சங்கரலிங்கத்திற்கு செய்தி அனுப்பினாள்..

கர்நாடகாவிலிருந்து திரும்பி வந்திருந்த சங்கரலிங்கம் நந்தினியின் வரவுக்காகத்தான் காத்திருந்தார்.. சுவாதியின் குடும்பத்துடன் திருப்பூருக்கு நந்தினி வந்து சேர்ந்த மறு நிமிடம் நித்யாவின் செய்தி அவருக்கு கிடைத்து விட்டது..

'ஸ்ரீவில்லிப் புத்தூர் ரத்தினத்தோட மகனுக்கு நந்தினியைக் கேட்கிறாங்களா..?'

அத்தனை நாளும் அதைப் பற்றி அவர் யோசிக்காததிற்கு ஒரு காரணம் இருந்தது.. ரத்தினத்தின் தகப்பனாருக்கும்.. சங்கரலிங்கத்திற்கும் ஒரு சிறு பகை இருந்தது.. ரத்தினத்தின் தங்கையை சடகோபனுக்கு கொடுப்பதற்கு அவர் விரும்பினார்.. ஆனால் சடகோபன் யாமினியை விரும்பிவிட.. அந்த சம்பந்தம் முறிந்து விட்டது.. அந்தக் காரணத்தினாலேயே எல்லாவித தகுதிகளையும் உடைய பார்த்திபனைப் பற்றி அறிந்திருந்தும் மாப்பிள்ளை கேட்க சங்கரலிங்கம் தயங்கிக் கொண்டிருந்தார்..



# 33

உன்னோடு நானுறங்க..
என்னோடு நீயுறங்கும்..
நிலாக்காலம் வந்துவிட்டால்..
அதுதானே நம் நிலாச்சோறு..!

'அன்று நாங்கள் பெண் கொடுக்க நினைத்தோம்.. அது நடக்கவில்லை.. இன்று பெண் எடுக்க நினைக்கிறோம்.. நடக்குமா..?'

சிறு குறுஞ்செய்தி மூலம் நெடுநாள் பகையை ஒரு நொடியில் உடைத்தெறிந்து விட்டாள் நித்யா..

சங்கரலிங்கம் மகிழ்ந்து போனார்.. சடகோபனுக்கு பெண் எடுக்க முடியாத அந்த வீட்டில் சடகோபனின் மகளைக் கொடுக்க வேண்டி வந்தது ஆண்டவனின் திருவுளம் என்றே அவர் நினைத்தார்..

குறுஞ்செய்தி அனுப்பிய நித்யாவிடம் தொலை பேசியில் அவர் பேசினார்.. இதில் அவருக்கு பூரணசம்மதம்.. என்று தெரிவித்தார்..

"ரத்தினத்தோட மகனுக்கு பெண் கொடுக்கிறது மூலமா திரும்பவும் இரண்டு குடும்பமும் ஒன்னு சேருதுன்னா இதைவிட சந்தோசம் வேற என்ன இருக்க முடியும்..?"

ஒரு சுபயோக சுபதினத்தில் பார்த்திபன் குடும்பத்துடன் பெண் பார்க்க வந்தான்.. ரூபா கொதித்துப் போனாள்.. நந்தகுமார் பூரித்து போனதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. மறுத்துப் பேச வழியின்றி ரஞ்சித் போலிஸ் கேஸில் அகப்பட்டு ஜாமினில் வெளிவந்திருந்த தால் பொறுமித் தவித்துக் கொண்டிருந்தாள்..

நிச்சயதார்த்தம் நடந்து திருமணத்திற்கு நாளும் குறிக்கப்பட்டு விட்டது.. இதுதான் மாப்பிள்ளை.. இதுதான் பெண் என்று ஆகிவிட்ட பின்பு பார்த்திபன் சரளமாக திருப்பூருக்கு வந்து நந்தினியை பார்த்துப் போவது வழக்கமாகிவிட்டது.. திருமணத்திற்கு இடையிலிருந்த ஒரு மாதத்தை எப்படிக் கடப்பது என்று தெரியாமல் அவர்கள் தவித்தார்கள்..

அந்தச் சூழ்நிலையில்தான் ரஞ்சித் நந்தினியிடம் ஒரு விவரத்தை சொன்னான்.. கல்லூரியிலிருந்து திரும்பியவளை வழி மறித்தவனிடம்..

"என்ன..? தாத்தாவிடம் உன்னைக் காட்டிக் கொடுக்கலைங்கிற தைரியமா..?" என்று அவள் சீறினாள்..

"அட..! உனக்குக் கூட கோபம் வருமா..? பாருடா.. பிள்ளைப் பூச்சிகூட புலி மாதிரி சீறுது.. என்ன..? காதலித்தவனையே கட்டிக்கப் போகிறோம்கிற தெனா வெட்டா..?" அவனும் விட்டுக் கொடுக்காமல் முறைத்தான்..

"ஆமாம்.. அப்படித்தான்.. வழியை விடு.."



"விடத்தானே போறேன்.. உன்னை வழி மறிச்சு எனக்கென்ன ஆகப் போகுது..? உன்கிட்ட கொட்ட வேண்டிய செய்தி ஒன்று இருக்கு.. அதைக் கேட்டுட்டு போ.."

"என்ன..?"

நந்தினி அலட்சியமாகத்தான் கேட்டாள்.. இவனெல்லாம் ஒரு மனிதனா என்ற இகழ்ச்சியுடன் தான் கேட்டாள்.. புழுவைப் பார்ப்பதைப்போல அவனை உதாசீனமாக பார்த்தபடிதான் கேட்டாள்..

அவன் அதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளவே இல்லை..

"ஒன்னுமேயில்லை.. உனக்கு சுவாதி.. சுவாதின்னு ஒரு பிரண்ட் இருக்காள்ல.."

நந்தினிக்கு 'திக்' கென்றாகி விட்டது..

'இந்தப் பாவி எதற்காக சுவாதியின் பெயரைச் சொல்றான்.. அடுத்து அவளுக்கு குறி வைக்கிறானோ..'

அவளின் மனவோட்டத்தை அறிந்ததைப் போல..

"அந்த உத்தேசமெல்லாம் எனக்கு இல்லை.. உன்கிட்ட கோடி கோடியாய் பணமிருக்கு.. அவகிட்ட என்ன இருக்கு..? விசயமே வேற.. உன் காதலைப் பத்தி மட்டுமே சுயநலமா யோசிச்சிருக்கியே.. அவளோட காதலனைத்தான் நீ அபேஸ் பண்ணியிருக்க.. இது உனக்குத் தெரியுமா..?" என்று நிதானமாக கேட்டான் ரஞ்சித்..

"என்னது..? ? ?" நந்தினி அதிர்ந்து விட்டாள்..

"பொய்.. நான் இதை நம்பவே மாட்டேன்.." பதறினாள்..

"போ.. போய் அவளிடமே கேளு.. அவளோட பெட்டியில ஏன் உன் காதலனோட போட்டோவை ஒளிச்சு வைச்சிருக் கான்னு கேளு.. அவன் மேல அவளுக்கு ஆசையிருக்கா இல்லையான்னு கேளு.." ரஞ்சித் அடித்துப் பேசினான்.

நந்தினிக்கு உயிர்துடித்தது.. அப்படியே காரில் ஏறிக் கொண்டவள் சுவாதியின் வீட்டிற்கு காரைவிடச் சொன்னாள்.. எட்டிப் பார்த்த சித்ரலேகா முகம் மலர வரவேற்ற போது.. பெற்ற தாயின் பாசத்தை உணரவைத்த இவள் மகளுக்கா நான் அநியாயம் செய்திருக்கிறேன் என்ற குற்ற உணர்வு அவளுக்குள் எழுந்தது...

"சுவாதி எங்கேம்மா..?" அவள் குரல் கிணற்றுக் குள்ளிருந்து ஒலிப்பதைப் போல நலிந்து ஒலித்தது..

"மாடியிலதான் இருக்கா.. ஏம்மா எப்படியோ இருக்க..? உடம்புக்கு முடியலையா..?" கரிசனத்துடன் நந்தினியின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள் சித்ரலோக..

அவளின் அக்கறையில் நந்தினியின் குற்றஉணர்வு அதிகமானது.. மாடிக்குப் போனாள்.. கட்டிலில் குப்புறப் படுத்திருந்த சுவாதி நந்தினியைக் கண்டதும் அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்..

'அழுதிருக்கா..' நந்தினியின் மனம் பதறியது..



"என்னடி.. இப்பத்தான் வீட்டுக்குப் போன.. உடனே திரும்பி வந்து நிற்கிற..?"

நந்தினியைப் பார்க்காமல் வேறு திசையில் பார்த்தபடி கேட்டவளின் தோளைப் பிடித்துத் தன் பக்கமாக திருப்பினாள் நந்தினி..

"சுவாதி.. நான் கேட்கிறதுக்கு உண்மையான பதிலைச் சொல்லு.."

"கேளு.."

"உனக்கு பார்த்திபனைப் பிடிக்குமா..?" இதயம் நடுங்கக் கேட்டாள் நந்தினி..

"பிடிக்கும்.." ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டாள் சுவாதி..

'பிடிக்குமா..?' நந்தினியின் கண்கள் இருண்டன.,

சுவாதி பொய் சொல்ல மாட்டாள்.. அவளுக்கு பொய் சொல்லத் தெரியாது...

'அப்படின்னா..? ரஞ்சித் சொன்னது உண்மையா..?'

"சுவாதி.." கணத்த இதயத்துடன் அடுத்த கேள்வியை கேட்க ஆரம்பித்தாள் நந்தினி..

"உன்னிடம் பார்த்திபனின் போட்டா இருக்காடி..?" கேட்டு விட்டாள்..

"ஊம்.. இருக்கு.." அதற்கான பதிலும் வந்துவிட்டது..

'இதற்கு மேலும் கேள்விகள் தேவையா..?' கண்கள் கலங்க தோழியை பார்த்தவள்..

"ஏண்டி.. என்னிடம் மறைச்ச..?" என்று குமுறினாள்..

"நீதான்டி என்னிடம் இருந்து எல்லாத்தையும் மறைச்சிட்ட.." சட்டென்று வெளியே போய் விட்டாள் சுவாதி..

இயந்திரம் போல மாடியிறங்கிய நந்தினியை சித்ரலேகா சாப்பிட அழைத்தாள்.. அவளது குரல் காதில் விழாதவளாக நந்தினி செலுத்தப் பட்டவளைப் போல போய் விட்டாள்.. இந்தப் பெண்ணுக்கு என்ன ஆச்சு என்று திகைத்து நின்று விட்டாள் சித்ரலோகா.. காரில் அமர்ந்திருந்த நந்தினிக்கு துக்கம்.. துக்கமாக இருந்தது.. அவளது மணக்கண்ணில் நந்தினியைக் காப்பாற்ற தன் உயிரை பணயம் வைத்து லாரியின் முன்னால் பாய்ந்த சிறுமி சுவாதி தோன்றினாள்..

'எனக்காக அவ நட்பைக் கொடுத்தா.. அவளைப் பெத்தவங்களோட பாசத்தை பகிர்ந்து கொடுத்தா.. தைரியத்தைக் கொடுத்தா.. பதிலுக்கு நான் என்ன கொடுத்தேன்..?'

அன்று இரவில் நந்தினி பார்த்திபனுக்கு போன் பண்ணி திருமணத்தை நிறுத்திவிடச் சொன்னாள்.. தன் காதுகளையே நம்ப முடியாமல் திகைத்துப் போன பார்த்திபன் சீறினான்..

"விளையாடறியாடி..?"

"நான் விளையாடலை.. நிஜமாகத்தான் சொல்றேன்.. நீங்க சுவாதியைக் கல்யாணம் பண்ணிக்கங்க.. அவ உங்களைக் காதலிக்கிறா.."

"என்னது.?"



இவளுக்கு பைத்தியம்.. கியித்தியம் பிடித்திருக்கிறதா என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவள் போனை வைத்து விட்டாள்.. மறுநாள் திருப்பூருக்குப் போயாக வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்..

பார்த்திபனிடம் பேசிய பின்பு சங்கரலிங்கத்திடம் போன நந்தினி.. அவர் காலடியில் அமர்ந்து அவர் மடிமீது தலை சாய்த்தாள்.. பெரியவரின் புருவங்கள் சுருங்கின.. மனதில் அதிக அளவில் பாரமேற்கும் போது மட்டுமே அவள் அப்படிச் செய்வாள்..

"நந்தினி..?" துணுக்குற்றவராக அழைத்தார்..

"தாத்தா.. எனக்கொரு வாக்குக் கொடுப்பீங்களா..?"

"என்னடா..?"

"ஒருவேளை நான் இந்த உலகத்தில இல்லாம போயிட்டா.. சுவாதிக்கு பார்த்திபனை கல்யாணம் செய்து வைப்பீங்களா..?"

"என்ன உளறல் நந்தினி இது..? என்னம்மா ஆச்சு..?"

"ஒன்னுமில்லை தாத்தா..."

அவள் போய் விட்டாள்.. சங்கரலிங்கத்தின் தூக்கம் தொலைந்து விட்டது.. பேத்தியின் துயரத்திற்கான காரணம் புரியாமல் அவர் அலை மோதினார்.. நந்தினியின் வார்த்தைகளில் விபரீதம் ஒளிந்திருப்பதை உணர்ந்தவர்.. அடிக்கடி அவள் அறைக்கதவை தட்டி எழுப்பிக் கொண்டே இருந்தார்.. விடிந்தவுடன் பார்த்திபனை போய் பார்க்க வேண்டும்.. நந்தினியைப் பற்றிப் பேச வேண்டும் என்று

நினைத்தவருக்கு.. விடிவதற்குள் அதிர்ச்சி காத்திருந்தது.. அவர் கடைசி முறை கதவைத் தட்டிய போது நந்தினி கதவைத் திறக்கவில்லை..

"நந்து.."

அவரின் சப்தத்தில் நந்தகுமார் ஓடிவந்தான்.. தூக்கம் கலைந்துவிட்ட எரிச்சலுடன் அன்ன நடைபோட்டு ரூபா வந்து நின்றாள்..

"என்ன தாத்தா..?"

"கதவை உடைடா..."

கதவை உடைத்துக் கொண்டு அவர்கள் உள்ளே போன போது நந்தினி தூக்க மாத்திரைகளின் உபயத்தில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள்.. மருத்துவமனைக்கு அவளை அள்ளிக் கொண்டு ஓடினார்கள்.. விடிந்தவுடன் திருப்பூருக்கு கிளம்பவிருந்த பார்த்திபனை சங்கரலிங்கத்தின் போன் எழுப்பியதில் அவன் பேயைப் போல காரை விரட்டிக் கொண்டு திருப்பூருக்கு வந்து சேர்ந்தான்.. சுவாதிக்கும் போன் போனது.. ஓடி வந்தவள் சங்கரலிங்கமும்.. பார்த்திபனும் சொல்லிய விவரத்தில் எதுவும் புரியாமல் குழம்பி நின்றாள்..

"நல்ல வேளை.. உடனே கொண்டு வந்துட்டிங்க.. ரத்தத்தில மாத்திரை கலக்கலை.."

டாக்டர் சொன்னதும்தான் எல்லோரும் நிம்மதியாக பெருமூச்சு விட்டார்கள்..

"ஏண்டி பாவி.. இப்படிச் செஞ்சே..?" சுவாதி பாய்ந்தாள்..



"உனக்காகத்தான்.." விரக்தியுடன் விட்டம் பார்த்தாள் நந்தினி..

"எனக்காகவா..? என்னடி உளறிக்கிட்டு இருக்க.. தாத்தாகிட்டயும்.. பார்த்திபன் கிட்டயும் இதைப் போலத்தான் பேசி வைத்திருக்கிற.. என்னடி விசயம்..?"

"மறைக்காதே சுவாதி.. எனக்கு எல்லாம் தெரியும்.."

"என்னத்தை தெரியும்..?"

"நீ பார்த்திபனைக் காதலிக்கறதானே.."

நந்தினி சொல்லிவிட.. சுவாதி அவளை அடித்து விட்டாள்..

"குரங்கே.. பார்த்திபனும் தாத்தாவும் இங்கேதான் இருக்காங்க.. அவங்க என்னைப் பத்தி என்ன நினைச்சுக்கு வாங்க..? பார்த்திபன் எனக்கு அண்ணன்டி.."

அவளால் அவர்கள் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியவில்லை..

"என்னது..?!!" நந்தினி விழி விரிய சுவாதியைப் பார்த்தாள்..

"எதுக்கு இப்ப முட்டைக் கண்ணை முழிச்சு பார்க்கிற..?"

"உனக்கு இவரைப் பிடிக்கும்ன்னு சொன்னயேடி.."

"பின்னே..? உன் ஹஸ்பெண்டை எனக்கு பிடிக்காம போகுமா..?"

"இவர் போட்டோவை நீ வைச்சிருக்கிறதாய் ரஞ்சித் சொன்னானே.. நீயும் ஒப்புக்கிட்டாயே..."

"அவன் வேலைதானா இது..? அறிவு கெட்டவளே.. அவன் சொன்னா அதை அப்படியே நம்பிடுவியா..? ஏன் எதுக்குன்னு யோசிக்க மாட்டியா..? உனக்குக் கல்யாணப் பரிசா ஒரு தங்கச் செயினை பிரஸெண்ட் பண்ணலாம்ன்னு அப்பா அம்மா சொன்னாங்க.. அதில லாக்கெட்டை கோர்த்துக் கொடுத்தால் நல்லாயிருக்கும்.. அந்த லாக்கெட்டின் இரு பக்கத்திலேயும் உன் போட்டோவும்.. பார்த்திபன் போட்டாவும் இருக்கனும்னு நாங்க பிளான் பண்ணினோம்.. பார்த்திபன் அண்ணாகிட்ட விசயத்தைச் சொல்லி போட்டோவை அனுப்பச் சொன்னேன்.. அவரும் என் ஈமெயிலுக்கு அனுப்பி வைச்சார்.. அதை நகைக் கடைக்கு கொண்டு போனப்ப ரஞ்சித் அங்கே இருந்தான்.. களவாணிப் பயல் எதை விற்க வந்திருக்கானோன்னு நினைச்சா அவன் போட்டுக் கொடுக்க வந்திருக்கிறான்.."

"நான் வந்தப்ப நீ கண்ணைத் துடைச்சுக்கிட்டு இருந்தியேடி.."

"அப்பத்தான் தூங்க ஆரம்பிச்சேன்.. நீ எழுப்பிட்ட.. தூக்கக் கலக்கத்தில இருக்கிறவ கண்ணைக் கசக்காம வேற என்ன செய்வா..?"

"என் முகத்தைப் பார்க்காம வேற பக்கம் பார்த்துக்கிட்டே பேசினயேடி.."

"நீ வேற.. ஷெல்பில துணியை உருவினப்ப அதை ஒழுங்கா எடுக்கலை போல இருக்கு.. துணி அடுக்கு மொத்தமா நகர்ந்து எட்டிப் பார்த்து கதவைப் பிளந்துக்கிட்டு இப்ப விழவா.. பிறகு விழவான்னு பயமுறுத்திக்கிட்டு இருந்துச்சு.. அதைப் பார்த்தேன்.. அப்புறம்..?"



"நான்தான் எல்லாத்தையும் மறைச்சேன்னு சொன்னியே..."

"அது கிண்டலுக்குச் சொன்னது.. உன் காதலை மறைச்சதை கேலி பண்ணினேன்.. கல்யாணப் பெண்ணை இப்படித்தானே கேலி பண்ணுவாங்க..?"

அரண்டவள் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தெரிந்து விட்டதைப் புரிந்து கொண்டவளாக அசடு வழிய பார்த்திபனை பார்த்தாள் நந்தினி..

"அறிவு களஞ்சியம்..!" தலையில் அடித்துக் கொண்டான் அவன்..

அத்தோடு நிறுத்தாமல் சங்கரலிங்கத்தைப் பார்த்து..

"இந்த அறிவுத் திருக்கடலை திருப்பூர் தாங்காது தாத்தா.. பேசாம உங்க பேத்தியை அந்த ரஞ்சித்துக்கே கட்டி வைச்சிருங்க..?" என்று சொல்லி விட்டான்..

"அப்படியா தம்பி சொல்கிறிங்க..?" சங்கரலிங்கம் தாடையைத் தடவினார்..

"ஆமாம் தாத்தா.. தியாகம் பண்ண இவளுக்கு மட்டும் தான் தெரியுமா..? எனக்குத் தெரியாதா..? தியாகச் செம்மல்ங்கிற பட்டத்தை வாங்கியே தீரனும்னு முடிவு பண்ணிட்டேன் தாத்தா.. இவளுக்கு அவன்தான் சரி.."

"தாத்தா.." நந்தினிக்கு அழுகையே வந்து விட்டது..

"நான் என்னம்மா செய்ய..? மாப்பிள்ளை சொல்கிறதும் சரிதானே.. அவருக்கு மட்டும் தியாகி பட்டம் வாங்கனும்கிற ஆசை இருக்காதா..?"

சங்கரலிங்கம் பரிந்து பேச.. அவர்கள் இருவரும் அவளைப் பார்த்து மனதுக்குள் சிரிப்பதை உணர்ந்து கொண்ட நந்தினிக்கு கோபம் வந்து விட்டது..

"உங்களை..."

சங்கரலிங்கம் இருப்பதையும் மறந்து அவள் பார்த்திபனின் சட்டைக் காலரை பற்றிக் கொள்ள.. அவர் வாய் நிறைய சிரிப்புடன் அறையை விட்டு வெளியேறினார்..

சுவாதி வேடிக்கை பார்க்கத் தோதாக அங்கேயே அமர முயல...

"வெளியே போடி.." என்று சீறினாள் நந்தினி..

"தோடா.. ஒரு பிலிம் பார்க்க விட மாட்டேன்கிற.. நீதான் இவரை எனக்கு தாரை வார்த்துக் கொடுப்பியாக்கும்..?" நொடித்தபடி சுவாதியும் அகன்று விட்டாள்..

கோபத்தில் மூச்சிரைக்க சட்டைக்காலரை கொத்தாகப் பிடித்திருந்தவளை காதலுடன் நோக்கினான் பார்த்திபன்.

"இது.. இது.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்.. என் புருசனை விட்டுக் கொடுக்க மாட்டேன்னு ரௌடித்தனம் பண்ணு.. அப்ப நீ என் பெண்டாட்டி.. அதை விட்டுட்டு.. என்னென்னவோ பேசறியே.. எப்படிடீ உன்னால அப்படியெல்லாம் பேச முடிஞ்சது..?"

"பேசினா.. நீங்களும் பேசுவீங்களா..?"



"சும்மா உலுலாங்காட்டிக்கு பேசினேன்னு உனக்கும் தெரியும்.. உன் தாத்தாவுக்கும் தெரியும்.. இந்த உலகத்துக்கே தெரியும்.. தியாகம் பண்ண நினைக்கிறவ நான் இன்னொருத்தி கழுத்தில தாலி கட்டறதை கண் குளிர பார்த்திருக்கனும்..."

"என்னால அது முடியுமா..? செத்துருவேன்.."

சாக முயன்ற நந்தினியின் காதலில் அவள் முகத்தை இறுக்கிப் பிடித்து விழிகளுக்குள் பார்த்த பார்த்திபன் சொன்னான்..

"நீ தேவதைடி.. உன்னைச் சுத்தி நல்லவங்கதான் இருப்பாங்க.. துரோகிக இருக்க மாட்டாங்க.. உன் பிரண்ட் உனக்கு துரோகம் நினைப்பாளா நந்தினி..?"

சுவாதி அதைச் செய்யவில்லையென்ற மன நிறைவுடன் பார்த்திபனின் மார்பில் சாய்ந்தாள் நந்தினி..

"இனி உன் அண்ணன்னு சொல்லிக்கிற அந்த அயோக்கியப்பய ரஞ்சித் இந்த வீட்டுப் பக்கம் வரக்கூடாது.."

நந்தகுமார் ரூபாவுக்கு ஆணையிட்டு விட்டான்.. மீறி அவன் வந்தால் ரூபாவும் அவனுடனே பிறந்த வீட்டுக்கு மூட்டைகட்டி விட வேண்டும்.. என்று நந்தகுமார் சொல்லி விட்டதில் ரூபா அடங்கிப் போய் விட்டாள்.. அதையும் அவன் வாசலில் காவல் காக்கிற செக்யூரிட்டி முதற் கொண்டு வீட்டு வேலை செய்கிற வேலையாள் வரை அனைவரையும் முன்னால் நிறுத்தி வைத்து சொல்லியதில் ரூபாவால் ஏதும் பேச முடியாமல் போய்விட்டது.. அதற்குப் பின்னால் ரஞ்சித் வந்தால் ரூபாவின் அனுமதியை எதிர்

பார்க்காமல் செக்யூரிட்டியே அவனை அடித்துப் பற்றி விடுவான் என்று புரிந்து போனதில் அவள் மௌனமாக இருக்கப் பழகிக் கொண்டாள்..

திருப்பூரும்.. ஸ்ரீவில்லிப்புத்தூரும் களைகட்ட பார்த்திபனுக்கும் நந்தினிக்கும் திருமணம் நடந்து முடிந்தது.. அடுத்து வந்த பௌர்ணமியில் அவர்கள் மொட்டை மாடியில் 'நிலாச்சோறு' சாப்பிட்டார்கள்.. தூரத்தில் தெரிந்த மலையைப் பார்த்த நந்தினிக்கு 'அன்றைய இரவின்' ஞாபகம் வந்தது.. அவளின் முதுகுக்குப் பின்னால் வந்த நின்று இழைந்த பார்த்திபனின் கை வழவழப்பான அவளது இடுப்புப் பகுதியில் அழுந்தப் படிந்து அவளை பஞ்சணைக்கு அழைத்தது.. மொட்டை மாடியில் போடப்பட்டிருந்த மெத்தையில் அவர்கள் சரிந்தார்கள்.. வேட்கையுடன் அவன் அவளை ஆள ஆரம்பித்த போது.. வெட்கத்துடன் நிலவு மேகத்தில் முகத்தை மறைத்துக் கொண்டது..

காத்திருந்த காலங்களெல்லாம் வீண் போகாது.. மனதில் உறுதியோடு வாழ்ந்து காட்டினால்.. நிலாச் சோறைப் போல வாழ்க்கை அற்புதமாக அமைந்து விடும்..

- முற்றும் -